
# மரணங்கள் மலிந்த பூமி




செங்கை ஆழியான்

# மரணங்கள் மலிந்த பூமி

செங்கை ஆழியான் க.குணராசா

யாழ். இலக்கிய வட்டம்
யாழ்ப்பாணம்: இலங்கை

**மரணங்கள் மலிந்த பூமி (நாவல்)**

| | |
|---|---|
| உரிமம் | : திருமதி கமலா குணராசா<br>82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் |
| வெளியீட்டெண் | : 68. |
| முதற்பதிப்பு | : ஏப்பிரல், 2000 |
| அட்டை | : ரமணி |
| அச்சுப்பதிவு | : யூனி ஆர்ட்ஸ், கொழும்பு. |
| விலை | : 200/- |

MARANANKAL MALINTHA POOMEE (NOVEL)

Copy Right: Mrs. Kamala Kunarasa
82, Brown Road, Jaffna.

| | |
|---|---|
| First Edition | : April 2000 |
| Cover Designed | : Ramani |
| Printed By | : UNI ARTS, Colombo. |
| Author | : SENGAI AALIYAN,<br>(Dr.K.Kunarasa, B.A.Hons (Cey). M.A..Ph.D, S.L.A.S<br>82, Brown Road, Jaffna. |
| Price | : Rs 200/- |

**PUBLISHED BY:**

YARL ILLAKKIYA VADDAM,
JAFFNA LITERARY CIRCLE,
JAFFNA, SRI LANKA.

# முன்னுரை

'மரணங்கள் மலிந்த பூமி' என்ற இந்த நாவலுக்கு நீண்டதொரு முன்னுரை அவசியமென நான் எண்ணவில்லை. ஏனெனில்: இந்த நாவலே நமது அவல வாழ்வின் நீண்டதொரு முன்னுரை தான். 1995ஆம் ஆண்டு: யாழ்ப்பாண வலிகாமத்து மக்கள் அள்ளுண்டு: அகதிகளாக இடம் பெயர்ந்தோம். அந்த இடப் பெயர்வினதும்: மீண்டும் திரும்பி வந்து அனுபவிக்கும் வாழ்வினதும் இடர்ப்பாடுகளை இந்நாவல் பேசுகின்றது. இந்த மண்ணிற்கு இனிமையான பழைய வாழ்க்கை திரும்பாதா? அடக்கு முறைகளற்றுப் போய் மனித சுதந்திரம் மலராதா! சமாதானப் புறா எங்கள் வானில் பறக்காதா? - என இந்த நாவல் அவாவுகின்றது. அவற்றை அடைவதற்கு யாது செய்ய வேண்டுமென்பதே இந்த நாவலின் சமூகச் செய்தியாகும்.

இந்த நாவலை 1997 களில் கனடாவில் நூலாக வெளியிடுவதற்கான ஆயத்தங்களைத் தமிழருவி ந. சந்திரமோகன் மேற்கொண்டிருந்தார். கொழும்பிலிருந்து கனடாவிற்குத் தபால் வழி அனுப்பும்போது: புலனாய்வுப் பகுதியினர் இந்த நாவலைப் பறிமுதல் செய்ததோடு: அனுப்பிய அன்பரையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர். நூலாசிரியரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு: வழக்குத் தொடரப்பட்டது. இந்நாவல் முழுவதும் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு: நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. ஒன்பது பத்து மாதங்களுக்குப் பின்னர்: இந்த நாவலை வெளியிடலாமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட நாவலும் திருப்பித் தரப்பட்டது.

1999 களிலும் நூலாசிரியரான நான் கனடாப் பயண மொன்றினை கனடா இலக்கிய அன்பர்களது அழைப் பின்பேரில் மேற்கொண் டேன். இலக்கிய அன்பர்கள் என்னைச் சிறப்பாகக் கௌரவித்தனர். 'உதயன்' ஆசிரியர் திரு. லோகேந்திரநாதன் 'மரணங்கள் மலிந்த பூமி' என்ற இந்த நாவற் பிரதியை ஆயிரம் கனேடிய டொலர்கள் தந்து பகிரங்கமாக வாங்கிக் கொண்டார். நான் நினைக்கின்றேன்: ஈழத்துப் படைப்பொன்றிற்குக் கிடைத்த பெரும் சன்மானம் இதுவென. உதயன் ஆசிரி யர் லோகேந்திரநாதனின் பெருமனதினை இலக்கிய வுலகு என்றும் நினைவு கூரும்.

'மரணங்கள் மலிந்த பூமி' நாவலைத் 'தினக் குரல்' தனது ஞாயிறு மலரில் தொடராக வெளியிட்டது. தொடர்கதையின் சுவை கருதிச் சில அத்தியாயங்களும் பகுதிகளும் தவிர்க்கப்பட்டன. இன்று அவை முழுமையா கச் சேர்க்கப்பட்டு வெளிவருகின்றன. சமகால எரி யும் பிரச்சனையைக் கருவாகக் கொண்ட நாவலைத் துணிந்து வெளியிட்ட 'தினக்குரல்' ஆசிரியர் திரு. சிவனேசச்செல்வனைப் பாராட்டுகின்றேன். நன்றி கூறுகின்றேன். இந்த நாவல் தற்போது கனடா உதயன் பத்திரிகையில் தொடராக வெளிவருகின்றது. கனடாவி லும் நூலுருவில் வெளியிடப்பட இருக்கின்றது.

சமகால எரியும் பிரச்சினையின் ஓர் அங்கம் அதன் முழுவடிவில்: பலத்தோடும்: பலவீனத் தோடும் நாவலாக வெளிவருகின்றது அவ்வகையில் நூலுருவில் வரும் முதல் நாவலிதுவெனக் கருதுகின்றேன்.

நன்றி

**செங்கை ஆழியான்**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**
**யாழ்ப்பாணம் 10.03.2000**

'செங்கை ஆழியானைப் பற்றிச் சொல்ல எவ்வளவோ இருக்கின்றது. அவர் எழுதிய பல்வகைப்பட்ட கதைகளையும்; அவருடைய விடாமுயற்சியையும் நன் மன முடையவர்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஈழ நாடு; வீரகேசரி நாவல் போட்டிகளில் பரிசில்கள் பெற்றவர். சுதந்திரன்; ஈழநாடு; கலைச்செல்வி ஆகிய பத்திரிகைகள் நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றவர். நாவலர் நூற்றாண்டினை முன்னிட்டு நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் முதற் பரிசினைப் பெற்றவர். செங்கை ஆழியானைப் பற்றி ஈழம் நிச்சயம் பெருமைப்படலாம்.

'அக்கினிக்குஞ்சு' முன்னுரையில்
அமரர் இரசிகமணி கனக செந்திநாதன்.

'அவரது நாவல்கள் அவர் எடுக்கும் பகைப்புலத்தாலும், கூறும் செய்தியாலும் தனித்து நிற்பவை. அவரது நாவல்கள் தொழிலாளர், பாட்டாளிகளின் வாழ்க்கையுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளன. கதைகளில் இடம்பெறும் பகைப்புலத்தை அக்குவேறு ஆணிவேறாகக் கலை அழகுடன் அலசி ஆராய்வார். கதாமாந்தர்களின் உரையாடல்களில் மண்வாசனை வீசும். இவரிடம் காணும் ஒரு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய அவதானிப்புத் திறன் வியந்துரைக்கத் தக்கது.'

'யானை' முன்னுரையில்
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

'செங்கை ஆழியான் தனது எழுத்து ஆளுமையால் தனக்கென்று ஒரு ரசிக சாம்ராச்சியத்தை உருவாக்கி எழுதுகோலோச்சிக் கொண்டிருக்கின்றார் ஒரு கையால் நாடித் துடிப்பைப் பார்த்துக் கொண்டு மறு கையால் மருந்து எழுதும் வைத்தியர் போன்றவர் செங்கை ஆழியான் மக்களின் நாடித் துடிப்பை உணர் ந்து பேனாவை நகர்த்துபவர்.அந்தத் துடிப்பின் ஆக்கங் களே அவரின் நூல்கள்

'நடந்தாய் வாழி வழுக்கியாறு'
முன்னுரையில் மூதறிஞர்
அமரர் சிரித்திரன் 'சுந்தர்'

'இலங்கை எழுத்தாளர்களில் டேனியலும் செங்கை ஆழியானும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தம் நாவலில் இடம் பெறும் மனிதர்கள் பற்றிய சமூகச் சூழல், பொருளியல் சூழல், வரலாற்று விபரங்கள் ஆகியவற்றை நிறையத் தருவதில் தமிழ்நாட்டு முற்போக்காளர்களைவிடச் சிறந்து இருக்கிறார்கள்'

'மார்கசியமும் தமிழ் இலக்கியமும்'
என்ற நூலில் 'ஞானி' (சென்னை)

'அவருடைய நாவல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பகைப் புலத்தையும் வேறுபட்ட மாந்தர்களையும் சித்தி ரிப்பவை. அவரது ஒரு நாவலைப்போல அவருடைய இன்னொரு நாவல் அமைவதில்லை. 'வாடைக்காற்றி லிருந்து 'கிடுகுவேலி வரை இத்தகைய பண்பு நிலவி வந்துள்ளமையை அவரது நாவல்களைப் படித்தவர்கள் அவதானித்திருப்பர்

'கடல்கோட்டை' முகவுரையில்
'சசி பாரதி' ச. சபாரத்தினம்.

'இன்றைய ஈழத்து முன்னணித் தமிழ் நாவல் ஆசிரியர் செங்கை ஆழியான் என்று கூறினால், அது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த கூற்றாகும். செங்கை ஆழியான் தன் நாவலுக்கு அடிப்படையான களத்துடன் நேரடித் தொடர்பு கொண்டவர். களத்தினுள் நின்று நேரடியாகவோ தகவல் மூலமாகவோ பெறும் அனுபவத்தின் அடிப்படையில் எழுதும் நாவல் உயிர்த் துடிப்புடைய தாக இருக்கும்.

சமூக அறிவியல் தரவுகளைச் செவ்வனே உணர்ந்து கொண்ட ஆக்க இலக்கியப் படைப்பாளி, அவ்விலக்கியத்துக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்குகிறான். ஒரு சமூக அறிவியலாளனாகிய செங்கை ஆழியானுடைய ஆக்க இலக்கியங்கள் பல இவ்வகையிலே புதிய பரிமாணத்தைப் பெறுகின்றன. 'மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து' என்னும் இந்நாவலும் அதற்கு விதிவிலக்கல்ல'.

பேராசிரியர். அ. சண்முகதாஸ்
'மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து' முன்னுரையில்

'ஈழத்து ஆக்க இலக்கியத் துறையில் கடந்த மூன்று தசாப்தங் களாக சிறுகதை; நாவல் ஆகிய படைப்புக்களின் மூலம் தம் பெயரை நிலைபெறச் செய்தவர் செங்கைஆழியான். இவரது கல்விப் புலமையும்; உத்தி யோக ரீதியான அனுபவ ங்களும்; இயற்கையாகவே அவரிடம் காணப்படும் கலை இலக்கிய ஆர்வமும்; இலக்கியத் துறையில் அவர் பின்பற்றும் நிதானமும் அவரைச் சிறந்த 'ஆக்க இலக்கிய கர்த்தா' என்ற வரிசையில் நிலை நிறுத்தியுள்ளன.

கலாநிதி இ. பாலசுந்தரம்
'ஒருமையவட்டங்கள்' என்ற நாவல் முன்னுரையில்

'கால் நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்தின் நவீன இலக்கியத் துறையில் தனது ஆளுமையின் சுவடுகளை ஆழமாகப் பதித்து நிற்கும் முதல் வரிசைப் படைப்பாளி செங்கை ஆழியான் ஆவார். செங்கை ஆழியான் சமூக வரலாற்றை மனித நேய நோக்கில் காணமுற்பட்டவர். தனி மனிதரையும் சமூகமாந்தரையும் அவர்களது இயல்பான உணர்வோட்டங்களுடன் இனங்காட்ட விழைந்தவர்: காட்டியவர். குறிப்பாகக் கீழ் நடுத்தர வர்க்கச் சமுதாய மன அவலங்களே ஆழியானது ஆக்கங்கள் பலவற்றிலும் அகநிலையாக அமைந்தன. இவற்றைப் பல்வேறு தரங்களில் நின்று இயற்பண்புடன் வெளிப்படுத்திய வகையிலேயே அவரது தனித்தன்மை புலப்படுகிறது'.

'மல்லிகையில்' கலாநிதி நா. சுப்பிரமணியன்.

*உலக ரீதியில் உன்னதமான நாவல் என்று கணிக்கப்பட்ட ஒரு படைப்பு இன்னும் தமிழில் வெளிவரவில்லை. அத்தகைய ஒரு நாவலை எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் எம்மிடையே இருவர். ஒருவர் கே. டானியல். அவர் இப்போது இல்லை. மற்றவர் செங்கை ஆழியான். இன்னும் கால் நூற்றாண்டு காலத்துக்கு மேல் எழுதக்கூடிய வயதினர். செங்கை ஆழியான் தன்னுடைய இன்றைய வளர்ச்சியின் பரிணாமத்தை நன்கு அறிந்தவர். இயற்கையாகவே எழுதும் ஆற்றல் மிகுந்தவர்.*

'தீம்தரிகிடதோம்' நாவல் முன்னுரையில்
பேராசிரியர் நந்தி.

'செங்கை ஆழியானின் நோக்கம் எதுவாக இருந்தாலும், தான் எழுதுவது 'யாருக்காக' அவர்களின் மன வளர்ச்சி எத்தகையது என்பதனை நன்கு மனதில் கொண்ட இனிய எளிய நடையில் எழுதி வருகிறார். அதனால் நாவலின் சமூகப்பணி, சமூகப்பணிக்கென்றே வெளிவரும் நாவல்களைவிட அதின பலனை நிச்சயம் அளிக்கும் என்று நம்பலாம்.

'ஆச்சி பயணம் போகிறாள்' முன்னுரையில்
செம்பியன் செல்வன்

*'இலங்கைத் தமிழ் மக்களைத் தாக்கும் பிரச்சனைகளின் திரள் நிலையைச் செங்கை ஆழியான் நாவலில் காட்ட முனைந்துள்ளார். தமிழ் மக்களின் அகப் புற முரண்பாடு களை எடுத்துக் காட்டுகிறார். ஈழத்தின் இன்றைய படைப் பாளிகளுள் மிக வெற்றிகரமானவர் செங்கை ஆழியானே எனலாம். தான் கடமையாற்றிய பகுதியின் சமூக உறவுக ளையே தனது படைப் பிலக்கியங்களின் பிரதான குறி மையமாகக் கொண்டு காட்டுவதில் செங்கை ஆழியான் முன்னணியில் நிற்கின்றார்.*

பேராசிரியர் கா. சிவத்தம்பி
'இந்த நாடு உருப்படாது' முன்னுரையில்.

'தமிழ் எழுத்துலகில் தனக்கென ஒரு முத்திரை பதித்த எழுத்தாளர் செங்கை ஆழியான். காலத்திற்குக் காலம் எம் மத்தியில் ஏற்பட்ட அனர்த்தங்களை வரலாற்றுப் பதிவேடாக்கியவர். எமது சமுதாய முரண்பாடுகளைச் சமுதாயத்தின் இயல்பான சிந்தனை மாற்றத்தினால், எல்லோரும் படிப்பதன் மூலமும், வருவாயைப் பெருக்குவதன் மூலமும் சாதி முறையைத் தகர்க்கலாம் என்ற சிந்தனை கொண்டவர். அவற்றை வலியுறுத்தி எழுதுபவர்.'

சுந்தரம் டிவகலாலா 'அக்கினி' முன்னுரையில்

இன்றைய ஈழத்து எழுத்தாளர்களிலே மக்களின் கவன ஈர்ப்பிற்குரியவராகச் செங்கை ஆழியான் காணப்படுகின்றார். தமக்கென ஒரு வாசகர் கூட்டத்தை உருவாக்குவது இலகுவான காரியமல்ல. ஆக்க இலக்கியக்காரன் ஒருவன் அடையும் மகத்தான வெற்றிகளுள் ஒன்று தமக்கென ஒரு வாசகர் கூட்டத்தை உருவாக்கி அதைக் காப்பாற்றுவதாகும்.

**கலாநிதி எஸ். சிவலிங்கராசா**
**'கிடுகு வேலை' முன்னுரையில்**

செங்கை ஆழியானின் இயல்பான முயற்சிகளின் வெளிப்பாடுகளின் ஓர் அம்சம் தான் இந்தப் படைப்புத் தொழிலும் என்று நான் நினைக்கின்றேன். செங்கை ஆழியானுக்கு அவருக்கே உரித்தான ஒரு தத்துவப் பார்வை உண்டு. அண்மையாண்டுகளில் ஈழத்துத்தமிழ் இலக்கியத்தின் மீது கணிசமானவளவு தாக்கத்தை ஏற்படுத்தம் செல்வாக்கை அவர் பெற் றுள்ளார். இவரது படைப்பக்களில் சில காலத்தையம் மீறிப் பேசப்படும் என மெய்யாகவே நம்பகின்றேன்

**டொமினிக் ஜீவா**
**'இரவு சேரப் பயணிகள்' முன்னுரையில்.**

'Prolific Writers' என ஆங்கிலத்தில் ஒரு தொடருண்டு. எழுதிக் குவிப்போர் என்று தமிழில் சொல்லலாம். ஈழத்து எழுத்தாளர்களில் செங்கை ஆழியானுக்கு இது பொருந்துவது போல வேறுயாருக்கும் பொருந்தாது. இலக்கியம் மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதில் தெளிவாக இருக்கிறார். செங்கை ஆழியானின் இன்னொரு பரிமானம் புனை கதை சாராத (Non Fiction) துறையில் அவர் செய்துள்ள சாதனை.

**கவிஞர் சோ. பத்மநாதன்**
**'யாககுண்டம்' முன்னுரையில்.**

# சமர்ப்பணம்

அன்னைக்கு
அன்னையாய்
தமைக்கைக்கு
தமைக்கையாய்
என்னுடன் வாழ்ந்து
என்னை என்றும்
ஆசீர்வதிக்கும்
என்னினிய
பெரியக்கா
**யோகரெத்தினத்திற்கு**
இந்நூல்
சமர்ப்பணம்

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்

- நந்திக்கடல்
- அக்கினிக்குஞ்சு
- யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
- வாடைக்காற்று
- காட்டாறு
- கங்கைக்கரையோரம்
- சித்திரா பௌர்ணமி
- இதயமே அமைதிகொள்
- யானை
- மழைக்காலம்
- இந்த நாடு உருப்படாது
- கந்தவேள் கோட்டம்
- யாககுண்டம்
- கொத்தியின் காதல்
- காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
- குவேனி
- இரவுநேரப் பயணிகள்
- 24 மணி நேரம்
- மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது
- ஈழத்தவர் வரலாறு
- கொழும்பு லொட்ஜ்
- மரணங்கள் மலிந்த பூமி
- வன மத கங்க (சிங்களம்)
- ஆச்சி பயணம் போகிறாள்
- தீம் தரிகிட தித்தோம்
- இரவின் முடிவு
- பிரளயம்
- கனவுகள் கற்பனைகள் ஆசைகள்
- அலைகடல்தான் ஓயாதோ?
- முற்றத்து ஒற்றைப் பனை
- நடந்தாய்வாழி வழுக்கியாறு
- மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
- அக்கினி
- ஜன்மபூமி
- ஆறுகால்மடம்
- ஓ அந்த அழகிய பழைய உலகம்
- ஒருமைய வட்டங்கள்
- கடல்கோட்டை
- காவோலை
- TheBeast
- 12 மணி நேரம்
- நல்லை நகர் நூல்
- யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு
- பூதத்தீவுப் புதிர்கள்
- ராத்ரிய நொனசாய் (சிங்களம்)

## பகுதி : ஒன்று

# 1

**1997,** ஜுலை: 25.

எங்கள் வானத்தில் சில மாதங்களாக குண்டுவீச்சு விமானங்களின் பேரிரைச்சல் எழுவதில்லை. வானவெளியின் மோனத்தைக் கீறிக் கிழித்துக் கொண்டு மண்ணின் அமைதியைக் குலைத்தபடி குத்தித்தாழ்கின்ற பொம்பர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டுவிலகி வன்னிப்பக்கமாக நகர்ந்து விட்டன. இருளின் கனத்த போர்வையைக் கீறிக்கொண்டு எங்கள் வீட்டுக் கூரைகளுக்கு மேலாக இரைந்தபடி விரைகின்ற ஷெல்கள் கிளிநொச்சிக் கிராமங்களைத் தேடிச் சென்று விட்டன. பிஃரி கலிவர் சன்னங்களை இலக்கின்றி நிலத்தில் விதைத்தபடி வானத்தில் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர்களின் கர்ணகடூரச் சத்தம் வானத்தில் மிகத்தாழ்வாக அடிக்கடி எழுந்தாலும் அவை மக்களைக் கிலி கொள்ள வைப்பதில்லை.

எங்கள் வானத்தின் ஆக்கிரமிப்பு மெல்லமெல்ல வளியில் கரைந்து விலகிவிட்டது போன்றிருந்தாலும் மண்ணில் அந்த ஆக்கிரமிப்பின் அம்சங்கள் ஆழ வேரூன்றி வருவதைக் காண முடிகின்றது. வீதிகளில் முட்கம்பி வேலிகளோடு கூடிய இராணுவ சென்றிகள். சந்திக்குச்சந்தி பயணத்தைத் தடைப் படுத்தும் அசௌகரியச் சோதனைகள். எங்கள் ஒழுங்கைகள் நடு நடுவே முட்கம்பி வேலிகளால் மறிக்கப்பட்டுவிட்டன. சுற்றுப் பயண நடவடிக்கைகள் மக்களை எரிச்சலடைய வைத்துள்ளன. யாழ்ப்பாண மாநகரத்தையும் வெளிக் கிராமங்களையும் பிரித்தபடி நீண்டு செல்கின்ற 'பெர்லின் சுவர்' இராணுவ

வேலி யாழ்ப்பாணத் தின் சோகத்தைக் கதைகதையாகச் சொல்கின்றது.

யாழ்ப்பாண மக்கள் தம்மை வீடுகளுள் சிறைப்படுத்திக் கொண்டு வீதிகளில் சந்திக்கின்ற அவமானங்களைத் தவிர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

அவசிய தேவையின்றி எவரும் வீதிகளில் இறங்குவதில்லை.

ஈசிச்செயரில் படுத்திருந்த என்விழிகள் யன்னலூடாக வறட்சியுடன் வீசிய சோளகக்காற்றின் கடும் அழுத்தத்தால் மூடியிருந்தன. சோளகம் பெயர்ந்துவிட்டது. காற்று வீசும் போது மரக்கிளைகளின் சரசரப்பு எழுகின்றது. ஈசிச்செயரின் கால் தாங்கு சட்டங்களில் கால்களை விரித்துப் போட்டபடி ஒரு கரத்தை மடியிலும் மற்றைய கரத்தைத் தோளிலும் வைத்தபடி விழி மூடியிருந்த எனக்கு வானத்தைக் கீறியபடி நெருங்கி ஹெலி ஒன்றின் வருகைச் சத்தம் காதுகளில் விழுகின்றது. இரண்டாண்டுகளுக்கு முன்னராகில் விழுந்தடித்து எழுவதுடன் வீட்டிலுள்ள அனைவரையும் கூவியழைத்து எச்சரித்துவிட்டு பாதுகாப்பான இடங்களை நாடுகின்ற நிலை. இன்று ஹெலியின் பேரிரைச்சல் கூரைக்கு மேலாகக் கடந்து சென்றபோதும் எதுவிதமான பதட்டமுமின்றிப் படுத்திருக்க முடிகின்றது.

ஹெலியின் விசிறிகளின் சுழற்சி வீசியெறிந்த காற்று சோளகத்துடன் கலந்து பரவியது.

'தென்னை வட்டைத் தொட்டுக்கொண்டு போறான்கள் ... பெரிய ஹெலி. முன்னரெண்டால் இப்படிப் பதிவாகப் பறப்பினமே? பருந்து மாதிரித்தான் தெரியும். ஆரோ கொழும் பாக்கள் யாழ்ப்பாணம் பார்க்கினம் போல... என்றபடி என் மனைவி தேநீர்த் தம்பளருடன் என்னருகில் வந்தமர்ந்தாள். நான் எதுவும் பேசாமல் ஜன்னலூடாக வெளியில் நோக்கினேன். ஐயர் வீட்டு வேப்பமரத்தின் கிளையொன்றில் அமர்ந்திருந்த காகம் ஒன்று சோளகத்தின் வீச்சிற்கு ஈடு கொடுத்தபடி ஊஞ்சலாடியது. பப்பாசி மரத்தில் கனிந்து சிவந்துகிடந்த பழத்தை இன்னொரு காகம் ஆழத் தோண்டி அலகால் பழச் சதையை வாய்நிறைய அள்ளியது.

பப்பாசிப்பழத்தின் சுவை என் நாக்கில் ஊறியது.

'சும்மா இப்படிப் படுத்துப் படுத்துக் கிடக்காமல் ரவுணுக்குப் போய்த் தேவையான சாமான்களை வாங்கி வாருங்

கோவன்... என்ற மனைவியை நான் ஏறிட்டுப்பார்த்தேன். வீதியில் இறங்குவதற்குத் தயங்கிப் படுத்திருப்பதை அவள் அறிவாள். வீடு - பணிமனை. பணிமனை - வீடு என்றிருக்கும் எனக்கு வீதிச் சென்றிகளில் இறங்கி ஸ்கூட்டரை உருட்டிக் கொண்டு பணிவாக நடந்து எல்லாவற்றையும் திறந்துகாட்டி: உடல் பரிசோதனைக்கு உட்பட்டு... வீதிகள் சுதந்திரமாக நடமாட உதவுவதில்லை.

கலட்டி அம்மன் கோயிலில் மணியடிக்கும் மாணிக்கத் தார் இருந்தாற்போல நினைவில் வருகின்றார். இரண்டு நாட்களுக்கு முன் நான் தட்டாதெருச் சென்றியில் அவரைச் சந்திக்க நேர்ந்தது. யாழ்ப்பாண நகரத்திலிருந்து வலிகாமத் தின் பகுதிகளுக்குச் செல்வதென்றால் கலட்டிச்சந்திச் சென்றியால் உள்நுழைய வேண்டும். மீண்டும் திரும்பி வருவதாயின் தட்டாதெருச் சந்திச் சென்றியால்தான் முடியும்.

மக்களுக்கு வேறு வழியில்லை.

முட்கம்பிகளால் வேலியிடப்பட்ட ஒடுங்கிய பாதையில் என் முன் மாணிக்கத்தார் நின்றிருந்தார். அவர் பின்னால் ஸ்கூட்டருடன் நான் நின்றிருந்தேன். கரம் வலித்தது. சற்றுச் சரிந்தால் முட்கம்பியில் சாயவேண்டியது தான்.

'தம்பி: ஜொப் காட்டெல்லோ.... அந்தப்பாதையில வந்திருக்க வேண்டும். கெதியாகப் போகலாம்... என்ற மாணிக்கத்தாரைப் பார்த்து நான் சிரித்தேன். மானிப்பாய்ப் பகுதியில் அன்று பிற்பகல் வீசப்பட்ட கைக்குண்டொான்றின் தாக்கம் தட்டாதெருச் சென்றியில் தெரிந்தது. ஒவ்வொருவரையும் மிக நிதானமாகப் பரிசோதனை செய்தார்கள்.

'கைக்குண்டுகளைக் காவிக்கொண்டு இப்படியான பாதையில் வருவினம் என்று ஆமி இன்னமும் நம்புதே' என்றார் மாணிக்கத்தார். அவர் பேச்சிலிருந்த நியாயத்தை ஆமோதிக்க என்னால் முடியவில்லை. பரிசோதனையிடத்தை அண்மித்து விட்டோம். மாணிக்கத்தாரை இராணுவ வீரனொருவன் தடவிப் பார்த்தான். தோள்களிலிருந்து அவர் கால்வரை தடவி: இடுப்புக்குக் கீழ் கைகளைப்பரப்பி இருபக்கங்களும் தடவிப் பின்னர் முன்பக்கம் கையை அழுத்தித் தடவியபோது மாணிக்கத்தார்: 'விடடா .. அங்க குண்டில்லை. ...... என்றார்.

மாணிக்கத்தார் அவமானத்துடன் பெருங்குரலில் கூறியது அந்த இராணுவ வீரனுக்கு அவர் ஏதோ ஆட்சேபம்

செய்கிறார் என்பது புரிந்தது. திடீரென விலகி நின்றபடி அவரை எறிட்டுப் பார்த்தான். காலக்கழிவில் அவர் கூறியதன் அர்த்தம் அவனுக்குப் புலனாகியதும்: 'எல்ரிரிஈ அதுக்குள்ளதானே குண்டைக் கொண்டு போறது... என்றான் எரிச்சலுடன்: 'சரி.. சரி.. போ...

'உப்படிச் சனங்களைக் கரைச்சல் படுத்தக்கூடாது ... என்றபடி அவர் நகர்ந்தார்.

எனக்கு மாணிக்கத்தாரின் துணிச்சல் வியப்பைத் தந்தது. யாழ்ப்பாணத்து மக்கள் எரிச்சல்படத் தொடங்கிவிட்டார்கள். இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகின்றது.

'என்ன உங்கள் பாட்டிற்குச் சிரிக்கிறியள்? என்றாள் மனைவி தம்ளரை நீட்டியபடி.

'நம்மடை மாணிக்கத்தாரை நினைத்துக்கொண்டன் ...

'அந்தாள் துணிஞ்ச மனிசன்... நாங்க எல்லோரும் சாவகச்சேரிக்கு ஓட அந்தாள் தன்னந்தனியனாக இங்க இருந்ததல்லே ...

மனம் அசைபோடுகின்றது.

தேநீரை அருந்தியபடி நிமிர்ந்து அமர்ந்தேன்.

* * * * * *

**1995,** ஒக்டோபர்: 30.

அந்த நாள் மறக்கக்கூடியது தானா?

மாலை கவிந்து இருள் மெதுவாகப் படரத் தொடங்கிய ஒரு கருக்கல் பொழுதில் யாழ்ப்பாண மக்களின்மீது பேரிடியொன்று எதுவித பாகுபாடுமின்றி இறங்கியது.

'ஆமி யாழ்ப்பாணநகரத்தை நோக்கி முன்னேறுகிறது. உடனடியாக வலிகாமம் மக்கள் அனைவரும் வடமராட்சிக்கோ தென்மராட்சிக்கோ இடம் பெயருமாறு கேட்கப்படுகின்றார்கள்

எவ்வித பதட்டமுமில்லாத சாதாரண அறிவித்தல் வலிகாமத்தின் மூலை முடுக்கெங்கும் விஷக்காய்ச்சல் மாதிரி விரைவாகப் பரவியது. அன்று மாலை ஐந்து மணிவரை

வழமையான வாழ்க்கை யாழ்ப்பாணத்தில் எங்கும் நிலவியது. ஐந்தாறு ஷெல்கள் என்றும் போல ஆங்காங்கு கூவிக்கொண்டு விழுந்து காவு எடுத்தன. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இரத்தக் காயங்களுடன் பலர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். குருநகரிலிருந்து கடலேரிக்குள் மீன்பிடிக்க இறங்கிய இரு மீனவர்கள் மண்டைதீவிலிருந்து சினைப்பரால் சுடப்பட்டு கடலில் இழுத்துச் செல்லப்பட்டனர். கோயில்களில் கந்தசஷ்டி விரதத்தை மேற்கொண்ட பக்தர்கள் முருகனின் திருக் கலியாணக் கோலத்தைத் தரிசித்துக் கொண்டிருந்தனர். சிலர் மண் மீட்பு நிதியை ஆங்காங்கு நிலையங்களில் செலுத்திவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தனர். சந்திகளில் இளைஞர்கள் கூடிநின்று வம்பளந்து கொண்டிருந்தனர். வடபுறமாக குண்டுகள் வெடிக்கும் சத்தமும், துப்பாக்கிச் சத்தங்களும் இடையிடையே எழுந்து கொண்டிருந்தன. கோப்பாய், உரும்பிராய்ப் பக்கமிருந்து பலர் குடியெழும்பி யாழ்ப்பாண நகரப்புறங்களில் அடைக்கலம் தேடிக் கொண்டிருந்தார்கள்.

எல்லாமும் வழமைபோல...

ஆனால் அந்த அறிவித்தல் மாத்திரம் வழமைக்கு மாறாக...

கலட்டி அம்மன்கோயிலில் கந்தசஷ்டி விரதிகள் குழுமியிருந்தனர். திருக்கலியாணம் முடிந்து குருக்கள் பஞ்சாலாத்தியைக் கரத்திலெடுத்த வேளையில் கோவில் வாசலில் சடுதியாக ஒரு மோட்டார் சயிக்கிலில் வந்து நின்றது. அதில் நந்தன் அமர்ந்திருந்தான்.

'அண்ணை எல்லாரையும் சாவகச்சேரிக்குப் போகட்டாம். ஆமி வருகுதாம். அவனால் ஒழுங்காகப் பேசமுடியவில்லை. குரல் பயத்தால் தடுமாறித் தத்தளித்தது. கோயிலில் நின்றவர்கள்: 'அம்மாளாச்சி... முருகா... ' என்று அலறியபோதுதான் எதுவோ நிகழ்ந்துவிட்டதென மாணிக்கத்தாருக்குப் புரிந்தது. கூப்பிய கரங்களோடு வெளியே பார்த்தார். குருக்கள் தூக்கிய பஞ்சாலாத்தியை அப்படியே கீழே வைத்துவிட்டுப் பதறிப் போய் நின்றார்.

'என்ன: என்ன?

'மெய்யாவே?

'பொய் சொல்லாதையடா...

'அப்படியிருக்காது...

'உண்மையே நந்தன்...'

நந்தன் வேகமாக மோட்டார் சைக்கிலைத் திருப்பியபடி. 'நானேன் பொய் சொல்லுறன். ரவுனில ஒலிபெருக்கியில அறிவிக்கினம். எல்லாரையும் இருபத்திநாலு மணிநேரத்துக் குள்ள யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறட்டாம். நாவற்குழிப் பாலம் இரவு பன்னிரண்டு மணிக்கு உடைக்கப்படுமாம். அதுக்குள்ள வெளியேறட்டாம் ...

'ஆர் அறிவிச்சவை ...'

எதுவுமே கூறாது நந்தன் வேகமாக மோட்டார்ச் சயிக்கி லுடன் மறைந்து போனான். கோயிலில் நின்றவர்கள் விழுந்தடித்தபடி தங்கள் வீடுகளுக்கு ஓடத்தொடங்கினர். குருக்கள் சயிக்கிலைத் தூக்கியபடி அம்மனையும் முருகனையும் அப்படியே விட்டுவிட்டு ஓடத் தயாராகி இருப்பதை மாணிக்கத்தார் பெருங்கவலையுடன் பார்த்தார்.

'அப்பு கெதியாக வீட்டிற்குப் போங்கோ .. என்றபடி மடப்பள்ளிக்கார ஐயரும் வேகமாக விரைந்தார்.

மாணிக்கத்தார் அப்படியே கோயில் தூணுடன் சாய்ந்து அமர்ந்து கொண்டார். ஊரே அமர்க்களப்பட்டது. வீதியில் கோயிலின் முன்னால் செல்லும் பாதையில் பதற்றத்துடன் மக்கள் விழுந்தடித்து விரைந்து கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணமே வீதிகளில் இறங்கி நின்றிருந்தது.

மாணிக்கத்தார் அசையவில்லை. எதுவித சலனமுமின்றி அலங்காரரூபியாக அமர்ந்திருக்கும் அம்மனைப் பார்த்தார்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த இந்த மண்ணை விட்டுவிட்டு ஒரு கணப்பொழுதில் எல்லாரையும் ஓடிவிடும்படி கூற எவருக்கு உரிமையிருக்கிறது? இது வெறும் மண்ணா? எந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்த மண். வருங்காலச் சந்ததியினர் நிலைத்து வாழப்போகிற மண். யாழ்ப்பாணம் இன்று உயர்ந்து நிற்கின்றது என்றால் அதற்காக எத்தனை எத்தனை ஆண்டுகள் அவரின் முன்னோர்கள் பாடுபட்டிருக்க வேண்டும்? யாழ்ப்பாணத் தவர்கள் என்ன நாடோடிகளா? நினைத்ததும் சொன்னதும் இருக்கின்றவற்றைச் சுருட்டிக் கொண்டு புறப்பட்டுவிடுவதற்கு?

வீடு வாசல்: சொத்துச் சுகம்: ஆடு மாடு: கன்று பாங்கள்... எத்தனை எத்தனை?

1995: ஒக்டோபர்: 30 ஆந் திகதி யாழ்ப்பாணத்து வலிகாம மக்கள் அனைவரும் தாம் வாழ்ந்த வீடுகளையும் தேடிய தோட்டங்களையும் கைவிட்டு ஓடில்லாத ஆமைகளாகவும் கூடில்லாத நத்தைகளாகவும் பயத்தோடும் பரிதவிப்போடும் தாம் பிறந்து வாழ்ந்த மண்ணைவிட்டு ஏதிலிகளாக ஓடிய மனுக்குலத்தின் சோக நாடகத்தின் முதற்காட்சி அரங்கேறியது.

இருந்தவிடத்திலிருந்து பார்க்கும்போது கோயிலின் முன் செழித்து வளர்ந்திருக்கும் வேப்பமரம் தெரிகின்றது. ஐந்தாறு தலைமுறைகளுக்கு முந்திய தலவிருட்சம். முன்மண்டபம் கட்டியபோதும் அதனை மண்டபத்தின் ஒரு பக்கத்தில் உள் நுழையவிட்டு சமய நம்பிக்கையைக் காத்திருந்தார்கள். மூன்று பேர் கைகோர்த்தாலும் கட்டிப்பிடிக்க முடியாதமரம். அந்தக் கிராமத்தின் முதுமையையும் பெருமையையும் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

மாணிக்கத்தாருக்கு அந்த வேப்பமரத்தின்கீழ் விளையாடிய இனிய நினைவுகள் மனதில் எழுகின்றன. சொரிகின்ற வேப்பம்பூக்களை ஊரார் பக்குவமாகச் சேகரிப்பதும்: சருகுகளை அள்ளி ஒரு பக்க குப்பை அடைப்புக்குள் தோட்டத்திற்காகச் சேகரித்து வைப்பதும் அவர் நினைவுக்கு வருகின்றது. கடந்த ஒரு தசாப்தமாக எவரும் சொரிந்த பூக்களையும் சருகுகளையும் சேகரித்ததாக அவருக்குத் தெரியவில்லை. அவருடைய ஆச்சிக்காக அவர் அந்த மரத்தின் வேப்பங் கொட்டைகளைப் பொறுக்கியிருக்கிறார். வேம்பு பழுத்ததும் அவ்விடத்தில் பறவைகளின் சத்தவொலி நிறைந்திருக்கும். காகங்கள்: மைனாக்கள்: பெயர் தெரியாத பல பறவைகள் எனக் கலகலப்பாகவிருக்கும். அவை கிளைக்குக்கிளை தாவும் போது உதிரும் வேப்பம்பழங்களை எடுத்துப் பிதுக்கும்போது கொட்டை வேகமாக முன்பாய்வது அவர் இரசித்த ஒரு விளையாட்டு.

இந்தக் கோயில்: தலவிருட்சம்: இந்தச் சுற்றாடல் எத்தனை தலைமுறைகளைக் கண்டிருக்கும்? அவருக்கு முந்திய பெரு மக்கள் இந்தவிடத்தில் கூடி எவ்வளவு கற்பனைகளைச் செய்திருப்பார்கள். அவர்களுடைய காலத்தில் இப்படிக் கணப் பொழுதில் வெளியேறி ஓடுங்கள் என்றொரு பணிப்பு வந்திரு

க்காது. அங்கு அமைதியும் நிம்மதியும் அரசோச்சியிருக்கும்.

இன்று அந்தச் சுற்றாடல் அல்லோலகல்லோலப்படுகின்றது. நான்கு ஐந்து மணிவரை நிம்மதியாக இருந்தவர்களுக்கு பேரிடியாக வெளியேறும் செய்தி இறங்கிவிட்டது. எதை எடுப்பது? எதை விடுவது? எங்கு செல்வது? எப்படிச் செல்வது?

வடக்கு வீதியில் கனகசபை வீட்டில் படுத்த படுக்கையாகக் கிடக்கும் பார்வதி ஆச்சியை எப்படிக் கூட்டிச் செல்வார்கள்? குஞ்சும் குருமனுமாக ஏழு பிள்ளைகளைக் காவிக் கொண்டு தேவையான பொருட்களையும் எடுத்துக் கொண்டு மல்லிகா எப்படி ஓடுவாள்?

ஆயிரமாண்டுகளுக்கு மேலான இந்த மண்ணின் பந்தத்தை ஒருமணி நேரத்தில் கைகழுவி விட்டுவிட்டு ஓடிவிட முடியுமா? எந்த மண்ணிற்காக இவ்வளவு உயிர்களையும் சொத்துக்களையும் காவுகொடுத்தோமோ அந்த மண்ணை விட்டுவிட்டு ஓடுவதா?

இந்த மண்ணின் ஒரு அங்குல நிலத்தைக்கூட எதிரியின் காலடி பட விடமாட்டோம் என்று எவ்வளவு வீறாப்புப் பேசினோம்? அந்த நம்பிக்கையில் இந்த மண்ணில் உருவாக்கப் பட்ட கட்டமைப்புகள் எத்தனை? அவ்வளவையும் கைவிட்டு ஓடுவதாயின் ஓடுவதற்கு நாங்கள் கொடுத்த விலை அதிகம்.

வீதியில் பலர் பதற்றத்துடன் நகர்வது தெரிகின்றது.

'அம்மாளாச்சி; நீயும் பார்த்துக்கொண்டா இருக்கிறாய்' என்று ஒரு கிழவி பெருங்குரலில் விளிப்பது கேட்கிறது. மனிதர்கள் நிதானமின்றித் தீர்க்கதரிசனமின்றிச் செயற்படும் போது கடவுள் என்ன செய்ய முடியும்?

யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்க்கைநிலை; வாழும் முறை வித்தியாசமானது. தன் குடும்பம்; தன் வீடு; தன் வளவு; தன் சுற்றம் என்ற தனித்துவ வட்டத்துள் வாழ்ந்துகொண்டு; கிடுகு வேலிக்கு அப்பால் வெளியுலகைப் பார்க்கின்ற சமூகம். நிம்மதி; சந்தோசம்; சமாதானம் என்பன இச்சமூகத்தின் வாழ்க்கையோடு ஒன்றிப்போன நடத்தைகள். சண்டை; சச்சரவு; யுத்தம்; ஆயுதங் கள்; மரணங்கள்; அழிவுகள் எனப் படிப்படியாக விரிவடைந்த அரசியல்வாதிகளின் அதிகார விருப்புகள் இன்று யாழ்ப்பாண மக்களை ஏதிலிகளாக்கி விட்டன. உடுத்த உடுப்புடன் உயிருக்குப் பயந்து ஓட வைத்து

விட்டன.

பிறந்து வளர்ந்து திரிந்த மண்ணைவிட்டு ஓடுவதென்பது இலேசான விடயமாகிவிட்டது. உணவைத் தேடி இடம்பெயர்கின்ற எஸ்கிமோவர்கள் போல லாப்பியர்கள் போல யாழ்ப்பாண மக்களும் மாறிவிட்டனரா? இந்த மண்ணைவிட்டு வெளியேறுங்கள் என்று சொல்ல எவருக்கும் அதிகாரம் கிடையாது. மரணங்கள் நெருங்கி வந்து அழுத்தினால் மக்களாக எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடியிருப்பார்கள்.

உயிர் வாழ்க்கைக்கான போராட்டம் தான் மனுக்குலம் இந்த மண்ணில் தோன்றிய காலத்திலிருந்து நிகழ்ந்து வருகின்றது.

நினைக்கும்போது நெஞ்சம் வலிக்கின்றது. அம்மன்கோயில் வீதியில் அமைந்திருந்த வீடுகளில் இருந்தோர் மூட்டை முடிச்சுக்களுடன் விழிகளில் நீர் சோர வெளியேற ஆயத்தமாகிறார்கள் என்பது தெரிகிறது. வெகு தூரத்தில் வெடிக்கின்ற குண்டுகளின் சத்தங்கள் அவர்களது வெளியேற்றத்தைத் துரிதப் படுத்துகின்றன. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த முன்னோர்களின் வீடுகளைக் கைவிட்டு வெளியேறப் போகிறார்கள்.

இருந்தாற்போல வானம் கறுக்கத் தொடங்கியதை மாணிக்கத்தார் அவதானித்தார். யாழ்ப்பாண மக்களுக்கு நேர்ந்துவிட்ட அவலத்தைக் கண்டு இயற்கை அழப்போகின்றதா அல்லது திரள் திரளாக வெளியேறப் போகின்ற மக்களுக்குச் சதி செய்யப் போகின்றதா?

அவர் முன் யாரோ வந்து நிற்கிறார்கள். அவர் நிமிர்ந்து பார்த்தார். இரத்தினம் நின்றிருந்தார்.

'அண்ணை; நீங்க வீட்டை போகவில்லையா?'

'வீட்டைவிட்டு எல்லாரும் ஓடுறியள்... நான் இந்தக் கோயிலில் தான் இருக்கப் போறன். ஆர் ஓடினாலும் ஓடட்டும். வாற ஆமி வரட்டும். செய்யிறதைச் செய்யட்டும். நான் எங்கையும் ஓடப் போவதில்லை. நீ புள்ளைகுட்டிக்காரன். எங்கயாவது ஓடித் தப்பு. நவாலிப்பக்கம் உனக்குச் சொந்தக்காரர் இருக்கினமெல்லே? அங்க போயிரன்...

'வலிகாமம் முழுவதும் வெளியேறிவிடவேண்டுமாம்.

தென்மராட்சிக்குத்தான் போக வேண்டுமாம். அதுவும் உடனை... ஒரு மணித்தியாலத்துக்குள்ள... அங்க எங்களுக்கு ஆரைத் தெரியும்? அங்க போய் என்ன செய்யிறது? றோட்டில நிக்கிறதே? நான் வீட்டைவிட்டுப் போகப்போறதில்லை. இந்தியன் ஆமி வந்தபோது கோயிலில அடைக்கலம் புகுந்த தைப் போல ஆமி வந்தால் கோயிலில் இருப்பம். அண்ணை: என்னால ஓடமுடியாது. கஷ்டப்பட்டு கட்டிய வீடுவாசலை விட்டு பிச்சைக்காரன் மாதிரி ஓட முடியாது. இருக்கிற சொத்து அது ஒன்றுதான். உண்ணாமல் உடுக்காமல் மிச்சப் படுத்திச் சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய வீடு... அதை விட்டிட்டு எங்க போறது .. வாறது வரட்டும் ..

மாணிக்கத்தார் அமைதியாக இரத்தினத்தைப் பார்த்தார். அவரின் முகம் கவலையால் கறுத்துக் கிடந்தது.

'இதை நினைக்க நெஞ்சுக்கை என்னவோவெல்லாம் செய்யிறது அண்ணை. என்றார் நெஞ்சைப் பிடித்தபடி இரத்தினம். 'எவ்வளவு லேசா முடிவெடுத்திட்டினம்.

மழை தூறத்தொடங்கிவிட்டது. துமிகள் இலேசாக விண்ணிலிருந்து இறங்கத்தொடங்கின. வானத்தின் கருமையி லிருந்து பெருமழை பெய்யப்போவதற்கான அறிகுறி தெரிகிறது. பிற்பகலில் தொடங்கும் பருவமழை இலேசில் விடாது. வீதியில் குழந்தை குட்டிகளுடனும்: பெட்டிகளுடனும் லட்சக்கணக்கான மக்கள் இறங்கிவிட்டார்கள். மழையில் என்ன பாடுபடப் போகிறார்களோ?

மாணிக்கத்தாரின் விழிகள் அம்மன்கோயிலின் வெளி மண்டபத்திற்குத் தென்பக்க வெளிவீதிக்கு அப்பால் அமைந்திருந்த அவரின் கடைசி மகள் சரோசாவின் வீட்டில் படிகின்றது. வெளிக்கேற்றடியில் திக்பிரமை பிடித்த நிலையில் மருமகன் சிவசாமி செய்வதறியாது நிற்பது தெரிகின்றது. அவன் ஓர் ஆசிரியன். எல்லாரோடும் சேர்ந்து ஓடுவது என்ற முடிவு எடுத்திருப்பானோ? மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு எங்கு செல்லப் போகிறானோ?

கேற்றைத்திறந்தபடி அவர் மகள் சரோசா கோயிலுக்கு வருகிறாள். அவளைத் தொடர்ந்து சிவசாமியும் பிள்ளைகளும் வருகின்றனர்.

'ஐயா.. என்று சரோசா விம்மினாள்: 'இங்க இனி இருக்க முடியாது... எல்லாரும் சாவகச்சேரிக்குப் போவம்.

அவரின் நான்கு வயதுப் பேத்தி தாயுடன் பயத்துடன் ஒட்டிக்கொண்டு நின்றாள். அவள் கண்களில் பயப்பிராந்தி அப்பிக்கிடப்பதை அவர் கவனித்தார்.

'வெளிக்கிடுங்கோ அம்மான். எல்லாரும் அங்கால கொஞ்சக் காலத்திற்குப் போயிருந்திட்டு வருவம். வயது வந்த பிள்ளைகளை வைத்துக்கொண்டு இங்க எப்படி இருக்கிறது. பிள்ளையளுக்கு ஏதாவது நடந்திட்டால்.. என்று சிவசாமி மனந்தளர்ந்த நிலையில் அவர் முன் இரந்து நிற்கிறார்.

அவரால் இரத்தினத்திடம் சற்றுமுன் கூறியவற்றை அவர்களிடம் சொல்ல முடியவில்லை. முகத்தில் தயக்கம் நிறைந்தது. மகளையும் பேரப்பிள்ளைகளையும் இரக்கத்தோடு பார்த்தார். சற்று மௌனக்கழிவில்: 'நீங்கள் எல்லாரும் கவனமாகப் போயிட்டு வாருங்கோ: பிள்ளையள். நான் இங்க இருக்கிறதாக முடிவெடுத்திட்டன். என்னால இந்த வயசில அங்க இங்க ஓடிவர முடியாது.

'அப்பு... உங்களுக்கென்ன விசரே...' என்று கத்தினான் மூத்த பேரன் நகுலன். 'ஊரே ஓடிக்கொண்டிருக்கிது. ஆமி வந்து கொண்டிருக்கிறதாம் .. இங்க இருக்கிறன் என்கிறியள்..

அவர் நகுலனைப் பாசத்தோடு பார்த்தார்

'அப்பு.. எங்களோட வாருங்கோ.. என்றபடி மாலதி அவரருகில் வந்து அவர் கரத்தைப்பற்றினாள். கிழவர் பேத்தியைப் பாசத்தோடு அணைத்து முதுகில் தடவி ஆறுதல் படுத்தினார்.

'எனக்கொண்டும் ஆகாது... அம்மாளாச்சி இருக்கிறா.

மாணிக்கத்தாரின் பிடிவாதம் அவர்களுக்குத் தெரியாததல்ல. இந்தியன் இராணுவம் அட்டகாசமாக எதிர்ப்பட்டவர்களை சுட்டுத் தள்ளியபடி வந்தபோது கூட அவர்களால் மாணிக்கத்தாரை அவர் வீட்டிலிருந்து கிளப்பிச் செல்ல முடியவில்லை. அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்வதை அவர் விழிகளில் நீர் கோர்க்கப் பார்த்திருந்தார்.

அவர் நெஞ்சம் நெகிழ்ந்து துவண்டது. அவருக்கு யாழ்ப்பாணத்தில் இருக்கிற ஒரேயொரு உறவு அவர்கள்தாம். ஏனைய பிள்ளைகள் எல்லாரும் வெளிநாட்டில் குடியேறி அங்கேயே தங்கிவிட்டார்கள்.

'எண்டாலும் அண்ணை, நீங்கள் இப்பிடிப் பிடிவாதமாக இருக்கக்கூடாது. அவர்களோடு போயிடுங்கோ. இங்க உங்களுக்கு ஆர் இருக்கினம்..' என்ற இரத்தினத்தை அவர் எறிட்டுப் பார்த்தார்.

'என்ராப்பா இரத்தினம்; நீயும் ஓடப்போகிறியா?'

'எனக்கென்ன செய்யிறதெண்டு ஒண்டும் தெரியவில்லை. ஐபிகேஎப் வந்தபோது அங்க இங்க மாறிமாறி இருந்தது போல இருக்கலாமென்று நினைக்கிறன். சிங்கள ஆமி வந்தால் எதாவது கோயிலிலை.. அல்லது பள்ளிக்கூடங்களில போய் இருக்கிறது. ஷெல்லுக்குத்தான் பயமாக இருக்கிறது. மழையாகப் பொழிந்து கொண்டு வருவான்கள். கொஞ்சக் காலத்துக்கு முந்தி வடமராட்சியைப் பிடிக்கேக்க வெட்டிக் கொட்டிக் கொண்டெல்லே வந்தவங்கள். என்ன வாழ்க்கை அண்ணை; உசிருக்குப் பயந்து ஓடிக் கொண்டிருக்கிற வாழ்க்கையாக முடிஞ்சிட்டுது. நிம்மதியாக வாழ்ந்து முடிக்க இயலாது போல... எங்கட பிள்ளையளெல்லாம் திக்கிற்கொண்டாகச் சிதறிப் போனது இதாலதான்.

அவர்கள் இருவரும் சற்று மௌனமாயினர். வெளிநாடுகளில் சிதறிப்போய் வாழுகின்ற பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் எண்ணிக்கொண்டார்கள். ஒரு பேரப் பிள்ளையைக்கூட இரத்தினத்தார் தன் கரங்களில் வாரியெடுத்துக் கொஞ்சக் கொடுத்து வைக்கவில்லை.

இந்த மண்ணின் சமாதானப் புறாவை எல்லாரும் சேர்ந்து கொத்திக் குதறிக் குற்றுயிராக்கிவிட்டார்கள். மனித வாழ்க்கை என்பதன் அர்த்தமே எவருக்குந் தெரியவில்லை. அமைதியும் சமாதானமும் பாதுகாப்பும் நிறைந்த வாழ்க்கை என்பது இந்த மண்ணிற்கு இனிக்கிட்டாத இலக்குகளாகி விட்டன.

'நான் வீட்டை போட்டு வாறன்; அண்ணை. என்றபடி இரத்தினம் எழுந்தபோது; சயிக்கிலில் இருவர் சிவசாமி வீட்டின் முன் வந்து நிற்பது தெரிந்தது. ஒருவனின் வலக்கரத்தில் துப்பாக்கி. சிவசாமி கேற்றடிக்கு ஓடிவந்தார்.

'சுருக்கா வெளிக்கிடுங்கோ... ஆமி கோண்டாவிலுக்கு வந்திட்டுதாம். கொக்குவிலைத் தாண்டி இராவைக்குள்ள வந்திடும்.

போர்டிக்கோவில் ஒருகாத்தில் சூட்கேசுடனும் மற்றக் காத் தில் நான்கு வயது மகள் சுகிர்தாவுடனும் நின்றிருந்த சிவசாமியின் மனைவி 'ஐயோ... என்று அலறினாள் வீட்டிற்குள் அகப்பட்ட உடுப்புகளை எடுத்து உரபாக்குகளில் திணித்துக் கொண்டிருந்த இரண்டு பிள்ளைகளும் 'என்னம்மா என்றபடி வெளியில் ஓடி வந்தன.

'வாருங்கோ... வாருங்கோ... கெதியாக வாருங்கோ' என்றபடி சிவசாமியின் மனைவி சரோசா முற்றத்தில் இறங்கினாள். 'கதவுகளைப் பூட்டுங்கோ ..

அவர்கள் விழுந்தடித்து வீதியில் ஏறியபோது மழை கனத்திருந்தது. நனைந்தபடி கிழக்குப் பக்கமாக விரைந்தனர். நகர்ந்த சனக்கும்பலுடன் கரைந்து போனார்கள்.

மாணிக்கத்தார் அந்தப் பரிதாபக்காட்சியைப் பார்த்துக் கொண்டே மரமாக நின்றிருந்தார். அவர் தங்களைப்பார்த்தபடி நிற்பதைச் சயிக்கிலில் வந்திருந்த ஜெகன் கண்டான். முன் பாரில் துப்பாக்கி ஏந்தியிருந்த இளைஞனுடன் கோயிலுக்கு முன்வந்து காலூன்றி நின்றபடி இருவரையும் ஏறிட்டுப் பார்த்தான்.

'என்ன இரத்தினமண்ணை: இன்னமும் வெளிக்கிட வில்லையோ?

'என்ன பெரியவர் இங்க நிக்கிறியள். கெதியாக வெளிக் கிடுங்கோ... என்றான் மாணிக்கத்தாரைப் பார்த்து சயிக்கில் பாரில் அமர்ந்திருந்த மாயன்.

'நாங்க போறதாகவில்லை. என்ன வந்தாலும் இங்கதான் இருக்கப்போறம்... என்று இரத்தினம் கூறியபோது ஜெகன் வேகமாகக் குறுக்கிட்டான்: 'என்ன விசர்க்கதை கதைக்கிறி யள்? ஆமி வருகுது எண்டு சொல்லுறம்.

'வந்தால் வரட்டும்

'வந்தால் வரட்டுமோ? வந்தால் என்ன நடக்கும் எண்டு தெரியுமே உங்களுக்கு ஒரு பதினெட்டு வயதில ஒரு பொடியன் இருக்கிறான். வந்ததும் கொட்டியா எண்டு அவனைச் சுடுவான்கள். இருபத்திரண்டு வயதில ஒரு குமர் இருக்குது அதைப் பாலியலுறவுக்கு இழுத்துச் செல்வாங்கள். அவ்வளவுதான் நடக்கும்

இரத்தினம் விக்கித்துப் போய் நின்றார். எதுவுமே அவரால் பேசமுடியவில்லை.

'கெதியாகப் போங்கோ. இரத்தினமண்ணை. பொடியனை எங்களிட்ட சேர விட்டிருந்தாலும் தப்பியிருப்பான்' என்று ஜெகன் சிரித்தான்.

இரத்தினம் தன் வீட்டை நோக்கி வேகமாக நடந்தார். பதற்றம் அவரிடம் தெரிந்தது.

'வெளிக்கிடுங்கோ .. வெளிக்கிடுங்கோ .. என்று அவர் கூவியபடி வீட்டை நோக்கிச் செல்வது கேட்கிறது. மாயன் சிரித்தபடி மாணிக்கத்தாரைப் பார்த்தான்.

'என்ன பெரியவர் நீங்க அசையக்காணோம் ..

'நான் போறதாகவில்லைத் தம்பிமார்..

'ஏன்?

'நான் கோயிலுக்கு விளக்கு வைக்க வேணும். என்னால அவ்வளவு தூரம் நடக்கக் கால்களில் வலுவில்லை.

'ஆமி வரேக்க இங்க நிக்கப் போறியளோ' அவங்கள் இங்க வரேக்க வெறும் மண்தான் அவங்களுக்குக் கிடைக்க வேணும்.

மாணிக்கத்தார் நிமிர்ந்து பார்த்தார்.

'இந்த மண்ணுக்காகத்தானே நீங்க ஆயுதம் எடுத்தியள்?

ஜெகன் கோபத்துடன் அவரை எறிட்டான்.

'விசர்க்கதை வேண்டாம். கெதியாப் போயிடவேணும். ஆமி வரேக்க இங்க நிக்கிறவையெல்லாரையும் துரோகிகளாகக் கணிப்பம்.

அவர்கள் சயிக்கிலில் வேகமாகச் சென்றுவிட்டார்கள்.

இருள் கவியத் தொடங்கியிருந்தது. இரத்தினம் தன் குடும்பத்துடன் வீதியில் ஏற்றிய பெட்டிகளுடன் சயிக்கில்களை உருட்டியவாறு புலம் பெயர்வது தெரிகின்றது. இந்தியன் ஆமி வந்தபோது இரத்தினத்தின் சொந்தக்காரப் பெண் மாம்பழத்தினையும் அவள் கணவன் பரமநாதனையும் சுட்டுக் கொன்றுவிட்டு செயின்புளொக்கால் ஏற்றி நசித்த காட்சி நினைவு வந்திருக்கும்.

நினைவு தந்த பீதி விரட்ட தான் முதலில் எடுத்த முடிவை மாற்றிக்கொண்டு இரத்தினம் மழையில் சொட்டச் சொட்ட நனைந்தபடி வீதியில் விரைந்தார்.

மாணிக்கத்தார் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. கோயிலின் கூரையில் ஏற்பட்ட வெடிப்பினூடாக மழைநீர் அவரருகில் சொட்டியது. துளிதுளியாக விழுந்து அது பரவியது. மாணிக்கத்தார் சற்று விலகி அமர்ந்துகொண்டார். உள்ளத்தில் பெரும் புயலை ஜெகன் கிளப்பிவிட்டான் 'இந்த மண்ணைவிட்டு உடனை போகாவிட்டால் துரோகிகளாகக் கணிப்பம் என்ற பொருள்படப் பேசிவிட்டான்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் இந்த மண்ணைவிட்டு வெளியேற அவர் விரும்பினார். அவருடைய மற்ற நான்கு பிள்ளை களும் வெளிநாட்டில் இருந்தனர். 'யாழ்ப்பாணத்தில் இருக்க வேண்டாம். இங்க வந்திடுங்கள்' என்று ஒருவர் மாறி ஒருவர் ஓயாது வற்புறுத்திக் கடிதங்கள் போட்டனர். அவர் பிடிவாதமாக மறுத்து வந்தார்.

'நான் இங்க தனியனாகவில்லை. கடைசி மகள் இருக்கிறாள். பேரப்பிள்ளையள் இருக்குது. அயலட்டையிருக்குது எனக் கடிதங்கள் எழுதினார். 'சரி: ஒருக்கா இங்க வந்து எங்களைப் பார்த்து விட்டாவது போங்கள். ஐயா. ஒரு ஆறு மாதங்கள் எங்களோட தங்கியிருங்கள். உங்களைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. பேரப்பிள்ளைகள் மிக ஆவலாக இருக்கிறார்கள் என்று ஒருவர் மாறி ஒருவர் எழுதியபோது அவர் பாசத்தில் நெகிழ்ந்து போனார்.

'ஒருக்காப் போய்வருவம்' என்று முடிவு செய்தபோது சிறாப்பர் பொன்னையா முதல் தடையைப் போட்டார்.

'நான் கனடாவிற்குப் போயிட்டு வந்தவன் சொல்கிறன். மாணிக்கம்.. அது எங்களைப் போல வயதானவர்களுக்குச் சரி வராத நாடு. சின்ன அறைக்குள்ள நாள் முழுவதும் ரிவியைப் பார்த்துக் கொண்டு சிறைப்பட்டிருக்க முடியாது கண்டியோ? பிள்ளையளை வாரத்தில ஒருநாள் பார்க்கலாம். அதுவும் முன்னறிவித்தலுடன்.. அந்த நாடு ஒரு பிசியான தேசம். அங்க உழைக்கிறதுக்காகத்தான் வாழ்கினம். குளிர். கூதல்.. அப்பப்பா... கொடுமை.. எங்கட ஊரில காலாற நடந்து அப்படிப்போய் இப்படி வந்து.. கோயில்கள் ஒழுங்கைகள்.. யாழ்ப்பாணம் சொர்க்கபூமி கண்டியோ? அவருக்குச் சிறாப்பர்

கூறியவை புரியத்தான் செய்தது.

ஒருக்காப் போய்ப் பார்த்துவிட்டுத்தான் வருவமே'

அவர் முடிவு செய்தபோது இந்த மண்ணை விட்டு வெளியேற அனுமதி கிட்டவில்லை. அந்த வேளையில் அவர்கள் சொன்னது சரி போலவும் பட்டது. இந்த மண்ணைவிட்டு வெளியேறுகின்ற எண்ணத்தைக் கைகழுவிவிட்டார்.

இப்பொழுது நினைக்கும்போது சிரிப்பு வருகின்றது.

வெளியே மழை சோணாவாரியாகப் பொழியத் தொடங்கியது. தூரத்தில் ஷெல்களின் வெடிப்புச் சத்தமும் துப்பாக்கிச் சன்னங்களின் படபட ஓசையும் கேட்கின்றன. ஜெகன் கூறியவாறு இராணுவம் முன்னேறித்தான் வருகின்றதோ?

கிழக்கு வானில் மின்னல் கிளைவிட்டு அழிந்தது. குண்டுச் சத்தங்களை மீறிக் கொண்டு இடி இடித்தது.

# 2

சோனாவாரியாக மழை கொட்டியது. வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் மழை நீர் தேங்கிச் சேறும் சகதியுமாகப் பாதைகளை மாற்றத் தொடங்கியிருந்தது. சிவசாமியும் மனைவியும் பிள்ளைக ளும் பிறவுன் வீதியிலிருந்து அரசடி வீதியில் ஏறியபோது தட்டா தெருப் பக்கமிருந்து நெருக்கியடித்தபடி மக்கள் கூட்டம் கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. மங்கிய நிலவொளியில் வீதியின் குண்டுங்குழிகள் சரிவரத் தெரியாமல் விழுந்தெழும்பி மானிடசோகம் நகர்ந்தது.

சரோசா விம்மினாள்.

'எங்கையாவது நின்றுவிட்டு மழைவிட்டதும் போவம். பிள்ளைகள் மழையில் தோய்ந்துவிட்டன.

சிவசாமி மனைவியையும் பிள்ளைகளையும் கவலையோடு பார்த்தார். சின்னவள் குளிரில் நடுங்குவது தெரிகின்றது. மாலதியும் நகுலனும் தோய்ந்து விறைத்து நின்றிருந்தனர். எங்கு நிற்பது? வீடுகளைப் பூட்டிக் கொண்டு தம்விதியை நொந்தபடி எல்லாரும் வீதியில் இறங்கிக்கொண்டிருந்தனர்.

'அப்பா, நாங்க வீட்டிற்கே திரும்பிப் போவம்.. என்றான் நகுலன். இருபத்திமூன்று வயது இளைஞன் அவன். சிவசாமி மகனைப் பரிதாபமாகப் பார்த்தார். என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை.

வலிகாமமே நனைந்தபடி ஓடும்போது அவர்கள் தயங்கி நிற்பதா' வீதியில் நிரம்பி வழியும் சனத்திரள் அவர்களுக்குப் பயமூட்டியது

'போவம் பிள்ளையள்... பன்னிரண்டு மணிக்குள்ள நாவற்குழிப்பாலத்தைக் கடந்திட வேண்டுமாம்...

'தென்மராட்சிக்குப் போவதற்கு வேறு பாதையில்லையா' என்று மாலதி துயரத்துடன் கேட்டாள்.

'இல்லை... கைதடிப்பாலத்தால போகேலாது... ஆமி வந்திட்டுதாம்...

'நாலு லட்சம் மக்கள் எப்படி அப்பா இந்த ஒரு பாதையால அங்கால போறது'

மக்கள் திரளாக நகர்ந்து கொண்டிருக்கின்றனர். சயிக்கில்களில் ஏற்றிய பாரச்சுமைகளோடு ஒரு பகுதியினர் தள்ளாடினர் மாட்டு வண்டில்கள் சுமைதாளாமல் கடகடத்த படி நகர்ந்து கொண்டிருக்கின்றன. சுமையேற்றிய வண்டில்களில் அடுக்கப்பட்டிருந்த பொருட்களுக்குமேல் நடக்கமுடியாத வயோதிபர்கள் ஏற்றப்பட்டிருந்தனர். தாயின் வயிற்றைப் பற்றிய குரங்குக்குட்டிகள் போல அவர்கள் இருந்தனர். சற்று கவனந் தப்பில் பிடித்தபிடி தளர்ந்து சரிந்து விழுந்து விடுவார்கள்.

இடுப்பில் தூக்கிய கைக்குழந்தைகளுடன் நடக்கமுடியாது தத்தளிக்கின்ற தாய்மார். தலையிலும் கரங்களிலும் தூக்கிய பொருட்பொதிகளுடன் எல்லாரும் காணப்பட்டனர். வயது போன பெற்றாரைக் கரம்பற்றி மெதுவாக அழைத்து வருபவர்கள்: கிழவர்கள்: நோயாளிகள்: நடுத்தரவயதினர்: இளம் வயதினர்: சிறுவர்கள்: குழந்தைகள் அனைவரும் வயது வேறுபாடின்றி அரசடி வீதியில் இலக்கின்றி நகர்ந்தனர்.

ஒரு நாட்டையே புலம்பெயர்க்கின்ற துயரச்சம்பவம் யாழ்ப்பாண வரலாற்றில் எப்பொழுதாவது நிகழ்ந்ததாக இல்லை. ஆட்சியாளர்கள் எதிரிகளிடம் நாட்டையும் மக்களையும் கையளித்துவிட்டு ஓடிக் கரந்துறைந்த வரலாறுண்டு. அவை சிவசாமிக்குத் தெரிந்திருக்கின்றது.

ஆனால் இப்படியொரு புலப்பெயர்வு புதிய துயர் அனுபவம். எதிரிகளுக்குக்கூட இப்படியொரு அவலம் நிகழக் கூடாது. இது பெருங் கொடுமை.

மண்ணெண்ணெயில் இயங்குகின்ற மோட்டார் சைக்கில்கள் புகை கக்கியபடி விரைவாக முன்னேற முயன்று தோற்றன. ஓரிரு கார்கள் நகரமுடியாது ஆங்காங்கு நிறுத்தப் பட்டிருந்தன.

'நடப்பம் பிள்ளையள்.. என்றார் சிவசாமி. தரித்து நிற்பது உசிதமாகப் படவில்லை. காட்டாற்று வெள்ளம் போல தொடர்ந்து மக்கள் கூட்டம் வீதியில் ஓடியது. இது ஓரிரு மணித்துளிகளில் வற்றிவிடும் என்பதற்கு அறிகுறியில்லை.

தூரத்தில் ஹெலி ஒன்றின் பறப்பொலி எழுந்தது. மக்களிடையே பரபரப்பு எழுந்தது. பருந்தைக் கண்ட கோழிக் குஞ்சுகள் போல கலவரம் அடைந்தனர். அங்கெங்கும் அசைய முடியாத நிலையில் வானத்தைப் பயத்துடன் பார்த்தபடி சற்று அசையாது நின்றுவிட்டனர். வானில் மிக்கவுயரத்தில் தென்புறமாக இரைச்சலிட்டபடி ஹெலி பறந்து மறைந்தது.

சிவசாமி சயிக்கிலை உருட்டியபடி முன்னே நகர அவர் குடும்பம் பின் தொடர்ந்தது. சின்னவள் சுகிர்தாவைத் தன் சயிக்கில் கரியரில் தூக்கி ஏற்றி மூத்தவன் நகுலன் உருட்டி வந்தான். கந்தர்மடத்தைத் தாண்டியபோது பலாலி வீதியால் வந்துகொண்டிருந்த மக்கள் திரளும் நல்லூரை நோக்கி முண்டியடித்தபடி திரும்பியது. பேராற்றினை வந்தடையும் நூற்றுக்கணக்கான கிளையாறுகள் போல எல்லாத் திக்குகளிலுமிருந்து மக்கள் அசைந்து வந்தனர்.

அவர்கள் நல்லூரை அடைந்தபோது நள்ளிரவாகியிருந தது. நல்லூர்க்கந்தசாமி கோயில் சுற்றாடல் மக்களால் நிரம் பிக் கிடந்தது. கோயிலினுள்ளும் வீதியிலும் மழை வெள்ளத் தைப் பொருட்படுத்தாது மக்கள் சோர்ந்து அமர்ந்திருந்தனர். அங்கிருந்த வர்களைத் தாண்டி நாவற்குழி நோக்கி மக்கள் முண்டியடித்தபடி சென்றனர்.

'என்னால இனி முடியாது. இங்க இருந்து இளைப்பாறு வம் என்ற மனைவியைச் சிவசாமி இரக்கத்துடன் பார்த்தார். அவருக்கும் ஓய்வு தேவைப்பட்டது. ஷஇவ்வளவு பேர் வீதியெங் கும் கிடக்கிறார்கள். அவர்களுடன் இருப்போம். வாறது எல்லாருக்கும் தான்' என எண்ணமிட்டார். தெற்கு வீதியில் சகடக் கொட்டிலிற்கு அருகில் எப்படியோ ஓரிடம் தேடி அமர்ந்து கொண்டனர்.

தாயின் மடியில் சுகிர்தா தலைவைத்துப் படுத்து விட்டாள்.

பிள்ளைகளின் முகத்தில் நடந்து வந்த களைப்புடன் பசியின் தாக்கமும் தெரிந்தது. சரோசா கணவனைப் பார்த்தாள்.

'நீங்கள் எங்க இருந்து வாறியள்' என்று சரோசாவின் அருகில் அமர்ந்திருந்த ஒரு பெண் கேட்டாள்.

'நாங்க கலட்டியிலிருந்து வாறம்...நீங்கள்...

'தாவடியிலிருந்து வாறம். அவர் பண்டத்தரிப்புக்குப் போனவர். அவர் வாறதுக்கிடையில வெளிக்கிட்டிட்டம்... பிள்ளையள் பயந்து அவசரப்பட்டுதுகள். நானும் வெளிக் கிட்டிட்டன். எங்க போறதெண்டு தெரியவில்லை.

'எங்களுக்குந்தான்...

இந்த நேரத்தில் துயரங்களை ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்வதில் மனதிற்கு நிம்மதி தெரிந்தது. ஒருவருக்கொருவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

'நான் சரஸ்வதி. அவற்றை பெயர் இராசரத்தினம்... கொக்குவில் இந்துக் கல்லூரியில ரீச்சர். இது சுகந்தி மூத்தவள... அது வசந்தன்... இரண்டாமவன். ஏ.எல். எடுத்திட்டிருக்கிறான்.

'இராசரத்தினம் மாஸ்ரரின் மனிசியே நீங்கள்? என்று சிவசாமி கேட்டார்.

'ஓமோம்... உங்களுக்கு அவரைத் தெரியுமே?

'நான் சிவசாமி. அவரோட கோண்டாவிலில படிப்பிச்ச னான். உங்கட வீட்டிற்கும் வந்திருக்கிறன்...

'இப்ப தெரியும்... உங்களைத் தெரியும்... என்றாள் மகிழ்ச்சியுடன் சரஸ்வதி. தெரிந்தவர்கள் கூடி இருப்பது நம்பிக்கையைத் தந்தது. சரஸ்வதி தன்னிடமிருந்த பிளாஸ்ரிக் பையிலிருந்து லெமன்பஃப் பிஸ்கட் பெட்டியை எடுத்துச் சரோசாவிடம் கொடுத்தாள். சரோசா தயங்கியபோது: 'பரவாயில்லை. இந்த நேரத்தில் உதவாமல் பிள்ளைகளுக்குக் கொடுங்கள்... என்று வற்புறுத்தினாள்.

சரோசா வாங்கிக் கொண்டாள். விழிகளில் நன்றி நிறைந்தது.

மழை சற்று ஓய்ந்திருந்தது. எனினும் துன்பத்தின் இருள் எங்கும் கவிந்து இருக்கின்றது. வீதியில் சனவெள்ளம் வற்றி விடவில்லை. கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டுதான் இருந்தது. நள்ளிரவு தாண்டிய வேளையில் அச்சனவெள்ளம் நகராது நின்றுவிட்டது. பல்வேறிடங்களிலிருந்தும் குவிந்த மக்கள் நாவற்குழிப்பாலத்தின் முன் நகரமுடியாது நின்று விட்டனர். பாலத்தின்முன் களப்புவெளியில் லொறியொன்று சேற்றில் சறுக்கி ஒரு பக்கம் இறங்கிவிட்டதால் எதுவும் எவரும் முன்னால் நகர முடியவில்லை.

காட்டாற்று வெள்ளத்திற்கு அணை கட்டியதுபோல யாழ்ப்பாண வீதியெங்கும்: ஒழுங்கைகள் எங்கும் சேற்றிலும் சரியிலும் மக்கள் இருக்க இடமின்றி அப்படியப்படியே நின்றனர். சிலர் நிற்க வலுவற்றவர்களாகி சேற்றையும் பாராது நிலத்தில் இருந்து தலையில் கைவைத்துப் புலம்பினர்.

'படுபாவிகள் ...படுபாவிகள் ... இப்படிச் செய்து விட்டான்களே..'

அவர்கள் யாரைத் திட்டுகிறார்கள்? உரும்பிராயை நோக்கிக் கனரக ஆயுதங்களுடன் நகர்ந்து கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தையா?

'நல்லூரானுக்கும் கண்ணில்லை.. என சரஸ்வதி தன்னை யறியாமல் குமுறலை வெளியிட்டாள்.

'ஓமோம்... எவ்வளவு விரதம் பிடிச்சம்... இப்படி எதுவுமில்லாமல் தெருத்தெருவாக ஓட வைச்சிட்டான்.. என்றாள் சரோசா விழிகளைத் துடைத்தபடி.

'கடவுளை ஏன் நொந்து கொள்கிறாய் அப்பா.. கடவுள் எல்லாத்தையும் நல்லவையாகத்தான் படைத்தார். மனிதன் தான் எல்லாவற்றையும் தீயவையாக்கிவிட்டினம். கண்ணுக்குத் தெரியாத சுதந்திரம் என்ற உணர்விற்காக கண்முன் இருந்த அனைத்தையும் இழக்க வைச்சிட்டம். தங்கச்சி: உம்முடைய மனிசன் இராசரத்தினம் கார்த்திகேசு மாஸ்ரற்றை மாணவன். அவன் அடிக்கடி சொல்வான்: யாழ்ப்பாணச் சமூகம் திருந்த வேண்டும். சாதியம் பேசிப்பேசி ஒரு பகுதி மக்களை அடக்கி யொடுக்கி வைச்சிருக்குது. வர்க்க வேறுபாடு நீங்க வேண்டும்.

புகப்புரட்சி யொன்று வந்து பொதுவுடமை மலரவேண்டும் என்று இண்டைக்கு ஒருமணி நேரத்தில யாழ்ப்பாண மக்கள் எல்லாரும் எதுவுமில்லாதவர்களாக மாறிவிட்டினம். எல்லாரும் கையேந்திற நிலைக்கு வந்திட்டம். எல்லாரையும் ஒரே மட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கும் புரட்சி. சிவசாமியின் குரலில் தொனித்த கவலையையும் ஏளனத்தையும் சரஸ்வதிக் குப் புரியாவிடினும் வசந்தன் புரிந்து கொண்டான். சிவசாமி யின் பேச்சிற்குப் பதில் சொல்ல அவன் விரும்பியபோதிலும் எதுவும் பேசவில்லை.

மானிடசோகம் எதையும் பேச வைக்கும். நம்பிக்கை இழந்த நிலையில் துன்ப இருளிடையே மக்கள் வீதியில் இறங்கிவிட்டார்கள். செயலைவிட நம்பிக்கைதான் முக்கிய மான வாழ்வின் பிடிப்பு என்பது அவனுக்குத் தெரியும். அவன் அதை இழக்கத் தயாராகவில்லை.

தூரத்தில் சேவல் ஒன்று கூவியது. அதனைத் தொடர்ந்து வேறிரு திக்குகளிலிருந்தும் சேவல்கள் குரல் தந்தன. வீட்டுக் கோழிகள் மரங்களிலிருந்தும் வீட்டுக்கூரைகளிலிருந்தும் முற்றத்தில் குதித்துப் பார்க்கும்போது ஒவ்வொரு வீடும் மயான அமைதியில் ஆழ்ந்திருக்கும். முதல் நாள் கலகலப்புடன் ஒவ்வொரு வீட்டிலும் முற்றத்திலும் உலாவிய மக்கள் எங்கே ஒரு இரவில் மறைந்து போனார்கள்? மனிதர்களைத் தொடர்ந்து கூடவே வந்திருக்கும் நாய்கள் வீதிகளில் அலை கின்றன. அவிழ்த்துவிட்ட மாடுகளும் ஆடுகளும் தறிகெட்டுத் திரியப் போகின்றன. உணவில்லாது பசியால் தவிக்கப் போகின்ற தெருநாய்களின் வேட்டைக்குக் காலகதியில் அவை இரையாகப் போகின்றன.

விடிந்தது. சனத்திரள் மெதுவாக நகரத் தொடங்கி யிருந்தது. ஒரு இரவிலேயே நல்லூர் வீதிகள் நாறத்தொடங்கி விட்டன. நல்லூர் வீதியில் திறந்திருந்த தேநீர்க் கடையில் ஈக்கள் போல மக்கள் வெறுந்தேநீருக்காகப் பரதவித்து நின்றனர்.

திறந்திருந்த வீதியோர வீடுகளுக்குள் புகுந்து கிணற்றில் நீர் அள்ளிப் பருகிக் கொண்டனர் பலர். காய்த்திருந்த மாங்காய்களைப் பிடுங்கிக் கடித்துக்கொண்டனர். கட்டிக் கொண்டு வந்திருந்த உணவைப் பங்கிட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்து விட்டு பசியிருந்தனர் பெற்றார்.

இரவில் சனத்திரளின் பரிதாபக்கோலம் சிவசாமிக்குத் தெரியவில்லை. அதிகாலை வெளிச்சத்தில் அவலத்தின் பல்வேறு நிலைகள் புரிந்தன.

'வெளிக்கிடுவம்... இனியும் இங்கிருப்பதில் பயனில்லை. என்றாள் சரோசா.

'அம்மா: தங்கச்சிக்கு உடம்பு சுடுகுது... என்றாள் மாலதி.

சரோசா மகளைத் தொட்டுப் பார்த்தாள். உடல் இலேசாகச் சுட்டது. வடக்குப்பக்கமாகக் குண்டுகள் வெடிக்கின்ற சத்தம் சற்றுக் கடுமையாக எழத்தொடங்கியது.

'கெதியில அங்கால போவம்...என்றார் சிவசாமி.

'நீங்களும் வாங்கோ.. தயங்கி நின்ற சரஸ்வதியை சரோசா அழைத்தாள்: 'சாவகச்சேரிக்குப் போவம். உங்கடையவர் எப்படியும் அங்க தேடி வருவார்தானே..

'வெளிக்கிடும் வசந்தன்.. என்றான் நகுலன்.

அவர்கள் மீண்டும் முன்னேறும் மக்கட்கூட்டத்துடன் இணைந்தார்கள்.

'எவ்வளவு சனம்? காலடி எடுத்து வைக்கவே முடியவில்லை. சாவகச்சேரி எப்படித்தான் கொள்ளப்போகுதோ? என்ற வசந்தனைப் பார்த்து நகுலன் புன்னகைத்தான்.

தேர்முட்டியைக் கடந்தபோது சிவசாமியை எவரோ பெயர் சொல்லி அழைத்தார்கள். அவர் திரும்பிப்பார்த்தார்.

'அது நான் தம்பி... என்று தேர்முட்டியடியில் நின்று இரத்தினம் கையசைத்தார்.

நின்று மறுமொழி சொல்ல முடியாதவாறு பின்னால் வந்த சனம் முன் தள்ளியது.

'வரேல்லையே?

'கனபேர் இங்க நிற்கப்போகினமாம். நானும் பார்த்திட்டு வாறன்.. என்றார் பெருங்குரலில் இரத்தினம்.

சிவசாமியைப் பதில் சொல்லச் சனம் விடவில்லை.

'ஊர்க்கதை பேந்து கதைக்கலாம். முன்னால நடவுங்கோ. கெதியாக நடவுங்கோ... என்று ஒருவன் கத்தினான்.

சனநெருக்குதலில் பிள்ளைகள் பிரிந்துவிடுவார்கள் போலப்பட்டது. 'கவனம் பிள்ளையள்.. ஒருத்தரையொருத்தர் விலகாமல் வாங்கோ.

'ஒவ்வொருவருக்கும் தாம் முந்தி ஓடிவிடவேண்டுமென்ற விருப்பம். எல்லாத்திலும் முந்தி ஓடத்தான் விரும்புகினம்... என்ற மாலதியை அருகில் வந்த சுகந்தி திரும்பிப்பார்த்துப் புன்னகைத்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுக்கே தங்களது தோற்றம் வெட்கத்தை யும் கவலையையும் தந்தது. விடிந்ததும் முகம்கழுவி அலங்கரி த்து வீட்டில் நிற்கின்ற இளம்பிள்ளைகள் மழையில் நனைந்து உடல் வெப்பத்தால் காய்ந்த கசங்கிய ஆடைகளுடன் விரல்க ளால் தலைமயிரைக் கோதிவிட்டு நடந்தார்கள். அவர்கள் நாயன்மார்க் கட்டை அடைந்தபோது மேற்கொண்டு நகர முடியாமற் போனது.

ஒதுங்கி நின்றுவிட்டார்கள். குழந்தைகள் பசியால் அழு கின்ற சத்தம் எங்கும் கேட்டது. வளர்ப்பு நாய்கள் கால்களுக் கிடையில் கலக்கத்துடன் திரிந்தன. பலர் தாம் வளர்த்த மாடுகளையும் ஆடுகளையும் கட்டி இழுத்து வந்தார்கள். அவைதாம் அவர்களின் ஒரே சொத்துப்போலும். அவற்றை விட்டுவிட்டால் எதுவுமேயில்லை. சயிக்கில் கரியரில் ஐந்தாறு கோழிகளை ஒன்றாகப்பிணைத்துத் தொங்கவிட்டிருந்தார்கள். அவற்றில் பெரும்பாலானவை மயங்கிக் கிடந்தன.

'இப்படியொரு வாழ்க்கை வந்திருக்கக்கூடாது. கூட்டு மொத்த மாக ஓடும்படி எங்களைச் சொலிலியிருக்கக் கூடாது. ஆமி வந்தால் சனங்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள எங்காவது ஓடித்தான் இருப்பினம்... மாறி மாறி இடம் மாறி நின்றிருக்கலாம். ஒருத்தரும் இல்லாத யாழ்ப்பாணத்தைத் தெருநாய்களும் கட்டாக்காலிகளும் எஞ்சிய வெறும் யாழ்ப்பாணத்தைக் கொடுக்க எண்ணியிருப்பினம் என்றாள் மாலதி சுகந்தியைப் பார்த்து.

'போராட்டத்தில இவை தவிர்க்க முடியாதது... என்ற சுகந்தி எங்கோ வெறிக்கப் பார்த்தாள். 'யாழ்ப்பாணத்தை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டுமென்று வரும் சிங்கள ஆமிக்கு எல்லாரும் புலிகளாகத்தான் தெரிவினம்.

யாழ்ப்பாணத்தில் நின்றிருப்பம் எண்டால் மக்கள் அதிகமாக நிச்சயமாகப் பலியாக வேணும்.

'இப்படிக் கஷ்டப்படுவதிலும் அது பரவாயில்லை மாதிரித் தெரியுது.

'எது' சாகிறதா?

மாலதி எதுவும் பேசாது மௌனமானாள்.

'நீர் எங்க படிச்சனீர்?

'கின்டு லேடீஸ் கொலிச்சில......நீர்'

'கொக்குவில் இந்துக்கல்லூரியில.. - சுகந்தி

இருவரின் பார்வையும் ஒரு சயிக்கிலில் நிலைத்தன. விறகு கட்டி வருவதற்காகச் சயிக்கிலின் பின்கரியரில் நான்கு கம்புகளைக் குத்தாகப் பிணைத்து ஒரு கூடு செய்திருப்பார்கள். அப்படிப் பிணைத்த கூட்டிற்குள் வயோதிபத்தாய் ஒருத்தி சோர்ந்துபோய் அமர்ந்திருந்தாள். சயிக்கில் கான்டிலில் உரப்பைகள் பொருட்களுடன் தொங்கின. சயிக்கில் சரிந்து விடாதிருக்க மூவர் கிழவியைப் பிடித்துக்கொண்டு வந்தனர். பேரப்பிள்ளைகளாக இருக்க வேண்டும். தாயை மிக்க கவனத்துடன் மகன் சயிக்கிலில் இருத்தி உருட்டி வந்தான்.

கிழவி சயிக்கிலில் இருந்தபடி புலம்பிக் கொண்டிருந்தாள்.

'அப்பாச்சி... அப்பாச்சி.. இன்னும் கொஞ்சத்தூரந்தான். போயிடுவம்.. என்று ஒரு பேரன் ஆறுதல் சொன்னான்

கிழவியின் தலை ஓரிடத்தில் இருக்காது அங்குமிங்கும் ஆடி அசைந்தது.

'பாவம்... என்றான் நகுலன்.

வசந்தன் எதுவும் பேசவில்லை. தான் காவி வந்த பாக்கைத் தோளில் மாட்டிவிட்டு சயிக்கிலின் விறகுக் கம்பைப் பற்றி உருட்டுவதற்கு உதவியாக நிமிர்த்திப் பிடித்தான்

'நான் கொஞ்சத் தூரம் உருட்டி வரவே?

சயிக்கிலை உருட்டியவன் நன்றியோடு திரும்பிப் பார்த்தான். வசந்தன் சரிந்த சயிக்கிலைப் பற்றி நிமிர்த்திப் பிடித்திருப்பது உருட்டுவதற்கு இலகுவாயிருந்தது.

'வேண்டாம் தம்பி.. எனக்குக் கஷ்டமில்லை. அது என்ர அம்மா.

அவர்கள் மெதுவாக முன்னேறிச்சென்றனர்.

'எங்கிருந்து வாறியள்...'

'நவாலியிலிருந்து வாறம்... என்றான் கிழவியின் பேரன்.

'அவ்வளவு தூரம் இப்படி ஆச்சியை வைச்சு உருட்டியா வாறியள்...'

'ஓம்... எங்களுக்கு ஆச்சிதான் எல்லாம். நவாலிக் குண்டு வீச்சில எங்கட அம்மா ஒரு அக்கா இரண்டுபேரும் செத்துப் போச்சினம். நாங்கதான் மிச்சம். ஆச்சிதான் எங்களுக்குச் சமைச்சுத் தாறவ. ஆச்சிதான் எல்லாம்.

'உன் பெயர் என்ன? என்று வசந்தன் கேட்டான்.

மூவருக்கும் ஆறு வயதிற்கும் ஒன்பது வயதிற்குமிடையில் தான் இருக்கும்.

'நான் அழகன்... இது தங்கச்சி அரசி.... இது தம்பி ராசு.

செம்மணிச் சந்தியை நெருங்கியபோது சனத்திரள் அலை மோதியது. அவர்களால் நகர முடியவில்லை. சயிக்கிளை உருட்டிச் செல்ல முடியாது போனது. அப்பொழுதுதான் வசந்தன் கவனித்தான். கிழவியின் தலை தோளில் சாய்ந்திருந் ததை. தொட்டுப் பார்த்தான். எதுவித உணர்வுமில்லை.

'அண்ணை... ஆச்சியைப் பாருங்கோ...

'என்ன என்ன... அம்மாவுக்கு என்ன! என்று பதறியபடி இராசையா திரும்பிப்பார்த்தான்.

'கொஞ்சம் ஆச்சியை இறக்கிப் படுக்க வைப்பம்.... களைச்சு மயங்கிப்போனா...

வீதியோரத்தில் வேலிக் கானோடு உரப்பைகள் இரண்டினை விரித்து: கிழவியைத் தூக்கி வளர்த்தினார்கள். முன்னேறிய சனம் திரும்பிப்பார்த்துவிட்டு அவர்களைத் தாண்டிச் சென்றது. வசந்தனும் நகுலனும் நின்றுவிட்டதால் அவர்கள் எல்லோரும் தரித்துநின்றனர். சிவசாமிக்கு அந்தக் கிழவிக்கு உதவி செய்யாமல் அப்பால் செல்ல விருப்பமில்லை.

அவருக்குத் தன் தாயின் ஞாபகம் வந்துவிட்டது. இப்படித்தான் நரைத்த தலையோடு மிகச்செந்தளிப்பாக இருப்பார். எப்பொழுதும் நெற்றியில் விபூதிப்பட்டை மூன்று குறிகள் தெரியும். எதற்கும் வாய் 'அம்பாளாச்சி' என்று உச்சரித்தபடியிருக்கும்.

கிழவிக்கு மயக்கம் தெளிந்தது. தண்ணீரை ஆசையோடு பருகியபடி தன் மகனையும் விழிகளில் நீர்சோரச் சூழ்ந்து நின்ற பேரப்பிள்ளைகளையும் பார்த்தாள்.

'அம்மா...என்னனை செய்யுது...?

'அப்பாச்சி...அப்பாச்சி... என்ன வேணும்...

கிழவிக்குத் தன்னிலை புரிந்தது. மகனை மெதுவாகத் தன்னருகில் குனியும்படி கண்களால் அழைத்தாள்.

'என்ன அம்மா? என்றபடி தாயின் வாயருகில் குனிந்த மகன்: 'ஐயோ.. என்றலறியபடி தன் தலையில் அடித்துக் கொண்டு வீரிட்டான்.

பயத்துடன் பிள்ளைகள்: 'அப்பா... என்றபடி அவனைச் சூழ்ந்து கொண்டன.

'தன்னை இப்படியே விட்டிட்டு எங்க எல்லாரையும் தப்பி ஓடட்டாம். அப்பாச்சி சொல்றா...

எல்லாரும் விக்கித்து நின்றார்கள். சுகந்தியின் விழிகள் நீரைச் சொரிந்தன. அவள் கலங்குவதை நகுலன் ஏக்கத்துடன் அவதானித்தான்.

# 3

சோனாவாரியாகப் பெய்கின்ற மழையில் பல மைல்கள் நீளத்திற்குச் சனவெள்ளம் தேங்கி நின்றிருந்தது. எங்கு பார்த்தாலும் தலைகள். மழையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் குடைகளை விரித்துப் பிடித்திருந்தோர்; சொப்பிங் பாக்களைத் தலைகளில் மாட்டியிருந்தோர்; சூட்கேஸ்களைத் தலையில் சுமந்திருந்தோர்; வெறும் துணியைத் தலையில் கட்டியிருந்தோர்; சொட்டச்சொட்ட நனைந்தபடி திக்பிரமை பிடித்து நின்றோர். சிங்கள இராணுவம் உரும்பிராயைத் தாண்டி முன்னேறிக் கொண்டிருக்கின்ற செய்தியும் தூரத்தில் ஓயாது எழுந்து கொண்டிருக்கின்ற குண்டுவெடிப்புச் சத்தங்களும் மக்களைக் கிலியடையச் செய்துவிட்டன.

முதல்நாள் மாலையே ஆனைக்கோட்டையில் அறிவிப்புச் செய்யப்பட்டது. அறிவிப்புக் கேட்டவுடனேயே சுவாமிநாதன் ஒரு சாராயப் போத்தலை உடைத்து மேசையில் வைத்துவிட்டு அமர்ந்துவிட்டார். அவருடைய மனைவி மங்கை அவரைத் தடுக்க முயலவில்லை. உண்மையில் அச்செய்தி பேரிடிதான். எவராலும் தாங்கிக்கொள்ள முடியாத சங்கதிதான்.

போர்டிக்கோவில் நிறுத்தி வைத்திருந்த காருக்குள் மங்கை பெறுமதியான பொருட்களையும் உடுப்புக்களையும்

எடுத்து வைத்தாள். கான் ஒன்று நிறையத் தண்ணீரும் நிறைத்து சீற்றுக்குப்பக்கத்தில் வைத்தாள். பணிஸ்கள், பிஸ்கற்றுகள் என்பனவற்றை ஒரு பிளாஸ்ரிக் கூடையிலிட்டுக் கவனமாகக் காரில் வைத்தாள்.

சுவாமிநாதன் கிளாசில் வார்த்து அருந்தியபடி எல்லாரையும் திட்டித் தீர்த்துக்கொண்டிருந்தார்.

'மெதுவாகப் பேசுங்கோ... ஆருக்காவது கேட்கப் போகுது. மெதுவாக...

'கேட்டால் என்ன? நான் எண்டைக்கும் உண்மையைத் தான் கதைப்பன். ஏமாத்திப் போட்டான்கள். கைவிட்டிட்டான்கள். நடுத்தெருவில விட்டிட்டான்கள்.

மங்கை அதன் பின்னர் எதுவும் பேசவில்லை. அவர் எவ்வளவு குடித்தாலும் கார் ஓட்டக்கூடியவர்தான். காரிருள் என்றாலும் மந்தி கொப்பிழக்காது என்பார். அவர்கள் தேடிய சொத்து சுகங்களைக் கைவிட்டு கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு பிறந்து வளர்ந்த மண்ணை விட்டுஉடனடியாக ஓடுவதென்றால் நெஞ்சம் வேகாமல் என்ன செய்யும்?

மங்கையின் தாய்மாமன் விழுந்தடித்து விறுவிறுத்து ஓடி வந்தார்.

'தங்கச்சி...தங்கச்சி... என்னடி செய்யிறது?

'என்ன செய்யிறது... ஓட வேண்டியதுதான்...

சுவாமிநாதன் இருந்தவிடத்திலிருந்து நிமிர்ந்து பார்த்தார்.

'இங்க வாங்கோ... இப்ப என்னத்துக்குப் பதட்டப்படுகிறியள். இப்படி இருங்கோ...

'தம்பி...

'இருங்கோ. அம்மான். எல்லாம் மனிசக்குத்தான். எல்லாத்தையும் விட்டுவிட்டு ஓடப்போறம். கொண்டே வந்தனாங்கள். இந்தாங்கோ... ஒரு ராம் அடியுங்கோ தலைக்குமேல வெள்ளம் போகவில்லை...

மயில்வாகனம் கைநீட்டி வாங்கிக் கொண்டார். ஒரு மிடறில் ஊற்றிக் கொண்டார்.

'தம்பி...

'இப்ப சொல்லுங்கோ... என்ன வேணும்?'

'ஒண்டும் வேண்டாம் தம்பி... நாங்க பெரியவங்கள் எப்படியும் வந்திடுவம்... ஆச்சியையும் சின்னங்களையும் உங்களோட காரில் சாவகச்சேரிக்குக் கூட்டிச் செல்லுங்கோ... அங்க நீங்க எங்கேயும் போகவேணாம்... நேரே பாலசிங்கத் தாரின்ர வீட்டிற்குப் போங்கோ. அவன் என்ர மச்சான்...

'அவ்வளவுதானே... சுருக்கா வரச் சோல்லுங்கோ. இன்னமும் பத்து நிமிடத்தில வெளிக்கிடப் போறம்...

மயில்வாகனத்தார் வேகமாக எழுந்தார். நகர முயன்ற போது சுவாமிநாதனின் குரல் தடுத்தது.

'அம்மான்... இப்படியொரு நாளைக்கு நடக்குமெண்டு எனக்கு எப்பவோ தெரியும். குடிகாரன் சொல்லுறான் எண்டு எண்ண வேண்டாம். இப்படியொரு மழையுக்க கையில் எதுவுமில்லாமல் பலநூறு வருசங்கள் எங்களோட யாழ்ப்பாண த்தில வாழ்ந்த: எங்கட சுகதுக்கங்களில பங்கு கொண்ட முஸ்லீம் மக்களைத் துரத்தியடிச்சமே? அவங்கள் சாபம் போட்டுக் கொண்டுதான் போனார்கள்... அந்தப் பழி... அந்தச் சாபம்... இண்டைக்கு நாங்க எல்லாரும் ஒட்டுமொத்தமாக ஓடப்போறம்.

மயில்வாகனம் திக்கித்து நின்றார். மங்கை கணவனைப் பயத்துடன் பார்த்தாள்.

'என்ன பார்க்கிறாய்: மங்கை... நான் சொல்லுறதில என்ன பிழை? நெருப்பைச் சீலையால மூடப்பார்க்கிறாய்...

அவள் எதுவும் பேசவில்லை. அவர் எழுந்திருந்தார். அறைக்குள் போய் ஒரு பெட்டியைத் தூக்கி வந்து காரில் வைத்தார். முந்தாநாள் அதிகவிலை கொடுத்து வாங்கிய லையன்லாகர் பியர்.

'இது ஏனுங்க..

'என்னைத் தடுக்காதை மங்கை... நான் நொந்து போனன். இவற்றை உழைக்க நான் பட்ட கஷ்டங்கள்.... அவஸ்தைகள் எனக்குத் தெரியும். இஞ்ச பார்.... இந்த வீட்டு முற்றத்தில நிக்கிற ஒவ்வொரு மரஞ்செடியும் நான் என்ர கையால வைச்சு ஒவ்வொரு நாளும் தண்ணி ஊத்தி வளர்த்த பிள்ளையள்.

இதையெல்லாம் விட்டிட்டு.. கெதியாக வெளிக்கிட்டு ஓடுங்கோ என்றிட்டாங்கள்... போறம்... சிங்கள ஆமி வரேக்க இங்க நாங்க இருக்கப் போறதில்லை. சொல்லாட்டியும் ஓடித்தான் இருப்பம். காங்கேசன்துறையிலிருந்த வீடு வாசல்களை யெல்லாம் ஒரு இரவில் இழந்து ஐஞ்சாறு வரியத்துக்குமுன்னம் இங்க அகதிகளாக ஓடிவந்தம். இங்கயும் இப்ப உழைச்சதுகளை விட்டிட்டுச் சாவகச்சேரிக்கு ஓடப்போறம்....

மங்கை கணவனுக்கு அருகில் வந்தாள். அவர் கரத்தை ஆதரவோடு பற்றினாள்.

'கவலைப்படாதையுங்கோ... நாங்க நாலைஞ்சு நாளில திரும்பி வந்திடுவமாம்...

அவர் தம் மனைவியை இழுத்து அணைத்துக்கொண்டு அவள் தோளில் முகம் புதைத்து அழத்தொடங்கினார். அவள் அவரை ஆதரவாக அணைத்துக் கொண்டாள்.

'இப்படித்தான் காங்கேசன்துறையிலிருந்து ஓடிவந்த போதும் சொன்னம்...

அவர் காரில் ஏறி அமர்ந்தார். அவர் நிதானமாகக் காரை கேற்றைத்தாண்டி நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி தனது வீட்டை அடங்கா ஏக்கத்துடன் பார்த்தார். கேற்றைச் சாத்தியபடி வெகு நேரம் நின்றிருந்தார். மயில்வாகனம் ஆச்சியையும் பிள்ளைகளையும் அழைத்து வந்து காரில் ஏற்றிய பின்னரும் நின்றிருந்தார். பின்னர் காரில் மீண்டும் ஏறிக்கொண்டார். வீதியில் சனம் முண்டியடித்தபடி, கூக்குர லிட்டபடி வந்து கொண்டேயிருந்தது. நாடே வீதியில் நிற்பதென்றால்... அவர் காரைக் குறுக்கு வழிகளால் விட்டு விரைவில் நாவற்குழிப் பாலத்தைத் தாண்டிச் சாவகச்சேரி க்குச் சென்றுவிட வேண்டுமென விரும்பினார். ஆனால் அவர் திருப்பிய ஒழுங்கைகளிலும் ஊரைவிட்டு ஓடும் சனங்கள் நிரம்பி வழிந்தனர். அவர்கள் கச்சேரியடியை வந்தடைந்த போது மறுநாள் மதியம் பிறந்திருந்தது. கார் ஓடவில்லை. நகர்ந்துதான் வந்தது.

கச்சேரியடியில் அவர்கள் நகரமுடியாமல் தரித்து நின்றனர். மங்கை வழிப்பயணத்திற்கென கொண்டுவந்திருந்த பிஸ்கற்றுகள்; பணிஸ்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டன. கானில் இருந்த தண்ணீரும் முடிந்துவிட்டது. சுவாமிநாதனுக்கு அந்தப்பிரச்சனை இருக்கவில்லை. அருகிலிருந்த பெட்டியி

லிருந்த பியர்ப்போத்தலை பற்களினால் திறந்து அப்படியே விட்டுக் கொண்டார்.

பிற்பகல் வேளையில் அவர்கள் செம்மணிச்சந்தியை அடைந்தனர். இச்சனக்கும்பலிடையே காரில் செல்வதென்பது சாதாரண செயலாகப் படவில்லை. எவரிலும் படாது காரைச் செலுத்துவது கடினமாகவிருந்தது. சந்தியில் காவற்றுறையைச் சேர்ந்த ஒருவர் காரை ஒரு பக்கமாக நிறுத்தும்படி பணித்தமை சுவாமிநாதனுக்குத் தெரியவில்லை. அவர் சந்தியால் திருப்ப முயன்றபோது: 'ஏய்.. ஏய்.. என்றபடி காவற்றுறை பொலிஸ் முன்னால் விரைந்துவந்து அவரின் காரின் போனட்மீது பலமாக அறைந்தான்.

'நிறுத்தச்சொன்னால் நிறுத்துவது தானே?...

காரில் பலமாக அறைந்ததை இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினார். இறங்கிய வேகத்தில் அவனைப்பற்றித் தள்ளி விட்டார். அவன் கோபத்தோடு எழுந்து ஓடிவந்தான் பலர் அவனைத் தடுத்துப்பிடித்தனர்.

'விட்டிடும் தம்பி... தெரியாமல் நடந்திட்டுது..

அவன் சாந்தமடைந்தான்.

'மனிசர் மாதிரி நடக்கத் தெரியவில்லை.

சந்தியில் கலவரம் நடப்பதைச் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த சிவசாமி கண்டார். சயிக்கிலை நகுலனிடம் கொடுத்துவிட்டு: நம்மடை சுவாமிநாதன் போல இருக்குது... அவன்ர கார்தான்... ஏதோ பிரச்சனை போலவிருக்குது... என்றபடி நகர முயன்றார்.

பின்னால் வந்து கொண்டிருந்த சனம் இடித்துமோதியது.

'ஒரிடமும் போகவேணாம்... நில்லுங்கோ... என்று தடுத்தாள் சரோசா.

சுவாமிநாதன் காரில் ஏறிக் கொண்டார்.

'சுகிர்தாவைப் பாத்தியளே? காய்ச்சல் காயுது... பிள்ளை சரியாக மழையில நனைஞ்சிட்டுது.. இராச் சாப்பிட்டதுக்கு இன்னமும் ஒண்டுமில்லை. தண்ணிகூட இல்லை...

மழை மீண்டும் சிணுங்கத் தொடங்கியது.

எல்லாருடைய நிலையும் பரிதாபத்திற்குரியதாக மாறத் தொடங்கிவிட்டது. பசி ஒரு புறம்... நாக்கு வறண்டு தண்ணீரைத் தேடும் அவலம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல் வெளியும் வெள்ளமும் தான். எங்கும் நீர் நிரம்பி வழிந்தது. குடிப்பதற்கு நன்னீரில்லை.

சுவாமிநாதன் காருக்குள் அப்படியே வெகுநேரம் இருந்தார். நாவற்குழிப் பாலத்தில் மீண்டும் லொறியொன்று குறுக்கே சரிந்து விட்டது. சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத் திற்குமாக பல வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. அவை வேகமாக நகர்வதற்காகவே மக்கள் கரைக்கு ஒதுக்கப்பட்டனர்.

காருக்குள் சலசலப்பு ஏற்பட்டது. பிள்ளைகள் ஆச்சியைக் கிண்டின. மங்கை அவற்றைக் கவனித்தாள்.

'என்னவாம்?...

'தண்ணியாம்... விடாய்க்குதாம்... என்றாள் ஆச்சி தயக்கத் துடன். இவ்விடத்தில் தண்ணிக்கு எங்கு செல்வது? தூரத்தில் ஒரு கிணறு தெரிந்தாலும் இறங்கிச் சென்றுவர மார்க்க மில்லை. நகர இடமின்றி மக்கள் வீதியில் குவிந்திருந்தனர்.

'தண்ணி... தண்ணி... என்று பையன் அழத் தொடங்கினான்.

சுவாமிநாதன் சற்று நேரம் பொறுமையாகப் பார்த்தார். பின்னர் வெகு நிதானமாக பியர் போத்தல் ஒன்றினை எடுத்துப் பற்களால் திறந்தார். மங்கை வியப்புடன் அவரைப் பார்த்தாள். தம்ளரை எடுத்து அதில் நுரை தள்ள பியரை வார்த்தார்.

'தம்பி: இந்தா தண்ணி..குடி... என அவனிடம் நீட்டினார். அவன் ஆவலுடன் வாங்கி வாயை எடுக்காமல் குடித்து முடித்தான்.

'அங்கிள் எனக்கும்... விடாய்க்குது...

அவனுக்கும் வார்த்து சுவாமிநாதன் வழங்கினார். அவனும் குடித்தான். நாக்கை வறட்டும் விடாய். மரண விடாய். காரிலிருந்த எல்லாருக்கும் அவர் வார்த்து வார்த்துக் கொடுத்தார். எல்லாரும் அப்படியே சோர்ந்து உறங்கிச் சரிந்தனர். மங்கையின் விழிகளில் கண்ணீர் பொங்கியது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது. நனைந்து துண்டை வாயில் சிலர் பிழிந்து விட்டுக் கொண்டனர். வானத்தை நோக்கி வாயைத் திறந்தபடி நாக்கையும் உதடுகளையும் பலர் நனைத்துக் கொண்டனர். தலையிலிருந்து வடிந்த நீரை அப்படியே வாயில் பரவவிட்டுக் கொண்டனர்.

'நாங்க திரும்பிப் போய்விடுவம் மங்கை...

'வேண்டாம்...இவ்வளவு பேர் நிக்கினம்...இவ்வளவு தூரம் வந்திட்டு... நாவற்குழிப்பாலம் கடந்தால் சாவகச்சேரிதான்... பயமில்லை.

'எனக்கு விசர் வரும்போல இருக்குது...

'பொறுமையாக இருங்க... உசிர் மிஞ்சினால் எல்லாத்தையும் தேடிக்கொள்ளலாம்...

சனம் பாலத்திற்கு அப்பால் விரைந்து சென்றுவிட வேண்டுமென்பதில் முண்டியடித்தது. அதனால் பலர் தங்கள் பாரமான பொருட்களின் சுமையுடன்கூடிய சயிக்கில்களை வீதியைவிட்டுக் களப்புக்குள் இறக்கியுருட்டிச் செல்ல முற்பட்டனர். அதனைப் பார்த்த மக்கள் பலரும் களப்புக்குள் இறங்கி நடக்கத் தொடங்கினர். சற்றுத் தூரம் போனதும் சங்கடம் தெரிந்தது. சயிக்கில் றயர்களில் நாய்க்களி ஏறிவிட சில்லுகள் களப்புச் சேற்றில் அமிழ்ந்து உருட்டமுடியாத அளவிற்குப் புதைந்து போயின. வெளியில் வீதியில் நின்றவர்களின் உதவிகள் கோரப்பட்டன. எவரும் உதவும் நிலையிலில்லை.

சேற்றுக்குள் புதையுண்டு விழுந்தெழும்பியவர்கள் மீண்டும் வீதியில் ஏற முயன்றனர். உடம்பு முழுவதும் சேற்றில் குளித்த நிலையில் ஏறி நிற்பதற்கு வீதியில் இடமிருக்கவில்லை.

'ஏன் இப்படியொரு துன்பத்தை எங்களுக்குத் தந்தான்?' என்று மங்கை தன்னையறியாமல் சலித்துக்கொண்டாள்.

'பிள்ளை, நம்முடைய வாழ்க்கையில எதுவும் துன்பம் என்றுமில்லை இன்பம் என்றுமில்லை. இரவும் பகலும் போல... எல்லாம் அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனதில்தான் இருக்கிறது. இப்படிக் கஷ்டப்பட்டு இடிபட்டு நாங்கள் இடம் பெயர்ந்தோம் என்று பிற்காலத்தில் எண்ணிப் பார்த்தால்

சிலவேளைகளில் அதுவே சந்தோசமான அனுபவமாக இருக்கும்… என்று சிரிக்க முயன்றாள்: காரின் பின் சீற்றில் அமர்ந்திருந்த ஆச்சி.

'வாழ்க்கையில நாங்க குறைவான துன்பங்களை அனுபவிச்சதனால் சந்தோசமாக இருந்திருக்கிறம்.. என்றார் சுவாமிநாதன்.

'அங்க பாருங்க.. என்று மங்கை முன்னால் சுட்டிக்காட்டினாள். அவள் சுட்டிக்காட்டியவிடத்தில் இராசையா தன் வயதான தாயைக் கரங்களில் ஏந்தியபடி நின்றிருந்தான். அவன் பின்னால் மூன்று சின்னஞ்சிறுசுகள் பரிதாபமாகக் கலங்கிய கண்களுடன் நின்றிருந்தன.

'அண்ணை: நீங்க இயலுமெண்டால் முன்னால போய் கைதடி டிஸ்பென்சரியில ஆச்சியைக் காட்டிப்போட்டு நில்லுங்கோ. நான் அங்கால சயிக்கிலைக் கொண்டு வந்து தாறன்… என்று வசந்தன் உறுதி கூறினான். அதனால் இராசையா தாயை ஏந்தியபடி முன்னால் செல்ல முயன்றான். அவன் நிலையைக் கண்ட மக்கள் பிரிந்து வழிவிட்டனர். சயிக்கில்களும் வண்டில்களும் பொருட்களுடன் சனங்களும் நிறைந்து அசையமுடியாது நிற்கின்ற சூழலில் அவன் வெகு கஷ்டத்துடன் செம்மணிச் சந்தியில் ஏறியபோது: மீண்டும் மழைத்துமிகள் கனக்கத் தொடங்கின.

'நானும் வந்திருந்தால் இப்படித்தான் மயில்வாகனம் காவியிருப்பான்.. என்றபடி விழிகளைச் சேலைத்தலைப்பால் காரின் பின் சீற்றிலிருந்த மயிலாச்சி துடைத்ததை மங்கை கண்டாள்.

'இப்படிச் சுமக்க முடியாதவை எத்தனை வயோதிபர்களை வீட்டில விட்டிட்டு வருகினமோ?

இராசையாவால் முன்னேற முடியவில்லை. நாவற்குழிப் பக்கமிருந்து வாகனங்கள் போராளிகளைச் சுமந்தபடி வேகமாக வந்து கொண்டிருந்தன. அவன் அப்படியே நின்றிருந்தான். அவன் கரங்களில் துவண்டபடி கிடந்த கிழவி முணுமுணுப்பது கேட்டது.

'தம்பி.. தம்பி.. இராசையா… என்னை இப்படியே எங்காவது போட்டிட்டு நீ பிள்ளைகளோட ஓடிப்போடா… கிழவியின் முணுமுணுப்பு இராசையாவுக்குக் கேட்கவில்லை.

பத்து மாதங்கள் தன் கருவில் காவியவளைச் சிலமணி நேரங்கள் காங்களில் சுமப்பது இராசையாவுக்குப் பெரும் பாரமாகப்படவில்லை.

சனம் மீண்டும் மெதுவாக ஊரத் தொடங்கியது. சுவாமிநாதன் தனது காரை மிகமெதுவாக நகர்த்தினார். காரில் வருபவர்களைக் காணச் சிலருக்கு எரிச்சல் மூண்டது தெரிந்தது. ஆனால் வயது போன ஒரு கிழவி காரில் சரிந்திருப்பதைக் கண்டதும் நியாயமாகப்பட்டது.

நாவற்குழிப் பாலத்திலிருந்து பார்க்கும்போது வடக்கே களப்பு நீர நிறைந்து விரிந்துகிடந்தது. தெற்கே முன்னர் புகைவண்டி கடந்த பாலம் தெரிகிறது. இந்த நாவற்குழிப் பாலத்தில் சிங்கள இராணுவமும் அதன் பின்னர் இந்திய இராணுவமும் முகாமிட்டு வலிகாமத்திற்கான போக்கு வரத்தைக் கட்டுப்படுத்திய சம்பவங்கள் சுவாமிநாதனுக்கு நினைவு வந்தன. அவ்ரோ விமானம் ஒன்று பழுதடைந்து தரையிறங்கியதும் இந்தக் களப்பில்தான்.

இந்தப் பாலம் எத்தனை வரலாற்று நிகழ்வுகளைக் கண்டிருக்கும்? வலிகாமத்தையும் தென்மராட்சியையும் பிரிக்கின்ற உப்பாற்றுக் கடலேரியை இணைப்பதன் மூலம் போக்குவரத்தினைச் சுலபமாக்கியது இந்தப் பாலம்தான். வலிகாமத்தின் நான்கு இலட்சம் மக்களின் துன்பத்தழும்புகள் படிந்த பாதங்கள் இப்பாலத்தின் ஊடாக உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டித் தென்மராட்சியில் தஞ்சம் புகுகின்றன.

'இவ்வளவு சனமும் இங்கால கடந்து வர இன்னமும் ஐந்தாறு நாளாவது எடுக்கும். மங்கை. ராவைக்குப் பாலத்தை உடைத்து விடுவார்களாமே!' என்ற கணவனை அவள் திரும்பிப் பார்த்தாள்.

'அப்படியொன்றும் நடக்காது...' என்று அவள் கூறி முடிப்பதற்குள் விமானங்களின் இரைச்சல் சடுதியாக வானில் எழுந்தது. பொம்பர் ஒன்று வடக்கிலிருந்து பாலத்தைக் குறி வைத்துத் தாழ்ந்தது.

ஷகுய்யோ முறையோ'வெனக் கூக்குரல் எழுந்தது. சனங்கள் முன்னாலும் பின்னாலும் இடித்துத்தள்ளிக் கொண்டு பாலத்தைக் கடக்க முண்டியடித்துச் சிதறிஓடினர். சுவாமிநாதன் அப்படியே காரினுள் திக்கித்துப் போய் எதுவும் இயங்காது இருந்துவிட்டார். எல்லாரும் பயத்தால் கதறிக்

கூச்சலிட்டனர்.

ஓடியசனம் கரத்தில் தாயைக் காவிவந்த இராசையாவைத் தள்ளிச் சரித்தபடி பாய்ந்தோடுவதை மங்கை கண்டாள். இராசையா கரங்களில் ஏந்திய தாயோடு நிலத்தில் சரிந்து விழுந்தான்.

பாலத்தைத் தொடுவது போலக் குத்திச்சரிந்த பொம்பர் இரைந்தபடி விண்ணில் எழுந்தது. குண்டெதுவும் வீசவில்லை. தெற்கு அடிவானத்தில் ஒரு புள்ளியாக மறையும் மட்டும் பதற்றம் தணியவில்லை. பலர் பாலத்தில் விழுந்து கிடந்தார்கள். பாலத்துச் சுவரைத்தாண்டிக் களப்பில் குதித்தவர்கள் கூச்சலிட்டார்கள். எல்லாவற்றையும் மீறிக்கொண்டு இராசையா அலறினான்.

'ஐயோ அம்மா... என்ர அம்மா...

ஓடிய சனங்களின் காலடியில் அகப்பட்டு இராசையா இவ்வளவு தூரம் காவி வந்த அந்தத் தாய் உயிரிழந்த சடலமாகப் பாலத்தில் கிடந்தாள். எவ்வளவு பக்குவமாகத் தூக்கி வந்தான்? பூப்போலச் சுமந்து வந்தான். இடைநடுவில் பறிகொடுத்துவிட்டு அவன் அலறிய சத்தம் எல்லாரையும் விழிகளில் நீர் சுரக்க வைத்தது.

இராசையா மீண்டும் தன்னைச் சுமந்து பெற்ற தாயைச் சடலமாகத் தன் கரங்களில் ஏந்தித் தூக்கிக்கொண்டான்.

வானம் மீண்டும் அழத் தொடங்கியது.

# 4

வானம் சற்று வெளுக்கத் தொடங்கியது. வலிகாமத்து மக்களில் பெரும்பாலானோர் வீடுகளைவிட்டு வெளியேறி வீதிகளில் நிற்கத் தொடங்கி ஒரு நாள் கழிந்துவிட்டது. தென்மாராட்சியை நோக்கித் தொடர்ச்சியாகச் சனம் அசைந்து கொண்டேயிருந்தது. நல்லூர்த் தேர்முட்டியருகில் அமர்ந்திருந்த இரத்தினம் சயிக்கில்களில் பொருட்களைக்கட்டி உருட்டியபடி திரள் திரளாக நாவற்குழிப் பக்கமாகச் சனங்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டேயிருந்தார். எல்லாருடைய முகங்களிலும் இப்படியொரு இருள் திடீரெனப் படிந்து விட்டது. கறுத்துக் களையிழந்து துயரப்பிச் சோபை இழந்து கிடந்தது.

'நாங்களும் ஆக்களோட ஆக்களாகச் சாவகச்சேரிக்குப் போயிடுவம்... என்றாள் பயத்துடன் இரத்தினத்தின் மனைவி யோகேஸ்வரி. அவர் திரும்பி மனைவியைப் பார்த்தார். விழிகளில் அதனை அங்கீகரிக்கின்ற சாடை.

'எல்லாரும் இருக்கினம்... கோயில் முட்டச் சனம் இருக்கிறது. சாவகச்சேரிக்கு யாரிடம் போவது? குமரையும் தம்பியையும் கூட்டிப்போய் ஆர் வீட்டில அடைக்கலம் கேட்கிறது? வீட்டிற்கே திரும்பிப் போவம்...

'ஐயோ... என்றாள் ரூபா. 'ஆமி வந்தால் தம்பியையும் என்னையும் சுட்டுப்போடுவான்கள். நாங்க வரமாட்டம் அப்பா.

அவர் எதுவும் பேசவில்லை.

'இப்ப சாப்பாட்டிற்கு என்ன செய்யிறது. காசிருக்குது எதை வாங்குகிறது...

நல்லூர்க்கோயில் சனக்கும்பலால் நிரம்பி வழிந்தது.

பிள்ளைகள் பசியால் தவிப்பது தெரிகின்றது. நல்லூர் வீதியில் திறந்திருந்த தேநீர்க்கடைகளில் தேநீரைத் தவிர உண்பதற்கு எதுவுமேயில்லை. றொட்டி தயாரிப்பதற்கு கோதுமை மாவைப் பிசைந்து கொண்டிருப்பது தெரிகிறது.

இருந்தாற்போல ஒரு செய்தி பரவியது. கயிலாசபிள்ளையார் கோயிலடி முருகன் பேக்கரியில் பாண் விநியோகிக்கப் போகிறார்கள்.

'நீங்கள் இங்கேயே இருங்கோ... நான் போய்ப் பாண் வாங்கிக் கொண்டு வாறன். என்றபடி இரத்தினம் எழுந்தார்.

'கவனம்... கெதியாக வாருங்கோ...

முருகன் பேக்கரி முன் ஒரு மைல் நீளத்திற்கு பாண் கியூ நின்றிருந்தது. ஒருவருக்கு ஒரு றாத்தல் பாண் என்ற விதத்தில் விநியோகிக்கப்பட்டது. அதிர்ஸ்டவசமாக இரத்தினத்திற்கு ஒரு றாத்தல் கிடைத்தது. அவருக்குப் பின்னால் நின்ற மூவரோடு பாண் முடிந்துவிட்டது என அறிவிக்கப்பட்டது.

'பணிஸ் இறக்கப்போறம்... தேவையெண்டால் நில்லுங்கோ... என்ற பேக்கரியின் அறிவிப்பு குளிர்ச்சியாக இருந்தது.

இரத்தினம் பாணுடன் திரும்பி வந்தார். வீதியில் நகர்ந்து கொண்டிருந்த பிள்ளைகள் அவர் கையிலிருந்த பாணை ஆசையோடு பார்த்தன. ஒரு தாயின் இடுப்பில் தொத்தியிருந்த ஒரு குழந்தை: 'அம்மா எனக்குப் பாண்... பசிக்குது... என்று தாயைக் கேட்ட இரக்கத்திற்குரிய குரல் அவருக்குக் கேட்டது. அவருடைய நெஞ்சம் நொந்து துடித்தது. கையிலிருக்கின்ற ஒரு றாத்தல் பாணுக்காகத் தோடியில் மூன்று உயிர்கள் காத்திருக்கின்றன. என்ன வாழ்க்கை!

மனிதனின் முயற்சிகள் அனைத்தும் இறுதியில் உணவு தேடுதலிற்கான இலக்கினைத்தான் கொண்டிருக்கின்றன. உணவு கிடைத்ததும் அவனது தேவைகள் விரிவடைகின்றன:

என இரத்தினம் எண்ணிக்கொண்டார். பசியாறிய பின்னர்தான் மற்றவற்றில் மனித மனம் நாட்டம் கொள்ளுகின்றது. வாழ்க்கையின் சுகங்கள் அதிகரிக்க அதிகரிக்க போகப் பொருட்களின் தேவைகளும் கூடுகின்றன. தாங்கள் அனுபவிக்கின்ற சுகங்களுக்கு ஊறு வந்துவிடும் என்ற நிலையில் மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் ஐயப்பார்வை செலுத்துகின்றனர். சண்டை சச்சரவில் ஈடுபடுகின்றனர்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகள் இந்த அளவிற்கு விஸ்வரூபம் எடுத்தமைக்குக் காரணம் அடிப்படையில் பொருள் முதல்வாத நிலைதான் காரணமோ? அரசியல்வாதிகள் தமது பாராளுமன்றக் கதிரைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இனவாதத்தைக் கிளப்பாமல்: மக்களின் வறுமையை நீக்குவதற்கான கோட்பாடுகளை முன்வைத்திருக்கில் இனம்: மொழி: கலாசாரம் என்பன இரண்டாம் பட்சமாகியிருக்கும்.

இனங்களுக்கிடையிலான போராட்டமாக இந்த நாடு இன்று சின்னாபின்னப்பட்டுவிட்டது. மானிட நேயம் செத்து பகைமையும் தீராத மனித அழிவுகளும் இந்த நாட்டில் இரத்த ஆற்றை ஓட வைத்துவிட்டன. பிரச்சினைக்குத் தீர்வாக ஆயுதங்களைக் கரங்களில் ஏந்தியிருக்கும் அரச இராணுவமாயினும் சரி: தமிழீழப் போராளிகளாயினும் சரி தத்தமது நிலைக்கான காரணங்களை நியாயப்படுத்திய போதிலும் ஆயுதம் ஏந்திய இந்தக்கரங்களுக் குப் பின்னால் மானிய நேயமிருக்கவில்லை. கடந்த இரு தசாப்தமாக இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியது போதாதா?

ஆயுதக் கலாசாரத்தின் உச்சமாக பாரம்பரிய மண்ணைக் கைவிட்டு இன்று யாழ்ப்பாண மக்கள் தென்மராட்சி நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். உயிரின் பெறுமானம் தெரிந்தவர்கள் ஆயிரக் கணக்கில் இந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கு ஓடி விட்டார்கள். இந்த மண்ணைவிட்டு வெளியேறுவதற்கு எதுவிதமான தடைகளும் இல்லாதிருந்தால் இந்த இரத்தம் சிந்தும் போராட்டத்திற்கு எத்தனை ஆயிரம் மக்கள் ஆதரவாக இருக்கிறார்கள் என்பது தெரிந்திருக்கும். இப்படி இலட்சக் கணக்கில் இரவோடிரவாக இடம் பெயரும் கொடுமையும் ஏற்பட்டிருக்காது.

இந்த மண்ணின்மீது சமாதானப்புறா பறக்காதா என இரத்தினம் எண்ணிக்கொண்டார்.

உயிர்வாழ்வதற்கு உத்தரவாதமில்லாத நாட்டில் எவரும் இருக்கார். கனடாவில் இந்த மண்ணின் இலட்சக் கணக்கானவர்கள் குட்டி யாழ்ப்பாணம் ஒன்றை உருவாக்கிவிட்டார்கள். இன்று அங்கு இருக்கும் மூத்த தலைமுறைக்கு யாழ்ப்பாணத்து மண்ணும் கிணற்று நீரும் கோயில்களும் மண்ஒழுங்கைகளும் இழந்து போன சொர்க்கத்தை நினைவு படுத்தி மாறாத ஏக்கத்தையும் மனச்சுமையையும் எற்படுத்தும் ஆனால் அவர்களின் பிள்ளைகள் கனடாவின் சூழலிற்குப் பழகிப்போய்விட யாழ்ப்பாணத்தைப் பற்றிய சிந்தனை: ஏக்கம் அனைத்தும் நீங்கிவிடும். இழந்துபோன தலைமுறையாக மாறிவிடும்.

இரத்தினத்தின் மக்கள் மூவர் கனடாவில் குடும்பமாக இருக்கிறார்கள். ரூபாவையும் அரவிந்தனையும் அவர்கள் கனடாவிற்கு அனுப்பி வைக்கும்படி எத்தனை தடவை எழுதியிருந்தார்கள்.அவர்களையும் வந்துவிடும்படி எத்தனை கடிதங்கள். அவருக்கும் அவரது மனைவிக்கும் இந்த மண்ணைவிட்டு ஓடிவிடும் சிந்தனை இருக்கவில்லை. காலையில் எழுந்ததும் வீட்டு முற்றத்தில் சிலிர்த்துச் சிரிக்கின்ற மலர்களைக் கொய்து அம்மன் கோயிலுக்கு எடுத்துச்சென்று வழங்குவதில் அவருக்கிருக்கும் திருப்தி எங்கும் வரப்போவதில்லை. வெறும் காலுடன் இந்தப் புழுதித்தரையில் நடக்கின்ற இனிமை கனடாவின் குளிரில் உடல் முழுவதையும் உடைகளால் சிறைப்படுத்தி முடங்கிக் கிடப்பதில் வரப்போவதில்லை என்பது அவருக்குத் தெரியும்.

அவருடைய சம்பந்தி கனடாவிற்குப் பிள்ளைகளைப் பார்க்கப் போய் மூன்றாம் மாதமே: 'எனக்கு இங்கு மூச்சு முட்டுகிறது. என்னை ஊருக்கு அனுப்பிவிடுங்கள் என்று பிள்ளைகளை வற்புறுத்தி: அவரது பிடிவாதத் தொல்லை தாளாமல் அவரை யாழ்ப்பாணத்திற்கே திருப்பி அனுப்பி வைத்த சம்பவம் மறக்கக்கூடியதா?

அவர் பிறந்தது இந்த மண்ணில்தான். தாயின் உதரத்தில் இருந்து இந்த மண்ணில் விழுந்தபோது அவருடைய உடலை இந்த மண்ணின் தட்பவெட்பம்தான் தழுவியது. இந்த வாடைக் காற்றுத்தான் வருடியது. கண்விழித்தபோது அவருக்கு இந்த மண்ணின் பசுமைதான் தெரிந்தது. இனி எங்கு சென்றாலும் பிறப்பில் பதிந்த இந்தநாட்டின் சுகம் வரப்போவதில்லை. அவரைப் பொறுத்தவரையில் இந்த நாடு தவிர்ந்த அனைத்தும் அந்நிய தேசம்.

கையில் ஒரு றாத்தல் பாணுடன் தேரடியை நோக்கி வந்து கொண்டிருக்கும் இரத்தினத்தின் மனதில் பெரும் சோகம் படர்ந்திருக்கின்றது. நெஞ்சில் இனந்தெரியாத வலி.

'இந்த நாடு இனி வாழ்வதற்குரியதல்ல என எண்ணிக் கொண்டார். திரௌபதியின் கூந்தலை அரிந்து; அர்ச்சுன னின் காண்டீபத்தை முறித்து; கண்ணனையும் கட்டிப் போடும் வரை நிகழவிருக்கின்ற குருஷேத்திர யுத்தத்தை நிறுத்த முடியாது என இருந்தாற்போல அவர் எண்ணமிட்டார்.

யார் திரௌபதை? யார் அர்ச்சுனன்? யார் கண்ணன்?

அவருக்குத் தன்னையறியாமல் சிரிப்பு வந்தது. தனக்குள் சிரித்துக் கொண்டார். தேரடியை வந்தடைந்தபோது அங்குள்ளவர் களிடையே பரபரப்புக் காணப்பட்டது. கோயில் சுற்றாடலில் அமர்ந்திருந்தவர்கள் மூட்டை முடிச்சுக்களுடன் கலவரப்பட்டு கிழக்கே நகர்வதைக் கண்டார். என்ன நடந்தது? அவர் சனத்திர ளைக் கிழித்துக் கொண்டு அவரது குடும்பம் தங்கியிருந்த இடத்திற்கு வருவது பெரும் பாடாகிவிட்டது. அரவிந்தன் சயிக்கில்களில் சூட்கேஸ்; பெட்டிகளைக் கட்டி உருட்டுவதற்கு ஆயத்தமாக நின்றிருந்தான். அவரைக் கண்டதும் ரூபா படபடத்தாள்.

'எங்க அப்பா... இவ்வளவு நேரமும் போயிருந்தியள்? கெதியா வாருங்கோ... போய்ஸ் வந்து எனவுன்ஸ் பண்ணிப் போட்டுப் போறான்கள். ஆமி உரும்பிராய்ச் சந்திக்கு வந்திட்டுதாம். தாங்கள் வித்றோ பண்ணப் போகினமாம். கெதியில சாவகச்சேரிக்குப் போகட்டாம்...

அவர் எதுவும் பேசித் தடுக்கவில்லை. சயிக்கிலை உருட்டிக் கொண்டு காட்டாற்று வெள்ளத்துடன் கிழக்குப் பக்கமாக அள்ளுப்பட்டு நகர்ந்தார். சூரியன் உச்சியில் ஏறி யிருந்தான். மழைக்குப்பின் வரும் கடும்வெப்பம் மக்களை வஞ்சகமின்றி வதக்கியது. குழந்தைகள் பசியாலும் தாகத்தா லும் கதறின. நடக்கத் திராணியற்றவர்களாக வயோதிபர்கள் மெது மெதுவாக ஊர்ந்தனர். சிரிப்போடும் கலகலப்போடும் அலங்காரத்தோடும் யாழ்ப்பாண வீதிகளில் வலம் வந்த இளம் பெண்கள் காய்ந்த முகத்துடன் கலைந்த கூந்தலுடன் நடைப்பிணங்களாக நடந்தனர்.

'அப்பா.' என்று அழைத்தள் ரூபா 'எங்களைக் கனடா விற்கு அண்ணன்மாரிடம் அனுப்பி விடுங்கோ. எங்களால

இங்க இருக்க எலாது. பிளீஸ் அப்பா... எல்லாரும் கனடாவிற்குப் போயிடுவம்.

'நாங்க பிறந்த வீட்டில இருந்த காணியில இருக்க முடியா தெண்டால் இனி எங்கிருந்தால் தான் என்ன' சாவகச்சேரியில் ஆற்றை நாத்தியில கிடக்கப்போறமோ' சாவகச்சேரியில் இருந்தால் தான் என்ன கனடாவில் இருந்தால்தான் என்ன? எல்லாம் ஒண்டுதான்... என்றாள் விம்மியபடி யோகேஸ்வரி.

அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் தாய்நாடு கலட்டி அம்மன் கோயிலடிதான்.

அவர்கள் நாயன்மார்கட்டு முறிவு நறிவு சிகிச்சை நிலையத் தைத் தாண்டியபோது வானம் திடீரெனக் கறுக்கத் தொடங்கியது. இம்முறை யாழ்ப்பாணத்தில் பெய்த மழை முழுவதும் மக்களின் தலைமேல்தான். எல்லாரையும் குளிப்பாட்டித்தான் ஓயப் போகின்றது.

தூமி விழத் தொடங்கியதும் தம்மையும் தம் பொருட்களை யும் பாதுகாப்பதில் மக்கள் பரபரப்படைந்தனர். தலைகளுக்கு சொப்பிங் பைகளைச் சுற்றிக்கொண்டனர். பிள்ளைகளுக்கும் தலையில் கட்டி விட்டனர். பிளாஸ்ரிக் விரிப்புகள் வைத்திருந்தவர்கள் கூட்டு மொத்தமாக அதனைத் தலைகளுக்கு மேல் விரித்துப் பிடித்துக் கொண்டனர். குடைகள் விரிக்கப் பட்டன. இனி ஒரு மழை வந்து நனைக்கவா போகிறது என்ற பிடிவாதத்தில் மழையில் நனையத் தயாராகப் பலர் நகர்ந்தனர்.

செம்மணிச் சந்தியை அடைவதற்கு முன் மக்கள் நகர முடியாது தேங்கி நிற்க நேர்ந்தது. அவசரமான வாகனப் போக்குவரத்துக்காக மக்களின் நகர்வு நிறுத்தப்பட்டது. லொறிகளும்: ஜீப்புகளும்: மோட்டார் சயிக்கில்களும் ஆயுதம் ஏந்திய போராளிகளை ஏற்றிக் கொண்டு விரைந்தன.

'இவங்கள் எங்க போறாங்கள்...'

லொறிகளில் பல்வகைச் சாமான்கள் ஏற்றிச் செல்லப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இயங்கிய எல்ரிரிஈ காம்களின் பொருட்கள் அவற்றில் எற்றிச் செல்லப்பட்டன. மேசைகள்: கதிரைகள்: அலுமாரிகள்: மரந்தடிகள் என லொறிகளில் எற்றப்பட்டிருந்தன

'நாங்களும் எங்கட வீட்டைப் பிடுங்கிக் கொண்டு வந்திருக்கலாம். தென்மராட்சியில எங்காவது வெறுங்காணி யில போட்டிட்டு இருந்திருக்கலாம்... என்று இரத்தினத்துக்கு அருகில் வந்தவர் கூறினார்.

'எங்க விட்டான்கள்... உடனடியாக வெளிக்கிடேக்க இதுகளை ஆர் தேடினார்கள். சாவகச்சேரியில எல்லாருக்கும் இருக்க இடமா கிடைக்கப்போகுது' பாடசாலைகளில; மடங்களில; வீதியோரத்தில; மரங்களுக்குக்கீழ இந்த மழையுக்க இருக்க வேண்டியதுதான். எங்கட விதி.. என்றார் இரத்தினம்.

'இப்போதைக்குத் திரும்ப விடமாட்டாங்கள் போல இருக்குது...

'ஓமோம்..

'என்ர பெயர் இராசரத்தினம்... நான் தாவடி... நேற்றைக் குப் பின்னேரம்தான் பண்டத்தரிப்புக்குச் சென்றிருந்தன். அங்க தான் இப்படியெண்டு செய்தி அறிந்தன். இராசரத்தினம் தன் மனக் கிடக்கைகளை இரத்தினத்திடம் சொல்லி ஆறவிரும்பியவர் மாதிரித் தெரிந்தது. இரத்தினம் இரக்கத் தோடு அவரைப் பார்த்தார். இந்த நேரத்தில் ஒருவருக் கொருவர் உதவாவிட்டாலும் ஆறுதல் மொழிகளையாவது சொல்லிக் கொள்ள வேண்டும்.

'தனிய வாறியள்?'

'என்ற செய்யிறது; அண்ணை. செய்தி அறிந்து தாவடிக்கு ஓடி வந்தன். வீட்டில ஒருத்தருமில்லை. இரண்டு பிள்ளையள் எனக்கு. ஒரு பெண்ணும் பொடியனும்.... மனிசி சரஸ்வதி.... அவர்கள் பக்கத்துச் சனம் பதறிக் கொண்டு புறப்பட்டதும் இவர்களும் வெளிக்கிட்டிட்டினம். சாவகச்சேரிக்குத்தான் போயிருப்பினம் என்று நினைக்கிறன். இந்தச் சனத்துக்கை எங்கையெண்டு தேடுறது?' அவன் விழிகள் கலங்கின. கஷ்டப் பட்டுக் கண்ணீரை அடக்க முயன்றான்.

'எலலாம் மனிசனுக்குத்தான்..

'என்ன போனாலும் எனக்குப் பரவாயில்லை. வீடு வாசல் சொத்துப் பத்து எல்லாம் போகட்டும். எனக்கு என்ர பிள்ளையளும் பொஞ்சாதியும் சுகமாகப் பாதுகாப்பான இடத்திற்குப் போய்ச் சேர்ந்தால் போதும்.. எப்படியும் தேடிப்

பிடிச்சிடுவன்..

'சாவகச்சேரியில ஆராவது தெரிஞ்ச ஆட்கள் இருக்கினமே'

'என்னோட படிப்பிக்கிற ஒரிரு ஆசிரியர்கள் இருக்கினம். ஆனா சரஸ்வதிக்கோ பிள்ளையளுக்கோ அவர்களின்ர வீடுகள் தெரியாது.

'பயப்படாதையும் தம்பி: அவர்கள் எங்கயாவது பாடசாலைகளில இருப்பினம். வலிகாமத்திலிருந்து போறவைக்கு அங்கால ஏதாவது ஒழுங்கு தங்குவதற்குச் செய்திருப்பினம் தானே... ரோட்டில விடப் போகினமே'

'நீங்க யார்? எவ்விடம்..?'

'என்ர பெயர் இரத்தினம். ஜெயில் கார்ட்டாக இருந்தனான். பென்சன் எடுத்திட்டன். கலட்டி அம்மன் கோயிலடியில் இருக்கிறம்... இதுகள் என்ர பிள்ளையள்.

'கலட்டி அம்மன் கோயிலடியோ? அப்ப உங்களுக்குச் சிவசாமி மாஸ்ரரைத் தெரிந்திருக்கும்... அவரும் கோயில் வீதியிலதானே'

இரத்தினம் இராசரத்தினத்தைப் பார்த்துச் சிநேகத்துடன் புன்னகைத்தார்.

'நல்லாத் தெரியும்... பக்கத்து வீடுதான். அவரும் பிள்ளையளும் இண்டைக்குக் காலமை முன்னால போயிட்டினம். இப்ப சாவகச்சேரிக்குச் சென்றிருப்பினம்..

மழை பலக்கத் தொடங்கியது.

'இந்த மழையும் இப்படி நிக்குது..

'மாரியில குடியெழும்பியிருக்கிறம்... மழையைத் திட்டி என்ன செய்யிறது: தம்பி... இயற்கையெல்லாம் சரியாக நடக்குது. மனிசன்தான் சரியாக நடக்கவில்லை. மனிசன் எப்பவும் தானாக இயங்கவில்லை. யாராவது வழிகாட்ட வேண்டியவனாக இருக்கிறான். உலகெங்கும் அப்படியான வழிகாட்டலை அரசியல் அயோக்கியர்கள் ஏற்றிருக்கிறார்கள். அதனால்தான் உலகில் மனிதர்கள் எங்கும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.. என்றார் இரத்தினம். இராசரத்தினம்

மிக்க மரியாதையோடு ஏறிட்டுப் பார்த்தான். உலகஞான முள்ள ஒருவருடன் பயணப்படுகின்ற திருப்தி எழுந்தது.

'உண்மைதான் அண்ணை.... இப்படித் தொடர்ந்து கஷ்டப்படும்படி ஆகிவிட்டது.

மக்கள் நகரத் தொடங்கினர். அவர்களும் சனத்திரளில் அள்ளப்பட்டனர். நாவற்குழிப் பாலத்தை ஒரு விதமாகக் கடந்து நீர்ப்பாசனக் கந்தோரடியில் ஏறியபோது எல்லாருக் கும் பயந்தெளிந்து அழுக்கத்திலிருந்து விடுபட்ட உணர்வு எழுந்தது. பசியும் தாகமும் வயிற்றையும் நாக்கையும் ஒருங்கே வாட்டின.

'அப்பா: கொஞ்ச நேரம் இருந்திட்டுப் போவம். இனிப் பயமில்லை.. என்றாள் ரூபா சரியாகப்பட்டது.

இரத்தினம் வீதியைவிட்டுப் பக்கத்து வெறுங்காணிக்குள் கஷ்டப்பட்டுச் சயிக்கிலை இறக்கினார். அரவிந்தனும் தன் சயிக்கிலுடன் கீழே சரிந்து இறங்கினான். இருப்பதற்கு இடம் கிடைப்பது கடினமாகவிருந்தது. எங்கும் மக்கள் குந்தியிருந்தார்கள். அவர்கள் தவிப்பதைப் பார்த்த சிலர் ஒதுங்கி இருக்கவிட்டனர்.

மழைத்தூறல் நிற்கவில்லை. தூரத்தில் சில மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. வெள்ள நீர் ஆங்காங்கு தேங்கி நின்றது.

இரத்தினம் முருகன் பேக்கரியில் வாங்கிய பாணை எடுத்துப் பிரித்துப் பங்கிட்டார். ரூபாவிடம் ஒரு துண்டையும் அரவிந்தனிடம் ஒரு துண்டையும் கொடுத்தார். யோகேஸ்வரி யும் ஒரு துண்டை வாங்கிக் கொண்டாள். எஞ்சிய ஒரு சிறு துண்டைக் கடிக்க வாயருகில் கொண்டு போனபோது ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் அவரை வைத்தகண் வாங்காது பார்த்தான். குஞ்சும் குருமனுமாகத் தாயைச் சுற்றி நான்கைந்து குழந்தைகள். தாயின் கோலத்தில் வறுமை தெரிந்தது. அந்தச் சிறுவனின் விழியில் பசியின் கோரத்தாண்டவம். வயிறு ஒட்டி விழிகளில் ஆசை பொங்க அவரையும் அவர் கையிலிரு ந்த பாண் துண்டையும் பார்த்தான். அவரால் வாயருகில் கொண்டு செல்ல முடியவில்லை. நெஞ்சுக்குள் வலியெடுத்தது.

'இந்தா தம்பி.. என்று அழைத்துவிட்டுப் பாண் துண்டை நீட்டுவதற்கு முன்னரே அச்சிறுவன் பாய்ந்து வந்து பாண்

துண்டைப் பறித்துக்கொண்டான். சகோதரங்கள் பறித்து விடுவார்கள் என்ற பயத்தில் தூரவிலகி ஒடிப் பாணைச் சாப்பிட்டான்.

அவன் சாப்பிட்ட வேகம். பசித்திருக்கும் வலிகாமத்து மக்களின் நிலையைக் காட்டுவதாக அவர் உணர்ந்தார். அவர் மனைவி தன்னிடமிருந்த பாணில் ஒரு பகுதியை நீட்டிய போது: 'வேண்டாமப்பா... என மறுத்துவிட்டார்.

அவர் கண்கள் சுற்றித் துளாவின. எத்தனை வகையான மக்கள்? நேற்றுவரை சுகபோகங்களுடன் வாழ்ந்த மக்கள் ஒரு நாளில் எல்லாவற்றையும் இழந்து நடுத்தெருவுக்கு வந்து விட்டார்கள்.

அவர் கண்கள் பாணை ஆவலுடன் எடுத்துச் சென்ற பையனின் பக்கம் சென்றன. அவன் பாணைத் தின்று முடித்து விட்டு நீர் தேங்கிக் கலங்கியிருந்த குட்டையொன்றினை நோக்கிச் சென்றான். அக்குட்டையில் நீர் அருந்திக்கொண்டிருந்த மாடுகள் அவன் வருவதைக்கண்டு தலை நிமிர்த்திப் பார்த்துவிட்டு நீரை உறிஞ்சின.

அவன் அந்தக் குட்டையருகில் போய் அமர்ந்தான்.

ஷசிறுநீர் கழிக்கப் போகிறானோ?' என அவர் எண்ணி முடிப்பதற்கிடையில் அவன் குட்டையருகில் குந்தியமர்ந்து இரு கைகளினாலும் அழுக்கேறிக் கிருமிகள் நிறைந்த அந்த நீரை அள்ளி ஆவலுடன் பருகத் தொடங்கினான்.

# 5

மழை தூறிக்கொண்டிருந்த ஒரு மாலை வேளையில் தான் நான் அந்தச் செய்தியைக் கேட்க நேர்ந்தது. யாழ்ப்பாணக் கச்சேரியிலிருந்து நகரத்திற்கு வந்தபோது நகரத்தில் என்றுமில்லாத பரபரப்பு மக்களிடையே காணப்பட்டது. கடைகள் விரைவாக இழுத்து மூடப்பட்டன. லொறிகள் வைத்திருந்த கடைக்காரர் தமது கடைப் பொருட்களை லொறிகளில் ஏற்றத் தொடங்கியிருந்ததையும் கண்டேன்.

தமது சைக்கில்களில் ஏறிப் பலர் தமது வீடுகளுக்கு ஓடிக் கொண்டிருந்தார்கள். மினி பஸ்கள் வேகமாகப் புறப்பட்டன. என்ன நடந்தது?

இராணுவம் யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருக்கிறதாம். போராளிகள் பின்வாங்கி விட்டார்களாம். யாழ்ப்பாணத்தை விட்டு எல்லா மக்களையும் உடனடியாக வெளிக்கிட்டு தென்மராட்சிக்கு ஓடி விடும்படி அறிவிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி அறிந்தேன்.

நெஞ்சில் யாரோ அறைந்தது போன்ற உணர்வு. எவ்வளவு இலேசாகக் கூறிவிட்டார்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த தாயக மண்ணைக் கணப்பொழுதில் விட்டு ஓடுவதென்பது எந்த வகையில் நியாயப்படுத்தக் கூடியது?

'யாழ்ப்பாணத்தையும் மக்களையும் எல்ரிரியினரின் பிடியிலிருந்து விடுவிக்கப் போகின்றோம். அதற்காகவே

சூரியப்பிரகாசம் என்ற இந்த இராணுவ நடவடிக்கை... எனச் சிங்கள அரசு அறிவித்துள்ளது.

'நீ யாழ்ப்பாணத்தின் வெறுங்கட்டிடங்களையும் மண்ணையும் கட்டாக்காலி மாடுகளையும் தெருநாய்களையும் வேணுமென்றால் பிடிக்கலாம். மக்களைப் பிடிக்க முடியாது... என்று காட்டுவதற்கு போராளிகள் விரும்புகிறார்களோ' அதற்கக யாழ்ப்பாணமண்ணில் காலங்காலமாக வாழ்ந்த மக்களை மணித்தியாலக் கெடுவில் மொத்தமாக வெளியேற்றுவது எவ்வகையில் நியாயமாகும் என எண்ணிக் கொண்டேன்.

ஆயுதமேந்திய இராணுவம் வருவதும் போவதும் நிலை கொள்வதும் அழிவதும் யாழ்ப்பாண மக்களுக்குப் புதிய சங்கதியல்ல. வதிவிடங்களை இழப்பதும் சொத்துக்களை இழப்பதும் உயிர்களைப் பலி கொடுப்பதும் யாழ்ப்பாண மக்களுக்குப் புதிய விடயங்களல்ல. இராணுவம் வரும் பொழுது மக்கள் ஏதிலிகளாக அங்குமிங்கும் ஓடிக் கூடியவரை தம்மைப் பாதுகாத்திருக்கிறார்கள். தீவுப்பகுதிகளுக்கு இராணுவம் வந்த போது அப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கில் யாழ்ப்பாணப் பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்தனர். அவர்கள் இங்கு குடியேறி ஐந்தாண்டுகளாகின்றன. இன்னமும் மீள விடிவு வரவில்லை. பலாலி விமானத்தளம் விஸ்தரிக்கப்பட்டபோது மாதகலிலிருந்து வசாவிளான் வரையிலான பெரும்பகுதி இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டது. அங்கிருந்த மக்கள் எல்லாரும் தெற்கே யாழ்ப்பாணத்திற்கு எதுவுமின்றி ஓடி வந்தனர். ஏழாண்டுகளா கின்றன. அவர்கள் இன்னமும் தம் வீடுகளுக்கும் இடங்களுக்கும் மீளவில்லை. அப்பிரதேசத்தில் இன்று எதுவுமில்லை என்பது எனக்குத் தெரியும். அலுவலக வேலைகளுக்காக விமானத் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களில் காங்கேசன்துறைப் பகுதியின் இன்றைய நிலையைக் கண்டிருக்கின்றேன். காடுகள் பற்றிப் படர்ந்துவிட்டன. கட்டிடங்கள் அனைத்தும் உடைந்து சிதிலமாகிவிட்டன. பேய் நகரம் என்பார்களே அப்படி அப்பிரதேசம் காட்சி தருகின்றது. ஒரு காலத்தில் எப்படியிருந்த பிரதேசம்' தரைமட்டமாகிப் பற்றைகள் ஆக்கிரமித்து மனித சந்தடியின்றிக் கிடக்கின்றது.

அப்பகுதிகளைக் கடக்கும்போது நான் நினைத்துக் கொள்வேன். மண்மீட்புப் போராட்டத்திற்காக நாங்கள்

கொடுத்த விலை அதிகம். மண் மீட்கப்படவில்லை. படிப்படியாக இழந்து வருகின்றோம். நாங்கள் வாழ்ந்த இப்பிரதேசங்களைக் காடு பற்றி அழியவிடுவதற்கும் மழையிலும் வெயிலிலும் எம்மைப் பாதுகாத்து நிம்மதியாக உறங்கவிட்ட வீடுகளைச் சிதைந்த பாழடைந்த கட்டிடங்களாக எஞ்சவிடுவதற்கும் ஆயிரக் கணக்கான மனித உயிர்களை அவமாகக் காவு கொள்வதற்கும் இந்த யுத்தம் வழிவகுத்துள்ளதென்றால்; இப்படியொரு போராட்டம் அவசியம்தானா? உரிமைகளைப் பெறுவதற்கான வேறு மார்க்கமில்லையா?ஆயுத வியாபாரிகள் அப்பாவி நாட்டு மக்களைப் பலியெடுப்பதற்காக சர்வதேச சந்தையில் துப்பாக்கிச் சனியன்களை சர்வ சாதாரணமாக மிதக்க விட்டுவிட்டார்கள்.

ஆயுதக்கலாசாரம் பூமிப்பந்தெங்கும் ஆக்கிரமித்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குப்பகுதியையும் தீவுப் பகுதிகளையும் ஆக்கிரமிப்பாளனிடம் கொடுத்துவிட்டோம். இன்று வலிகாமம் முழுவதையும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே வளமானதும் நான்கு இலட்சம் மக்கள் செறிந்து வாழ்கின்ற மேற்குப்பகுதி முழுவதையும் சிங்கள இராணுவத்திடம் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு வெளியேறப் போகின்றோம்.

நெஞ்சில் வலியெடுத்தது. மூச்சு முட்டுமாப்போல ஒரு உணர்வு. ஸ்கூட்டரில் நின்றபடியே யாழ்ப்பாண நகரத்தை உள்வாங்கி விடுவதுபோலப் பார்த்தேன். இதுதான் உன்னைப் பார்த்துக் கொள்கின்ற இறுதிநாளோ? மனம் ஏக்கமிட்டது.

வீடுவந்த போது எங்கள் தெரு அல்லோலகல்லோலப் பட்டது. மனைவி; மக்கள்; மச்சான்; மருமக்கள் எல்லாரும் பதற்ற நிலையில் இருந்தனர். எனது முடிவிற்காகக் காத்திருப்பது போல என்னைப் பார்த்தனர். அயலவர்கள் கூடிவிட்டனர்.

'என்ன சொல்கிறியள்?

'நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது. அப்பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபர் நான். முடிவெடுக்கின்ற உரிமை வெறும் நிதி நிர்வாக சுற்றறிக்கைகளுள் அடங்கி நடக்கும் எனக்கெங்கு இருக்கிறது. அதிகாரமும் முடிவெடுக்கும் உரிமையும் எனக்கிருந்தால் நான் சொல்வேன்; ஒருத்தரும் போக வேண்டாம். எங்கயாவது மாறி மாறி இருப்பம். ஓடு என்றால் ஓடுவதற்கும் வா என்றால் வருவதற்கும் நாமென்ன மந்தைகளா?

நான் கூறவில்லை. அப்படியே ஈசிச்செயரில் சாய்ந்து விட்டேன்.

'அவயவை தமக்கு எது சரியெனப்படுகிறதோ அதை முடிவெடுங்கோ... என்று கூறுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

வெளியே மழை பொழியத் தொடங்கியது. நாலா திக்குகளிலிருந்தும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு வீதியிலும் ஒழுங்கையிலும் விரைவது தெரிகிறது.

'நல்லூருக்கு இதால போகலாமே? என்று வழி கேட்கும் குரல்கள் எனக்குக் கேட்கின்றன. சிலர் எங்கள் வீட்டிற்குமுன் நிறைந்திருந்த வெள்ளக் குண்டில் விழுந்தெழும்பிச் செல்கின் றனர். நீராவியடிப்பிள்ளையாருக்கும் சிலர் சாபமிட்டனர்.

'பிள்ளையாரே நீயும் பார்த்துக்கொண்டா இருக்கிறாய்?

என் மனைவி என்னிடம் வந்தாள்.

'நாங்கள் வெளிக்கிடுவதில்லையா?

'பார்ப்பம்...

வெளிக்கிடும் நிலையிலா நாங்கள் வாழ்ந்துவிட்டோம்?

நாடோடிகள் போலக் கூடாரத்துடனும் சில தட்டுமுட்டுச் சாமான்களுடனும் வாழப்பழகியிருந்தால் இடம் பெயர்வதில் பிரச்சினையே இருந்திருக்காது. வீடு முழுவதும் பொருட்கள். கதிரைகள்: மேசைகள்: செற்றிகள்: சாப்பாட்டு மேசைகள்: அலுமாரிகள்: பெட்டகம்: ரிவி: டெக்: றேடியோக்கள்: அம்மி: ஆட்டுக்கல்: கல்லுரல்: உலக்கை... இவ்வளவையும் தூக்கிக் கொண்டு ஓடுவதா?

தேவைகளை நாங்கள் அதிகரித்துக் கொண்டோம். தேவைகளைச் சுருக்கிக் கொண்டவர்கள்: அவற்றைப் பெருக் கிக்கொள்ள வசதி குறைந்தவர்கள் உடன் புறப்பட்டுவிட்டார் கள். சொத்துக்களைச் சேகரித்தவர்கள் தயங்கி ஏங்கி நிற்கிறார்கள்.

நான் புவியியலில் கற்ற லாப்பியர்கள் நினைவுக்கு வந்தார்கள். துருவ மான்களை மேய்த்து வாழும் நாடோடிக் கூட்டம் அது. சைபீரிய குளிர்ப்பிரதேசத்தில் பனி பெய்யத் தொடங்கியதும் அவர்கள் வளர்க்கின்ற துருவ மான்கள்

தென்புறமாக இடம் பெயரும். அவை இடம்பெயரும் காலம் வந்ததும் அவை அதற்குரிய இயல்பூக்கத்தை வெளியிடும். பறவைகள் வலசை புறப்பட்டிருக்கும். லாப்பியர்கள் கூடாரங் களையும் சொற்ப எதனங்களையும் துருவமான்களின் முதுகுகளில் தூக்கிப் போட்டுவிட்டு அவற்றின் பின் நடப்பார்கள். அவை தமக்குரிய கோடைகால மேய்ச்சல் தரையைச் சென்றடையும். கோடைகழிந்து துருவப்பகுதியில் பனி விலகத் தொடங்கியதும் அவை மீண்டும் வடக்கு நோக் கிப் புறப்படும். லாப்பியர்கள் அவற்றினைப் பின் தொடர் வார்கள். லாப்பியர்கள் துருவமான்களை மேய்க்கிறார்களா அல்லது துருவமான்கள் லாப்பியர்களை மேய்க்கின்றனவா என்ற சந்தேகம் எனக்கு எப்பொழுதும் மனதில் எழுவதுண்டு.

யாழ்ப்பாண மக்கள் அந்த நிலையிலிருந்தால் எங்களது அம்மி: குளவி: ஆட்டுக்கல்: கல்லுரல் என்பனவற்றைத் துருவமான்களின் முதுகுகளில் எற்றிப் புலம் பெயர்வதாயின் என்ன நடக்கும் என எண்ணிப்பார்த்துச் சிரித்துக் கொள்வேன். யாழ்ப்பாண மக்கள் இடம் பெயரப் பிறந்தவர்களல்லர்.

'என்ன சொல்லுறியள்?

வீதியில் மக்கள் துயர இருளில் புலம் பெயரும் சந்தடி கேட்கின்றது. நான் மனைவியைப் பார்த்தேன்.

'சனம் போய் முடியட்டும்... இரண்டொரு நாள் கழித்துப் புறப்படுவம்...

'அண்ணை மருமக்கள் எல்லாரும் உங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கினம்...

'இதில் என்னால் முடிவெடுக்க முடியாது. நான் உதவி அரசாங்க அதிபர்... என் பிரிவிலுள்ள கடைசி ஆள் வெளிக்கிடும்வரை நான் இங்கு இருந்தே தீருவேன்.

என் மனைவிக்கு என் மனநிலை நன்கு புரியும். அமைதியானாள். பிள்ளைகள் குமுறினார்கள்.

'அப்பா: எங்களை இங்க வச்சிருந்து ஆமிக்குப் பலி கொடுக்கப் போறியளா? மூத்தவள் விழிகளில் நீர் நிரம்பப் பயத்துடன் வினவியபோது என்னால் எதுவும் கூறமுடிய வில்லை. எங்கள் இளம் சந்ததியினரின் மனதில் இராணுவம் என்ற எண்ணம் எவ்வளவு பயங்கரத்தை எற்படுத்திவிட்டது.

முன்னைய அனுபவங்கள் இளம் பிள்ளைகளைப் பீதி கொள்ள வைத்துவிட்டன இந்திய இராணுவம் சுட்டுக்கொன்று கவச வாகனத்தினை ஏற்றிச் சதைக்கும்பலாக்கிய என் மச்சாள் மாம்பழம். அண்ணர் பரமநாதன்... அவர்களின் சதைக்கும்பலை என் கரத்தால் அள்ளிப் பெட்டிகளிலிட்ட காட்சி எனக்கு நினைவில் வராமலில்லை. விசுவமடுவில் இந்திய இராணுவத்துடன் போராடி மரணமடைந்த சத்தியன்... இந்திய இராணுவத்தால் மல்லாகத்தில் சுடப்பட்ட என் பெறாமகன் மதியழகன்... கோட்டை முற்றவெளியில் அவலமாகச் சுடப்பட்ட என் பேரன் சதீஸ்... இப்படி எத்தனை அவச் சாவுகள் என் குடும்பத்தில் நிகழ்ந்துவிட்டன. யாழ்ப்பாணப் பெற்றார் ஒவ்வொருவரிடமும் இத்தகைய இழப்புக்கள் முன்னுதாரணங்களாக உள்ளன. விமானக் குண்டு வீச்சுக்களால் உடல் சிதறியோர்.... ஷெல் சிதறி அழிந்த குடும்பங்கள்... குமுதினிப் படகில் கைக்குழந்தையிலிருந்து படு கிழவர் வரை வெட்டித் துண்டாடப்பட்ட என் பிரதேச மக்கள்....

பயம்... பயம்... இராணுவத்தை எதிர்கொள்ளமுடியாத படு பதற்றம். யாழ்ப்பாணத்தவர்களைக் கிலிகொள்ள வைத்துள்ளன.

நான்கு நாட்களுக்கு முன்னர் உரும்பிராயிலிருந்து இடம் பெயர்ந்து என் வீட்டில் அடைக்கலம் புகுந்திருக்கும் உறவினர்கள் கூறிய கதைகள் எல்லாம் இராணுவம் வரும்போது இடம் பெயர்வதைத்தவிர வேறு வழியில்லை என்பதைத்தான் காட்டுகின்றன.

ஆனால் யாழ்ப்பாணம் என்பது வெறும் மனிதர்கள் மட்டும் தானா? எங்களது பாரம்பரியப் பூமியில் ஊனுடனும் சதையுடனும் நூறாண்டுகளாக வாழ்ந்து முடித்த எம் முன்னோர்கள் வாழ்ந்த தாயகம். அவர்களுடைய ஆத்மாக்கள் இங்கு தான் எங்களை ஆசீர்வதித்தபடி இருக்கின்றனர். யாழ்ப்பாணம் என்பது வெறும் மண்ணும் மரங்களுமல்ல. அது உயிரும் உடலும் கொண்ட மானிடம். யாழ்ப்பாணம் என்பது எங்களது தாய். எங்கள் உயிர்.

நான்கு இலட்சம் மக்களுக்காகத் தன் மடியில் தேக்கி வைத்திருக்கும் நன்னீரைக் கிணறுகள் மூலம் எங்களுக்குப் பருகத் தருகின்ற மாதாவை விட்டு வெளியேறுவதா? அது வெறும் தண்ணீராக நான் கருதவில்லை. தாயின் மடியிலிருந்து குழந்தைகளுக்காகச் சுரக்கின்ற பாலாகக் கருதுகின்றேன்.

உலகில் யாழ்ப்பாணத்துக்கு நிகராக எந்த ஒரு நாடுமில்லை. இங்கு எரிமலைகள் கக்குவதில்லை. ஆனால் கடந்த தசாப்தங்களாக மக்கள் குமுறத்தொடங்கிவிட்டனர். இந்த மண்ணில் பூகம்பங்கள் எட்டியும் பார்ப்பதில்லை. வாடையின் வருடலும் சோளகத்தின் வறட்சியும் எங்கள் மண்ணில் விளையாத பயிர்கள் எதுவுமில்லை என நிரூபித்துள்ளன. பெருஞ் சூறாவளிகள் எம் மண்ணைத் தாக்கிக் காவு கொண்ட வரலாறு மிக மிகச்சொற்பம். ஆனால் இராணுவம் வருகின்றதென்ற செய்தியைக் கேட்டதும் எங்களை வாழ வைக்கும் தாயைத் தன்னந்தனியனாக இங்கு விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருக்கிறோம்.

மாரி மழை சோகத்துடன் அழத் தொடங்கிவிட்டது. மக்கள் குமுறி அலறிக் கொண்டு சூறாவளிகளாக ஓடத் தொடங்கிவிட்டனர். என்னால் அதை நினைத்தும் பார்க்க முடியவில்லை. என்னால் முடியாது...முடியாது. ஓடும் மனத் திராணி எனக்கில்லை. ரூசோ நீ ஏன் இப்படிச் சொன்னாய்: ஷஅடிமை நிறைந்த சுதந்திரத்தைவிட ஆபத்துடன் கூடிய சுதந்திரமே மேலானது என்று!'

'என்ன அப்பா...

'ரெண்டொரு நாளில வெளிக்கிடுவம்...

அன்றிரவு என்னால் தூங்க முடியவில்லை. வலிகாமம் முழுவதும் வீதியில் நிற்கும்போது: மழையில் குளித்து குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கும் போது என்னைப் போன்ற ஒரு சிலர் படுக்கையில் உறக்கமின்றித் தவித்தோம். வீதியால் செல்கின்ற மக்களின் அவலஒலிகள் விடியும்வரை ஓயவில்லை.

நள்ளிரவில் வாசலில் ஒரு ஸ்கூட்டரின் சத்தம் கேட்டது யாரோ கதவைத் தட்டினார்கள். நான் எழுந்தபோது மனைவி தடுத்தாள்.

'போகவேண்டாம்...

'பயப்படாதை... ஆரோ அவசரமாக வந்திருக்கினம்:

'நாங்கள் வெளிக்கிட்டுவிட்டமோ என்று செக் பண்ணுகினமாக்கும்

'அப்படியிருக்காது...

நான் எழுந்து வந்து கதவைத் திறந்தேன். சிவச்சந்திரன் நின்றிருந்தான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளன். சோர்ந்து களையிழந்து நின்றிருந்தான்.

'என்ன சிவா: இந்த நேரத்தில்'

'என்ன செய்யிறது'

'எதுவுமே தெரியவில்லை...

'இந்த மழைபுக்க வீதிவீதியாகச் சனம் இடம் பெயர்வதில் அலை மோதுகிறது. எனக்குப் பக்கத்து வீட்டில இருந்ததுகளும் இருந்து பார்த்துவிட்டு வெளிக்கிட்டினம்... என்ன செய்கிற தென்று தெரியவில்லை. கனபேர் யூனிவேசிற்றியிலை போய் இருக்கப் போகினமாம். கொஞ்சப்பேர் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியில இருக்கினம்... வெளிக்கிடுவதில்லை என்று... நீர் என்ன செய்யப் போறியள்' அவன் தன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்து மீண்டும் அணிந்து கொண்டான். அவன் விழிகள் கலங்கிச் சிவந்திருக்கும். இருளில் அவதானிக்க முடியவில்லை.

'இங்க இருப்பம் என்றிருக்கிறன். பிள்ளையள் பயப்படுகுதுகள். பார்த்துச் செய்வம் என்றிருக்கிறன். எனது பிரதேச மக்கள் எலலாரும் சென்றால் நான் கடைசியாகப் போகலாமென்றிருக்கிறன்.

'வீடுவீடாகத் தட்டிக் கெதியாகப் புறப்படுங்கோ... என்று பயமுறுத்துகினமாம்...

'ஆர்...'

'எல்ரிரிஈ ஆதரவாளர் என்று திரியிற சிலதுகள்...

'நானும்கேள்விப்பட்டன்...

'போகும்போது சொல்லிவிட்டுப் போம்... என்றபடி அவன் ஸ்கூட்டரைக் கிளப்பிச் சென்றான். நான் வந்து படுக்கையில் சரிந்தேன்.

உறக்கம் தழுவ மறுத்தது.

அதிகாலை என்னையறியாமல் நீண்ட நேரம் தூங்கிவிட்டேன்.

'இரவெல்லாம் பிசத்தினியள்... என்றாள் மனைவி.

'என்னெண்டு...

'போகமாட்டன்... நான் போகமாட்டன்... என்று கத்தினியள்

நான் சிரித்துக் கொண்டேன். புறப்பட்டுக் கச்சேரிக்குச் சென்றேன். கச்சேரி வெறிச்சுக் கிடந்தது. எனது பழைய பூங்கா வீதி பணிமனைக்கு வந்தேன். மூடிக்கிடந்தது. இரவு

வாச்சர் வந்திருக்கமாட்டான். நகரத்திற்கு வருவதற்காக பிரதான வீதியால் வந்தபோது பிசொப் கவுசிலும் சென் பற்றிக்ஸ் பாடசாலையிலும் மக்கள் குழுமி நிற்பதைக் கண் டேன். வயோதிபர்கள் நோயாளிகள். அவர்களைப் பராமரிக் கும் உறவினர் என நின்றிருந்தனர்.

பேக்கரி முன் மக்கள் கியூவாக நின்றிருந்தனர். பெருங்கியூ. வெவ்வேறிடங்களிலிருந்து வந்தவர்களும் நின்றிருந்தனர். என்னைக் கண்டதும் பேக்கரி முதலாளி படியிறங்கி வீதிக்கு வந்தார்.

'சேர் பாண் வேணுமா...?

'வேண்டம்... சனத்துக்குக் கொடுங்கோ... மா இல்லாவிட்டால் சொல்லுங்கோ... தரச் சொல்லுறன்...

'வேண்டாம் சேர்...

'ஏன் இருக்குதா...?

'அப்படியில்லை.. அவர் தயக்கம் எனக்கு வியப்பைக் கொடுத்தது.

'நீங்களும் அங்கால போகப் போறியளா?

'பேக்கறிகளோ: தேநீர்க்கடைகளோ வேறு கடைகளோ நாளையிலிருந்து இயங்கக் கூடாதென்று சொல்லிவிட்டினம்..

நான் விக்கித்து நின்றேன் அவர் தொடர்ந்தார். 'இங்க எல்லாம் இயங்கினால் போற சனம் போகாமல் நின்றிடும்.... பெரிய களஞ்சியத்திலிருந்து எல்லாச் சாமான்களையும் சாவகச்சேரிக்கு ஏற்றிச்செல்லும்படி உங்க பி.டி சொல்லிப் போட்டார். அரிசி: மா: சீனியெல்லாம் லொறி லொறியாக ஏற்றப்பட்டுச் செல்லுது... இனி இங்க இருக்கிறதிலையும் புண்ணியமில்லை. சாப்பிட எதுவுமிருக்காது....

# 6

யாழ்ப்பாணம் வெறிச்சோடிப் போய்விட்டது. மக்கள் இந்த தாய்மண்ணைவிட்டு வெளியேறத்தொடங்கி மூன்று நாட்களாகி விட்டன. வீதிகளில் கட்டாக்காலி மாடுகளும் ஆடுகளும் அலைந்து திரிந்தன. கிணற்றுநீர் இறைக்கப்படாத தால் அவற்றிற்கு வெள்ள நீர்தான் அருந்தக்கிடைத்தது. வீட்டு நாய்கள் தெரு நாய்களாகி வீதியெங்கும் உணவு தேடி அலைந்தன. வீதியில் தறிகெட்டுத் திரிந்த ஆடுகளை அவை பசியோடு பார்த்தன.

அம்மன் கோயில் முன்மண்டபத்தில் அமர்ந்திருந்த மாணிக்கத்தார் கோயில் வீதியைப் பார்த்தார். காட்டாற்று வெள்ளம் வற்றிவிட்டது போல ஆள் நடமாட்டமின்றிக் கிடந்தது. மூன்று நாட்களில் வீடுகள் எல்லாம் பாழடைந்து போனதுபோல வெறிச்சிட்டுக் கிடந்தன. கோயிலின் மண்டபத்தில் தனிமையாக அமர்ந்திருக்கின்ற கொடுமையான நிலையை அவரால் உணரமுடிந்தது.

அம்மன் கோயில் சுற்றாடலில் அவர் அறியத்தக்கதாக எவரும் இல்லை. ஆக கனகசபை குடும்பம் மட்டும் படுத்த படுக்கையாகக் கிடக்கும் பார்வதி ஆச்சியை என்ன செய்வ தென்று தெரியாமல் தவித்துக்கிடக்கின்றது. கனகசபையும் மனைவியும் இரண்டு வயதுவந்த பெண்பிள்ளைகளும் கிழவியைச்சுற்றி நின்றிருக்கின்ற காட்சி மாணிக்கத்தாரின் நினைவில் நிறைந்து கிடக்கின்றது. சற்றுமுன் அங்கிருந்து தான் கோயிலுக்கு வந்தார்.

'மாணிக்கம் அம்மான் நாங்கள் என்ன செய்யிறது. ஆச்சியை என்ன செய்யிறதெண்டு தெரியவில்லை. பெத்த மனிசி. எப்படி அங்கால கொண்டு செல்லுறது. ஒரு கார்க்காரரிடம் கேட்டன். ஆறாயிரம் ரூபா தரட்டாம். அன்றாடம் கூலி வேலை செய்யிற நான் அந்தளவு பணத்திற்கு எங்க போவன்..

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்குச் சிலர் வாகனங்களில் விலைமதிப்பான பொருட்களுடன் ஏறிச் சென்றனர். லொறி எதுவும் பிடிக்க முடியவில்லை. அவை போராளிகளினதும் அரச திணைக்களங்களினதும் பொருட்களை ஏற்றியிறக்கின. றக்ரரின் கூலி பத்தாயிரமாக உயர்ந்திருந்தது. இரண்டு சில்லு றக்ரரின் கூலி மூவாயிரமாக இருந்தது. வண்டில்கள்: தள்ளு வண்டில்களின் கூலியும் ஆயிரக்கணக்கில் உயர்ந்துவிட்டது.

'ஒருக்கா சாவகச்சேரிக்குப் போய்: திரும்பி வாறதெண்டால் காசுகட்டிப் பாஸ் எடுக்க வேணும்..... அப்படி வேண்டாவிட்டால் கட்டாது என்றனர்.

முதல் நாள் அகப்பட்ட சாமான்களுடன் சென்ற மக்களில் சிலர் நான்காம் நாளின் பின்னர் சயிக்கில்களிலும் றக்ரர்களிலும் வந்து தம் வீட்டுப்பொருட்களை எடுத்துச் செல்லத் தொடங்கியிருந் தனர். போராளிகளும் காவற்றுறையும் எவ்வளவு மறித்தும் கேளாமல் கள்ளவழிகளால் வந்து சென்றனர். திரும்பும்போது தம் வீட்டுச்சாமான்களுடன் பக்கத்துவீட்டுச் சாமான்களையும் கள்ளமாக எடுத்து வந்தனர்.

படுக்கையில் கிடக்கின்ற கிழவியை சாவகச்சேரிக்கு எடுத்துச் செல்வதற்கு ஆறாயிரம் ரூபாக்களை எதுவிதமான மனித இரக்கமுமின்றிக் கேட்ட கார்க்காரன்மீது அவருக்குக் கோபமாக வந்தது. மனித நேயமே செத்துவிட்டதென எண்ணிக் கொண்டார். எரிகின்ற வீட்டில் பிடுங்கிய ஆதாயம் போல மக்களில் சிலர் நடந்துகொள்கின்றனர்.

வானம் வெளுத்துக்கிடக்கின்றது.

மண்ணும் ஆட்களின்றி அடங்கிக் கிடக்கிறது. மாணிக்கத்தார் கோயிலுக்குள் போய் குத்துவிளக்கொன்றை எரியவிட்டார். களஞ்சிய அறையில் போதியளவு தேங்காய் எண்ணெயும் பிரசாதத்திற்குரிய பச்சையரிசியும் இருக்கின்றன.

குத்துவிளக்கை ஏற்றிக் கும்பிட்டார். இரத்தினத்தின் வீட்டில் பறித்த மலர்களைப் பலிபீடத்தில் வைத்தார். அவருக்கு இப்பொழுது அந்தக் கோயிலும் அங்கிருக்கும் சிலைகளுந்தான் சொந்தம். துணை. இந்தக் கோயிலில் இருக்கும்போது தனக்கொன்று நடந்துவிட்டால்...?

நினைவு பயத்தைத் தந்தது ஊரோடு ஒத்து ஓடாமல் நின்றுவிட்டது தவறோ? முடிவு செய்தாகிவிட்டது. அங்கு சென்று கஷ்டப்படுவதிலும் இங்கேயே தங்கிவிடுவது மேல். யாரை நம்பி வந்தோம்?

அவர் மீண்டும் கோயில் முன் மண்டபத்திற்கு வந்தபோது வாசலில் ஒரு சிறு குடும்பம் நின்றிருந்தது. பெட்டிகளுடன் நின்றிருக்கும் கோலத்திலிருந்து எங்கிருந்தோ இவ்வழியாகச் சாவகச்சேரிக்குப் புலம் பெயர்கிறார்கள் எனத்தெரிந்தது.

'ஐயா: கிணற்றில தண்ணியள்ள வேண்டும். வாளிகயிறு இருந்தால் தாருங்கோ.. தண்ணிவிடாய்... என்று அக்குடும்பத்தின் தலைவன் இரந்து கேட்டான். கோயிலின் கப்பிக்கயிற்றையும் வாளியையும் இரவில் கழற்றி உள்ளே வைப்பது வழக்கம். கோயில் சொத்தைத் திருடுவதற்கென்றே சிலர் இருக்கிறார்கள்.

அவர் உள்ளே போய் எடுத்து வந்து கொடுத்தார். அவன் நன்றியோடு அவற்றை வாங்கிக் கொண்டு தண்ணீர் அள்ளக் கிணற்றடிக்குச் சென்றான்.

அவன் மனைவியும் பிள்ளைகளும் கோயில் மண்டபத்தில் அமர்ந்து கொண்டனர்.

'எங்கிருந்து வாறியள்?

'மானிப்பாய்..

'அந்தப்பக்கமும் இருக்க முடியாதோ?

'ஆமி அங்காலையும் வருகுதாம்... ஒரே குண்டுச்சத்தம். துப்பாக்கிச்சத்தம்... இருக்கேலாது... வெளிக்கிட்டிட்டம். மூத்தவன் இயக்கத்திலை வேறு இருக்கிறான். ஆமி வந்தாங்கள் எண்டால் எங்களை விட மாட்டான்கள்...

வாளியில் அள்ளி வந்த நீரை பிளாஸ்ரிக் கான் ஒன்றினுள் நிறைத்தார்கள். பேணிகளில் எடுத்து அருந்தினார்கள்.

'வெளிக்கிட்டதில இருந்து ஒன்றும் சாப்பிடவில்லையாக்கும்.

அவர்கள் மௌனமாக இருந்தனர். அவர்களின் முகங்களில் பசிக்களை தெரிந்தது. சிறுபிஞ்சுகள் அவரைப் பரிதாபமாகப் பார்த்தன.

'வழியில ஏதாவது வாங்கலாம் என்று பார்த்தம். எல்லாக் கடைகளும் பூட்டிக்கிடக்குது.

'ஊரே குடியெழும்பி ஓடேக்க கடையை யார் திறந்து வைத்திருப்பான்கள். இப்படியே நடந்து போங்கோ. நல்லூரடியில ஒரு தேத்தண்ணிக் கடை இருக்குதாம். அரிசி வேண்டுமென்றால் கொஞ்சம் தாறன்.

'வேண்டாம் ஐயா.. என்றபடி அவர்கள் புறப்பட்டனர். அவர்கள் சென்று மறையும்வரை மாணிக்கத்தார் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் இன்னமும் கொஞ்சநேரம் நின்றிருக்கலாம் எனப்பட்டது. மனிசரோடு அளவளாவுவது எவ்வளவு இனிமை யானது நிம்மதியானது என எண்ணிக் கொண்டார்.

குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. வேப்பஞ்சருகுகள் வீதியெங்கும் இறைந்துகிடந்தன. நாளைக்கு ஒருக்காக் கூட்டித்தள்ள வேண்டும். ஆடு ஒன்று அவலமாகக் கத்தியபடி விழுந்தடித்து ஓடியது. அதனை ஐந்தாறு நாய்கள் துரத்திச் சென்றன. வேட்டை ஆரம்பமாகிவிட்டது. வீட்டு நாய்களின் அகமனதில் படிந்து உறங்கிக்கிடந்த காட்டு நாய்களுக்குரிய வேட்டைவெறி தானாகத் தூண்டப்பட்டுவிட்டது. மருமகன் சிவசாமி வீட்டுக் கோழியொன்றினை நாய் கவ்விப்பற்றியது. கோழியின் மரண ஒலி எங்கும் எழுந்தது.

மாணிக்கத்தார் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய வீடு தலையாளியில் இருக்கிறது. அங்கு போய்விட்டு வருவோம் என்று எழுந்தபோது இரத்தினம் வீட்டுப்பக்கம் ஏதோ வித்தியாசமான சத்தம் கேட்டது. யாரோ கதவை உடைப்பது போல அவருக்குப்பட்டது. அவர் வீதியில் இறங்கி இரத்தினத்தின் வீட்டிற்கு வந்தார். இரத்தினத்தின் வீடு வீதிக்கு அருகில் இருந்தது. அமெரிக்கன் பாசன் அஸ்பெஸ்ரர் கூரை வீடு.

அவர் வீட்டுக் கூரையின்மீது ஐந்து பேர் வரையில்

ஏறி நின்றிருந்தனர். கீழே இருவர் நின்றிருந்தனர். அவர்களின் கைகளில் சுத்தியல், குறடு போன்ற கருவிகள் காணப்பட்டன.

'டேய்.. டே... பொடியள்.. என்னடா செய்யிறியள்...' என்று இரைந்தபடி மாணிக்கத்தார் வந்தார். அவர்கள் இப்படியொருவரை ஆள்சந்தடியற்ற ஒரு பிரதேசத்தில் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை என்பது அவர்களின் முகங்கள் போன போக்கிலிருந்து தெரிந்தது.

'நீங்கள் போகேலையோ, அப்பு' என ஒருவன் கேட்டான்.

'நான் போறது போகாதது இருக்கட்டும்... நீங்கள் என்ன வேலை செய்யிறியள்.

'இந்த வீட்டுக்காரர் இப்ப சாவகச்சேரியில. அங்க இருக்க இடமில்லை. கூரையைக் கழற்றிக்கொண்டு வரச்சொன்னவர்.

'என்ன கதை விடுகிறியள்... இந்த வீட்டுக்காரர் யார்?

'அதைப்பற்றி உமக்கென்ன அப்பு.. இது உம்மடை வீடோ? பிறகேன் கதைக்கிறீர்... கரைச்சல் கொடுக்காமல் அங்கால போம்.

'எளியவேலை செய்யாதீங்கள் பொடியள்... அந்தாளின்ர எல்லாச்சாமான்களும் உள்ளுக்கை.. மழை பெய்தால் எல்லாம் அழிஞ்சு போயிடும்..

'வெளிநாட்டுக் காசுதானே அப்பு... இப்படி எத்தனை வீட்டை அந்தாளால் கட்ட முடியும்.

'வேண்டாம் தம்பிமார்...

'அப்பு நீ இப்ப போகப் போறியோ? இல்லையோ? மிலாந்தாமல் அங்கால போ... நீங்க கழட்டுங்களடா கெதியா. லொறி வரப் போகுது.. என கீழே நின்ற ஒருவன் உறுமினான். மாணிக்கத்தார் விக்கித்துப் போனார். அவரால் எதுவும் பேச முடியவில்லை. கோயிலுக்குத் திரும்பிவந்து மண்டபத்தில்: 'அம்மாளாச்சி என்று முறையிட்டபடி அமர்ந்துவிட்டார். அவர் விழிகளிலிருந்து கண்ணீர் வடியத்தொடங்கியது. இரத்தினம் இந்த வீட்டைக் கட்டுவதற்குப் பட்டகஷ்டங்கள் அவருக்குத் தெரிந்திருந்தன. ஒரு கூலியாளாக இரத்தினமும் இந்த வீட்டைக் கட்டுவதற்குப் பாடுபட்டிருக்கிறார். அவர் வீடு கட்டிய காலத்தில் அவர் பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில தான் இருந்தனர். வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேமித்துக்

கட்டிய வீடு. இன்று கூரை கழற்றப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் எத்தனை வீடுகள் கூரை இழக்கப் போகின்றனவோ?

அஸ்பெஸ்ரர் சீற்றுகள் கழற்றப்பட்டு இறக்கப்படுகின்ற சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. கழற்ற முடியாத சீற்றுகள் உடைந்து போயின. வீட்டின் முன் பிளாற்றில் கழற்றிய சீற்றுகளை அடுக்கினர்.

லொறி ஒன்று வரும் சத்தம் கேட்கிறது. எத்தனை வீடுகள் இப்படிக் கூரைகளை இழந்தனவோ?

லொறி வீட்டிற்கு அருகில் நின்றது. கழட்டியிருந்த சீற்றுகள் லொறியில் ஏற்றி அடுக்கப்பட்டன. சத்தங்களிலிருந்து நடப்பவற்றை மாணிக்கத்தார் புரிந்து கொண்டார். நான்கு இலட்சம் மக்கள் கிழக்கே இடம் பெயர்ந்து கூரையில்லாத வெளியில் வானமே கூரையாகப் பரதவிக்கும்போது ஆட்களேயில்லாத வீடுகளின் கூரைகள் காணமல் போனால் என்ன?

லொறி புழுதியையும் சேற்றையும் வாரியிறைத்தபடி கோயிலைக்கடந்து விரைந்து சென்று மறைந்தது. நெஞ்சம் கனத்தது. இனந்தெரியாத ஆவேசம் மனதிற் படிந்து கிளம்பியது.

உரும்பிராய்ப்பக்கம் குண்டுச்சத்தங்கள் கேட்கின்றன.

அவற்றை மீறிக்கொண்டு கனகசபை வீட்டுப்பக்கமிருந்து அழுகுரல் மெதுவாகக் காற்றில் கலந்து வந்தது. மாணிக்கத்தார் எழுந்திருந்தார். பார்வதி ஆச்சி யாருக்கும் சிரமம் கொடுக்காமல் பரதேசம் சென்றுவிட்டாளோ? அவர் கோயில் கதவை இழுத்து மூடிவிட்டு கனகசபையின் வீட்டிற்குப் புறப்பட்டார். இரத்தினத்தின் வீட்டைக் கடக்கும்போது பார்த்தார். கூரையிழந்து போய் வீடு பரிதாபமாகக் காட்சி தந்தது. கழற்றிய சீற்றுக்களில் பல உடைந்து போனதால் சிதறிக்கிடந்தன. அரைவாசி சீற்றுக்கள்தான் தேறியிருக்கும். கழற்ற முடியாதவை கூரையில் இருந்திருந்தால் ஒரு பகுதி வீடாவது தப்பியிருக்கும். ஷஇரத்தினம் இந்தக் கோலத்தில் வீட்டைப் பார்த்தால் நிச்சயம் தாங்கிக்கொள்ள மாட்டான்'.

கனகசபை வீட்டில் மெதுவாக அழுகை ஒலித்தது. அவர் உள்ளே நுழைந்தார். கனகசபை ஓடி வந்தான்.

'ஆச்சி எங்களை விட்டிட்டுப் போயிட்டா: அம்மான்.

மாணிக்கத்தார் கனகசபையின் தோள்களில் காம் பதித்து ஆறுதல் சொன்னார். பார்வதியாச்சி பிள்ளைக்கும் பேரப்பிள்ளை களுக்கும் கஷ்டம் கொடுக்காமல் போய் விட்டாள்.

'ஆச்சி எவ்வளவு ஆசைப்பட்டா... பறைமேளம் அடிச்சு பாடை கட்டி நான்கு பேர் காவிச் சுடலைக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டா. இப்ப சவக் கிரிகை செய்யக் கூட ஐயரில்லை. அவரும் ஆமிக்குப் பயந்து சாவகச்சேரிக்கு ஓடிப் போயிட்டார். பாடை கட்டவும் ஆளில்லை. கட்டினா லும் தூக்கிச் சுடலைக்குக் கொண்டுபோக ஆக்களில்லை. அம்மான். கலட்டியில இப்ப உங்களைத் தவிர ஆச்சியின்ர செத்த வீட்டில கலந்து கொள்ள ஒருத்தருமில்லை. நாடே சுடுகாடாகப் போச்சுது. ஆச்சி கிடந்து அழுந்திறா. சாகவில் லையே எனக் கவலைப்பட்டன். அம்மான். இப்ப எப்பிடி ஆச்சிக்கு இறுதிக்கிரிகை செய்யப் போறன் என்று தெரிய வில்லை. சுடலை வண்டிலைக் கொண்டு வந்து கோம்பயன் மயானத்துக்குக் கொண்டு செல்வதென்றாலும் ஆரால முடியும்... கனகசபை தன் தலையில் அடித்துக் கொண்டு விம்மினான்.

யாழ்ப்பாணத்து மண்ணின் மக்களுக்கு இப்படியொரு அவலம் வரத்தான் வேண்டுமா? சபிக்கப்பட்ட மக்களாகி விட்டார் கள். மரணம்கூட யாழ்ப்பாணத்தில் கௌரவமாக வில்லை. குண்டடி பட்டு உடல் சிதறிப் பொறுக்கி அள்ளிச் சடலையில் எரிக்கின்ற நிலைமை இருந்தது. இன்று ஊர் உற்றமின்றி சுடலைக்கு எடுத்துச்செல்லவும் ஆக்களின்றி பாதவிக்கின்ற நிலை வந்துவிட்டது.

'எல்லாரும் போன பின்னர் நான் மட்டும் தனித்துச் செத்தால்...' செத்தபிறகு ஆருக்குத் தெரியப் போகிறது. காகங்கள் கொத்தித் தின்றால் என்ன? நாய்கள் குடைந்து தின்றால் என்ன? நாங்கள் தேடிக் கொண்ட வினை. எங்களுக்கு நாங்களே தேடிக் கொண்ட வினை'.

கலட்டிக் கிராமத்தில் பார்வதி ஆச்சி ஒரு காலத்தில் வகித்த செல்வாக்கு மாணிக்கத்தாருக்கு நினைவு வருகின்றது. காணி பூமிகளோடு இருந்த மனிசி. பிள்ளைகள் தலையெடுத்த தும் ஒவ்வொரு காணியும் விலைப்பட்டு நொய்ந்து போய் விட்டாள். என்றாலும் ஆச்சியின் கம்பீரம். வார்த்தைகளில் இருந்த செருக்கு என்றும் குறைந்ததில்லை. அந்த ஊருக்கேவழி சொல்லும் பெரியவளாக விளங்கினாள். எந்தச் சடங்காகவி

ருந்தாலும் பார்வதி ஆச்சி அங்கு தேவைப்பட்டாள். சாமர்த்தியச் சடங்குகளில் முறை தவறி ஆலார்த்தி எடுத்தால் ஆச்சி இருந்தபடி கத்தித் தீர்த்துவிடுவாள். அதனால் ஆச்சியிடம் அடுத்தது என்ன என்று விளக்கம் கேட்டுத்தான் அனைத்துக் காரியமும் நடந்தது. உண்மையில் கிழவிக்கு உலக வழக்கு நன்கு தெரிந்திருந்தது.

பார்வதி ஆச்சி எத்தனை கலியாணங்களை, எத்தனை சாமர்த்தியச் சடங்குகளை முன்னின்று நடத்தி ஒப்பேற்றியிருப்பாள். எத்தனை சடலங்களை முறையான மரணச் சடங்குகளுடன் பாடையில் வழியனுப்பியிருப்பாள். ஊரில் எவராவது இறுதிக்கட்டத் தில் இருக்கிறார்கள் என்றால் அங்கு கூடவே காவல் இருப்பது பார்வதி ஆச்சிதான். செத்துச் சடலம் வீட்டிலிருந்து வெளியேறும் வரை அங்கேயே தங்கி ஆறுதல் கூறிக் காவலிருப்பதும் ஆச்சிதான்.

பார்வதி ஆச்சியின் ஒப்பாரியைக் கேட்டிருக்க வேண்டும். கேட்போர் கண்ணீர் விடவேண்டிவரும். செத்தவருக்கு அவரின் பிள்ளைகள், மருமக்கள் செய்யாதுவிட்ட குற்றங்குறைகளெல்லாம் ஒப்பாரியில் பக்குவமாக வரும். ஆச்சியின் ஒப்பாரி தொடங்கினால் எல்லாருக்கும் நடுக்கம் தொடங்கிவிடும். கிளாக்கர் செத்தவீட்டில் ஆச்சி எழுப்பிய பிரச்சனை ஒப்பாரி புயலைக் கிளப்பிவிட்டிருந் ததை மாணிக்கத்தார் அறிவார்.

'ஓடியாடித் திரியேக்க ஆமான தீன் போடாமல்

ஆடி ஓடித் திரியேக்க ஆமான வேட்டி கொடுக்காமல்

பாடையில போகிறதுக்கு பட்டுவேட்டி கட்டுறான்கள்.

செலவு வீட்டில அள்ளியெல்லே காசைத் தூசாக வீசுவாங்கள்

கிளாக்கரின் மூத்த மகன் 'எணை ஆச்சி நிறுத்தணை... என்று சத்தமிட்டான்.

'என்ரா உனக்குச் சுடுகுது... என்றாள் ஆச்சி.

அந்த ஆச்சி இன்று செத்துக் கிடக்கிறாள். அழுவதற்கு எவருமில்லை. ஒப்பாரி வைக்க எவருமில்லை. இறுதிக் கிரியைகள் செய்யவும் வசதியில்லை.

வெளியில் கனகசபையின் மனைவி வந்தாள்.

'மாமியின்ர அலுவல்களைக் கெதியில முடிச்சிட்டு

வெளிக்கிடுவம்... எல்லாரும் ஓடிப் போயிட்டினம். நாங்க மட்டும் இங்க... எக்கணம் ஆமி வந்திட்டால் எல்லாரும் சரி...

கனகசபை மாணிக்கத்தாரைப் பரிதாபமாகப் பார்த்தான்.

'என்ன செய்யிறது?

'நீங்கள்தான் அம்மான் வழி சொல்லுங்கோ...

மாணிக்கத்தார் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அவ்வேளை வீதியில் ஸ்கூட்டர் சத்தம் எழுந்தது.

'கனகசபை ஆரெண்டு ஒருக்காப் பார்...

கனகசபை விரைந்து படலையைத் திறந்து கொண்டு வெளியில் வர ஸ்கூட்டரில் நான் வந்து கொண்டிருந்தேன். நானும் அந்த ஊரைச் சேர்ந்தவன். எனக்குக் கனகசபையரை நன்கு தெரியும்.

'என்ன அண்ணை? போகேல்லையே? என்று அவர் அருகில் ஸ்கூட்டரை நிறுத்தினேன்.

'ஆச்சி செத்துப் போட்டா...

'பார்வதி ஆச்சியோ? எப்ப...?

'கொஞ்சம் முந்தி...

நான் உள்ளே போனபோது மாணிக்கத்தார் அங்கிருந்தார்.

'இதில யோசிக்கிறதுக்கு என்ன இருக்குது. இங்க இனி இருக்கவியலாது... வளவுக்குள்ளேயே கிடங்கு வெட்டி ஆச்சியின் சடலத்தைப் புதைப்பம்... திரும்பி வரச் சந்தர்ப்பத்தை அம்மாளாச்சி தந்தால் வந்து எலும்புகளையாவது கிளறி எடுத்து முறையாகச் சவக்கிரிகைகள் செய்து கோம்பயன் மயானத்தில எரிப்பம்...

'தம்பி சொல்லுறது சரி... என்றார் மாணிக்கத்தார்.

ஆச்சியை வளவுக்குள் புதைத்துவிட்டுக் கனகசபையின் குடும்பம் மூட்டை முடிச்சோடு புறப்பட்ட போது மேற்கு வானில் சூரியன் சரிந்து கொண்டிருந்தான்.

# 7

மாமரங்கள் பூவும் பிஞ்சுமாக நிழல் பரப்பி வளர்ந்திருந்தன. வேலியோரங்களில் தென்னை மரங்கள் உயர்ந்து வளர்ந்து காய்களுடன் நின்றிருந்தன. கண்ணுக் கெட்டியவிடமெல்லாம் பயன்தரு மரங்கள் அந்த வளவு முழுவதும் காணப்பட்டன. வளவு மூலையில் விளாத்தி மரமும் மசாலித்துச் சடைத்து வளர்ந்த வேம்பும் அவற்றின் அருகில் இளங்கன்றாக வளர்ந்து வரும் புளியமரமும் அந்த வளவின் பசுமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

தனக்கு அடைக்கலம் தந்த வீட்டின் திண்ணையில் பாயில் அமர்ந்திருந்தபடி பார்க்கும் போது பொன்னுத்துரை மாஸ்ரரின் வளவின் செழுமை தெரிகின்றது. கிழக்கே எழுந்த சூரியனின் கதிர்கள் சுள்ளெனத் திண்ணையில் விழுகின்றன. ஒரு சிறிய அறையும் ‘ட வடிவ விறாந்தையும் கொண்ட சிறிய குடிசை. மண்சுவர்க்குந்தும் அதன்மேல் பனை மட்டைகளாலும் வரியப் பட்டும் தென்னங்கீற்றுக் கூரையையும் கொண்டிருந்தது. நிலம் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. திண்ணையின் ஒரு மூலையில் சரோசா தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பு மூட்டிக் கொண்டிருக்கிறாள். நகுலன் வெளித் திண்ணையில் பாயில் சுருண்டு கிடக்கிறான். இரண்டு பெண் பிள்ளைகளும் அறைக்குள் படுகன்கையை விட்டு எழும்பாமல் படுத்திருக்கின்றன. எல்லாருக்கும் நடந்து வந்த களைப்பு இன்னும் தீரவில்லை.

சிவசாமி தான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வீட்டையும்

தான் மட்டுவிலில் அகதியாகத் தங்கியிருக்கின்ற இந்தக் குடிலையும் ஒப்பிட்டுப் பார்த்தார். நான்கு அறைகளையும் பெரியதொரு ஹோலையும் இரண்டு குளியல் அறைகளையும் கொண்ட பெரிய கல்வீடு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனியறை. கட்டில், கதிரை, மேசை, உடுப்பு வைக்கத் தனித்தனி சுவர் அலுமாரிகள். அந்த வீட்டின் ஒவ்வொரு அறைக்குள் ஒவ்வொருவர் படுக்கைக்குப் புகுந்து கொண்டால் எவருமில்லாத வீடாகக் காணப்படும். ஹோல் எங்கும் செற்றியும் கதிரைகளும் சாப்பாட்டு மேசையும் ரிவியுமாகக் காட்சி தரும். இங்கு வெறும் பாயில் பிள்ளைகள் படுத்திருக்கின்றன. இருப்பதற்குத் திண்ணையும் தடுக்கும் தவிர வேறில்லை.

மனிதன் படுத்து உறங்கி எழும்புவதற்கு இவ்வளவு போதும் போல இருக்கின்றது. தேவைகள் குறைந்துவிட்டன. இன்னொரு இடப் பெயர்வு வந்தால் ஓடுவதற்குத் தயக்கமில்லை. இழப்பதற்கு எதுவுமில்லையென்றால் பெறுவதற்கு ஏதாவது இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் அவருடைய வளவு நிறைய வீடு ஆக்கிரமித்திருந்தது. சாடிகளில் வளரும் பூஞ்செடிகளைத் தவிர வேறு பெரிய மரங்கள் அங்கில்லை. காற்றில் எப்பொழுதும் வெம்மை கலந்திருக்கும். இங்கு எவ்வளவு பெரிய வளவில் எவ்வளவு சிறிய குடில். காற்றில் பசுமையும் குளிர்ச்சியும் கலந்திருக்கின்றன. அழுத்தம் தெரியவில்லை.

வளவின் கிழக்குப் பக்கத்தில் பொன்னுத்துரை மாஸ்ரரின் கல்வீடு தெரிகின்றது. இரண்டு அறைகளும் முன்விறாந்தையும் அதன் முன் ஒரு தலைவாசலும் கொண்ட வீடு. அவருடைய சொந்தக்காரர்களில் மூன்று குடும்பத்தினர் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு வந்து விட்டதால் அவரும் அகதியாகிவிட்டார். ஒரு அறையை ஒரு குடும்பத்திற்கும்; தலைவாசலை இரண்டு குடும்பத்திற்கும் ஒதுக்கிக் கொடுத்துவிட்டு அவர்கள் இருவர் ஒரு அறைக்குள் ஒதுங்கிக் கொள்ள நேர்ந்துவிட்டது.

சிவசாமிக்குத் தன் கல்வீட்டில் ஒரு அறையை ஒதுக்கிக் கொடுக்க முடியாது போனதில் பொன்னுத்துரைக்கு மிகுந்த கவலை.

'நான் என்னடாப்பா செய்ய... உனக்கு என்ர வீட்டில

ஒரு அறை தாமுடியாமல் போய்விட்டது மனிசியின்ர ஆக்கள் தவித்து வந்து சேர்ந்திட்டுதுகள்… வந்திட்டாய் இண்டைக்கு இரு… நாளைக்குப் பார்ப்பம்… என்றான் பொன்னுத்துரை மிக்க துயரத்துடன்.

'பரவாயில்லை பொன்னு… எனக்குப் பெரிதாகக் கல்வீடு வேண்டாம். எங்கேயாவது தனிய இருக்க ஒரு குடிசை காணும்…

'மெய்யாத்தான் சொல்லுறியோ?

'ஓமடாப்பா… குந்தியிருக்க ஒரு குடிசை காணும்…

இப்பொழுது நினைத்தாலும் மனம் பதறுகிறது. கொட்டும் மழைக்குள் புறப்பட்டு நடந்து நாவற்குழியைக் கடந்து எங்கு செல்வதெனப் புரியாமல்…

வலிகாமத்து மனித வெள்ளம் தென்மராட்சிக்குள் முட்டி மோதியது. நாவற்குழிப் பாலத்தைக் கடந்த மக்கள் தெரிந்தவிடங்களை நோக்கிப் பிரிந்தார்கள். ஒரு பகுதி நாவற்குழிச் சந்தியிலிருந்து மறவன்புலவு நோக்கிச் சென்றது. ஊர் தெரியாதவர்களும் பலர் அவர்களுக்குப் பின்னால் நகர்ந்தனர். ஒரு பகுதி கைதடிப் பக்கமாக நகர்ந்தது. பெரும்பகுதி நேரடியாக சாவகச்சேரி நோக்கி நடந்தது. அகப்பட்ட கிளை வீதிகளில் பிரிந்தார்கள். மட்டுவில் பக்கமாக ஒரு கூட்டம் வழி நடந்தது. தென்மராட்சியின் மூலை முடுக்கெல்லாம் வெள்ளமாக அலைமோதியது.

யாழ்ப்பானம் கண்டி வீதியில் வாகன நெரிசலும் சன நெரிசலும் நாவற்குழிச் சந்தியிலிருந்து கொடிகாமம் சந்திவரை காணப்பட்டது. தென்மராட்சியிலிருந்த பாடசாலைகள் அனைத்தும் மக்களால் நிரம்பின. வீதியோரங்களிலிருந்த மடங்கள்; பாழடைந்த கட்டிடங்கள்; ஆட்கள் குடியிருக்காத வீடுகள்; வெறும் வளவுகளில் சிதைந்து போயிருந்த குடில்கள் எல்லாம் மக்கள்.

சிவசாமி தன் குடும்பத்துடன் மட்டுவில் சந்தியை வந்தடைந்தார். அந்தச் சந்தி அவருக்குப் பரிச்சயமானதாகவிருந்தது. மட்டுவில் அம்மன்கோயில் பொங்கலுக்குப் பலதடவைகள் வந்திருக்கிறார். பொறிதட்டினாற்போல மட்டுவில் அம்மன் கோயில் முன் ஒழுங்கையில் வசிக்கும் பொன்னுத்துரை மாஸ்ரரின் நினைவு வந்தது. றெயினிங் கொலிச்சில் ஒன்றாகப் படித்தவர்கள். பொங்கல் திருவிழாவிற்கு வந்தபோது அங்கு குடும்பத்துடன் சென்று பசியாறியது நினைவு வருகிறது.

பொன்னுத்துரை மிகப் பண்பான மனிதர் என்பது அவருக்குத் தெரியும்.

'என்ன யோசிக்கிறியள்' என்று சரோசா கேட்டாள்.

'மட்டுவிலுக்குப் போவம்...

'எங்க...

'நம்மட பொன்னுத்துரை மாஸ்ரர் அங்கதான் இருக்கிறான். எங்களுக்கு அடைக்கலம் தருவான்... எப்படியாவது ஒரு ஒழுங்கு செய்து தருவான்...

சரோசாவின் முகம் மலர்ந்தது. நம்பிக்கையோடு சிரித்தாள்.

'எங்களுக்கு இவ்வளவு நேரமும் அவரின் எண்ணம் வரவில்லை...

'கெதியாகப் போவம் அப்பா. சுகிர்தாவுக்கு நெருப்பாகக் காயுது... என்றாள் மாலதி.

நகுலனின் சயிக்கிலில் இருக்கமுடியாமல் சுகிர்தா தவிப்பது தெரிந்தது. சரோசா நெற்றியைத் தொட்டுப் பார்த்துக் கவலையடைந்தாள். எவ்வளவு சொகுசாகவிருந்த பிள்ளைகள்' மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து நிற்கிறார்கள்.

அவர்களுடன் நல்லூரிலிருந்து கூடவே வழிநடந்து வந்த சரஸ்வதி ஏக்கத்துடன் அவர்களைப் பார்த்தாள். சுகந்தியும் வசந்தனும் சிவசாமியைக் கவலையுடன் பார்த்தபடி நின்றிருந்தனர்.

'நீங்களும் எங்களோட வாருங்கோ. முதலில் ஒரிடத்தில் தங்கிக் கொண்டு இருக்க இடம் தேடுவம். என்றார் சிவசாமி. 'உங்களை இப்படி நடுத்தெருவில் விட்டுவிட்டுப் போனால் இராசரத்தினம் என்னை மன்னிக்க மாட்டான். ஏதோ நடக்கிறதைப் பார்ப்பம்...வாருங்கோ...

'அங்கிள் நாங்கள் எங்கயாவது ஒரு பாடசாலையில தங்கிக் கொள்கிறம்... என்ற வசந்தனை நகுலன் இடைமறித்தான்: 'பாடசாலைகள் எல்லாம் நிரம்பி வழியுது. வசந்தன்: எங்களுடன் வாரும். பொன்னுத்துரை அங்கிள் வீட்டில் இடமில்லாவிடில் மட்டுவில் அம்மன் கோயிலிலாவது

தங்கலாம். எங்கயாவது விழுந்து படுக்க வேணும்...

எல்லாருடைய நிலையும் அப்படித்தான் இருந்தது. அவர்கள் மட்டுவில் வீதியில் நடந்தார்கள். வீதியின் கரைகளில் போக இடமின்றிப் பல குடும்பங்கள் வேலியோரங்களில் குந்தியிருந்தனர்.

அவர் பொன்னுத்துரையின் வீட்டுப்படலையைத் திறந்தபோது அவர் வீடு அவர் சொந்தக்காரரால் நிரம்பிக் கிடந்தது. முகஞ்சுழிக்காமல் பொன்னுத்துரை வரவேற்றார்.

'வாடாப்பா...வா...இது உன்ர வீடு...

தென்மராட்சி மக்கள் விருந்தோம்பலை யாழ்ப்பாணத்து வலிகாமத்து மக்கள் தெரிந்து கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பமாக இந்தப் பெரும் இடப்பெயர்வு அமைந்தது. காங்கேசன் துறைப் பிரதேச மக்களும் தீவுப்பகுதி மக்களும் ஏதிலிகளாகப் பாதவித்து வந்தபோது யாழ்ப்பாணத்து மக்கள் பலரின் வீட்டுப் படலைகள் இறுகிப் பூட்டப்பட்டன. என்பது சிவசாமிக்குத் தெரியும். தென்மராட்சி மக்கள் நன்றிக்குரியவர்கள். இலட்சக்கணக்கில் வந்த மக்களுக்காகத் தங்கள் படலைகளைத் திறந்துவிட்டார்கள். தங்கள் வீட்டு அறைகளை ஒதுக்கிக் கொடுத்தார்கள்.

சரோசா தேநீரைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தாள். அவர் தேநீர் குடிக்கின்ற தம்ளர்கள்; சுடுநீர் வைக்கின்ற குண்டான் எல்லாம் பொன்னுத்துரை கொடுத்தவை.

'இன்றைக்குச் சாவகச்சேரிக்குப் போய் சமைப்பதற்குப் பாத்திரங்கள் வாங்கி வரவேண்டும் என்றார் சிவசாமி.

சரோசா பிள்ளைகளை எழுப்பச் சென்றாள்.

'தம்பி; நகுலன்... எழும்படா... மாலதி... எழும்பி வா... சுகிர்தாவை எழுப்பாதை. மருந்து குடிச்சுவிட்டுப் படுத்தவள்... காய்ச்சல் விட்டிருக்குதே...

சுகிர்தாவைச் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் காட்டினார்கள். அரைநாள் எடுத்துவிட்டது. அவ்வளவு நோயாளிகள் வரிசையாகக் காத்திருந்தார்கள்.

'என்னென்ன கஷ்டங்கள் காத்திருக்கின்றனவோ? என்று

சிவசாமி எண்ணமிட்டார் கிழக்கில் சூரியன் உயர்ந்திருந் தான். திண்ணையில் வெயில் தாராளமாகப் பட்டது. சாணித்தரை குளிர்ச்சியாக இருக்கிறது.

இயற்கையைவிட்டு யாழ்ப்பாணத்து மக்கள் படிப்படியாக விலகிவிட்டனர் போல அவருக்குப்பட்டது. அவர் இப்படியான ஒரு சாணத்தரையில் தான் பிறந்தார். இருபது வயதுவரை இரண்டறைகளும் முன்விறாந்தையும் தலைவாசலும் கொண்ட மண்வீட்டில்தான் வாழ்ந்திருக்கிறார். சுவர்கள் எல்லாம் வளையள விற்கு மண் சுவர்கள். அவருக்கு இப்பொழுதும் நினைவுக்கு வருகிறது. செல்லாச்சி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வந்து வீட்டுச் சுவர்களைச் செம்மண்ணால் மெழுகி. கைவிரிவின் மெழுகல் இணைகின்றவிடத்தில் செங்குத்தாக நெளியிட்டு அலங்கரிப்பதும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்மம்மா சாணத்தால் வீடு முழுவதும் மெழுகுவதும் நினைவிலுள்ளன.

அம்மம்மா செத்துப் போனதின் பின்னர் அம்மாவால் வீடு முழுவதும் மெழுக முடியாது போனதும் ஐயா வீட்டறைகளுக்கும் திண்ணைக்கும் சீமேந்து போடுவித்தார். தலைவாசலுக்கும் சீமேந்து போடும்படி அம்மா வற்புறுத்திய போது ஐயா பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

'காசில்லாட்டில் நான் தோட்டைக் கழட்டித் தாறன். போட்ட கையோடு அதுக்கும் சீமேந்தைப் போடுவியுங்கோ... என்றாள் அம்மா. மேசன் செல்லத்துரை அம்மானும்: 'பிள்ளை சொல்லுறது சரி: தம்பி என்று ஒத்து ஊதினார். ஐயா மறுத்துவிட்டார்.

'அதின்ர சுவாத்தியம் உனக்குத் தெரியுமே' நான் படுக்கிற இடம் தலைவாசல்... சாணத்தாலதான் மெழுக வேண்டும். மண் குந்துதான் இருக்க வேண்டும்...

நீண்ட காலத்திற்குப் பின்னர் சாணித்திண்ணையில் வெறும் பாயில் படுத்துறங்கிய பின்னர் தான் ஐயா சொன்ன சுவாத்தியம் புரிகிறது. மறைப்பில்லாத திண்ணையில் வானத் தையும் அதில் பவனிவரும் பிறைநிலவையும் கண்சிமிட்டும் நட்சத்திரங்களையும் காற்றில் அள்ளுப்பட்டுச் செல்லும் மேகங்களையும் பார்த்துக் கொண்டு: மெல்லிய குளிர் காற்று வீசலில் தழுவப்பட்டு உறங்கிய சுகம் அவருக்கு மிகவும் பிடித்தது.

கல்வீட்டில் கட்டிலில் சிமெஸ்ரா மெத்தையில் வெளிக் காற்று உள் வரவிடாமல் ஜன்னல்களை அடித்து இழுத்து மூடிவிட்டுப் படுத்துறங்கிப் பழக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இந்தக் குடிசை வாழ்க்கை நிச்சயம் பிடிக்கப் போவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை எல்லாவற்றையும் இழந்து வந்துவிட்டார்கள். உயிர் வாழ்வதற்கான போராட்டம்.

பொன்னுத்துரையின் வீடு அமளிப்படுகின்றது. சிறு குழந்தைகள் முற்றத்தில் சத்தமிட்டு விளையாடுகின்றன. யாழ்ப்பாணத்து வீடுகளுக்குள் முற்றம் காணாமல் இருந்த பிள்ளைகளோ?

அவர் சிரித்துக் கொண்டார்.

எழுந்திருந்து கிணற்றடிக்குச் செல்லலாம் என நினைத்த போது பொன்னுத்துரை தன் குடிசையை நோக்கி வருவதைக் கண்டார். அவர் சிவசாமியின் அருகில் பாயில் முற்றத்தில் கால்களைத் தொங்கவிட்டபடி அமர்ந்து கொண்டார்.

'என்னடா சிவா... இடம் பிடித்துக் கொண்டதோ?

சிவசாமி அவரை நன்றியுடன் பார்த்தார்.

'நடு றோட்டில நிற்காமல் காப்பாற்றிவிட்டாய்: பொன்னு' விழிகள் கலங்கின.

'சாய் சாய்... தெரிந்தவையெண்டு ஏன் இருப்பான்... நண்பன் என்றால் இப்படித்தான். நான் அங்கால ஓடி வந்திருந் தால் நீ இடம் தரமாட்டியோ? ஒருத்தருக்கொருத்தர் உதவியாக இருக்க வேணும்... நான் உனக்கு நல்ல கல்வீடாகப் பார்த்து எடுத்துத் தாறன்... அப்படியிருந்து பழகிவிட்டியள். இப்படி மண்ணில குடிலில இருக்கிற எனக்கும் மனசுக்குச் சங்கட மாகப்படுகிறது. உங்களுக் கும்... அவர் சொல்லி வாய் மூடுமுன்னர் சரோசா குறுக்கிட்டாள்.

'அண்ணை அப்படிச் செய்து போடாதையுங்கோ. எங்களுக்கு இந்த வீடே போதும்... உங்களோட இருக்கிறது எங்களுக்குத் தைரியத்தையும் பாதுகாப்பையும் கொடுக்குது... அவள் கரத்தில் தேநீர் தம்பளருடன் வந்தாள். அவரிடம் கனிவோடு நீட்டினாள்.

'தங்கச்சி: குறைநினைக்கக் கூடாது. நான் தேத்தண்ணி: கோப்பி குடிக்கிறதில்லை. வீட்டில மனிசி மற்றவை எல்லாரும்

குடிப்பினம். நான் குடிக்கிறதில்லை. மாலையில என்ர வீட்டுப் பசுவில் நானே கறந்து காய்ச்சிப் பால் குடிப்பன். மத்தியானத்தில் மோர்... அவ்வளவுதான்.

'அதிலையொண்டுமில்லை... அண்ணை

'தேவையானவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்குங்கோ. பிரச்சனை ரெண்டு மூண்டு மாதத்தில தீராப் போவதில்லை. டேய்: சிவா உனக்கு ஏதாவது உதவி தேவை யெண்டால் கூசாமல் கேள். உனக்கு இடம் காணாவிட்டால் முன்னால சின்னதாக ஒரு தலைவாசல் இணக்குவம்...

'இப்ப இது போதும் பொன்னு...

'உன்னோட வந்த இராசரத்தினம் குடும்பமும் நான் எடுத்துக் கொடுத்த இடத்திலேயே இருக்கலாம். அதுவும் இப்படி ஒரு சின்னக் குடிசைதான். பெரிய வளவு... தனிக் குடிசை அதுதான் பார்க்கிறன். இராசரத்தினம் வந்திட்டால் பயமில்லை. இன்றைக்குச் சாவகச்சேரிக் குப் போய் பெயர் கொடுக்கச் சொன்னனான். அங்க காணாமல் போனவர்கள் பதிவு செய்யினம். கனபேர் திக்குத்திக்காய் பிரிந்து வந்திட்டினம். பெயர் கொடுத்தால் விலாசம் எழுதிவிட்டால் பார்த்து வரலாம். வசந்தனிட்ட சொன்னனான். போய்ப் பதியச் சொல்லி...

'எங்களால உனக்குச் சரியான கஷ்டமடா...

'டேய் சிவா: இனிமேல் இப்படி அடிக்கடி சொல்லாதை. நான் உனக்கு நல்ல வசதிசெய்து தரவில்ல என்று கவலைப் படுறன். வீட்டிற்குப் பொஞ்சாதியின்ர ஆக்கள் வந்ததில ஒண்டும் செய்யமுடியாது போய்விட்டது. அதுகளும் பாவந்தான்...

அவர்கள் பலதையும் பத்தையும் பேசிக்கொண்டனர். ஆசிரிய கலாசாலை நாட்களை நினைவுபடுத்திக் கொண்ட னர். ஒரு கட்டத் தில் பொன்னுத்துரை: 'டேய் சிவா: நான் உன்ர தங்கம்மாவைக் கண்டன். நல்லா வயது போயிட்டுது. என்று மெதுவாகச் சிரித்தார்.

'சும்மா இரடா பாவி... மனிசிக்குக் கேட்டுவிடப் போகுது.

இருவரும் பெரிதாகச் சிரித்தனர். பெரியவர்களின் சிரிப்பைக் கேட்டபடி மாலதி வெளியில் வந்தாள். பொன்னுத்துரையை நன்றியுடன் பார்த்துச் சிரித்தாள்.

'இவள் தான் உன்ர மூத்ததோ?'

'ஓமோம். பொம்பிளையளில மூத்தவ. மாலதி... கடைசி சுகிர்தா... அது என்னும் எழும்பவில்லை...

'அங்கிளுக்கு எத்தனை பிள்ளைகள்?' என மாலதி கேட்டாள். பொன்னுத்துரையின் முகத்தில் கருமை படர்ந்தது. ஆழ்ந்த துன்பச் சுழிகள் முகத்தில் கோடிட்டன.

'நீங்கள் எல்லாரும் எங்கட பிள்ளையள் தான் மோனை...

மாலதிக்குப் புரிந்துவிட்டது. அவருக்குப் பிள்ளைகள் இல்லை. அவருடைய ஆழ்மனதின் வேதனையை அவள் தூண்டிவிட்டாள்.

'சொறி அங்கிள்...

'பாவாயில்லை அம்மா... அதுகளுக்கெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேணும்... என்று சிரித்தார்.

'மாலதி... என்று சரோசா கண்டிப்புடன் அழைப்பது கேட்கிறது.

'நீங்கள் எல்லாம் இடம் பெயர்ந்து வந்ததில எனக்கு மறைமுகமாக ஒரு சந்தோஷம் சிவா.

சிவசாமி வியப்புடன் அவரை ஏறிட்டுப் பார்த்தார்.

'அதாலதான் எனர வீட்டு முற்றத்தில வளவில இவ்வளவு பிள்ளையள் துள்ளி விளையாடுதுகள். மனிசிக்கும் வலு சந்தோஷம். ஒரு வீட்டிற்கு குழந்தைகள் பெருஞ் செல்வம்தான்...

பொன்னுத்துரை எழுந்திருந்தார். பின் நின்றபடி சிவசாமியைப் பார்த்தார்.

'ஒரு விசயம் சிவா... நாங்க சைவக்காரர்... நீங்கள் அப்படியிருக்கத் தேவையில்லை. புரியுதோ? இது உன்ர வீடு. உன்ர வளவு என்று எண்ணிக்கொள். எந்த மாவில வேணுமென்றாலும் பிள்ளையள் ஆசைதீரப் பிடுங்கித் தின்னலாம். எதை வேணுமென்றாலும் பிடுங்கித் தின்னலாம்...

'நீ சொல்லிவிட்டாய்... இனிப் பாரன் ஒரு மாங்காயும் மரத்தில இருக்காது...

'நல்லாப் பிடுங்கட்டும். மறிக்காதை... இந்த முறை சாவகச்சேரியில மாமரங்களெல்லாம் நல்லாத்தான் காய்ச்சிருக்குது... குரங்குகளிடமிருந்து தப்பினாத் தான்...

புரியாமல் சிவசாமி அவரை நிமிர்ந்து பார்த்தார்.

'எடஎட... நான் பிள்ளைகளைச் சொல்லவில்லை. உண்மையாக் குரங்குகளைத்தான் சொன்னன்.. கொஞ்ச நேரம் பொறுத்துக்கொள். இந்த மாமரங்கள் படப்போகிற பாட்டை. கிளை கிளையாகக் கூட்டம் கூட்டமாக வருவினம்...

'சாவகச்சேரியில குரங்குகளோ?' என்று எல்லாரும் வியந்தனர்.

'இன்னொரு விசயம் என்றார் பொன்னுத்துரை.

'என்ர மனிசி கொஞ்சம் தீட்டுத் துடக்குப் பார்க்கிறவ. இங்க எல்லாரும் அப்படித்தான். அதனால அந்த வேளையில கிணற்றில துலாக்கயிறு பிடித்துத் தண்ணியள்ளாமல் இருந்தால் சரி...

# 8

மூன்று நாட்களாகிவிட்டன. வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அகதி முகாமில் ஏதிலிகளாகப் பெயர்களைப் பதிந்து தங்கத் தொடங்கி மூன்று நாட்களாகிவிட்டன. வகுப்பறையொன்றின் வெளித் திண்ணையில் அமர்ந்திருந்து பார்க்கும் போது பிரதான வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து அள்ளுப் பட்டு வரும் மக்கள் வெள்ளம் இன்னும் வடிந்ததாகத் தெரியவில்லை. இராசதுரை இன்னமும் சுயநிலைக்குத் திரும்பவில்லை.

திண்ணையில் தூணோடு சாய்ந்து அமர்ந்திருக்கும்போது உடல் பதறி நடுங்குகிறது. கரங்கள் வலியெடுக்கின்றன. நவாலியில் குண்டு வீச்சுக்கு மனைவியையும் மூத்தமகளையும் பலி கொடுத்துவிட்டு பரதவிக்கும்போது தென்மராட்சி இடப்பெயர்வு. வயதான தாயைக் கரங்களில் ஏந்தி எடுத்து வரும் போது நாவற்குழிப் பாலத்தில் சனநெரிசலுக்குப் பலிகொடுத்த கொடுமையை இராசதுரையால் மறக்கமுடியவில்லை. சடலத்தைத் தூக்கிக் கொண்டு மூன்று பிள்ளைகளும் தொடர அவன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தான்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி வாசலில் பெரியதொரு கியூ நின்றிருந்தது. பாடசாலையில் அடைக்கலம் புகுவதற்காக அவர்கள் நின்றிருந்தார்கள். இராசதுரையும் அவர்களுடன் நின்றிருந்தான். கரத்தில் பிரேதத்துடன் நின்றிருந்த இராசதுரையை முன்னே போக விட்டனர். பாடசாலை

வாசலில் கதிரையில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்த கிராமசேவகரின் உதவியாளர் செல்வம் நிமிர்ந்து பார்க்காமல் பெயர்களைப் பதிந்து கொண்டிருந்தான்.

'செல்வம்... இன்னமும் எழு குடும்பங்களுக்குத்தான் இங்க இடம் இருக்குது. இப்பவே இருநூற்றியறுபத்தி மூன்றாகிவிட்டது... சமாளிக்க வியலாது... என்றார் அங்கு நின்றிருந்த விதானையார் கணேசவேல்.

'சரி விதானையார்...

செல்வம் தன் முன் நின்ற இராசதுரையை நிமிர்ந்து பார்க்கவில்லை.

'பெயர்...

'இராசதுரை... மூன்று பிள்ளைகள்...செத்துப்போன ஆச்சி... செல்வம் நிமிர்ந்து பார்த்தான்.

'பிள்ளையள் பன்னிரண்டு வயதுக்குள்ளயே?'

'ஓம் தம்பி...

'ஆச்சிக்குச் சுகமில்லையே...

'அவ செத்துப் போனா

'என்ன?' என்றபடி செல்வம் கதிரையிலிருந்து எழுந்திருந்தான். இப்பொழுதுதான் பலர் கவனித்தனர். 'கிழவி மயங்கிக் கிடக்குது என்று நினைச்சன் என்றார் ஒருவர்.

'கெதியா அங்கால கொண்டுபோ... என்று செல்வம் கத்தினான். செல்வத்தின் சத்தம் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த கணேசவேல் விதானையாரின் காதுகளில் விழுந்தது. விரைந்து வந்தார். நிலைமையைப் புரிந்து கொண்டார்.

'செல்வம்... ஏன்ராப்பா கத்துறாய். அந்தாளோடு நிக்கிற பிள்ளையளை உள்ளுக்கை விடு. நான் அந்தாளோடை போய் பிணத்தை எரிச்சுப் போட்டு வாறன்...

கணேசவேல் இராசதுரையின் தோளில் பரிவோடு கரம் பதித்தார். அவர் முன்னே நடக்க இராசதுரை பின்னே நடந்தான். மயானத்தில் தகனம் செய்துவிட்டுப் பாடசாலைக்குத் திரும்பி வந்தபோது மூன்று பிள்ளைகளும் கஞ்சி குடித்துக் கொண்டிருந் தன. அன்று அந்த அகதி முகாமில் எல்லாருக்கும் மதியச் சாப்பாடு கஞ்சிதான். அது அமிர்தமாக

எல்லாருக்கும் இருந்தது.

ஒதுங்குவதற்கு எங்காவது வகுப்பறை கிடைக்குமா என்று இராசதுரை பார்த்தான். பல வகுப்பறைகள் நிரம்பி வழிந்தன. சிலவற்றில் இடம் பிடிக்கப்பட்டுவிட்டதென்பதற்கு அடையாள மாகப் பாய். பெட்சீற் என்பன விரிக்கப்பட்டிருந்தது. அவன் தயங்கி நின்ற வேளையில் உள்ளே இருந்தவர்கள் ஒரே குரலில்: 'அதில ஆக்கள் இருக்கினம். வெளியில போயிட் டினம் என்று உரக்கக் கூறினர். சில வகுப்பறைகளின் வாயில் வேறெவரும் உள்ளே நுழையமுடியாதவாறு வாங்குகளால் அடைக்கப்பட்டு விட்டன. அதற்குள் தமது பொருட்களைப் பரப்பிவிட்டு பரவியிருந்தனர். ஒவ்வொரு குடும்பத்திற்கு ஒவ்வொரு வகுப்பறை. தெரிந்தவர்கள் வந்தால்: 'மச்சாள் இங்க வாருங்கோ. இடம் பிடிச்சிருக்கிறன். 'அனரி இங்க வாருங்கோ. எங்களோட இருக்கலாம். 'மாஸ்ரர் வாருங்கோ... ஒரு மாதிரி சமாளிப்பம்...

இராசதுரைக்குப் பிள்ளைகளோடு படுப்பதற்கு இடம் கிடைப்ப தென்பது குதிரைக் கொம்பாகியது. சிலர் நினைத்திருந்தால் அவனுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் ஒரு சிறு இடம் ஒதுக்கிக் கொடுத்திருக்கலாம்.

அப்படியே வகுப்பறைகளைச் சுற்றி வந்தான். ஒரு ஒதுக்கான மூலையிலிருந்த அறையில் ஒரு பகுதி காலியாக விருந்தது. அதில் மழை நீர் தேங்கி நின்றதால் எவரும் அவ் விடத்தை உரிமை கொண்டாடவில்லை. அவன் அவ்விடத்தில் இருப்போம் என்று நுழைய ஏற்கனவே அந்த அறையின் ஒழுக்கில்லாத பகுதியிலிருந்த நடராசர்: 'தம்பி: அது ஒழுக்கு... என்றார். அவன் திரும்பிப் பார்த்தான். அவரும் மனைவியும் ஒரு பிள்ளையும் அப்பகுதியிலிருந்தனர்.

'பரவாயில்லை.அண்ணை... இங்கேயே இருக்கிறம்...

'தம்பி எவ்விடம்...

'நவாலி...

'ஆற்றை பகுதி?'

இராசதுரைக்கு அவர் விசாரணையின் போக்குப் பிடி பட்டது. தனக்குள் சிரித்துக் கொண்டான். இவ்வளவு அடி பட்டு உதைபட்டு சிங்கள இராணுவத்திற்குப் பயந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வீடு வாசல் காணி பூமி சொத்து சுகம் எல்லாவற்றையும் யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு இப்படி

ஓடிவந்தும் இன்னமும் யாழ்ப்பாணத் தானுக்குப் புத்தி தெளியவில்லை அவன் இரத்தத்தோடு ஊறிப்போன சாதிப்புத்தி இவ்விடத்திலும் எந்தப் பகுதியென்று கேட்க வைக்கிறது. இராசதுரை அவரை எரிச்சலுடன் நிமிர்ந்து பார்த்தான்.

'நீங்கள் எந்தப் பகுதி...?

'நாங்களோ... நடராசா நெஞ்சைச் சற்று நிமிர்த்திக் கொண்டார் போலப்பட்டது.

இராசதுரை ஒவ்வொரு வகுப்பறையாகத் தன் பிள்ளைகளுடன் அலைவதைக் கண்ட கணேசவேல் விதானையார் அவனைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு வந்தார். இருவரினதும் பேச்சு அவர் காதில் விழுந்தது. எரிச்சல் மூண்டது.

'இங்க இப்ப ஆற்றை பகுதியென்று பார்த்துக் கலியாணம் பேசவே வந்தியள்... நான் விதானை சொல்லுறன். சும்மா விசர்க்கதை கதையாமல் இருக்க வேணும்... தம்பி இராசதுரை நீ உள்ள போ. கந்தோரில வந்து இரண்டு சாக்கு வாங்கிக் கொள்... பாயும் தாறன்... பிள்ளையள் களைச்சுப் பயந்து போய் இருக்குதுகள். படுக்க வை...

நடராசா அடங்கிப் போய் மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டார்.

அவற்றை இப்பொழுது நினைத்தாலும் வேதனையாக இருக்கிறது. ஆச்சி செத்த கவலையிலும் இத்தகைய அவமானங்கள் கடும் துயரத்தைத் தந்தன.

மூன்று நாட்களாகி விட்டன.

அந்த அகதி முகாமில் காலை உணவாக நான்கு பேருக்கு ஒரு றாத்தல் பாண் கிடைத்தது. பால் தேநீர் தந்தார்கள். மதியம் அம்மாப்பச்சை அரிசியில் காய்ச்சிய கஞ்சி கிடைத்தது. இன்று எதனங்கள் எடுத்து வந்து சமைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மரக்கறிகள் வாங்கி வந்து விதானையார் போட்டிருக்கிறார். மத்தியானம் சோறு கிடைக்கும். இரவு பாண்.

அவன் நிமிர்ந்து பார்த்தபோது விதானையார் கணேசவேல் அவனிருந்த பக்கமாக வேறு இருவருடன் நடந்து வருவது தெரிகின்றது. அவன் எழுந்து நின்றான்.

'எப்படி இராசதுரை' என்று கணேசவேல் முகமன் விசாரித்தார்.

அவன் வேதனையுடன் சிரித்தான்.

'எங்காவது தனியப் போய் இருக்க உத்தேசமோ'

'இல்லை ஐயா... சின்னப் பிள்ளையள்... மனிசியுமில்லை. ஆச்சியுமில்லை. தனியக் கொண்டுபோய் சமாளிக்க முடியாது. அதுகள் இங்க ஆக்களோட இருந்தால் நான் பகலில போய் எங்கேயாவது கூலி வேலை பார்க்கலாம். எதுக்கும் கையில காசு வேணும் விதானை ஐயா...

அவன் கூறியவற்றை விதானையார் கரிசனையோடு கேட்டுக் கொண்டார்.

'பிள்ளையளைக் கவனமாகப் பார்த்துக்கொள். தண்ணியில கவனம். கண்ட தண்ணியளைக் குடிக்க விடாதை. றம்களில் நிரப்புகிற தண்ணியையே பாவியுங்கள்... மூன்று நாட்களில பாடசாலை நாறி மணக்கத் தொடங்கிவிட்டது. இன்னமும் ஐஞ்சாறு தற்காலிக மலசலகூடங்கள் போட வேணும். ஆணையாளர் உடனடியாகப் போடுவதாகக் கூறி விட்டார். பிள்ளையள் கண்டஇடங்களில் எல்லாம் மலம் கழிக்குதுகள். தாய் தேப்பன் அதுகளை ஒழுங்காகக் கூட்டிக் கொண்டுபோய் விடுகிறதாக வில்லை. அந்தவிடத்திலேயே அப்படியே விட்டுவிடுகுதுகள்... என்று விதானையார் கவலைப்பட்டுக் கொண்டார்.

'தென்மராட்சி கொள்ள முடியாதளவிற்குச் சனம்... எக்கணம் கொள்ளை நோய்கள் வராமலிருக்க வேணும்... என்றார் விதானையாருடன் கூட வந்தவர்.

'சாவகச்சேரி ஆஸ்பத்திரியில ஒரு சிறுவனுக்குக் காலரா வாம். வெள்ளத் தண்ணியை அள்ளிக் குடித்திருக்கிறான்: விடாயில... தப்பாதென்கினம்.

'இன்னும் என்னென்ன வருகுதோ?

அவர்கள் அவ்விடத்தை விட்டகன்றதும் இராசதுரை திண்ணையில் அமர்ந்து கொண்டான். சமையல் செய்பவர்களுக்குச் சென்று உதவ அவன் மனம் விரும்பியது. நூற்றுக் கணக்கான மக்கள் நிரம்பி வழிகின்ற அகதி முகாமில் ஒரு சிலர்தான் சமையலில் ஈடுபட்டிருக்கின்றனர். அகதிகளாகப்

படுத்திருப்பது எங்களது உரிமை சமைத்துப் போடுவது உங்களுடைய கடமை என்று எண்ணிவிட்டார்கள் போலும்.

யாழ்ப்பாணக் கச்சேரியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடம் பெயர்ந்துவிட்டது. மேல்மாடியொன்றில் இயங்கத் தொடங்கிவிட்டது. பல்கலைக்கழகமும் ஒரு வகுப்பறைக் கூடத்தைத் தற்காலிகமாகப் பிடித்துள்ளது. அகதிகளாக இருக்கின்ற மக்களுடன் கச்சேரிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் வருகிற மக்கள் சேர்ந்து அவ்விடம் நல்லூர்த் தேர்த்திருவிழா மாதிரி அலைமோதியது.

வீதிக்கு மருங்காக முன்னர் அமைந்திருந்த றெயிற் பாதைத் தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும் எப்பொழுதோ காணாமல் போய்விட்டன. அந்தப் பாதை அமைந்திருந்த வெற்றிடத்தில் சிறிய கடைகள் ஒன்றனபின் ஒன்றாக முளைக்கத் தொடங்கியிருந்தன. தேநீர்க் கடைகள்; பலசரக்குக் கடைகள்; மருந்துக் கடைகள்; மண்ணெண்ணெய்க் கடைகள்; சைக்கிள் பஞ்சர் ஒட்டும் கடைகள் எனப்பல ஒவ்வொருநாளும் உருவாகின. சிலர் தடிகளால் அடையாள மிட்டு இடங்களைப் பிடித்திருந்தனர். கேட்பவர்களுக்கு இடங்களை இரகசியமாக விலைக்கு கைமாறிக் கொண்டனர்.

தென்னை மரங்களைக் குற்றிகளாக்கிக் கொட்டில்களின் கப்புகளாக்கினர். தென்னை மரங்கள் அரியப்பட்டுக் கூரை மரங்களாகவும்; பலகைகள் வெட்டப்பட்டு மறைப்புக்களாகவும் பயன்படுத்தப்பட்டன. பட்டு நிலத்தில் கிடந்து கறையான் பற்றி அழிந்த தென்னை மரங்களுக்கு வந்த மவுசு'

இராசதுரை அமர்ந்திருந்தான். நாளைக்கு எங்காவது வேலைக்குப் போகவேண்டும். றெயில் பாதையில் கடைகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இலகுவில் வேலை கிடைக்கும் என எண்ணிக்கொண்டான். அகதி முகாமில் ஊற்றுகின்ற கஞ்சியும் பாணும் பிள்ளைகளுக்குப் போதாது. வேறு தேவைகளிருக்கின்றன. கையில் காசு தேவை.

'ஆச்சியின்ர மூன்றிற்கு ஒரு ஐயருக்குக் கடைசி அரிசி சாமானாவது வாங்கிக் கொடுக்கவேண்டும். ஆச்சிக்கு அது பிரியமானது.

அவன் அருகில் மூத்த பையன் அழகன் வந்து நின்றான். ஒன்பது வயது. வயதுக்குரிய உடல் வாகில்லை. இடுப்பில்

அரைக்காற்சட்டை மட்டும் அணிந்திருந்தான். தலை எண்ணெய் காணாமல் பாட்டை பற்றியிருந்தது. உடம்பு அழுக்கேறியிருந்தது. 'நாளைக்குப் பிள்ளைகளை நல்லாக் குளிக்கச் செய்ய வேணும். உடுப்புக்களையும் தோய்த்துப் போட வேண்டும்'.

'அப்பா..

அவன் நிமிர்ந்து மகனைப் பார்த்தான்.

'பசிக்குதப்பா...

அவன் விழிகள் கலங்கின. அவன் என்ன கஷ்டப்பட்டாலும் பிள்ளைகளுக்கு நேரத்துக்குச் சாப்பாடு போடுவதற்குத் தவறுவதில்லை. அவனுடைய மனைவி அதில் மிக அக்கறை யாகவிருந்தாள். அவள் அநியாயமாகச் செத்துப் போனதன் பின்னர் ஆச்சி அவ்விடத்தைச் சரிவரப் பிடித்து நிறைவேற்றி வந்தாள். ஷசாய்: நான் பிள்ளையளைக் கவனிக்காமல் இருந்திட்டன்'.

'தம்பி ராசவுக்குப் பசிக்குதாம்... காய்ச்சலும் காயுது...

'அரசி எங்க...'

'தங்கச்சி தம்பிக்குப் பக்கத்தில இருக்கிறா. பக்கத்தில இருந்தவர் ஒரு பனடோல் வாங்கித் தம்பிக்குக் கொடுக்கச் சொன்னார்.

அவன் தன் சேட்டுப் பையைத் தொட்டுப் பார்த்தான். அவனுடைய கடைசிச் சொத்து நூறு ரூபாத் தாள் இருந்தது.

'இரடா அழகு... நான் பணிஸ் வாங்கி வாறன் இப்ப மத்தியானச் சாப்பாடு சோறு கிடைக்கும். பனடோலும் வாங்கி வாறன்... என்று எழுந்து வீதியை நோக்கி நடந்தான். உள்ளிருந்து வெளியில் வருவது பெரும் பாடாக இருந்தது. வாசல்களில் ஒரே சன நெருக்கடி. ஒரு வாசலால் வெளியே விட்டு இன்னொரு வாசலால் உள்ளே விட்டனர்.

கடைகளில் பணிஸ் இல்லை. எங்கு பார்த்தாலும் வாய்ப்பன்தான் சுடச்சுட நிரம்பி வழிந்தது. அதில் நான்கை வாங்கிக்கொண்டு பனடோல் இரண்டையும் வாங்கிக்கொண்டு மீண்டும் வந்தான். பிள்ளைகள் ஆவலுடன் வாய்ப்பன் சரையைப் பறித்துக கொண்டன. இராசுவுக்குக் காய்ச்சல் நெருப்பாகக் கொதித்தது. பனடோலை இரண்டாக உடைத்துக்

கொடுத்தான். ஐந்து வயதுப் பாலனால் அதனை உடனடியாக விழுங்க முடியவில்லை.

'என்ர அப்பனல்ல... விழுங்கு...

வாய்ப்பனைச் சாப்பிட்டுத் தண்ணீர் குடித்தார்கள். அவன் எழுந்து வெளியில் வந்தான். எப்படியிருந்த வாழ்க்கை? ஊரில் கூலிவேலைகள் கிடைக்காது போனதும் சயிக்கிலில் கொடிகாமத் திற்கு வந்து விறகு கட்டி விற்றுப் பிழைத்து வந்தான். வேலியடைப் பதற்கும் கூரை வேய்வதற்கும் சென்ற இராசதுரைக்குப் பல மைல்களுக்கு அப்பாலிருந்து விறகு கட்டிவருவது ஆரம்பத்தில் சிரமமானதாகத்தான் இருந்தது. பிள்ளைகளையும் மனைவியையும் நினைத்ததும் அந்தச் சிரமம் மறைந்துவிட்டது. அவன் மட்டுமா விறகு கட்டி இழுக்கிற தொழிலைச் செய்தான்? எத்தனை பேர்... அறுபது வயதுக் கிழவரிலிருந்து பன்னிரண்டு வயதுச் சிறுவன் வரை விறகும் தென்னை மட்டையும உரிச்ச மட்டையும் ஏற்றி இழுத்தார்கள். கால்கள் கெஞ்சக் கெஞ்ச மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஆயாசத்துடன் விறகு கட்டிச் சயிக்கிலில் இழுத்தார்கள். வயிறு என்ற ஒன்றிற்காக அவர்கள் அல்லற்பட்டார்கள்.

எத்தனைபேர் அதனால் நோயாளியாகி விட்டனர். அவனுக்குத் தெரியத் தக்கதாக மூவர் நடுவழியில் விறகுச் சுமையோடு சயிக்கிளிலிருந்து வீழ்ந்து இறந்திருக் கின்றனர். பட்ட விறகுகளைச் சயிக்கிலில் கட்டி விழக்கி வரும் போது பட்ட விறகுக் கோறைக்குள் முடங்கிக் கிடந்த விரியன் முதுகில் கொத்த: 'விறகுகட்டை குத்துகிறது' என்று அசட்டை செய்து நீலம் பாரித்து நடுவழியில் செத்துப்போன சின்னப்பொடியன் மறக்கக்கூடியவனா?

சாவகச்சேரியில் விறகுகட்டி வியாபாரம் செய்ய மடியாது. ஒவ்வொரு வளவிலும் குவிந்து கிடக்கின்ற தென்னை பனை மட்டைகளும் கங்குகளும் தென்னம்பாளைகளும் பொச்சு மட்டைகளும் இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு இரண்டு மாதங்களுக்குப் போதுமானவை. வேறு வேலைதான் பார்க்க வேண்டும்.

அவன் அருகில் எவரோ நிற்பது போன்ற நிழலாட்டம். திரும்பிப் பார்த்தான். இளம் வயதுப் பெண்ணொருத்தி நின்றிருந்தாள். அவள் அவனை அடையாளம் கண்டு கொண்டாள் என்பது அவனுக்குப் புரிந்தது. தெரிந்த முகம். நல்லாகத் தெரிந்த முகம்... யார்? இந்தப் பெண் யார்?

'என்ன தெரியாதவள் மாதிரிப் பாக்கிறியள்...'

அந்தக் குரல் நினைவு வந்துவிட்டது.

'நீ தையல் எல்லோ? பாக்கியமக்காவின்ர மூத்தமோள் தையல் என்ன?'

'அப்பாடா... என்றாள் அவள்; 'நான் உங்களைப் பாத்தவுடன் அடையாளம் கண்டிட்டன். ஆறேழு வரியமாகுது நாங்கள் ஒருத்தரையொருத்தர் சந்தித்து... பக்கத்துப் பக்கத்து வீட்டில இருந்தம். ஒண்டா விளையாடினம். இப்ப சந்திக்கிறம்...

'நீ சுன்னாகத்தில கலியாணமாகிப் போனது நினைவிருக் குது. இங்கயா இருக்கிறியள்?' என்று இராசதுரை கேட்டான். அவள் முகம் வாடியிருந்தது. முகத்தில் ஏதோ குறைந்தது. களையிழந்து இருந்தாள்.

'இங்கதான் இருக்கிறன்... அவர் மல்லாகம் சந்தியில சுடப்பட்டு இறந்திட்டார்... நான் தனிய... பாக்கியம் ஆச்சியும் செத்திட்டா... புறப்பட்ட ஆக்களோட இங்க ஓடி வந்திருக் கிறன்... உங்கட மனிசியும் ஒரு பிள்ளையும் நவாலிக் குண்டு வீச்சில செத்துப் போனதாக அறிந்தன். எல்லாற்றை விதியும் அவலமாகி விட்டது. எல்லாம் அவச்சாவாகி... அவள் விழிகள் கண்ணீரைச் சொரிந்தன. அவள் அவனைப்பற்றி அறிந்திருக் கிறாள். அவன் தான் தான் தன் குடும்பம் என்றிருந்திட்டான்.

'ஆச்சியும் இங்க வரேக்க செத்துப் போயிட்டா...

'தெரியும்... என்றாள் தையல். சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு. 'உங்களுக்கு எத்தனை பிள்ளையள்?'

'நாலு... ஒன்று குண்டுவீச்சில செத்துப் போச்சுது. இப்ப மூன்று. அங்க பார் இருக்குதுகள்... சின்னவனுக்குக் காய்ச்சல்... படுத்திருக்கிறான்.

அவள் வகுப்பறையைத் திரும்பிப் பார்த்தாள். இராசு பாயில் முடங்கிக் கிடந்தான். அழகனும் அரசியும் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். தையல் உள்ளே நுழைந்து படுத்திருந்த ராசுவின் நெற்றியில் கரம் வைத்துப் பார்த்தாள். நெருப்பாகக் கொதித்தது.

'ஐயோ... எப்படிக் கொதிக்குது?... ஆஸ்பத்திரிக்குக்

கொண்டு போயிருக்கலாமே என்று தையல் பதறியபோதுதான் இராசதுரைக்குப் பிள்ளையின் சுகயீனத்தின் தாக்கம் உறைத்தது.

'பனடோல் கொடுத்தனான்...

'பெரிய பனடோல்... உடனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்க் காட்டுவம்... அவள் அவன் பதிலை எதிர்பாராமல் குழந்தையை அப்படியே வாரித் தூக்கிக் கொண்டாள்.

'வாங்கோ... ஆஸ்பத்திரி கிட்டடியிலதான். காட்டி வருவம்... அவன் அனுமதியையும் எதிர்பார்க்காமல் அவள் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு திண்ணையை விட்டிறங்க: 'நீங்கள் இங்க இருங்கோ. தம்பிக்கு மருந்து வாங்கிக் கொண்டு வாறம்... என்றபடி இராசதுரையும் பின்தொடர்ந்தான்.

மூன்று நாட்கள் இராசு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றான். அவன் அருகில் கூடவே இருந்து தையல் கண்விழித்துப் பார்த்திருந்தும் நான்காம் நாள் அதிகாலை இராசு செத்துப் போனான்.

'செப்ரிசீமியா...

இராசதுரைக்கு அழுவதற்குக் கண்ணீர் இல்லை.

# 9

சாவகச்சேரி நகரம் சனத்திரளால் நிரம்பி வழிந்தது. பாதசாரிகள் எவரும் ஒருவருடன் ஒருவர் முட்டாது நடந்துவிட முடியாது. வீதிகளில் சயிக்கில்களும் மோட்டார் சயிக்கில்களும் வாகனங்களும் ஊர்ந்தன. வீதியொழுங்கைப் பேணுவதில் காவல் துறையினர் வெகு சிரமப்பட்டனர். கவலையும் கோபமும் நிறைந்து கிடந்ததால் மக்கள் எல்லாரும் எரிச்சல்பட்டனர். துன்பத்தின் கரியரேகைகள் எல்லார் முகத்திலும் கோடிட்டிருந்தது.

சாவகச்சேரிச் சந்தை சாமான்கள் வாங்கும் மக்களால் நிரம்பிக் கிடக்கின்றது. ஐந்தாறு பேருடன் ஈயோட்டும் கடைகளெல்லாம் வியாபாரத்தால் களைகட்டியிருந்தன. தேவையான பொருட்கள் கிடைக்கவில்லை. கிடைத்த பொருட்கள் சாதாரண மக்களால் வாங்கும் விலையில் இல்லை. சிலபொருட்கள் விற்பனைக்குச் சாக்கில் இடப்பட்டவுடனேயே விற்றுத் தீர்ந்தன.

நகுலன் தன் சயிக்கிலை உருட்டிக்கொண்டு சாவகச்சேரி நகரத்தில் மெதுவாக நடந்து வந்தான். சயிக்கிலை உருட்டிக் கொண்டு முன்னேறுவதே பெரும் சங்கடமாகவிருந்தது. அவன் முன்னர் சாவகச்சேரிக்கு வந்திருக்கிறான். இப்படிச் சனம் அலை மோதியது கிடையாது. பிரதான வீதியே கனகச்சிதமான மக்கள் நடமாட்டத்துடன் அழகாகவும் சுத்தமாகவும் காணப்படும். இன்று வலிகாமத்து மக்கள் அனைவரும் இங்கு இராணுவத்திற்குப் பயந்து இடம் பெயர்ந்துவிட்டதால்

நடக்கவும் இடமின்றிச் சாவகச்சேரி திணறியது.

சந்தைக்குள் நுழைந்தான். நுழைவாயிலில் சயிக்கிளை விட்டுப் பூட்டிவிட்டு உள்ளே சென்றான். பொருட்கள் வாங்கும் எண்ணத்தைவிட வேடிக்கை பார்க்கும் உணர்வே அவனுக்கு மேலோங்கியிருந்தது. காய்கறிகள், பற்றறிகள், சுருட்டுகள், சவர்க்காரங்கள், பனடோல்கள், பழவகைகள் என ஒரு ஒழுங்கு முறையின்றி எல்லாச் சாமான்களும் எல்லாவிடங்களிலும் காணப்பட்டன.

'தம்பி: சன்லைபிற் என்ன விலை...'

'இருபது ரூபா...

'லக்ஸ்...

'அதுவும் இருபதுதான்... இண்டைக்குத்தான் சவர்க்காரம் ஐந்து ரூபா விலை குறைஞ்சிருக்குது...

'கத்தரிக்காய் விலை...

'நூறு கிராம் பத்து ரூபா..

'அம்மாடி ஒரு கிலோ இறைச்சி வாங்கலாம்...

'அதுவும் இருநூறு ரூபாவாம்...

'முட்டை...

'பதினெட்டு ரூபா...

'கோழியோடயோ' என்று ஒருவர் எரிச்சலுடன் கேட்டார்.

'யாழ்ப்பாணத்துச் சனம் இங்க வந்துவிட்டதால இருந்த சாமான்களெல்லாம் விலை கூடிவிட்டுது. இனிச் சீவித்த மாதிரிதான்... ஒரு பெண் நியாயமாகத் தன்னுடன் வந்த பெண்ணிடம் குறைப்பட்டுக்கொண்டாள். சற்று முன்தான் வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த ஐந்து தேங்காய்களைச் சந்தையில் இருபத்தைந்து ரூபாய்ப்படி விற்பனை செய்திருந்தாள். நான்கு ரூபாவிற்கு மேல் விலைபோகாத தேங்காய் யாழ்ப்பாணத்து மக்களின் இடப் பெயர்வின் பின்னர் இருபத்தைந்தாகியிருப்பதை மறைத்துவிட்டாள்.

நகுலன் நடக்கும் வியாபாரத்தையும் வாக்கு வாதங்களையும் கேட்டபடி நடந்தான். ஓரிடத்தில் பனடோல் பெட்டிகள் குவிக்கப்பட்டிருந்தன. ஒரு காட் வாங்கி வைத்திருந்தால்

நல்லது போலப்பட்டது.

'ஒரு காட் என்ன விலை?' என்று விசாரித்தான்.

'முப்பத்தைந்து ரூபா...'

'ஏன் இந்த விலை... பத்து ரூபாதானே?'

வியாபாரி அவனை ஏளனமாகப் பார்த்தான். பின்னர் 'அது கொழும்பில தம்பி' என்று சிரித்தான்.

நகுலன் பனடோல் வாங்குகின்ற எண்ணத்தைக் கைவிட்டான்.

'சனம் என்ன கஷ்டப்படப் போகுதோ...' என்று எண்ணமிட்ட படி நடந்தான். நவீன சந்தை விறாந்தையில் ஏறிய போது ஒலிபெருக்கி காணாமல் போனவர்கள் பெயர்களைக் கூறித் தகவல் விசாரித்துக் கொண்டிருந்தது.

'கோண்டாவில் பத்மாவதியும் பிள்ளைகளும் தந்தை வடிவேலுவைத் தேடுகிறார்கள்...

'ஒற்றைக் கரத்தை வண்டிலில் தன் சாமான்களை ஏற்றிவிட்டுக் கூடவே நடந்துவந்த இராஜகோபால் மாஸ்ரர் வண்டிலைத் தவறவிட்டுவிட்டார். வண்டில்காரர் தேடப்படுகிறார்...

'நீர்வேலிச் சண்முகராசா தன் குடும்பத்தினரைத் தேடுகிறார்.

'பத்து வயதுச் சிறுவன் ஒருவன் சற்குணம் என்ற பெயரைக் கொண்டவன் கூடவந்த தமக்கையைத் தேடுகிறான்...

நகுலன் சற்று நேரம் தரித்து நின்று அவற்றினைக் கேட்டான். இடையில் வேறொரு வகையான அறிவித்தல் ஒலிபரப்பாகியது.

'சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கச்சேரி இயங்கத் தொடங்கிவிட்டது. கச்சேரி அலுவலர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை தவறாது அங்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நகுலன் சந்தை வெளிவாயிலை நோக்கி நகர முயன்ற போது ஒலிபரப்பாகிய செய்தி அவனைச் சற்றுத் தயங்க வைத்தது.

'தாவடியைச் சேர்ந்த இராசரத்தினம் ஆசிரியர் தனது குடும்பத்தாரைத் தேடுகிறார். அவர்கள் இருக்குமிடம் தெரிந்தவர்கள்...

ஒலிபரப்பு முடிவதற்கு முன்னர் அவன் செய்தி ஒலிபரப்பாகும் சந்தையின் மேல்மாடியை நோக்கி விழுந்தடித்து விரைந்தான். எதிரில் வந்தவர்களைத் தள்ளி மோதியபடி விரைந்து படியேறினான்.

'பார்த்தடா தம்பி... ஆக்கள் வாறது தெரியவில்லையே...'

அவன் அவர்களைக் கவனிக்கும் நிலையில் இல்லை. ஒலிபரப்பு அலுவலகத்திற்கு ஓடி வந்தான்.

'இராசரத்தினம் மாஸ்ரர் ஆர்...' மேல்மூச்சு வாங்கியது.

'அது நான்தான் தம்பி... என்று ஒருவர் முன்வந்தார்.

'நீங்கள் சுகந்தியின்ர அப்பாவே?'

'ஓம்... அவர் கண்கள் மகிழ்வால் விரிந்தன.

'வசந்தன்ர அப்பா...

'ஓமடா பொடி.... அவை எங்க இப்ப இருக்கினம்.

'நான் சிவசாமி மாஸ்ரற்றை மகன். அவயள் எங்களோட தான் இங்க வந்தவை. இப்ப மட்டுவிலில் எங்கட வீட்டிற்குப் பக்கத்தில இருக்கினம்... வாருங்கோ. கூட்டிக்கொண்டு போறன்...

தொலைந்து போன அருஞ்செல்வம் மீண்டும் கிடைத்த மகிழ்ச்சியில் இராசரத்தினம் இருந்தார்.

'என்ர வயித்தில பாலை வார்த்தாய் தம்பி...

இருவரும் மாடியைவிட்டுக் கீழிறங்கி வந்தார்கள்.

'தம்பி எதில வந்தனி...

'சயிக்கிலில... நீங்கள்...

'சயிக்கிலிலதான்... பெற்றல்செட்டடியில மில்லில விட்டு விட்டு வந்தனான்... தெரிந்தவை. நீர் எங்க விட்டனீர்...'

'வெளியில... பூட்டிவிட்டனான்... அந்த பக்கத்தில தான்...

நூற்றுக்கணக்கான சயிக்கில்கள் வரிசையாக நின்றிருந்தன. ஆனால் நகுலனின் சயிக்கில மட்டும் விட்ட இடத்தில் காணவில்லை.

'ஐயோ... என்றான் நகுலன்: 'சயிக்கில யாரோ களவெடுத்திட்டான்கள்.' என்று விரிட்டான்.

'எங்கயாவது மாறியிருக்கும் பார் தம்பி...

நகுலன் பதற்றத்துடன் அங்குமிங்கும் ஓடிஓடிப் பார்த்தான். நிச்சயமாகத் தெரிந்தது களவு போய்விட்ட தென்பது. இடம் பெயர்ந்து அல்லற்பட்டு வந்தவிடத்தில் இப்படியும் ஒரு இழப்பா' கஷ்டங்கள் கூடக்கூடக் களவுகள் அதிகரிக்கத்தான் செய்யும். மானிட ஒழுக்கம் அழிந்து கொண்டே போகுமோ?

'வறுமை கூடிவிட்டது... என்றார் இராசரத்தினம்: 'குற்றங்களுக்குத் தாய் வறுமைதான் தம்பி...

நகுலன் விழிகளில் நீர்கோர்க்க அவரைப் பார்த்தான். அவர் அவன் தோளில் பரிவோடு கரம் வைத்தார்.

'வா தம்பி... காவல்துறையில் பதிவு செய்திட்டுப் போவம்...

அவர்கள் வருவதை முதலில் கண்டவள் சுகந்தி. மகிழ்ச்சியால் அவளுக்கு வார்த்தைகளே வரவில்லை. சில கணங்கள் தந்தையைக் கண்டதும் திக்குமுக்காடிப் போனாள்.

'அம்மா... இங்க ஓடி வாங்கோ...

'என்ன என்ன!... என்று பதறியபடி சரஸ்வதி திண்ணையை விட்டிறங்கி முற்றத்துக்கு வந்தாள்.

'அப்பா... வாறார்... நகுலன்தான் கூட்டி வாறார்...

அவர்களுடைய வீடு களைகட்டிவிட்டது. இராசரத்தினம் மனைவியையும் மகளையும் பாசத்தோடு பார்த்தார். சுகந்தியைத் தன்னுடன் இழுத்து அணைத்துத் தலையைக் கோதிவிட்டார்.

'பிள்ளை நல்லா கறுத்துப் போச்சுது...

வசந்தன் அடி வளவிற்குள்ளிருந்து வந்தான்

'அப்பா... எப்படிக் கண்டுபிடிச்சியள்?'

'தம்பி என்னைக் காணாவிட்டால் நான் உங்களை இன்னமும் தேடி இருப்பன்... என்றார் இராசரத்தினம் நகுலனைப் பார்த்து.

'அவயள் இல்லாவிட்டால் நாங்கள் எங்க பாதவித்திருப் பம்? சிவசாமி அண்ணை தான் வரேக்க எங்களுக்குப் பெரிய உதவி என்றாள் சரஸ்வதி குரலில் நன்றி கொப்பளித்தது.

'அப்ப நான் வாறன்.. என்றான் நகுலன்.

'இருங்கோ தேத்தண்ணி ஊத்தி வாறன்... என்றபடி சுகந்தி உள்ளே போனாள். நகுலன் ஒருகணம் அவள் திரும்பிச் செல்கின்ற அழகைப் பார்த்தான். தந்தையைப் போல அவள் மாநிறம்தான். மெலிந்து உயர்ந்து கம்பீரமாக இருந்தாள். ஒடுங்கிய முகத்தில் சற்று முன்னோக்கி எழுந்திருந்த மூக்கு அவளுக்கு வித்தியாசமான ஒரு கவர்ச்சியைத் தருவதாக நகுலன் எண்ணிக் கொண்டான். சீராக வாராமல் அள்ளிக் கூந்தலை உயர்த்திக் கொண்டை இட்டிருந்தாள். அவள் குனிந்து திண்ணையில் ஏறியபோது கூரைத்தாள்வாரம் கொண்டையைத் தட்டி விட்டது. குலைந்த கூந்தல் பின்னால் படர்ந்தபோது அதன் அடர்த்தியும் நீளமும் நகுலனை ஒருகணம் திக்குமுக்காடவைத்தது.

'என்னால தம்பி தன்ர சயிக்கிலையும் களவு கொடுத்திட்டுது. பாவம்.. என்று இராசரத்தினம் கூறியபோது அவனுக்குச் சுயநினைவு வந்தது. தான் சுகந்தியை அவதானித்ததைக் கவனித்திருப்பாரோ என்ற கவலையும் வந்தது.

'அதுக்கு நீங்கள் காரணமல்ல... என்றான் நகுலன்.

'என்ன நகுல்; சயிக்கிலைத் தொலைத்துவிட்டியா? என்ற படி வசந்தன் அவன் அருகில் வந்தான். அவன் பரிதாபமாகத் தலையை ஆட்டினான். அவர்கள் திண்ணையில் சுகந்தி விரித்துவிட்ட பாயில் அமர்ந்துகொண்டனர். பாயில் இருக்கும்போது இராசரத்தினம்: 'நாங்க பழைய நிலைக்குப் பின்தள்ளப்பட்டு விட்டம்... என்றார் துயரத்துடன்.

சுகந்தி இரு தம்ளர்களைக் கையில் எடுத்துவந்து பரிமாறினாள்: ' ஒன்றாக எடுத்துவர ரே இல்லை...

'எல்லாவற்றையும் ஒரு நாளில இழந்திட்டம்... பொடியள் இப்படிப் பெரியதொரு தியாகத்தைச் செய்யும்படி யாழ்ப்பாண மக்களைக் கேட்டிருக்கக் கூடாது...

'எதைச் சொல்லிறியள் அப்பா? என்று சுகந்தி

வினவினாள்.

'வீடு வாசல் சொத்துப்பத்து எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு ஓடி வரும்படி...

சுகந்தியின் முகம் சற்று மாறுதலடைந்தது.

'போராட்டம் என்றால் அப்படித்தான்: அப்பா...

'எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒட்டாண்டியாகிப் பிச்சை எடுப்பதோ: எங்கட மண்ணை விட்டிட்டு எங்கட பாரம்பரிய நிலத்தை விட்டிட்டு ராவோடுராவாக ஓடி வந்திருக்கிறம். யாழ்ப்பாணத்தை இழந்த பிறகு ஒரு போராட்டம் வேணுமோ: இனி இழக்க என்ன இருக்கிறது...'

'ஆனால் பெறுவதற்கு எவ்வளவோ இருக்கிறது... என்று சுகந்தி சிரித்தாள்: 'உலகத்தில இப்படித் தியாகங்கள் செய்து போராடி வருகின்ற இளைஞர்கள் எங்குமில்லை. அவர்கள் செய்கின்ற தியாகங்களை மதிக்காமல் எங்களுக்கு ஏற்பட்ட தற்காலிக இழப்புக்களைப் பெரிதாகச் சொல்லுறியள்.

இராசரத்தினம் கோபத்துடன் ம்களைப் பார்த்தார்.

'விடுங்கோ கதையை... றோட்டில நிக்கிறம். விசர்க்கதை கதைக்கிறியள். தேப்பனும் மோளும் இதுபற்றிக் கதைக்க வெளிக்கிட்டியள் என்றால் ஓயமாட்டியள்.

நகுலனுக்குச் சுகந்தியை நினைக்க வியப்பாகவிருக்கிறது. என்றாலும் அவளோடு ஒத்துப்போக அவனால் முடியவில்லை. அழிந்து போய்க் கொண்டிருக்கும் நாடு. நாளாந்தம் அகதிகளாகிக் கொண்டிருக்கும் மக்கள். சிதைந்து அழியும் சொத்துக்கள். மணிக்கு மணி அவமாகச் செத்துக் கோண்டிருக்கும் மக்கள். போராட்டத்திற்கென்று தமிழ் மக்கள் கொடுத்தவிலை மிக அதிகம்.

'நான் வாறன்... என்று நகுலன் எழுந்தான்.

'வசந்தன்: தம்பியை உன்ர சயிக்கிலிலை கொண்டுபோய் விட்டுவிட்டு வாரும்...

'இல்லை அங்கிள்... பக்கத்திலைதான் நாங்கள் இருக்கிறம். பொன்னுத்துரை மாஸ்ரற்றை வீடு... நடந்தே போயிடுறன்...

'நானும் உன்னோட கூட வாறன்... என்றபடி வசந்தன்

எழுந்து நடந்தான். அவர்கள் இருவரும் ஒழுங்கையில் ஏறினார்கள்.

ஒழுங்கை கலகலப்பாகவிருக்கிறது. இப்படி முன்னர் சனப்புழக்கம் இருந்திருக்காது. பெரிய காணிகள். தென்னை யையும் ஏனைய பிரயோசனமான மரங்களையும் கொண்டிருந்தன.

'உம்முட தங்கச்சி சரியான சப்போட்டர் போல... என்று நகுலன் வசந்தனிடம் கேட்கிறான்.

'ஓமோம்... நானும் அப்படித்தான் இருந்தன். ஆனா இந்த இடப் பெயர்வோடு எனது கருத்து மாறிவிட்டது. இடம் பெயரத் தூண்டியது சரியான முடிவாக எனக்குத் தெரிய வில்லை. யாழ்ப்பாண மக்களுக்கு 'ஓரடி நிலத்தைக்கூட ஆமியிடம் விடமாட்டம் இனி' என்று நம்பிக்கை கூறி போராட்ட நிதி சேகரித்துவிட்டு கடைசி நேரத்தில் அம்போ வென்று ஓட வைச்சிட்டினம்.

'இது ஒரு போராட்டத் தந்திரமென்று ஏன் நீர் நினைக்கவில்லை...

'தங்கச்சி சொல்லுற மாதிரி ஒரு தற்காலிகப் பின்ன டைவு என்கிறீரோ? தங்கச்சியோட கொஞ்ச நேரம் கதைச்சீ ரெண்டால் தப்பமாட்டீர். நீரும் அவள் சொல்வதை நம்பத் தொடங்கிவிடுவீர் என்று வசந்தன் சிரித்தான்.

'அவ இயக்கத்தில இருந்தவவே?...

வசந்தன் நகுலனை ஏக்கத்தோடு திரும்பிப் பார்த்தான். முகத்தில் கவலை நிறைந்தது. எதையோ சொல்லத் தயங்குவது தெரிந்தது. தன்னைச் சமாளித்துக் கொண்டவனாக: 'இல்லை என்றான்.

அவர்கள் இருவரும் சற்றுநேரம் மௌனமாக நடந்தனர்.

'ஏ.எல். இம்முறை மீண்டும் எடுக்கிறீரா? என்று இருந்தாற்போல நகுலன் கேட்டான்.

'சோதனை நடக்குமெண்டு தெரியவில்லை. நடந்தால் எடுப்பேன். உமக்கு யூனிவேசிற்றி எப்ப தொடங்கும்...

நகுலன் பெரிதாகச் சிரித்தான். பல்கலைக்கழகம் சிதறிக்

குலைந்துவிட்டது. ஒரு பகுதியினர் கிளிநொச்சிக்கு ஓடிவிட்டனர். ஒரு பகுதியினர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஒண்டிக் கொண்டுள்ளனர். ஆவணங்கள் யாழ்ப்பாணத்தில் அகப்பட்டு விட்டனவாம். பல்கலைக்கழகம் எப்பொழுது தொடங்குமென்று தெரியவில்லை. முப்பது முப்பத்திரண்டு வயதுகளில் பட்டதாரிகளாக வெளிவருகின்றார்கள். எங்கு பிழை' யாரில் பிழை'

'ஏன் சிரிக்கிறீர்'

'ஒண்டுமில்லை. பல்கலைக்கழக அனுமதியை நினைத்துக் கொண்டேன். யாழ்ப்பாணத்துக்கு நாங்க எப்ப திரும்பிப் போகிறோமோ அப்பதான் அதைப்பற்றிச் சிந்திக்க வேணும்...

'யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிப் போவமெண்டு நினைக்கிறீரா?

வானத்தில் நீர்க்காகங்கள் இரண்டு பறக்கின்ற ஒலி எழுகிறது. நகுலன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். வானம் நீலம் பூர்த்துக் கிடக்கிறது. சுள்ளென வெயில் தங்குதடையின்றிக் கொளுத்துகிறது. ஒழுங்கையில் வேலிமரங்கள் சடைத்து வளர்ந்திருந்ததால் வெப்பம் தெரியவில்லை.

'எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

'நாங்க விட்டிட்டு வந்த இடங்களுக்குத் திரும்பிப் போனதாக அண்மைக்கால வரலாறில்லை. காங்கேசன்துறைப் பக்கம் காடடர்ந்து தரைமட்டமாகிவிட்டதாம். தீவுகளில் ஏராளமான வீடுகள் சிதிலமாகிவிட்டனவாம். பெருகிவிட்ட மாடுகள் வீடுகளுக்குள் புகுந்து தங்குதுகளாம்...

'அந்த உதாரணங்கள் வேறை' வசந்தன். என்றான் நகுலன்.

'இழந்தவற்றை நாங்கள் மீண்டும் பெறவில்லை என்று சொல்ல வந்தன். இப்ப கடைசியாக யாழ்ப்பாணத்தையும இழந்திட்டம்.

'யாழ்ப்பாணத்திற்கு நிச்சயமாகப் போவம். இங்கு இடம் பெயர்ந்து வந்திருக்கும் இலட்சக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் இடங்களுக்குத் திரும்பிப் போகவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.

'ஆமி பிடிச்சிருக்கின்ற...

'இன்னமும் ஆமி யாழ்ப்பாணத்திற்கு வரவில்லை கோப்பாயில் நிற்பதாகக் கேள்வி. இப்பவும் யாழ்ப்பாணத்திற்குப் பலர் போய்ச் சாமான்கள் எற்றி வருகினமாம்... ஆற்றை வீட்டுச் சாமான்களை என்பதுதான் கேள்வி. சமூக விரோதக் கும்பல்கள் கூடிவிட்டன. கைதடியில் நேற்று நான் அவதானித்தேன். சயிக்கில்களில் ஏற்றி வருகின்ற பொருட்கள் எற்றி வருபவர்களுக்குச் சொந்தமாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை...

'சரி அதைவிடும்... யாழ்ப்பாணம் போவமென்று நினைக்கிறியள். ஆமி பிடித்துவிட்டு வரச்சொன்னால் இங்கு தஞ்சம் புகுந்துள்ள மக்கள் அங்கு செல்வார்களா?...

'நிச்சயமாகச் செல்வார்கள். மனித வாழ்வின் அத்திவாரம் மண். வீடு... பிறந்த இடம்... நாம் திரிந்த சுற்றாடல். அங்கிருந்து இங்கு வந்தபின்னர் தான் எனக்கு என்ர இடத்தின் மகிமை தெரிகிறது. சொர்க்கம் என்பது எங்குமில்லை. பிறந்தவிடத்தில்தான் இருக்கிறது. நகுலனின் விழிகளில் இனந் தெரியாத மலர்ச்சி கோடிட்டது. கலட்டி அம்மன் கோயில் சுற்றாடலும் ஒழுங்கைகளும் நரியன் குண்டும் நினைவில் சதிரிட்டன. மாரி மழை வெள்ளம் நிரம்பி முட்டிய நரியன் குண்டில் சத்தமிடுகின்ற மாரித் தவளைகளின் ஒலி இனிமையாகக் காதில் ஒலிப்பதாகப் பட்டது.

'சுதந்திரத்திலும் பார்க்க மண் பெரிசாகிவிட்டது...

'அப்படியில்லை. மண்ணிலிருந்து கொண்டுதான் சுதந்திரம் பற்றிப் பேசவும் போராடவும் வேண்டும்...

அவர்கள் நீண்ட மோனத்தில் ஆழ்ந்தனர். எதுவும் பேசிக் கொள்ளவில்லை. வீட்டை நெருங்கியபோது பெருங் கூச்சல் அங்கிருந்து கிளம்பியது. ஷகாய்..கய்..சூய்..' எனக் கூச்சலிட்டபடி குழந்தைகள் பெரியவர்களெல்லாம் வளவுக்குள் கல்லோடும் தடியோடும் ஓடுவது தெரிகிறது. பொன்னுத்துரை அமைதியாகப் பார்த்துச் சிரித்தபடி இருக்க மாலதியிலிருந்து சுகிர்தா வரை எல்லாரும் வளவில் ஓடித்திரிந்தனர். மரக்கிளைகளைப் பார்த்து உறுக்குவதும் கல் வீசுவதுமாக நின்றிருந்தனர்.

வசந்தனும் நகுலனும் வளவுக்குள் ஓடிவந்தனர். இப்படியொரு காட்சி சாவகச்சேரியில் காணலாமென அவர்கள் நினைத்துமிருக்கவில்லை. வன்னிப் பகுதிகள்தான்

இத்தகைய காட்சிக்குரியனவென அவர்கள் எண்ணியிருந்தனர்.

மாக்கிளைகளில் பெருந் திரளாக குரங்குகள் அமர்ந்திருந்தன. மாங்காய்களைப் பற்றிப் பறித்துக் கடிப்பதும் கீழிருந்து கல் வந்ததும் இலேசாக விலகி அமர்வதும் கிளைக்குக் கிளை தாவுவதுமாக அவை இருந்தன. வசந்தன் வியப்புடன் பார்த்தான். எவ்வளவு குரங்குகள்… நரைக் குரங்குகள். பெரிய தாட்டான் குரங்கொன்று அவனைப் பார்த்துப் பல்லிழித்தது. அவன் ஒரு கல்லைத் தூக்கி வீசுவது போல ஓங்க: அது பொன்னுத்துரையின் ஓட்டுக் கூரைமீது தாவிக் குதித்தது. குதித்த வேகத்தில் கழன்ற ஓடு ஒன்று நிலத்தில் சரிந்தது.

'இந்தச் சனியன்கள் எத்தனை ஓடுகளை நொருக்கி விட்டுதுகள் என்று பொன்னுத்துரை திட்டியபடி எழுந்தார்.

அன்று குரங்குகளும் சற்று வெருட்சியடைந்துவிட்டன. இரண்டு பேர் இருந்த வளவில் அவர்களின் விரட்டலை அலட்சியம் செய்துவிட்டு வயிறு நிரம்பச் சாப்பிட்டு கையிலும் ஒன்றை எடுத்துச் செல்கின்ற அவற்றிற்கு இன்று வளவு நிறையக் குஞ்சானும் குருமானுமாகப் பலர் ஆயுதங்களுடன் அச்சுறுத்துவது வியப்பாக விருந்தது. அதனால் அவை அந்த வளவை விட்டுப் பக்கத்து வளவிற்குள் தாவின. அங்கும் அவற்றைத் துரத்தினார்கள்.

குட்டிகள் தாய்களின் வயிற்றைப் பற்றியபடி இருந்தமையும் தாய் தாவும்போது விழாது இறுகப்பற்றியபடி தாவலுக்கு இசைந்தமையும் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளுக்கு வியப்பைத் தந்தன. எவ்வளவு வேகமாக அவை தாயின் வயிற்றில் பற்றித் தாவின?

திண்ணையில் அமர்ந்த வசந்தன்: 'அப்பா: வந்திட்டார்: ஆன்ரி… என்றான்: 'நகுலன்தான் கூட்டி வந்தவர். பாவம் தன்ர சயிக்கிலைத்தான் தொலைச்சுப் போட்டான்.

'சயிக்கிலையோ? என்று சரோசா கேட்டபடி நகுலனைப் பார்த்தாள்.

'நானென்ன அம்மா… செய்ய… பூட்டித்தான் வைச்சனீ. யாரோ களவாடிட்டான்கள்… காவற் துறையில கொம்பளயின்ற் கொடுத்திருக்கிறன். சயிக்கில் நம்பருமில்லை. தெரியவுமில்லை… இப்ப கழட்டிப் பாட்சாக்கியிருப்பான்கள்… அப்பா கத்தப் போறார்…

'அதுக்கென்ன செய்யிறது.. என்றாள் மாலதி.

'தம்பி வீட்ட என்ன சமையல்?'

'மூன்று நாளாகச் சமையல் இல்லை. பாணையும் வாய்ப் பனையும் வாங்கிச் சமாளித்தம். அப்பா வரவில்லையென்று ஒருவருக்கும் சாப்பாடு பெரிசாகத் தேவைப்படவில்லை. இண்டைக்குச் சமையல் நடக்குது... என்று வசந்தன் சிரித்தான். 'இங்க வந்த சனத்துக்குப் பசிக்கு வாய்ப்பனும் காய்ச்சலுக்குப் பனடோலும்தான் கிடைக்குது...

சரோசாவுக்கு யாழ்ப்பாணத்து வாழ்க்கை நினைவு வந்தது. குத்தரிசி; இடித்த மிளகாய்த்தூள்; வறுத்த அரிசிமா. அரைத்த தோசைமா என வாழ்ந்து பழகிவிட்டார்கள். இன்று கடைத்தூளும் கடைப் பணியாரமுமாக மாற நேர்ந்துவிட்டது.

'ஆமான கறிவைக்க ஒரு சட்டியில்லை...

# 10

**கை**தடி வடக்குப்பக்க வெளியில் கோப்பாய்ப் பக்கமிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் விழுந்து வெடிக்கின்ற சத்தம் மாமரநிழலில் கதிரையில் அமர்ந்திருக்கும் என் காதுச்சவ்வுகளை அதிர வைக்கின்றது. வீட்டிற்குள் சமையலில் ஈடுபட்டிருந்த என் மனைவி வெளியில் பதற்றத்துடன் வந்தாள்.

'என் இதில இருக்கிறியள். ஷெல் அடிக்கிறான்கள். உள்ளுக்கு வந்து இருங்கோவன்...

'ஷெல் வரேக்க வெளியில் நிற்பதுதான் நல்லது. யாழ்ப்பாணத்தில கேட்காத செல்லே' பார்க்காத சடலங்களே'... என்றபடி புத்தகத்தில் மூழ்க முயன்றேன். முடியவில்லை. மனம் ஒரு நிலையிலில்லை. கதிரையில் அமர்ந்தபடி அண்ணாந்து பார்த்தேன். காலை வானம் கருகிக் கிடந்தது. அந்த வளவில் காணப்பட்ட குட்டை மாமரங்கள் சொற்ப காய்களுடன் வறண்டு கிடந்தன. அந்த வீட்டின் பெரியவர் சின்னத்துரை வாய்பேச முடியாதவர். மிக நல்ல குணம் படைத்தவர். மற்றவர்களின் சொத்துக்களில் நாட்டமில்லாதவர். தன் சொத்துக்களில் மிகக் கவனமானவர். காலையில் எழுந்ததும் வளவைச் சுற்றி ஒருதடவை வலம் வருவார். மாமரத்தில் எந்தக் கிளையில் எத்தனை காய்கள் இருக்கின்றனவென்பது அவருக்குத் தெரியும். ஒன்றைக் காணாவிட்டால் சுற்றிவர நிலத்தில் பார்ப்பார். வெம்பி விழுந்திருந்தால்:கொந்தி விழுந்திருந்தால் அதனைத் தூக்கி வந்து காட்டி: 'அநியாயமாகப் போச்சுது... என்பதுபோலச் சைகை பேசிச் சிரிப்பார் அதில் திருப்தி இருக்கும்.

காணாமல் போன காய் நிலத்தில் இருக்காவிட்டால் அவர் முகம் வாடிப்போகும். எவரோ பிடுங்கிவிட்டார்கள்

என்று அனுமானித்துக் கொள்வார். எல்லாரிடமும் விசாரிப்பார் அவருடைய மனைவி ஆச்சி அவருக்கு முற்றிலும் மாறுபட்டவள்.

காலையில் எழுந்ததும் மாடுகளை அவிழ்த்து மேய விட்டுவிட்டுப் பால் போத்தலுடன் எங்களிடம் வருவாள். மனைவி வெளியில் வந்து பால் போத்தலை வாங்கிக் கொள்வாள்.

'இது உங்கட வீடு மாதிரி. வெட்கப்படாமல் இருங்கோ. என்ன தேவையெண்டாலும் என்னட்ட கேளுங்கோ... பின்னேரம் முட்டை கொண்டுவந்து தாரன். வளவில இதரைக் குலையொன்று இடைப்பழம் பழுத்திருக்குது. அவரிட்டைச் சொல்லி விலைக்குத் தரச்சொல்லுறன். தோட்டத்தில காய்கறி நடுறம்...

'ஆச்சி... என்றபடி எனது மூத்தமகள் வந்தாள். ரேகாவிற்கு ஆச்சியையும் தாத்தாவையும் அந்த வீட்டையும் சுற்றாடலையும் மூன்றாண்டுகளாகத் தெரியும். யாழ் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவம் படிக்கின்றமையால் கைதடியிலுள்ள சித்தமருத்துவ பீடத்தில் கல்விகற்று வருகின்றாள். இந்த வீட்டில் கடந்த மூன்றாண்டுகளாக வாடகைக்கு இருந்து வருகிறாள். நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த போது உடனடியாக இந்த வீட்டிற்கே வந்துவிட்டோம். ரேகா உள்வீட்டுப் பிள்ளை.

'என்ன பிள்ளை?

'மாங்காய்...வேணும்...

ஆச்சி வேலியோரத்தில் சார்த்தி வைக்கப்பட்டிருந்த கொக்கைத்தடியை எடுத்து கிட்டவிருந்த மாமரத்தில் ஒரு குலை மாங்காய்களை அறுத்து நிலத்தில் வீழ்த்திவிட்டாள். அவற்றைப் பொறுக்கி மகளிடம் கொடுத்துவிட்டு ஆச்சி வெளியேறிய கையோடு சின்னத்துரை உள்ளேவரச் சரியாக இருந்தது.

'நான் பிடுங்கிக் கொடுத்தனான் என்று ஆச்சி சைகையில் அவருக்குப் புரியவைத்தாள். ஆச்சியின் பேச்சுக்கு மறுபேச்சில்லை. தலையை ஆட்டிச் சம்மதம் தெரிவித்தார்.

உள்ளே வந்த பெரியவர்: 'சாப்பிடுங்கோ... என்றார். மகளை அழைத்துச் சைகையில்: ' இந்த மாங்காய் சரியில்லை

கோடியில நிற்கிற பச்சைதின்னி மாங்காய் நல்லது என்றார். அவர்கள் பேசிக் கொண்டது எனக்கு விளங்கவில்லை. மகள் விளக்கியதும் தான் புரிந்தது. கொக்கைத்தடியைத் தூக்கிக் கொண்டு அவர் பின்வளவிற்குச் சென்று திரும்பி வரும்போது கையில் ஐந்தாறு மாங்காய்களுடன் வந்ததும் நான் அவரைப் பற்றிய தப்பான அபிப்பிராயத்துக்காக வருத்தப்பட்டேன். உப்பும் தூளும் போட்டு வீட்டிலிருந்த அத்தனைபேரும் நறுக்கு நறுக்கென்று சாப்பிடுவதைப் பார்த்து பெரியவர் திருப்தியோடு சிரித்துக் கொண்டார்.

மீண்டும் ஷெல் ஒன்று குத்தப்படுகின்ற சத்தம் எழுகிறது. விழுந்து வெடிக்கின்ற சத்தமும் கேட்கின்றது. யார் மீதோ? எதன் மீதோ?

வலிகாமத்திலிருந்து மக்கள் இடம் பெயரத் தொடங்கிய இரண்டாம் நாள் நான் எனது அலுவலகத்திற்குச் சென்றேன். அலுவலகம் பூட்டப்பட்டு வெறிச்சோடிக்கிடந்தது. காவலாளியையோ வேறு உத்தியோகத்தர்களையோ காணவில்லை. பழைய பூங்காவில் இருந்த விடுதலைப்புலிகளின் காம்ப்பிலிருந்து லொறிகள் பொருட்களுடன் வெளிப்பட்டுச் சாவகச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்தன. கச்சேரிக்கு வந்தேன். அங்கு நிறுத்தப் படிருந்த லொறிகளில் கச்சேரியின் முக்கிய ஆவணங்கள் ஏற்றப் பட்டுக் கொண்டிருந்தன. கச்சேரி நிர்வாக அலுவலர் நின்றிருந்தார்.

'என்ன... அப்படியென்றால் ஏ.ஜி.ஏ. ஒபிஸ் சாமான்களும் ஏற்றத்தான் வேணுமா?' என்று நான் கேட்டேன்.

'அதுபற்றி நீங்கள்தான் முடிவு எடுக்க வேணும். இப்ப பி.டி. தனது பணிமனைச் சாமான்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றுகிறார்.

யாழ்ப்பாணத்தின் நிர்வாக மையமே இடம் பெயரத் தொடங்கி விட்டதைக் காண மனதில் முள் குத்தியது. ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு கச்சேரி வாசலில் ஏறிய போது என்முன் ஒரு மோட்டார் சயிக்கில் வந்து நின்றது. ஆயுதமேந்திய இரு போராளிகள் அதில் இருந்தனர்.

'நீங்களும் ஏ.ஜி.ஏ ஒபிஸ் சாமான்களை ஏற்றத்தான் வேணும். கெதியில ஏற்றிவிடுங்கோ: சேர்.

'இந்த நேரத்தில் லொறிக்கும் ஆட்களுக்கும் நான் எங்க

போவது...

எல்லாரும் தம் உயிர்களைக் கைகளில் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். வாகனங்கள் உச்சக் கூலிக்குத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த வேளையில் என் பணிமனைப் பொருட்களைச் சாவகச்சேரிக்கு ஏற்றியிறக்க எவர் வருவார்?

'எப்படியாவது ஏற்றிச் செல்லத்தான் வேணும்... ஒருவன் சற்றுக் கடும் குரலில் கட்டளையிட்டான்.

'எனக்கு அது சரியாகப்படவில்லை. யுத்தத்தில் என் பணிமனை அழிந்தால் அதை என்னால் தடுக்க முடியாது. இங்கிருந்து ஏற்றிச் சென்று அழிந்தால் அதற்கு நான் பதில் சொல்ல முடியாது என்றேன் நான். நான் கூறியவை அவர்களுக்குத் திருப்தியாகவில்லையென்பது முகங்களில் தெரிந்தது. தங்களின் சொல்லிற்கு நான் முரண்படுவதை அவர்கள் விரும்பவில்லை.

'பின்னர் பிரச்சனைப்படுவியள்...

'அப்படி நீங்கள் சொன்னால் வேறு வழியில்லை. ஏற்றப் பார்க்கிறேன். ஆணையிடக் கற்றுக்கொள்பவன் முதலில் பணிவதற்குப் பழக வேண்டும் என்னையறியாமல் வார்த்தைகள் வெளிவந்துவிட்டன.

அவர்கள் புத்திசாலிகள். நான் சொன்னதன் அர்த்தத் தைப் புரிந்துகொண்டார்கள். அவர்களின் முகபாவம் மாறியது.

'அப்படியில்லை சேர்... சொறி சேர்... தயவு செய்து கூடியவரை அத்தியாவசியமானவற்றை ஏற்றிக்கொண்டு சாவகச்சேரிக்குப் போங்கோ. லொறி தேவையெண்டால் நாங்க ஒழுங்குபடுத்தித் தாறம்... எங்களை உங்களுக்குத் தெரியாதா? இந்த நிலை தவிர்க்கமுடியாதது... இது ஒரு தற்காலிகப் பின்னடைவுதான்... என்றபடி அவர்கள் மோட்டார் சயிக்கிலில் போய்விட்டார்கள்.

நான் வீட்டிற்கு வந்தேன். வீட்டில் அமைதியில்லை. மனைவியும் பிள்ளைகளும் எரிந்து விழுந்தார்கள்.

'அயலட்டையெல்லாம் போயிட்டுது. நாங்க மட்டும் இங்க இருக்கிறம்... ஆமியிட்ட எங்களைப் பலிகொடுக்கத்தான் போறியள்...

வீட்டில் ஒரு கூட்டம் நிரம்பி வழிந்தது.

மனைவி, என் பிள்ளைகள்; மச்சான்; அவனின் மனைவி; பிள்ளைகள், என் பெறாமக்களின் இரண்டு புதல்வர்கள் அரவிந்தன்; சுரேஸ்... எல்லாரும் என்னை எக்கத்துடன் பார்த்தனர். எனக்கு வேறு மார்க்கம் தெரியவில்லை. ஸ்கூட்டர்கள்; சயிக்கில்கள் சுரேசின் மோட்டார்சயிக்கில் என்பனவற்றில் ஏற்றக்கூடியளவு பொருட்களைக் கட்டிக் கொண்டு வீதியில் இறங்கினோம். வீட்டைப் பூட்டிக்கொண்டு வீதியில் நின்றபோது உள்ளே நான் வளர்த்த பூனை பரிதாப மாகக் குரல் தந்தது. எனக்குச் சாப்பாட்டு நேரத்தை அறிவிக் கும் பூனை. நான் சாப்பிடும் நேரங்கள் அதற்குத் தெரியும். வேளை தவறாது காலடியில் வந்துநின்று குரல் கொடுக்கும். கவனிக்காவிடில் கால்களிடையே முட்டி உரசி அழுது அறிவிக்கும்.

நான் பூட்டிய கேற்றைத்திறந்து வீட்டின் கதவைத் திறந்து விட்டேன். அது வெளியில் பாய்ந்து வந்தது. ஒருகணம் அதையும் எடுத்துச் செல்வோமா என்ற எண்ணம். வேண்டாம். நாங்கள் இருக்கவே இடம் சாவகச்சேரியில் கிடைக்குமோ தெரியாது.

வீதியில் நின்றபோது என் வீடு சோகமாக எங்களைப் பார்ப்பது போன்றதொரு உணர்வு என்னுள் வியாபித்தது. நான் ஆசையோடு கட்டியவீடு. அதிலுள்ள ஒவ்வொரு கல்லும் மண்ணும்; கதவும் யன்னலும் எனக்குத் தெரிந்தவை. மனம் கனத்தது.

தென்னை மரங்கள் சோகத்துடன் தலைவிரித்தாடின. மதில் ஓர செம்பரத்தை கிளைகொள்ளாப் பூக்களுடன் சோகத் து டன் அசைந்தது. அந்த வளவின் ஒவ்வொரு மரங்களும் செடிகளும் என்னுடையவை. முழுவதையும் அடங்கா ஆர்வத்துடன் உள் வாங்கிக்கொண்டேன்.

இனி எப்பொழுது காண்போமோ?

இப்படியொரு தியாகத்தைச் செய்யும்படி யாழ்ப்பாண மக்கள் கோரப்பட்டிருக்கக் கூடாது. பிறக்கும்போது கூடவே மாணத்திற் கான கிருமிகளும் இணைந்துகொள்கின்றன. சமுதாயம் தொடங்கும்போதே தன் அழிவுக்கான எதுக்களை யும் கொண்டமைகிறது என ஒரு அறிஞன் கூறினான். எங்களுக்கென ஒரு முடிவெடுக்க எங்களால் முடியாது

போய்விட்டது. உலகில் சிலர் எவப்பிறந்த வர்களாகவும் பலர் பணியப்பிறந்தவர்களாகவும் மாறிவிட்டனர் என்ற அரிஸ்ரோட்டிலின் வார்த்தைகள் நினைவில் சதிரிடுகின்றன. அவற்றின் அர்த்தம் இன்றுதான் புரிகின்றது. பேரினவாதிக ளின் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம். அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்குமென்ற நம்பிக்கை அற்றுப்போவது போல உணர்ந்தேன்.

என் கால்கள் அவ்விடத்தை விட்டு நகர மறுத்தன. என் மனைவி விழிகளில் நீர் சோர என் கரத்தைப்பற்றி இழுத்தாள்.

என் இடத்தைவிட்டு நான் ஏன் செல்லவேண்டும்' என் வீட்டைவிட்டுத் துரத்த எவருக்கு அதிகாரமிருக்கிறது' என் வீட்டில் நிம்மதியாகப் படுத்துறங்க எனக்கு உரிமை இல்லை யென்றால்: என் வீட்டில் என் ஊரில் திரிய எனக்கு உரிமை யில்லையென்றால் அவற்றினை இழப்பதன் மூலம் பெறுகின்ற சுதந்திரம் எனக்குத் தேவையில்லை. என் சுதந்திரத்தின் ஆரம்பம் என் வீடு: என் குடும்பம். அதன் பின்னர்தான் நாடு: மொழி.

கட்டுபலனாகாத சுதந்திரம் என்ற உணர்விற்காக கண்முன் இருக்கின்ற சொர்க்கத்தை இழக்க நான் தயாராகவில்லை. மண்ணைத் தாரை வார்த்துக்கொடுத்துவிட்டுச் சுதந்திரம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. வீட்டுக்கூரையில் பாம்புகள் புகுந்துவிட்டன என்பதற்காக வீட்டை அவற்றிடம் விட்டு விட்டு ஊரைவிட்டு ஓடிவிட முடியாது.

வீடு எங்களுடையது.

மட்டுவிலில் அகதியாக ஒரு வீட்டில் அடைக்கலம் புகுந் திருக்கும் என் அத்தான் இரத்தினத்தின் நினைவு வருகிறது. அவரை அவர் தங்கியிருக்கும் இடத்தில் சந்தித்தேன். சோர்ந்து போயிருந்தார்.

'தம்பி... என் பிள்ளைகளெல்லாம் கனடாவில். அவர்கள் என்னையும் உன் அக்காவையும் ரூபாவையும் அரவிந்தனையும் கனடாவிற்கு வந்துவிடும்படி ஓயாது எழுதினார்கள். இவ்வளவு காலமும் நான் மறுத்துவிட்டேன். நான் இருந்த ஊரையும் வாழ்ந்த வீட்டையும் விட்டு எங்கும் செல்ல நான் விரும்பவில்லை. இந்த மண்ணில் அதுவும் கோம்பயன்மணல் சுடலையில்தான் என்னுடல் தகனம் செய்யப்படவேண்டு

மென்று ஆசைப்பட்டேன். அது கனவாகிவிட்டது. சாவகச்சேரி என்ர தாய்நாடு அல்ல. யாழ்ப்பாணம்கூட என்ர தாய்நாடல்ல. யாழ்ப்பாணத்தில் அம்மன் கோயிலடி தான் என் தாய்நாடு. அதுவே இல்லையென்றாகிவிட்ட பிறகு நாங்கள் சாவகச்சேரியில் இருந்தால் என்ன: கொழும்பில் இருந்தால் என்ன: கனடாவில் இருந்தால் என்ன? எல்லாம் எங்களுக்கு ஒன்றுதான். இப்ப நாங்க முடிவெடுத்திட்டம்... பிள்ளைகளோடு கனடாவிற்குப் போய்விடுவதென்று...

நான் எதுவும் பேசவில்லை. அவர் கூறுவதில் எனக்கு உடன்பாடு.

எனக்கும் அந்த உணர்வு. என் வீட்டில் வளவில் கிராமத்தில் இருக்க முடியாவிட்டால் எங்கிருந்தாலும் அது அந்நிய நாடுதான்.

யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் தென்மராட்சிக்கு இடம் பெயரத் தொடங்கி மூன்றாம் நாள் நாங்கள் வீதியில் இறங்கினோம். மூன்று நாட்களாகியும் சனக்கும்பல் குறையவில்லை. மழை பெய்வதும் நிற்கவில்லை. கொட்டும் மழையில் நாவற்குழி நோக்கி நகர்ந்தோம்.

இன்று நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகிறது. இடப பெயர்வுப் பயணம் எவ்வளவு குரூரமானது? நெரிபட்டோர்: விழுந்தோர்: எழுந்தோர்: மிதிபட்டோர்: அழுதோர்: மயங்கி விழுந்தோர்: நாற்றமெடுக்கும் வார்த்தைகளால் போராளிகளையும் சிங்கள இராணுவத்தையும் திட்டித் தீர்த்தோர்... அவலம்: வீதியெங்கும் அவலக்குரல்கள்.

வழியில் நாங்கள் சந்தித்த சில சம்பவங்கள் பெருஞ்சுமை யாக அழுத்துகின்றன. அவலங்களுக்கிடையில் சிக்கித் தவிர்த்தவர்களை இன்னமும் பேரவலத்திற்குள்ளாக்குகின்ற நிலைமைகள். நான் ஸ்கூட்டரை உருட்டிக்கொண்டு முன்னே நடக்க என்பின்னால் என் குடும்பம் வந்துகொண்டிருந்தது. மெதுவான ஊர்வலம். என் அருகில் வந்துகொண்டிருந்த ஒரு பெண் திடீரெனப் பெருங்குரலில் அலறினாள்.

'ஐயோ... என்ர நகைகள் எல்லாம் போச்சுதே... கைச் செலவிற்கிருந்த காசும் போச்சுதே...பாவியள்...பாவியள்... ஐயோ தம்பிமாரே எடுத்தவை தந்திடுங்கோ. கையெடுத்துக் கும்பிடுறன்...

தோளில் மாட்டிக்கொண்டு வந்த பையினுள் நகைகளையும் காசையும் வைத்து: தலையில் பெரியதொரு சூட்கேசைச் சுமந்து வநதபோது எவரோ. அந்தப் பெண் சொன்னயாதிரி ஒரு படுபாவி பிளேற்றால் தோளில் தொங்கிய பையை வெட்டி நகைகளையும் காசையும் கையாடிவிட்டான்.

மாமரத்தடியில் கதிரையில் அமர்ந்தபடி தூரத்தில் விழுந்து வெடிக்கும் குண்டுச்சத்தத்தைக் கேட்டபடி தத்தளிக்கின்ற மனதில் அப்பெண்ணின் அவலஒலம் இன்றும் கேட்கிறது. இடம் பெயர்ந்து அல்லற்பட்டு அவலமாக ஓடிக்கொண்டிருந்த மக்களிடம் தம் கைவரிசையைக்காட்டிய திருடர்களும் இருந்தனர். தம் சொந்த வீடுகளில் விட்டுவிட்டு வந்த சொத்துக்களை இழந்து எஞ்சிய பெறுமதியான சொத்துக்களோடு வழிநடந்த எதிலிகளிடம் நெஞ்சில் கொஞ்சமும் இரக்கமின்றிக் களவாடிய செயல் நியாயப்படுத்தப்படக் கூடியதன்று.

பலர் எடுத்து வந்தவற்றில் பலவற்றை இழந்தனர். இரண்டு மூன்று நாட்களின் பின்னர் வீட்டில் விட்டுவந்த ஆடுகளை: கோழிகளைப் பிடித்துவரச் சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர். அவை ஏற்கனவே திருட்டுப் போயிருந்தன. இராசலிங்கம் என்பவர் வீட்டில் நின்றிருந்த ஜேர்சிப் பசுவையும் கன்றையும் கூட்டிவரச் சாவகச்சேரியிலிருந்து கொக்குவிலிற்குப் போனவர் நடுவழியில் தனது மாட்டையும் கன்றையும் ஒருவன் பிடித்து வருவதைக் கண்டு திகைத்துப் போனார்.

'எட பொடி இது என்னுடையது...

'என்ன விசர்க்கதை பேசுறியள். இது பசுவும் கண்டும் என்னுடையவை.

இராசலிங்கம் எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தார். அவன் தன்னுடையதெனப் பிடிவாதமாகச் சாதித்தான். ஷதரமுடியாது போங்காணும்' என்று ஏசியபோது இராசலிங்கத்தால் பொறுக்க முடியவில்லை. ஓங்கி அவனை ஒரு அறை அறைந்தார். அவன் அதனை எதிர்பார்க்கவில்லை. நடுவழியில் இருவரும் கட்டிப் புரண்டனர். இராசலிங்கம் வயதானவர் என்றாலும் அந்தக் காலத்துச் சாப்பாடு உடலில் பற்றியிருந்தது. அவனைத் தூக்கிப் புரட்டு புரட்டென்று அடித்துத் தள்ளிவிட்டார்.

பலர் கூடி விசாரித்தனர்.

'சரி... சரி... பெரியவர்... எல்லாம் போகட்டும். அவன் அங்கிருந்து இவ்வளவு தூரம் கொண்டுவந்த கூலியாக ஒரு ஆயிரத்தைக் கொடுத்துவிடுங்கோ...

இராசலிங்கம் ஐநூறு ரூபாவைக் கொடுத்துவிட்டு மாட்டையும் கன்றையும் அழைத்துக் கொண்டுவந்தார்.

'என்ன பெரியவர்: இப்படி அடிக்கிறதே? நீர் அங்க விட்டிட்டு வந்ததைத் தானே அவன் பிடித்து வந்தவன்... என்ற ஒரு இளைஞனை இராசலிங்கம் கோபத்துடன் பார்த்தார்.

'விட்டிட்டு வந்தால் உங்களை எடுக்கச் சொல்லியிருக்கோ?

'ஆமி எடுக்கிறதை எங்கட ஆக்கள் எடுத்தால் என்ன?

'அவன் எதிரி... எடுக்கிறான்... நீங்களும் கொள்ளையடிக் கிறதோ? விசர்க்கதை பேசாதை பொடி... யுத்தத்தில குண்டுபட்டு என்ர சொத்துக்கள் வீடுவாசல் அழிந்தால் பரவாயில்லை. போகட்டும்... அதுக்கு முந்தி நீங்கள் கூரையைக் கழற்றுகிறதும் வீட்டுப்பொருட்களைக் கொள்ளையடிக்கிறதும் விட்டிட்டுப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. என்ன விசர் நியாயம் பேசுறாய்?

இராசலிங்கத்தாரிடம் களவாடியதற்காகக் காசு பெற்றுக் கொண்ட அவன் சாவகச்சேரிப்பக்கம் வராது மீண்டும் யாழ்ப்பாணப் பக்கமாகத் திரும்பி நடந்தான். யாழ்ப்பாணத்து வீதிகளில் அவிழ்த்துவிட்ட மாடுகள் ஏராளம் திரிகின்றனவாம்.

சற்றுமுன் எங்களுக்கு மாங்காய் பிடுங்கித் தந்த ஆச்சி தலையில் அடித்தபடி ஓடிவந்தாள். நாங்கள் பதறிப்போய் ஆச்சியைப் பார்த்தோம். ஷெல் சத்தங்களையும் வெளியில் போன பெரியவரையும் இணைத்துப்பார்த்து மனம் பதகலித்தது.

'என்ன ஆச்சி...?

'கைதடி வெளியில மேய்ந்துகொண்டிருந்த என்ர மாடுகளுக்கு மேல ஷெல் விழுந்து நாலைந்து மாடுகள் அந்தவிடத்திலேயே சிதறிப்போச்சுப் பிள்ளையள்... அதுகளை நம்பித்தான் நாங்கள் சீவிக்கிறம்... பாவிகள்... இப்படிச்

செய்கிறான்களோ' என்று ஆச்சி ஒப்பாரி வைத்தாள்.

எவ்வளவு அவலங்கள் ஆச்சியின் வேதனை சொல்லுந்தரமன்று. இடிந்து போனாள். ஷெல் வெடித்துச் சிதறிய பலருடைய சடலங்களை நான் கண்டிருக்கிறேன். சிதறிய சடலத் துண்டுகளைப் பொறுக்கிக் கட்டி அள்ளி உரப்பைகளிலிட்டு எரித்த சம்பவங்கள் பல எனக்குத் தெரியும். யாழ்ப்பாணத்தில் மரணங்கள்கூடக் கௌரவமாகவில்லை. வாழவேண்டிய உயிர்களைப் பலியெடுக்கின்ற இந்தக் கொடிய யுத்தத்திற்கு முடிவேயில்லையா? எவ்வளவு மரணங்கள்! மண்விடுதலை என்ற உத்வேகத்தில் ஆயுதங்களை ஏந்திய போராளிகளும் பேரின வாதத்தின் ஆதிக்கவெறியும் அப்பாவி மக்களைக் காவு கொண்டு வருகின்றன. ஆயுதங்களை ஏந்தியவர்கள் மரணத்தை எதிர் பார்த்தே அவற்றினைப் பற்றியிருக்கின்றனர். யுத்தகளமென்பது ஆயுதம் ஏந்திய சடலங்களின் பூமி. அதில் அழிந்துவிடுவேன் என்று எண்ணுபவன் தப்பிவிடுவான். அழியமாட்டேன் என்பவன் அழிந்துவிடுவான். யாரோ கூறிய வார்த்தைகள்.

நான் வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தேன். வடக்குக் கைதடிப் பக்கமாகக் குண்டுகள் வெடிக்கின்ற சத்தங்கள் கேட்டுக்கொண்டேயிருந்தது.

# 11

நள்ளிரவு தாண்டிய வேளையில் வடக்கேயிருந்து ஷெல்கள் யாழ்ப்பாண நகரத்தை நோக்கி ஏவப்படத் தொடங்கிவிட்டன. அவை குத்தப்படுகின்ற சத்தத்திலிருந்து கோப்பாய்ப் பக்கமிருந்துதான் வெறிபிடித்துப் பாய்கின்றன என மாணிக்கத்தார் அனுமானித்துக் கொண்டார். அவர் வீட்டினைத் தாண்டிய வான் பரப்பில் அவை கூவிக்கொண்டு பாய்ந்துசென்றன. விழுந்து வெடித்துச்சிதறின. மனித சந்தடியற்ற யாழ்ப்பாணத்தில் வீசப்படுகின்ற ஷெல்களின் இலக்குக்கள் கட்டிடங்களும் வீடுகளும் கட்டாக்காலி மாடுகளும் தெருநாய்களுமாகத்தான் இருக்க முடியும். காலங்காலமாக வாழலாமென உண்ணாமல் உடுக்காமல் மிச்சம்பிடித்துச் சேமித்துக் கட்டிய எத்தனை வீடுகள் சிதறிக் கற்குவியல்களாகியனவோ?

அவர் வெகுநேரம் கட்டிலில் எழுந்து அமர்ந்து சிலையாக இருந்தார். ஊரே இராணுவத்திற்குப் பயந்து சொத்துக்களை விட்டு விட்டு காவக்கூடிய சுமையுடன் சாவகச்சேரிக்கும் வடமராட்சிக்கும் ஓடிவிட்டபின்னர். மனித நடமாட்டமற்ற பாழ்நகரில் அவர் மட்டும் தங்கிவிட்டது பிழையோ என எண்ணத்தலைப்பட்டார். தனிமை அவரைப் பயமுறுத்த வில்லை. கோயிலுக்குப் போய் அம்மனுக்கு விளக்கேற்றிவிட்டு வெளிமண்டபத்தில் அமர்ந்தால் அம்மனோடு பேசிக்கொண்டு இருந்துவிடலாம். எப்படியிருந்த இடம்? ஆளரவமின்றி வெறிச்சோடிவிட்டது.

நேற்று மாலைகூட கோயிலடி மண்டபத்தில் இருந்தபோது சயிக்கிலில் ஜெகனும் மாயனும் வந்து இறங்கினார்கள். இருவரும் கரங்களில் துப்பாக்கி ஏந்தி உடல் முழுவதும் பல்வேறு யுத்தக் கருவிகளைக் காவியிருந்தார்கள். கோயில் மண்டபத்தில் அவரைக்கண்டதும் சயிக்கிலைத் தூணில் சார்த்திவிட்டு இறங்கி வந்தார்கள்.

'வாங்கோ பிள்ளைகள்... என்றார் மாணிக்கத்தார். எல்லாரும் ஊரைவிட்டு இடம் பெயர்ந்துவிட தான் மட்டும் தனித்திருப்பதற்கு ஏசப்போகின்றார்களோ என அவர் பயந்தார். இருவரும் சிரித்தபடி மண்டபத்தில் அமர்ந்தார்கள்.

'பெரியவர்: நீங்கள் அங்கால போகாததில எங்களுக்கு ஒண்டுமில்லை. பெரியதொரு யுத்தம் நடக்கப்போகுது... எதிரி கண்மண் தெரியாமல் குண்டுகளைப் பிரயோகிப்பான். எப்படியாவது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட வேண்டுமென்ற முடிவோடு வந்துகொண்டிருக்கிறான். விசர்த்தனமாக நின்று எதிர்த்து மக்களை ஆயிரக்கணக்கில் பலிகொடுக்க நாங்க விரும்பவில்லை. துரத்திவிட்டம் என்று பேசிக்கொண்டு சென்றினம். அவர்கள் ஏசத்தான் செய்வினம். ஆனால் நடக்கப்போகின்ற சண்டையின் தன்மை எங்களுக்குத் தெரியும். எங்கட தலைவர் எடுக்கின்ற முடிவு முதலில் விரும்பப்படாததாகத்தான் இருக்கும். ஒரு தொலைப்பார்வையில் எவ்வளவு சரியானதென்பது காலம் கடந்து தெரியும். ஒரு குண்டு வீச்சில நவாலிக் கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த நூற்றுக்கணக்கான அகதிகளைப் பலிகொண்ட சம்பவம் மறந்திருக்க மாட்டியள் என்ற ஜெகனை அவர் ஏறிட்டுப் பார்த்தார்.

'என்னால இந்த இடத்தை விட்டுச் செல்ல முடியவில்லை: பிள்ளையள். எங்க போறது? சொத்துப்பத்துக்கு ஆசைப்பட்டுத் தங்கிவிட்டன் எண்டு நினையாதையுங்கோ..நான் அப்படியெண்டால் என்ர பிள்ளையளோடு வெளிநாட்டிற்கு ஓடியிருப்பன்... இந்த காற்றில என்ர மூதாதையரின்ர சாம்பல் கலந்திருக்குது... அவர்களுடைய மூச்சுக்காற்று இங்கு வீசும்காற்றில் பரவிக் கிடக்கின்றது. என்ர அப்பு: ஆச்சி: சகோதரங்கள் எல்லாரும் இந்த ஊரிலதான் செத்தினம். கோம்பயன்மணல் சுடலையில் தான் எரிக்கப்பட்டினம். அவர்கள் எல்லாரும் இங்கதான் இருக்கினம்... அவர் உணர்ச்சி வசப்பட்டுக் கொட்டினார்.

இளைஞர்கள் இருவரும் அவரை இரக்கத்தோடும் கவலையோடும் பார்த்தார்கள்.

'உங்கட உணர்ச்சி விருப்பு எங்களுக்குப் புரியுது பெரியவர். நீங்கள் அப்படியொரு முடிவு எடுத்திட்டால் அதை நாங்க எப்படி மறுக்கிறது. நாங்கள் துவக்கெடுத்தது எங்களுக்காகவல்ல அப்பு உங்களுக்காக.. எங்களது வருங்காலச் சந்ததியினருக்காக... துவக்கேந்த வேண்டிய சூழ்நிலைக்கு எங்களைக் கொண்டு வந்தது சிங்கள அரசுதான். இன்றைக்கு ஆயிரக்கணக்கான இளம் பொடியளும் பெண்களும் இந்த மண்ணில் விதைக்கப்படு வதற்குக் காரணம் சிங்கள அரசுதான்... என்றான் மாயன். போராளிகள் கொள்கையள வில் பூரணமான தெளிவும் அவற்றை எடுத்துக் கூறுவதில் வல்லமையும் கொண்டிருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

'அரசு பேச்சு வார்த்தைக்கு வந்தபோது அதை என் இடைநடுவில் குழப்பி படித்தீர்கள்?'

'இதைத்தான் பலர் கேக்கினம். அரசு பேச்சுவார்த்தைக்கு வரும்போது என்ன தீர்வைக் கையில் வைத்திருந்தது? எதுவுமேயில்லாத நிலையில் பேச்சுவார்த்தையென்ற போர்வையில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளப் பார்த்தது பெரியவர்.

அவர் எதுவும் பேசவில்லை. அவர்களை வியப்புடன் ஏறிட்டு நோக்கினார். அவர்கள் பலவற்றையும் பேசிக் கொண்டார்கள்.

'பெரியவர். எப்படிச் சாப்பிடுகிறியள்?...

'கோயில் களஞ்சியத்தில அரிசி இருக்குது... அம்மனுக்குக் காலையில பொங்கி வைச்சிட்டு அதைச் சாப்பிடுகிறன். இரவில வீட்டில இருக்கிறதைக்கொண்டு சமாளிக்கிறன். இருக்குமட்டும் சாப்பிடுவன். பிறகு அம்மன் விட்டவழி... தம்பிமார். இருந்தியள் எண்டால் வெறுந்தேத்தண்ணி சீனியில்லாமல் தாறன்...

'கொண்டு வாங்கோ அப்பு என்றார்கள் இருவரும்.

இப்பொழுது நினைத்தாலும் மாணிக்கத்தாருக்கு ஒருவித மான பரிதாபம் ஏற்படுகின்றது. அவர்கள் இருவரும் அவரது பேரன்களின் வயதொத்தவர்கள். அவரின் பேரப்பிள்ளைகள்

கனடாவில் சுகபோக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுவிட்டனர். அவர்கள் காரில் சென்று படிக்கின்றார்கள். இவர்கள் கரங்களில் துப்பாக்கி ஏந்தி சயிக்கிலில் மண்ணை மீட்க அலைகிறார்கள்.

போகும்போது ஜெகன் கூறியவை நினைவில் சதிரிடுகின்றன.

'அப்பு எனக்கும் உங்களுக்கும் ஒரு விசயத்தில வலு ஒற்றுமை.

'என்ன... தம்பி?'

'உங்களை இந்த மண்ணை விட்டுவிட்டுக் கனடாவிற்கு வந்துவிடும்படி உங்கட பிள்ளையள் கூப்பிடுகினம். என்னை அதே கனடாவிலிருந்து என் பெற்றார், தம்பி தங்கச்சிமார் இந்த மண்ணை விட்டுவிட்டு அங்க வந்துவிடும்படி ஓயாது கூப்பிடுகினம்...

அவர் விக்கித்துநின்றார். அவனை ஆதரவுடன் பாசத்தோடு பார்த்தார். அவன் அவர் மனதில் ஒருபடி உயர்ந்து அமர்ந்தான்.

'உன்னை இங்க விட்டிட்டுப் போக அவர்களுக்கு எப்படி மனசு வந்தது?'

'எனக்கு இந்த மண்ணின் சுதந்திரம் பெரிதாகப் பட்டது. அவர்களுக்குத் தங்கள் உயிர்கள் பெரிதாகப்பட்டது. அவ்வளவுதான்.

ஜெகன் நரிக்குண்டுப் பக்கமாக வெறித்துப்பார்த்தான். அவன் மனக்கண்ணில் எக்காட்சி விரிந்ததோ? அவன் கனடாவிற்கு வரமறுத்தபோது பெரும் சோகநாடகம் வீட்டில் அரங்கேறியிருக்கும்.

அவர்கள் விடை பெறும்பொழுது மாணிக்கத்தார் எழுந்து நின்றார். எதையோ சொல்ல விரும்புகிறவர் போலப்பட்டது.

'என்ன அப்பு...

'இங்க ஊருலகத்தில சனமில்லை... நாய்கள் காகங்கள் தான் திரிகின்றன. ஆடுகள் நாய்களினால் வேட்டையாடப் பட்டுவிட்டன. எனக்கு ஏதாவது நடந்திட்டால் நீங்க இங்கினேக்க இருந்தால் நாய் காகம் குதறாமல் புதைச்சு

விடுங்கோ.. கனகசபை தன்ர தாயை வளவில புதைச்ச மாதிரி.. அவர் விழிகள் கலங்கின.

அவர்கள் அவரைக் கனிவோடு பார்த்தனர்.

'நாங்க இருந்தால் செய்வம்..

'தம்பிமார் கவனம்.. கவனமடா பொடியள்...

அவர்கள் சென்றதன் பின்னர் மாணிக்கத்தார் இரவு படரும் வரை கோயில் மண்டபத்தில் அமர்ந்திருந்தார். பெருஞ்சுமையாகத் தனிமையின் அழுத்தம். இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. நிலவு எழும்வரை இருந்தவர் வீட்டிற்குப் புறப்பட்டார். மயான அமைதி தழுவிக்கிடந்தது. சிவசாமியின் வீடு வெறிச்சிட்டுக் கிடந்தது. இரத்தினத்தின் வீடு கூரையில்லாமல் நிலவில் குளிக்கிறது. அவர்கள் சாவகச்சேரிக்குப் போயிருப்பார்கள். எப்படியிருக்கிறார்களோ? இவ்வளவு சனத்தையும் தென்மராட்சி எப்படிக் கொள்ளும்?.

வலிகாமத்துத் தோட்டக்காரர் தங்கள் தோட்டங்களில் வெட்டிக் கொத்தித் தாழ்ப்பதற்குரிய பசும்குழைகள் தென்மராட்சியிலிருந்துதான் வண்டில்களில் கட்டுக்கட்டாக வரும். பூவரசு: பாவட்டை: வேம்பு எனப்பலவகை இலைகுழைகள் வடக்கன் மாடுகள் இழுக்கின்ற பாரவண்டில்களில் கட்டிவரும். தென்மராட்சி அக்காலத்தில் குழைக்காடாகவிருந்தது. இரசாயன உரங்கள் வந்ததும் பசும்குழைகள் தாழ்க்கின்ற பழக்கம் மெல்ல மெல்லக் குறைந்துவிட்டது. சுண்ணாம்புத் தரை மண்ணில் பச்சைக்குழை சேர்ந்து செம்மண் சிவப்பேறிக் கிடந்தது. இன்று குழையின்றி அச்செம்மை குறைந்து வருகிறதென்பது மாணிக்கத்தாரின் அபிப்பிராயம்.

இன்று அக்குழைக்காட்டில் தான் யாழ்ப்பாண மக்கள் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள்.

குண்டுவெடிப்புகள் இடையிடையே கேட்கின்றன. அவர் சுருட்டு ஒன்றைப் புகைத்தபடி கட்டிலைவிட்டு எழும்பி வெளியில் வந்தார். முற்றத்தில் நிற்கும்போது வானமும் நிலவும் தனக்கு மட்டும் என்ற எண்ணம் வந்தது. அயல் அட்டையில் எவருமில்லை. தூரத்தில் குலைக்கின்ற நாய்களைத் தவிர வேறு சந்தடியில்லை. வேப்பமரத்தில் குடியிருக்கும் கூகைகூட குரல் தரவில்லை.

அதிகாலைப் பொழுதில் ஷெல் சத்தங்களும் துப்பாக்கிச்

சத்தங்களும் கவசவாகனங்கள் உருளும் சத்தங்களும் அமளிதுமளியாக எழுந்தன. எதிர்பார்த்த யுத்தம் வந்துவிட்டது எனக் கருதினார். இராணுவம் யாழ்ப்பாணம் நோக்கி நகருகின்றது.

இருந்தாற்போலக் கூவிக்கொண்டு அவர் வீட்டிற்கு மேலாக விரைந்த ஷெல் மிக அருகில் விழுந்து பெருஞ்சத்தத்துடன் வெடித்தது. அவர் பதறிப் போனார். அம்மன் கோயில் மீது விழுந்து விட்டதோ? இராணுவம் வரும்போது வீட்டில் இருப்பதிலும் பார்க்கக் கோயிலில் இருப்பது மேல் எனப்பட்டதால் சால்வைத் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கோயில் நோக்கி நடந்தார்.

கோயில் அமைதியில் ஆழ்ந்திருந்தது. ஆனால் சிவசாமியின் வீட்டின் கூரையின் ஒரு பகுதி சரிந்துகிடந்தது. அழகான தோற்றத்தோடு நிமிர்ந்து நின்ற அந்த வீடு கணப்பொழுதில் முலியாகிப்போனது.

அவர் கோயிலுக்குள் நுழைந்து உள் மண்டபத்தில் தூணோடு சாய்ந்து கொண்டார். மனம் சற்று நிம்மதிப்பட்டது. தான் தனிமையாக இல்லையென்ற உணர்வு.

மூன்று நாட்கள் அவர் கோயிலைவிட்டு வெளியில் வரவில்லை. இரவு வேளைகளையும் அங்கேயே கழித்தார். வெளியே யுத்தம் மூண்டிருந்தது தெளிவாகப் புரிந்தது. கோயிலுக்கு மேலால் கூவிக்கொண்டு ஷெல்கள் சென்றன. பலாலி வீதியில் இராணுவம் முன்னேறி வருவதாகப்பட்டது.

நான்காம் நாள் அதிகாலை புல்டோசர்களின் சத்தம் கிட்டடியில் எழுந்தது. கட்டிடங்கள் சரிந்து நொறுங்கி விழுகின்ற சத்தமும் அவற்றினூடே கேட்டது. கலட்டிச்சந்தியிலிருந்து தட்டாதெருச்சந்தியை நோக்கி ஒரு நேர்கோட்டில் புல்டோசர்கள் நகர்ந்தன. குறுக்கிட்ட வீடுகள்: மதில்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டன. கிணறுகள் தூர்க்கப்பட்டன.

கோயில் வாசலில் ஆளரவம் கேட்கிறது. இராணுவம் கோயிலைச் சுற்றி வளைத்துவிட்டதோ? அவர் உடல் மெதுவாக நடுங்கியது. இனந்தெரியாத பயம் உடலெங்கும் பரவி வியாபித்துக் கொண்டது. என்ன செய்வதென்று தெரியாத நிலையில் தத்தளித்த போது பழக்கமான குரல் கேட்டது.

'பெரியவர்... அப்பு.. என்று ஜெகன் அழைத்தபடி வேகமாகக் கோயிலுக்குள் நுழைந்தான். 'இங்க இப்ப சண்டை நடக்கப் போகுது... இராணுவம் வீடுகளைத் தகர்த்து இராணுவவேலி போட்டுக் கொண்டு வருகுது... கெதியாக வீட்டிற்குப் போங்கோ.. நல்லாத் தள்ளி தலையாளிப் பக்கமாகப் போங்கோ.. இங்க நிற்க வேண்டாம்...

அவர் அவனை நன்றியுடன் பார்த்துவிட்டு வேகமாகக் கோயில் வெளிமண்டபத்திற்கு வந்தார். கலட்டிச்சந்திப் பக்கம் குண்டுகளும் துப்பாக்கிகளும் சீறி அதிர்ந்தன புல்டோசர்களின் இரைச்சல் கேட்கிறது. கனரக வாகனங்களின் உருளும் சத்தமும் எழுகிறது. வெளிமண்டபத்தில் நின்றபடி திரும்பி அம்மனைக் கும்பிட்டார். வெளியில் இறங்கி தலையாளிப் பக்கமாக விரைந்தார். கோயில் மதில்களோடு போராளிகள் சிலர் ஆயுதங்க ளுடன் நரிக்குண்டுப் பக்கமாகப் பார்த்தபடி நின்றிருந்தனர். முதிரா இளம் பிள்ளைகள். நெஞ்சில் வேதனையின் தீ நாக்குகள் பற்றி எழுந்தன.

இன்னும் சிலவேளைகளில் இப்பிரதேசம் கலங்கப் போகின்றது. குண்டுகளால் அதிரப்போகின்றது. சூடுபட்டு விழுகின்ற உடலங்களால் இரத்தக் குளிப்பாட்டலுக்குள்ளா கப் போகின்றது. மரணக்குரல் நிரம்பப் போகின்றது.

'அம்மா... என்ற மரணக்குரல் இப்பக்கத்தில் எழ: 'அம்மே... என்ற மரணக்குரல் அப்பக்கத்தில் எழப்போகின்றது. இந்த மனிதர்களுக்கு என்ன பிடித்துவிட்டது? நிம்மதியாக வாழ்ந்து முடிக்கக்கூடிய சமாதானபூமி மலராவே மலராதா? இந்த சந்ததியினர் ஒருவரையொருவர் அழித்துக்கொண்டு தீராத பகையுடன் ஒருவரையொருவர் அழித்துக் கொண்டே இருக்கப் போகிறார்களா?

உதட்டளவில் சமாதானத்தைப் பேசிக்கொண்டு தமது கவனத்தை வாக்குவேட்டையில் பதித்து: யுத்தத்தைத் தேர்ந்தெடுத்து இரு பகுதி மக்களையும் ஏமாற்றிக் கொண்டே இந்த அரசியல்வாதிகள் காலங்கடத்தப் போகிறார்களா?

'தாயே: இந்த மண்ணிற்கு எப்ப விடிவு காலம்?

அவர் வேகமாக நடக்கிறார்.

'இந்த மண்ணிற்கு நிரந்தர சமாதானத்தின் ஒளியை எடுத்து வரப்போகின்ற யுக புருஷன் யார்?

கோயில் பக்கமாக ஷெல்கள் வீசப்படுகின்றன கோயில்

பக்கமிருந்து எதிரித் தாக்குதல்களாகக் குண்டுகள் பாய்கின் றன. இரு பகுதியினரும் சந்தித்துக் கொண்டார்கள் போலும். அவர் வேகமாகத் தன் வீட்டுப் பக்கமாக ஓடத் தொடங்கினார்.

தெருநாய்கள் பெரும் முழக்கத்துடன் அருகில் எழுந்த குண்டுச் சத்தத்திற்குப் பயந்து விழுந்தடித்துப் பொட்டுக்குள் நுழைந்து ஓடி மறைந்தன. வீதியில் அவரைத் தவிர எவருமில்லை. தன்னை நோக்கித்தான் குண்டுகள் வீசப்படுகின் றனவென்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. இப்படியான ஒரு சூழ்நிலையை அவர் எதிர்பார்க்கவில்லை. தூரத்தில் வெடித்த குண்டுகள்; துப்பாக்கிச்சன்னங்கள் அனைத்தும் இவ்வளவு அருகில் சிதறியபோதுதான் யுத்தகளத்தின் பயங்கரம் புரிந் தது. இஷ்-இஷ் என்று இரைந்தபடிசன்னங்கள் பாய்ந்து பட்பட் என வெடித்தன. கலட்டிப்பிரதேசமே பெரும் அல்லோலகல் லோலப்பட்டது. மனிதரற்ற வீட்டுக்கட்டிடங்கள் தகர்ந்து சரிந்தன. மரங்கள் கிளைகளைத் துண்டித்து உதறின. தென்னை மரங்கள் பல வட்டுக்களோடு இடைநடுவில் முறிந்து சரிந்தன.

அவர் ஓடிப்போய்த் தன் வீட்டிற்குள் புகுந்து கொண்டார். மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியது. ஒரு பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டது. கட்டிலில் அப்படியே சரிந்தார். அவர் எடுத்த முடிவு சரியாதாகப்படவில்லை. ஒன்றில் அவர் தன் பிள்ளைகளோடு கனடாவிற்குச் சென்றிருக்க வேண்டும். அல்லது மகள் சரோசாவோடு சாவகச்சேரிக்காவது சென்றிரு க்க வேண்டும். யாருமற்ற இந்த மயானபூமியில் எவருக்கும் தெரியாமல் மரணமடைந்தால்...! நினைவே உடலை நடுங்க வைத்தது. சாவகச்சேரிக்கு ஓடிப்போக முடியுமோ?

காலம் கடந்த நினைவு. முடிவு.

அன்றிரவின் தொடக்கத்தில் குண்டுகள் வெடிக்கும் சத்தம் ஓய்ந்தது. ஆனால் இடையிடையே துப்பாக்கிச்சன்னங் கள் பட்பட்டெனச் சிதறி வெடிக்கும் ஒலி கேட்டுக் கொண்டேயிருந்தது.

என்ன நடந்தது ஏது நடந்ததென அறியமுடியவில்லை. அப்படியே அயர்ந்து எப்பொழுது உறங்கிப் போனார் என்பது அவருக்கு நினைவிலில்லை.

அதிகாலை என்றும்போல விடிந்தது. எழுந்து வெளியில் வந்தார். வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு போர்ட்டிக் கோவில் கால்பதித்தபோது அப்படியே திடுக்கிட்டு நின்று

விட்டார் போர்ட்டிக்கோவின் தரையில் அமர்ந்து சுவரோடு தன்னைச் சாய்த்து ஜெகன் அமர்ந்திருந்தான். அவன் வயிற்றில் சன்னம் பாய்ந்திருப்பது தெரிந்தது. அதிலிருந்து வடிந்த இரத்தம் நிலத்தில் குளமிட்டிருந்தது. வயிற்றைச்சுற்றிச் சாறத்தால் கட்டியிருந்த போதிலும் அதனை மீறி இரத்தம் பாய்ந்து வடிந்திருந்தது. காயத்தின்மீது பதிந்திருந்த இடக்கரத் தின் விரல்களுக்கிடையில் இரத்தம் வடிந்து தோய்ந் திருந்தது. வலக்கரத்தில் பற்றிய துப்பாக்கி மடியில்சரிந்து கிடந்தது.

'தம்பி... ஜெகன்...' என்றபடி அவர் அவனை நோக்கி விரைந்தார். துப்பாக்கிச் சூட்டை வாங்கிக்கொண்டு அவன் இரவே அங்கு வந்திருக்கவேண்டும். அவருக்கு அது தெரிந்திருக கவில்லை. அவன் உதவி கேட்டு அவரை அழைத்திருப்பானோ?

ஏன் அவரைத் தேடி வந்தான்?

அவர் அவனைத் தூக்க முயன்றார். உடல் குளிர்ந்திருந் தது. அவர் கரம் பட்டதும் ஜெகனின் தலை ஒரு புறமாகச் சரிந்து விழுந்தது.

'ஐயோ... தம்பி... ஜெகன்...' என அவர் வாய்விட்டுக் கத்திய போது அவரோடு சேர்ந்து அந்தத்துயரத்தில் கலந்து கொள்ள அவ்விடத்தில் எவருமில்லை. முற்றத்தில் நுழைந்த நாய் ஒன்று நேரம் தெரியாமல் பசியால் ஊளையிட்டது.

அன்று பின்னேரம் அவ்விடத்திற்குச் சில போராளிகள் வந்தனர். கோயிலடியில் செத்துக் கிடந்த தமது நண்பர்களைத் தூக்கிக் கொண்டு அவர் வீட்டிற்கு வந்தனர். அவர்களது முகங்களில் துயரத்தை மீறிய வன்மம் படர்ந்திருந்தது. அவர்கள் வந்தபோது அவர் வாங்கில் ஜெகனின் உடலை வளர்த்தி முகத்தை ஈரத்துணியால் துடைத்து தலைமாட்டில் குத்துவிளக் கொன்றினை ஏற்றி வைத்திருந்தார்.

'அப்பு: ஜெகன் அண்ணை உங்களுக்கு என்ன முறை?' என்று ஒருத்தன் கேட்டான்.

மாணிக்கத்தார் விழிகளில் நீர் சோர நிமிர்ந்து பார்த் தார். ஜெகன் அவருக்கு என்ன முறை? இந்த இளம் பிள்ளைக ளெல்லாம் அவருக்கு என்ன உறவு? காவோலைகள் வட்டுக்க ழராமல் காற்றில் ஊசலாடக் குருத்தோலைகள் வண்டரித்துச் சரிந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் எனக்கு என்ன உறவு?

அவன் மீண்டும் கேட்டான்.

'என்ர பேரன்...' என்றபடி அவர் விம்மத் தொடங்கினார்.

# 12

**ந**ல்ல தண்ணீர் கிணற்றடியிலிருந்து பார்க்கும் போது விரிந்துகிடக்கும் வயல்வெளியும் வயல் விளிம்பில் கோடிட்டுச் செல்லும் வீதியும் தெரிகின்றன. வெள்ள நீர் வயல் வரம்புகளுள் கட்டுப்பட்டுக் கிடந்தது. நெற்பயிர்கள் நீர் மட்டத்திற்கு மேல் ஐதாகப் பசுமை போர்த்திருந்தன. மேற்கு வானில் சரிந்து கொண்டிருந்த சூரியனின் பகைப்புலத்தில் வயலும் அதன் நடுவில் அமைந்திருந்த கிணறும் கிணற்றினைச் சுற்றித் தண்ணீர் அள்ளிச் செல்வதற்காகக் குடங்கள்; பிளாஸ்ரிக் கான்கள்; வாளிகள் என்பனவற்றுடன் காத்திருக்கும் மனிதர்களும் யாழ்ப்பாண நகரச் சூழலில் நகுலனுக்குப் பரிச்சயமற்ற காட்சிகளாம்.

சயிக்கிலை வரம்பில் சரித்துவிட்டு பிளாஸ்ரிக் கானுடன் அவன் காத்திருந்தான். பெண்களும் சிறுவர்களும் அவனொத்தவர் களுமாகக் கிணற்றடி நிரம்பிக்கிடக்கிறது. தென்மராட்சியில் நல்ல தண்ணீர் ஒரு பிரச்சினை. வயற்கிணறுகள்; கோயிற் கிணறுகள்; ஒரு சில வீட்டுக் கிணறுகள் மட்டும் நல்ல தண்ணீரைக் கொண்டிருந்தன. பெரும் பாலான வீட்டுக் கிணறுகள் உவர் நீராக விளங்கின. பொன்னுத்துரை மாஸ்ரரின் வீட்டுக் கிணற்றுநீர் ஒப்பளவில் சுமார்.

காலையும் மாலையும் நல்ல தண்ணீர்க் கிணறுகளைத் தேடி அகதிகளாக இடம் பெயர்ந்தவர்கள் அலைந்தார்கள். அவர்களோடு தென்மராட்சி மக்களும் அவதிப்பட்டனர்.

வற்றாத கிணறுகள் சில காலையில் வற்றிவிடுகின்றன. பின்னர் தண்ணீர் ஊறியவுடன்தான் மாலையில் நீர் எடுக்க முடிந்தது. விடியும் விடியாத அதிகாலை இருளில் பலர் கிணற்றடிக்குச் சென்றார்கள். இரவு வேளைகளில் பிளாஸ்ரிக் கான்களுடன் சிலர் கிணற்றடியில் காத்திருந்தார்கள்.

மாலைக்கருக்கலில் வயல் வரம்புகளில் நடந்தவர்கள் பாம்புகளை மிதித்துவிட்டுப் பதறி வயற் சேற்றில் விழுந்து எழும்பினார்கள். சயிக்கில் முன் பாரில் பிளாஸ்ரிக் கான் நிறைத்து வைத்து ஓடும்போது கான்டில் திருப்ப முடியாமல் ஒழுங்கைகளில் விழுந்து எழும்பினார்கள். நகுலனுக்கும் அப்படியொரு அனுபவமுண்டு.

குளிர்காற்று வயல் வெளியைத் தழுவிக்கொண்டு வீசியது. தூரத்தில் கிழக்குத்திசையில் பிள்ளையார் கோயில் கோபுரம் உயர்ந்து காட்சி தருகின்றது. மாலைக் கதிர்கள் அதில் படிந்து கிடக்கின்றன. கோபுரத்தில் குடியிருக்கும் புறாக்கள் இருப்புக்கொள்ளாமல் சிறகடித்து மேலெழுவதும் இறங்கியிருப்பது மாக அலைந்தன. நகுலன் அவற்றினை இரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தில் இப்படியான காட்சிகள் அவனுக்குப் பழக்க மாயில்லை. வீட்டுக் கிணற்றில் தண்ணீரை அள்ளிப் பயன்படுத்திப் பழகிவிட்ட அவனுக்கு நல்ல நீரின் பெறுமானம் இங்கு வந்ததும் தான் தெரிந்தது. அங்கு ஒவ்வொரு வீட்டிலும் எவ்வளவு நீரைச் சேதப்படுத்தி வருகிறார்கள்! அப்பா குளிக்கப்போனால் அரைக் கிணற்று நீர் வேண்டும்.

'நல்ல தண்ணியை வீணாக்காமல் பக்குவமாக வாருங்கோ எவ்வளவு நீரைக் கீழே கொட்டிறியள்.' என்று கிணற்றடியில் பலரும் பேசிக்கொள்கின்ற வார்த்தைகள் நீரின் பெறுமதியை உணர்த்தின.

கிணற்றடியில் இபபொழுது ஐந்தாறு பேர்களே நின்றிருந் தார்கள். அவன் தன் பிளாஸ்ரிக் கானைத் தூக்கிக் கொண்டு கிணற்றடிக்கு நடக்கக் காலெடுத்த போது வயல்வரப்பில் சுகந்தி இரு கரங்களிலும் இரு பிளாஸ்ரிக் கான்களைத் தூக்கிக் கொண்டு தண்ணீர் அள்ள வருவது தெரிந்தது. வழக்கமாக வசந்தன்தான் வருவான். இன்று அவள் வருகிறாள். வயல் வரம்பில் நடந்து பழக்கப்படாத கால்கள். மிக

அவதானமாக அவள் பாதங்களை வரம்பில் வைத்து நடந்து வந்தாள். காப் ஸ்கேர்ட்; பிளவுசில் மாலைக் கதிரின் பின்னணியில் அவள் நடந்து வருவது அழகாக இருந்தது. அவன் இதயத்தில் மெல்லிய ஒரு படபடப்பு அலையெறிந்தது.

சுகந்தியைச் சந்திக்க நேர்ந்ததிலிருந்து இனந்தெரியாத ஒரு இன்ப உணர்வு தன்னுள் கிளர்வதை அவன் சில நாட்களாக உணர்கிறான். வயல்வரம்பில் அவள் நடந்து வரும்போது ஏற்படும் இடையசைவு அவனை வருத்தியது.

வானத்தில் செம்பருந்தொன்று மெதுவாகச் சிறகடித்துச் செல்கின்ற ஒலியும் காகங்கள் அதனைத் துரத்திச் செல்கின்ற கரையொலியும் வயல் வரம்பில் நடந்துவந்த சுகந்தியின் கவனத்தைத் திசைதிருப்பியதால் எடுத்து வைத்த பாதம் வரம்பிலிருந்து விலகிவிட அவள் அப்படியே வரம்புடன் சரிந்து தன்னைச் சமாளித்துக்கொண்டு இருந்துவிட்டாள். நகுலன் ஒரு கணம் பதறிப்போனான்.

அவளை நோக்கி ஓடிச்சென்றான். அதற்குள் சுகந்தி தன்னைச் சமாளித்து எழுந்து கொண்டாள்.

'என்ன சுகந்தி...ஏதாவது காயமா?'

'சறுக்கிவிட்டுது...அவ்வளவுதான்...'

'பார்த்து வரக்கூடாதா?'

'பார்த்துத்தான் வந்தன்...'

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவன் கரைந்து போனான். ஒரு பெண்ணின் சிரிப்பிற்கு இவ்வளவு சக்தியிருக்க முடியுமா? அவள் சிரித்தபோது மேல்வரிசையில் மிதந்து நின்ற தெத்திப்பல்லொன்று அவள் சிரிப்பிற்குத் தனிச் சோபையைக் கொடுப்பதாக அவன் எண்ணமிட்டான். மாலைக் கருக்கலில் அவளது நிறம் சற்றுச் சிவந்து மிளிர்ந்தது.

அவர்கள் கிணற்றடிக்கு வந்தார்கள். அவன் துலாவினை இழுத்துத் தண்ணீர் அள்ளி அவளது பிளாஸ்ரிக் கானில் வார்த்துவிட்டான். வேறு சிலரும் தமது குடங்களையும் வாளிகளையும் அவன் முன் வைத்தனர். இருவருக்கு வார்த்து விட்டுத் தன் பிளாஸ்ரிக் கானை நீரால் நிரப்பிக் கொண்டான். பிளாஸ்ரிக் கானைத் தூக்கிச் சயிக்கில் கரியரில் வைத்து உருட்டிக்கொண்டு வரம்பில் நடக்க அவள் பின்னால் வந்தாள்.

அவர்கள் வயல் வரம்பைவிட்டு ஒழுங்கையில் ஏறினார்கள்.

'நீங்கள் சயிக்கிலில் போங்கோ. நான் வாறன்...'

'இல்லை. நான் உருட்டிக் கொண்டு வாறன்...'

'அப்ப பேச்சுத் துணையாயிற்று...' என்று சுகந்தி சிரித்தாள்.

கோயில் கோபுரத்தில் புறாக்கள் சத்தமிடுவது கேட்கிறது. அவளுடன் நிறையப் பேசவேண்டுமென உள்ளத்தில் ஏதோ குறுகுறுத்தது. பேசுவது என்னவென்றுதான் புரியவில்லை. அவன் ஆண்கள் கல்லூரியொன்றில் கல்வி கற்றவன். பெண்களோடு அதிகம் பேசிப் பழக்கமில்லாதவன். பேசவேண்டுமென்ற ஆவலும் ஏற்பட்டதில்லை. ஆனால் இந்தப் பெண்ணுடன் பேசவேண்டுமென மனம் விரும்பியது.

அவளுடன் அந்த மண் புழுதி ஒழுங்கையில் நடக்கும்போது இந்த உலகம் எவ்வளவு இனிமையானதென அவன் எண்ணமிட்டான். இளமையின் இனிமைகளைக் கைவிட்டு சுதந்திரக் கனவுகளைக் கைப்பற்றக் கரங்களில் ஆயுதங்களை ஏந்திய அவன் ஒத்த வயதினரின் நினைவு அவ்வேளையில் எழுந்தது.

'என்ன ஏதுவும் பேசவில்லை...' என்று அவன் அவளைக் கேட்டான்.

'இன்று காலை கைதடியில் விழுந்த ஷெல்லால் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்த மூவர் உடல் சிதறிப்போனார்கள்... அதை எண்ணிக் கொண்டன்...

'நானும் கேள்விப்பட்டன்... எங்களுக்கு நிம்மதியும் வராது. சரியான சமயத்தில் சாகவேண்டுமென எங்கட அப்பு சொல்வார். ஆனா இங்க குஞ்சு குருமானிலிருந்து சருகுகள் வரை நித்தம் அழிந்துகொண்டிருக்கின்றன...'

'மரணம் எப்ப வருமெண்டில்லை: நகுலன். எல்லாப் பக்கங்களிலும் துப்பாக்கிகள் ஏந்தப்பட்டு குறி வைக்கப்பட்டுள்ளன. மரணம் எப்பவும் எவ்வடிவிலும் வரலாம். வீட்டில்: வீதியில்: வயலில்: ஒழுங்கையில்: முகட்டில்: யுத்தகளத்தில்... எங்கும் வரலாம். நான் எப்பவும் சாகத் தயாராகவிருக்கிறன். ஆனா என் சாவில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும்... நோக்கம் இருக்க வேணும்...'

அவன் வியப்புடன் சுகந்தியைப் பார்த்தான். அவள் மெதுவாக நடந்தபடி பக்கத்தில் விரிந்துகிடந்த வயல் வெளியைப் பார்த்தாள். அவள் முகத்தில் அசாதாரணமான இறுக்கம் காணப்பட்டது.

'குறிக்கோள் என்றால்?...'

அவள் அவனைத் திரும்பிப்பார்த்துப் புன்னகைத்தாள். அவனுடைய அறியாமையை ஏளனம் செய்கிறாளோ என அவனுக்குப்பட்டது.

'கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் ஷெல் பட்டு உடல் சிதறி இறப்பதற்கும் களத்தில் குண்டடிபட்டுப் போராளி ஒருவன் இறப்பதற்கும் இடையிலான வித்தியாசம்தான்...'

'துப்பாக்கி ஏந்தி இந்த மண்ணை இரத்தத்தால் குளிப்பாட்டுவதை நான் வெறுக்கிறேன்; சுகந்தி. ஒருத்தரையொருத்தர் குண்டுகளால் துளையிட்டுச் சரிப்பதில் என்னவிருக்கிறது? மனிதர்கள் வெறுமனே சாகப் பிறந்தவர்களல்லர். வாழ்ந்து சாகப் பிறந்தவர்கள்.'

'அது சரி... துப்பாக்கிகளை நாங்களா ஏந்தினோம்? ஏந்த வைக்கப்பட்டுவிட்டோம்...'

'எங்களுடைய இந்த அவல நிலைக்குக் காரணம் நாங்கதான். ஆறறிவு படைத்த மனிதர்கள் இப்படி ஒருத்தரையொருத்தர் அழித்துக் கொண்டு மிருகங்களிலும் கேவலமாக நடப்பது இந்த நூற்றாண்டின் உலக நியதியாகிவிட்டது. எங்கும் மரணங்கள்... ஆதிக்க வெறி... ஏவுபவர்கள் சிலராகவும் பணிபவர்கள் பலராயும் மாறிவிட்ட உலகம். சமாதானம் விரும்புகிறவர்களுக்கு அமைதியை விரும்புகிறவர்களுக்கு இந்த உலகத்தில் எங்குமிட மில்லை என்றாகிவிட்டது. துப்பாக்கிச் சத்தம் ஒலிக்காத ஓரிடத்தில் வாழ நான் விரும்புறன்...'

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். சுகந்தி எண்ணியது போல அவன் சராசரி ஆண்மகன் அல்லன். மாறுபட்ட கருத்துக்களை அவன் கொண்டிருக்கிறான் என்பது அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே புரிந்திருந்தது.

'துப்பாக்கியைக் கையில் ஏந்தும்போதே ஏந்தியவனின் மரணம் உறுதியாகிவிடுகின்றது' என்றான் நகுலன். 'என்னுடன் படித்தவர்கள் பலர் இருந்தவிடம் தெரியாமல்

அழிந்துவிட்டார்கள்.'

அவன் விழிகளில் எக்கம் படர்ந்தது. சயிக்கிளை உருட்டிய கரங்கள் தளர்ந்துவிடுவன போலிருந்தன. பல முகங்கள் மனதில் தோன்றி அழிந்தன. அவர்கள் படிக்கும் போது எவ்வளவு கனவுகள் கண்டார்கள்! டொக்டர்களாக இஞ்சினியர்களாக ஆசிரியர்களாக காதலர்களாக கணவர்களாக தாய்தந்தையர்களாக பாட்டன்களாக. வாழ்க்கையின் உயர் படிகளில் அவர்கள் ஏறவில்லை. ஆரம்பகட்டத்திலேயே ஏறிய வாழ்க்கை ஏணி இடைநடுவில் உடைந்து சரிந்துவிட்டது. மண்ணில் விதைக்கப்பட்டுவிட்டார்கள்.

சுகந்தி தன் கரங்களில் தூக்கிவந்த தண்ணீர்க்கான்களை நிலத்தில் வைத்தாள். பின்னர் கரம் மாற்றித் தூக்கிக் கொண்டாள்.

'நான் ஒன்றைத் தூக்கி வரட்டுமா?' என்று அவன் கேட்டான். அவள் புன்னகையால் மறுதலித்தாள்.

'நகுலன் நான் உம்மிடம் இப்படி எதிர்பார்க்கவில்லை. உம்முடைய கருத்துக்களுக்கு நான் உடன்பாடில்லை. ஒரு நாளைக்கு இதுபற்றிக் கதைப்பம். சுதந்திரக்கனியைப் பறிப்பதென்றால் அவ்வளவு இலேசான விடயமல்ல. பாதையில் மரணங்களின் செந்நிறக்கம்பளத்தில் தான்...' அவள் முடிக்குமுன் அவன் வேகமாகக் குறுக்கிட்டான். 'சும்மா வார்த்தைகளை ஈர்க்கும் விதத்தில் இறைக்காதீர்கள்.'

அவள் மௌனமானாள்.

கோயிலின் பின் வீதியில் ஏறி வடக்குப்பக்கமாக நடந்தனர். கோயில் கோபுரத்தில் சிறகடித்துச் சப்தம் எழுப்பிய புறாக்கள் தமது மறைவிடங்களில் இரவுத் தூக்கத்திற்காக ஒதுங்கிக் கொண்டன. கோபுரம் இருள் பரவலில் ஆழத்தொடங்கியது.

'நான் போயிட்டு வாறன் நகுலன்...' என்றபடி தனது வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு சுகந்தி நுழைந்தாள்.

அவன் தலையாட்டிவிட்டு சயிக்கிலில் ஏறிக் கொண்டான்.

பொன்னுத்துரை மாஸ்ரரின் வீட்டுப்படலையை அடைந்தபோது ஒரு வியப்பான காட்சியைக் கண்டான். சயிக்கிலில் இருந்து குதித்து அக்காட்சியை அடங்கா

வியப்புடன் பார்த்தபடி நின்றான்.

பொன்னுத்துரை மாஸரர் படலைக்கு முன் வீதியில் நின்றிருந்தார். அவரின் மனைவி வாளியில் தண்ணீர் அள்ளி வந்து கொடுக்க அவர் அதனை வாங்கித் தலையில் ஊற்றிக் கொண்டார். மூன்று வாளித் தண்ணீரை அவர் தன் தலையில் ஊற்றிக்கொண்டார்.

'என்ன அங்கிள்?...' என்று நகுலன் அதிசயத்துடன் கேட்டான்.

'செத்த வீட்டிற்குப் போயிட்டு வந்தனான்; தம்பி. எங்கட வீடுகளில துடக்கோட உள்ளுக்கு விடமாட்டினம்.'

'நாங்க வீட்டுக்குள்ளதான் போகமாட்டம். கிணத்திலும் தண்ணி அள்ளமாட்டம். கிணற்றடியில மூன்று வாளி ஆராவது அள்ளி வார்த்துவிட்டதும் நாங்களே அள்ளிக் குளித்துவிட்டு வீட்டிற்குள் போவம்...'

'விசயம் வழக்கம் ஒண்டுதான். ஊருக்கூர் கொஞ்சம் வித்தியாசம்...' என்று பொன்னுத்துரை சிரித்தபடி படலையைத் திறந்துகொண்டு கிணற்றடிக்குச் சென்றார்.

அவன் சயிக்கிலை உருட்டிக்கொண்டு உள்ளே சென்றான். முற்றத்தில் நிறுத்திவிட்டுத் தண்ணீர்க்கானை எடுத்துத் திண்ணை யில் வைக்கும்போது அம்மா கேட்டாள்: 'தண்ணி எடுத்துவர ஏன் இவ்வளவு நேரம். எப்ப போனனீ. இருண்டதும் வாறாய்...'

'கிணற்றடியில் சரியான சனம் அம்மா...'

அவன் திண்ணைக் குந்தில் அமர்ந்தான். மாலதி தேநீரு டன் அவன் அருகில் வந்தாள். அவன் வாங்கிக் கொண்டபடி 'மாலதி: இங்க நல்ல தண்ணியள்ளக் குமர்ப்பிள்ளைகள் தான் கிணற்றடிக்கு வருகுதுகள். நீ வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கிறாய்...' என்றான் சிரித்தபடி.

'அம்மா நல்லா விடுவா' என்றாள் மாலதி துயரத்துடன்.

'நீ இருக்கேக்க பொம்பிளைப் புள்ளையள் ஏன் வெளி வேலை பார்க்க வேணும்?' என்றபடி அம்மா குசினிக்குள் இருந்து வெளியில் வந்தாள்.

'நீங்கள் அம்மா... இன்னமும் பதினெட்டாம் நூற்றாண்

டில இருக்கிறியள். இருபத்தோராம் நூற்றாண்டு நெருங்கப் போகுது... ஊருலகத்தைப் பார்த்துத் திருந்துங்கோ. இண்டைக்கு எங்கட பொம்பிளைப்பிள்ளையள் துவக்கெடுத்துக் கொண்டு சண்டைக்குப் போயிட்டினம். வெளிநாடுகளில பொம்பிளையள் விமானம் கூட ஓட்டுகினம். இங்க மாலதித் தங்கச்சிக்குச் சரியாக சயிக்கில் கூட ஓட்டத்தெரியாது.'

'என்ர பிள்ளை அப்படியே இருக்கட்டும்.'

அவன் தேநீரைக் குடித்தபடி தங்கையைப் பார்த்துச் சிரித்தான். அம்மா அப்பாவின் வார்த்தைகளுக்கு எதிர் வார்த்தை பேசித் தெரியாதவள். அப்பா வராமல் எங்கும் தனியாகப் போய்ப் பழக்கமல்லாதவள். மாலதியையும் தன்னைப் போல வளர்த்துவிட விரும்புகிறாள். ஆனால் அப்பாவிற்கு அப்படி அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. வார்த்தைகளிலோ நடத்தைகளிலோ அப்பா அப்படி வெளிக் காட்டியதை அவன் கண்டவனல்லன். அம்மாதான் தங்களைச் சுற்றி ஒரு தடுப்புவேலி போட்டுக் கொண்டிருக்கிறாள். அந்தக் கட்டுப்பாட்டு வேலியை வெட்டியெறிந்துவிட்டு மாலதியால் வெளிவர முடியவில்லை.

'இராசரத்தினம் அங்கிளுடைய சுகந்தி கூடத் தனியக் கிணற்றடிக்கு வந்து தண்ணி அள்ளிக்கொண்டு போகுது. அம்மாவிற்கு மாலதியை வெளியில விடப் பயம். தயக்கம்...' என்றபடி நகுலன் எழுந்தான்.

'அவள் வருவாள்'... என்றாள் அம்மா சற்றுக் கடுமையாக. 'அவள் இயக்கத்துக்குப் போனவள். மாஸ்ரரும் அவற்றை மனிசியும் காம்ப் காம்பாக ஏறி இறங்கிக் கெஞ்சிக் கூத்தாடிக் கடைசியாக அழைத்து வந்தவை. அவை வளர்த்த வளர்ப்பு அது... தாய் தேப்பன் கண்ணீர் விட்டு அழுது கெஞ்சியபோது கூட சுகந்தி வரமாட்டன் எண்டிட்டாளாம்: முதலில். பின்னர் உன் முன்னால நஞ்சு குடிப்பன் என்று தாய்க்காரி கதறியபின்னர் தான் வீட்டிற்கு வந்தாளாம்...'

நகுலன் மீண்டும் திண்ணையில் அமர்ந்து கொண்டான். இச் செய்தி அவன் அறியாதது. சுகந்தியின் பேச்சில் நிரவிக் கிடந்த கருத்துக்களின் காரணம் அவனுக்குப் புரிந்தது.

'இஞ்ச பார் நகுலன்... சுகந்தியோட சும்மா பேச்சு வார்த்தை வைச்சுக் கொள்ளாதை... என்றபடி அம்மா

குசினிக்குள் நுழைந் தாள் அவன் திண்ணையில் அமர்ந்தபடி வெளியே பார்த்தான். பொன்னுத்துரை மாஸ்ரர் மாட்டைப் பிணைப்பது தெரிகிறது. கட்டிநின்ற கன்று தாயிடம் பால் குடித்துவிடத் துடிப்பதும் தெரிந்தது. அவிழ்த்து மடியில் வாய் வைக்க விட்டுவிட்டுப் பால் கறப்பதில் அவர் ஈடுபடுகிறார்.

கோழிகள் மாட்டுக்கொட்டிலின் கூரையில் பறந்து ஏறிக் கொள்கின்றன. பகல் முழுவதும் விழித்திருப்பதும் இரை தேடுவதும் இரவு நேர உறக்கத்திற்காகத்தான் போலும். உறக்கத்தின் இனிமைக்காகப் பகல் முழுவதும் விழித்திருக்க வேண்டியுள்ளது என அவன் எண்ணிக்கொண்டான்.

சுகந்தி ஏன் இயக்கத்திற்குப் போனாள்? அவள் குடும்பத்தில் இராணுவத்தால் எவராவது பாதிக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது பேரினவாதத்தால் தமிழ்ச் சமூகம் படுகின்ற இன்னல்களைப் பொறுக்க முடியாமல் சேர்ந்தாளா? பின் ஏன் திரும்பி வந்தாள்? சுகந்தியை எண்ணும்போது அவனுக்குப் பெருமிதமாகவிருந்தது. துணிச்சலான பெண். அவளிடம் காரணம் கேட்க வேண்டும். ஒவ்வொருவரும் தாம் செய்கின்ற செயலிற்குத் தம் பக்கத்தில் நியாயம் வைத்திருப்பார்கள். சுகந்தியும் வைத்திருப்பாள்.

அவளுடைய மென்மையான கரங்கள் துப்பாக்கியைத் தூக்கியிருக்குமா? அவளுடைய மலர்ந்த முகத்தில் வன்மம் கவிய முடியுமா?

அவன் வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தான்.

மாலதி லாந்தரைக் கொழுத்தி வளைவில் மாட்டியிருந்த தொங்கு கம்பியில் கொழுவிவிட்டாள். திண்ணையில் மங்கலான ஒளி பரவியது. மண்ணெண்ணெய் வாங்கி லாம்பு எரிப்பதென்பது இன்று பணக்காரர்கள் வீட்டில்தான் சாத்தியம். மண்ணெண்ணெ யின் விலை போத்தல் நூற்றைம்பது இருநூறு என உயர்ந்து விட்டது. குப்பி லாம்பிலும் சிக்கன லாம்பிலும்தான் பெரும்பாலான மக்கள் இருளைப் போக்குகிறார்கள். பல வீடுகளில் இருள்வதற்கு முதலே இருப்பதைப் பகிர்ந்து சாப்பிட்டுவிட்டு உறங்கப் பாய்களை விரித்துவிடுகிறார்கள்.

யாழ்ப்பாணப் பக்கமாக ஷெல்கள் சீறிக் கொண்டு பாய்ந்து விழுந்து வெடிக்கின்ற சத்தங்கள் எழுகின்றன.

குண்டுகள் பெரும் சத்தத்துடன் வெடித்தன. வானத்தில் தூரத்தில் விமானம் ஒன்றின் இரைச்சல் எழுகிறது.

யாழ்ப்பாண நகரத்தை நோக்கி இராணுவம் முன்னேறத் தொடங்கி விட்டதோ? இனந்தெரியாத சோகமும் கோபமும். அவனுள் எழுகின்றன.

யுத்தகளமாகிவிட்ட யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக் கெல்லாம் குண்டுகள் விழும். சன்னங்கள் திக்குத் திசையின்றி எதிர்ப்படு கின்ற அனைத்தையும் துளையிட்டுச் செல்லும். இந்த வேளையில் யாழ்ப்பாணத்தில் இவ்வளவு மக்களும் இருந்திருந்தால் நிச்சயம் பெரும் உயிரழிவு ஏற்பட்டிருக்கும். இடம் பெயர்ந்து வந்தது சரியான முடிவுதானோ?

அவன் வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தான்.

சோகத்தின் இருள் பிடியுள் அவன் ஆழ்ந்து போனான்.

# 13

திண்ணையில் இருந்த கதிரையில் அமர்ந்து சிகரெட் ஒன்றைப் புகைத்தவாறு வெளியே பார்வையைச் செலுத்தியபடி சிந்தனை வயப்பட்டிருந்தார் சுவாமிநாதன். ஆனைக்கோட்டையிலிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரிக்கு வந்ததிலிருந்து இப்படித் திண்ணையில் இருப்பதும் சிகரெட் புகைப்பதுமாகப் பொழுது கழிந்துகொண்டிருக்கின்றது. அவருடைய மாமன் மயில்வாகனத் தின் மச்சானின் வீடு சாவகச்சேரியில் வசதியாகக் கிடைத்ததால் மற்றவர்கள் மாதிரி அல்லற்பட்டு அலைய நேரிடவில்லை. நாவற்குழிப் பாலத்தைக் கடந்ததும் நேரடியாக பாலசிங்கத்தாரின் வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டிலும் கொழும்பிலும் குடியும் குடித்தனமுமாக இருக்கிறார்கள். சாவகச்சேரியில் கிடக்கும் சொத்துக்களை விட்டுவிட்டுப் போகும் மனப்பக்குவம் வராததால் தள்ளாத வயதிலும் பாலசிங்கத்தார் இங்கேயே தங்கிவிட்டார். இடப்பெயர்வினால் பலர் அவர் வீட்டிற்கு வந்தது அவரது தனிமையைப் போக்கிவிட்டது. தனது நாற்சார் வீட்டின் ஒவ்வொரு பகுதியை ஒவ்வொருவருக்கு ஒதுக்கிக்கொடுத்துவிட்டார்.

'தம்பி: பாலசிங்கத்தார் போல தங்கமான மனிசரைக் காண்பது கடினம்... அவருடைய தங்கச்சி என்ர மனிசி... உமக்கு அது தெரியும்தானே...' என்று ஆரம்பத்தில் ஒருநாள் மயில்வாகனம் சுவாமிநாதனுடன் பேச்சைத் தொடங்கினார்.

'தெரியும் அம்மான்... உங்களாலதான் நாங்க இங்க வந்தம். ஏதோ ஊரூராக அலையாமல் வசதியாக இருக்கிறம். சாவகச்சேரியில ஆக்கள் படுகிற பாட்டைப் பார்க்கேக்கை போது நாங்க குடுத்து வைச்சிருக்கிறம். நல்ல மனிசன்...'

'ஒரு விசயத்தில பாலசிங்கத்தார் கொஞ்சம் இறுக்கம்...'

'சொல்லுங்கோ அம்மான்...'

மயில்வாகனத்தார் சுற்றுமுற்றும் பார்த்தார். ஒருவரும் அவர் குரல் கேட்கும் தூரத்தில் இல்லையென உறுதிப்படுத்திக் கொண்டு: 'ஒரு பொருளைக்கூட அவரைக் கேட்காமல் எடுக்கக் கூடாது தம்பி. விழுகிற தேங்காய் மாங்காயிலிருந்து பனைமட்டை தென்னம் ஓலை வரை... அந்தாள் அவற்றைக் கவனமாகச் சேர்த்து வித்து... விரும்பித்தந்தால் வாங்கலாம்... தப்பித் தவறி யாராவது எடுத்திட்டால் அந்த மனிசன் சன்னதம் பிடிச்சு ஆடும்... ஏன் இப்படியிருக்குதோ தெரிய வில்லை. நல்ல சொத்துப்பத்து இருக்குது... ஆருக்காகத் தேடுதோ... என்றார் மயில்வாகனம்.

சுவாமிநாதன் வாய்விட்டுச் சிரித்தார்.

'அதில என்ன பிழை...அந்தாள் சரி. அப்படித்தான் இருக்க வேண்டும்...'

'இப்படி நப்பியாகவோ?...'

'அம்மான் அந்தக் காலத்திலேயே உங்களுக்கு அந்த மனிசன் நாற்பத்தெட்டுப்பரப்பு தென்னந்தோட்டம் சீதன மாகத் தந்தவர் என்றியள். இருபது ஏக்கர் வயல் தந்தவர் என்றியள். முப்பது பவுனில நகை போட்டவர் என்றியள்... அதில எதையாவது இப்ப நீங்கள் வைச்சிருக்கிறியளோ? எல்லாத்தையும் அழிச்சுப் போட்டியள். நித்தம் குடி...எனக்குத் தெரியாதே' அந்தாள் நப்பியே?...'

மயில்வாகனத்தார் எதுவும் பேசவில்லை. பாலசிங்கத்தா ரிடம் சற்றுமுன்னர் பணம் கேட்டிருக்கிறார்.

'அறைநிறைய நெல் இருக்குது... வளவில தேங்காய் இருக்குது... காய்கறி வாங்கிப் போடுறன். நல்லாக் குறைவில்லா மல் சாப்பிடுங்கோ. அதைவிட வேறு தேவைக்கு என்னால ஏலாது தங்கச்சி... மனிசனிட்ட சொல்லிவை...' என்று பாலசிங்கத்தார் அவரது மனைவியிடம் கூறியது அவருக்கு எரிச்சலைத் தந்தது. திக்கம் சாராயமே இருநூற்றிஐம்பது

விற்கிறது. கசிப்புக் காய்ச்சுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். களுத்துறைச் சாரக்கிலும் அற்புதமாக வடிப்பார்கள். அகப்பட்டால் புலிகள் விடமாட்டார்கள். கைது செய்துகொண்டு போய்விடுவார் கள். பல விடயங்களில் புலிகளின் நிர்வாகம் சிறப்பாகத்தான் இருந்திருக்கிறது. சமூகத்தில் குற்றங்கள் இல்லாது பேணிக் காத்திருக்கிறார்கள். சண்டை. சச்சரவு: திருட்டு: விபச்சாரம்: கசிப்புக்காய்ச்சுதல் என்பன தடைசெய்யப்பட்ட நடத்தைகள்.

'இரவு பன்னிரண்டு மணிக்குக்கூட ஒரு பொம்பிளை றோட்டால தனிய வரலாம்... என்று அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பலர் பேசிக்கொண்டார்கள். உண்மைதான்.

இந்த இடப் பெயர்வோடு இப்படியொரு போராட்டம் வேண்டாமெனப் பலர் பேசிக் கொண்டார்கள்.

'மாங்குளம் காம்ப் அடிச்சிட்டான்களாம்...'

'விமானங்களைச் சுட்டு விழுத்திவிட்டான்களாம்...'

'கடற்படைப் படகுகளை நிர்மூலமாக்கிவிட்டான்களாம்...'

என்றெல்லாம் செய்திகள் வரும்போதெல்லாம் யாழ்ப் பாணத்து மக்களில் பெரும்பாலோர் புலிகளின் வீரத்தையும் தியாகத்தையும் மெச்சிக் கொண்டார்கள்.

'சும்மா லேசே... எங்கட பொடியள் விடுவான்களே...'

இப்பொழுது நிகழ்ந்துவிட்ட பெரும் இடப்பெயர்வுடன் பலருடைய பேச்சுக்கள் மாறிவிட்டன.

'ஆர் கேட்டது தமிழீழம்? நிம்மதியாக இருக்க விடமாட்டான்கள்... அரசோட மோத முடியுமே? எங்கயாவது கெரில்லாக்கள் அரச இராணுவத்தை வெற்றி கொண்டதாக வரலாறிருக்குதோ? விசர்ப்பிள்ளைகள் எல்லாரையும் அழித்து விட்டுத்தான் இந்த யுத்தம் முடியும்... பிறகு ஆருக்கு தமிழீழம்...'

தன்னளவில் பாதிப்பு வரும்போது மனம் சிந்திப்பது இழந்து போன இனிமையைத்தான். யாழ்ப்பாண மக்கள்: காங்கேசன்துறைப் பக்கமிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்து வந்தபோதும்: தீவுகளிலிருந்து திரள் திரளாக இடம் பெயர்ந்து உடுத்த உடுப்புடன் வந்தபோதும் புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்தினர். தாங்கள் யாழ்ப்பாணத் திலிருந்து குடியெழும்ப நேர்ந்தபோது கொதித்துப்

போனார்கள்.

சுவாமிநாதனாலும் இத்தகைய பெருந் தியாகத்தை நியாயப்படுத்த முடியவில்லை.

'யாழ்ப்பாணத்திலிருந்து நிகழ்ந்த இந்த இடப்பெயர்வு மேட்டிலே ஏற்றப்பட்ட நீர்... வெள்ளம் போன்றது. மேட்டிலே கனகாலம் தேக்கி வைத்திருக்க முடியாது. அது திரும்பவும் பழைய பள்ளத்துக்கு ஓடிவிடத்தான் முயலும். அணையில் ஒரு சிறு வெடிப்பு ஏற்பட்டுக் கசிவு தொடங்கினால் போதும். முழுவெள்ளமும் பழையபடி திரும்பிப் பாய்ந்துவிடும்.' ஒருநாள் பாலசிங்கத்தார் இப்படித்தான் சொன்னார்.

'அப்ப நீங்கள் சொல்லுறியள்... நாங்க சாவகச்சேரியில கனகாலம் இருக்கமாட்டம் எண்டு... துரத்தப்பார்க்கிறியள்...' என்ற சுவாமிநாதனை பாலசிங்கத்தார் பதட்டத்துடன் பார்த்தார்.

'சீச்சீ அப்படி நான் சொல்லவில்லை. யாழ்ப்பாணத்து ஆக்கள் தென்மராட்சிக்கு வந்ததால எங்களுக்கும் நல்லது... என்ர தனிமை இல்லாது போய்விட்டது. சாவகச்சேரி கொழும்பு மாதிரி சனத்தால் நெரிபடுகிற சந்தர்ப்பம் கிடைத்திருக்குமா? இரண்டு ரூபா வித்த தேங்காய் உங்களால படிப் படியாக ஏறி இன்றைக்கு நாற்பது ரூபாவாகிவிட்டது. ஐந்து தேங்காய்களைச் சந்தைக்குக் கொண்டு போனால் இருநூறு ரூபா. எப்ப இப்படிக் கண்டம்...'

'அம்மான்... நான் மனந்திறந்து சொல்லுறன். வலிகாமத்தானுக்கு தென்மராட்சி வடமராட்சி மக்களைச் சரிவரப் புரிய வைத்தது இந்த இடப்பெயர்வுதான். அவலப் பட்டு வந்தபோது இருகரம் நீட்டி தென்மராட்சி வரவேற்றிருக்குது... தங்களை ஒறுத்து தங்களது வசதிகளில் ஒரு பகுதியை வலிகாமத்து மக்களுக்கு வழங்கியிருக்குது.'

'என்னைக் குழைக்காட்டான் என்று என்ர சம்பந்தி மயில்வாகனம் அடிக்கடி குறிப்பிடுவார்... இன்டைக்குக் குழைக் காட்டானிடம் தான் வந்திருக்கிறார்... இதைச் சொல்லிப் போடாதை தம்பி... கேட்டால் இந்தா வெளிக்கிடுறன் எண்டு தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டுவிடுவான் அந்தக் குடிகாரன். என்னோட ஆசையாக வந்திருக்கத் தங்கச்சியையும் மருமக்களையும் எப்ப விட்டவன். காசு தேவைப்படும்போது மட்டும் தங்கச்சியைப் பிடிச்சு பஸ்சில அனுப்பி வைப்பான்.

நான் என்ர வாழ்க்கையில செய்த பிழை...இவனுக்கு என்ர தங்கச்சியைக் கலியாணம் செய்து வைச்சதுதான்...' அந்த முதியவர் தன் சால்வையால் தன் கண்களைத் துடைத்துக் கொள்வதைப் பார்க்க அவனுக்குச் சிரிப்பாகவும் கவலையாகவுமிருந்தது.

மயில்வாகனத்தாரின் மனைவி தனது தமையனிடம் அளவற்ற பாசம் வைத்திருப்பதை சுவாமிநாதன் பலதடவைகள் அவதானித்திருக்கிறார். இந்த வயதிலும் அந்த அம்மா தமையன் முன் இருந்து பேசியதில்லை. அவர் எதிரில் நின்றபடி; அல்லது அவர் கதிரையில் இருந்தால் திண்ணையில் அமர்ந்தபடிதான் பேசுவாள்.

தனிமையாகவிருந்து சமைத்து உண்டுவந்த பாலசிங்கத்தாருக்கு இப்பொழுது சரியான நேரத்தில் சுவையான சாப்பாடு கிடைத்தது. அதுவும் தங்கையின் கரத்தால் கிடைத்ததால் மச்சான் மயில்வாகனத்தின் செயல்களைப் பொறுத்துக் கொண்டார்.

திண்ணையில் அமர்ந்து சிகரெட் புகைத்தபடி வெளியே பார்வையை மேயவிட்டபடி சுவாமிநாதன் அமர்ந்திருக்கிறார். அவர் அருகில் வந்து அவாது மனைவி மங்கை கையிலிருந்த கோப்பியை வழங்கிவிட்டு அமர்ந்து கொள்கிறாள்.

'என்னப்பா யோசினை?...'

'ஒண்டுமில்லை...'

'எல்லாம் மனிசருக்குத்தானப்பா...கவலையை விடுங்கோ. இப்ப எங்களுக்கு என்ன குறை...பிள்ளையா குட்டியா? நாங்க இரண்டு பேர்தான்...எல்லாருக்கும் உதவிக்கொண்டு இருக்கிறம்...'

அவர் மனைவியைத் திரும்பிப்பார்த்தார்.

அவர் கவனத்தைத் தூரத்தில் பாலசிங்கத்தார் வளவிற்குள் நின்றபடி தென்னை மரங்களின் வட்டுக்களை அவதானிப்பது கலைத்தது.

'அங்க பார்த்தியே அந்த மனிசன் வட்டுக்களில இருக்கிற தேங்காய்களை எண்ணிப் பார்க்குது போல...ஒரு தேங்காய் நாற்பது ரூபாவென்றால் சும்மாவே...'

'சும்மா அப்படிச் சொல்லாதையுங்கோ. அந்த மனிசன் தன்ர பொருளில கவனம்...ஆனால் எல்லாருக்கும் ஒரு குறை

வைக்காமல் செலவழிச்சுப் பார்க்கிறார். எங்களையல்ல... அவற்றை தங்கச்சி குடும்பத்தை...இண்டைக்கு இங்க ஒரு சண்டை இருக்குது...'

'என்ன?...'

'இராத்திரி தேங்காய்கள் விழுந்தது. நாயும் குலைச்சது. மயில்வாகனப் பெரியப்பா இரகசியமாக எழுந்து வெளியில போனவர். விழுந்த தேங்காய்களைப் பொறுக்கி எங்கயோ இராத்திரியே பதுக்கிவிட்டார். ஆள் விடிந்ததும் விடியாதது மாக வெளியில் போய்விட்டார். விசயம் விளங்குதே?' என்று சிரிக்கின்ற மனைவியை சுவாமிநாதன் ஏறிட்டுப்பார்த்து விட்டுப் புன்னகைத்தார்.

வாசலில் நிழலாடியது. பாலசிங்கத்தார் நின்றிருந்தார்.

இவன் செய்த வேலையைப் பார்த்தியே தம்பி... இராத்திரி விழுந்த எட்டுத் தேங்காய்களை எடுத்துக்கொண்டு சந்தைக்குப் போட்டான். அறாவிலைக்கு வித்துவிட்டு தண்ணி அடித்து விட்டு வரப்போறான். தண்ணியடிக்கிறதுக்கு இப்படிக் கள வெடுக்கிறானே? பாலசிங்கத்தாரின் குரலில் துயரம் கோடிட்டது.

'குடிச்சுப் பழகிட்டார்...'

'அப்படிச் சொல்லாதை தம்பி... குடிக்கிறதுக்கு ஒரு வரம்பிருக்குது. இவன் இப்படிக் குடிச்சால் கெதியிலை ஈரல் எரிஞ்சு செத்துப் போயிடுவான். என்ர தங்கச்சியை விதவையாக்கி விடுவான்...'

'இதைப் பேசாமல் விடுங்கோ. நான் அம்மானிட்ட சொல்லுறன்...' அவர் மௌனமாக உள்ளே சென்றார்.

'ஏன் இப்படித் தேங்காய்க்கு இவ்வளவு விலையேற்றம்?'

'தேவை கூடியதுதான்...'

'தேங்காய் மட்டுமே விலையேற்றம்... ஒரு தனிக்கிடுகு இருபத்தைந்து ரூபாவெண்டால் நம்பக்கூடியதாவா இருக்குது? அகதியாக இங்க வந்ததுகள் கிடுகு வாங்கிக் குடிசை போட முடியாமல் தவிக்குதுகள். இத்தனைக்கும் யாழ்ப்பாணம் முழுவதற்கும் தென்னோலை இங்காலப் பக்கமிருந்துதான் வாறது...'

'இராசதுரைக்கு என்ன விலைக்கு கிடுகு வாங்கிக்

கொடுத்தனீங்கள்...'

'இருபத்தைந்துக்குத்தான். ஆனால் ஐம்பது கிடுகு பாலசிங்கத்தார் இலவசமாகக் கொடுத்தவர்.' சுவாமிநாதனின் கண்கள் இடது பக்கமாகத் திரும்பி அடிவளவைப் பார்த்தன. அங்கு ஒரு குடிசை எழுந்துகொண்டிருந்தது. இராசதுரை குடிசை வேய்ந்து கொண்டிருந்தான். ஒரு பெண்ணும் ஒரு பையனும் அவனுக்கு உதவியாகக் கிடுகுகளை எடுத்துக் கொடுத்து உதவிக்கொண்டிருந்தனர். ஒரு ஏழு வயதுச் சிறுமி வேடிக்கை பார்த்துக்கொண்டு மாமரத்தின்கீழ் நின்றிருந்தாள்.

மூன்று நாட்களுக்கு முன்னர் கச்சேரிக்கு ஒரு அலுவலாகச் சென்றபோது; சாவகச்சேரி இந்துக் கல்லூரி அகதி முகாமில் இராசதுரையை சுவாமிநாதன் சந்திக்க நேர்ந்தது. சோர்ந்து போய் நின்றிருந்தான். அவன் முகம் அவருக்கு நன்றாக நினைவில் இருந்தது. தன் தாயை நவாலியி லிருந்து தன் கரங்களில் தூக்கி வந்த உத்தம மகன். நாவற் குழிப் பாலத்தில் பொம்பர் பதிந்த போது ஏற்பட்ட சன இடிபாட்டில் வெருட்சியுடன் ஓடிய சனங்களின் கால்களில் மிதிபட்டு தாய் மரணமடைய அழுது புலம்பியவன். இப் பொழுது நினைத்தாலும் தன்னிரு கரங்களில் அந்தக் கிழவியை பாசத்தோடு ஏந்திக்கொண்டு நின்ற காட்சி நினைவு வருகிறது.

சுவாமிநாதனை அவனும் அடையாளம் கண்டு கொண்டான்.

'இங்க என்ன தம்பி செய்கிறாய்...?' என்று சுவாமிநாதன் கேட்டார்.

'அகதியாக இங்கதான் இருக்கிறன்... என்ர இன்னொரு புள்ளையும் மூண்டு நாட்களுக்கு முன் செத்துப் போயிட்டுது; ஐயா... மூளைக் காய்ச்சலாம். அவனது கண்கள் கலங்கின. எத்தனை இழப்புக்கள்?'

'இங்கயே இருந்துவிடப் போறியா?'

'வேறை வழி; ஐயா. கச்சேரியில ஜி.ஏ.யிடம் கேட்டன். எங்கயாவது யாராவது ஒரு சிறு துண்டு இடம் தந்தால் சொல்லு... குடிசை போட மரந்தடி தாறன் என்றார். அப்படியெங்கயாவது ஒரு காணியில தனிய ஒரு குடிசை போட்டுக் கொண்டு போனால் நல்லது போலப்படுகுது... இருக்கிற ரெண்டு பிள்ளையளை எப்படியாவது உழைச்சுக்

காப்பாற்றிவிடுவன்' அவன் அவரைப் பரிதாபமாக ஏறிட்டான்.

சுவாமிநாதன் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தார். அவன் ஒரு உண்மையான மனிதன். உழைத்துச் சாப்பிட விரும்புகின்ற தொழிலாளி. இத்தனை இழப்புக்கள் ஏற்பட்டும் மனந்தளராது; இருக்கின்ற இரண்டு பிள்ளைகளையும் காப்பாற்றிவிட வேண்டுமென்ற வைராக்கியத்துடன் இருக்கிறான். உதவத்தான் வேண்டும்.

'நாளைக்குச் சொல்லுறன் இராசதுரை. நீ நாளைக்கு என்ர வீட்டிற்கு வா... நானிருக்கிற வீட்டிற்கு வா.'

அடுத்தநாள் அவன் வந்தான். பாலசிங்கத்தார் தனது வளவில் ஒதுக்காக ஒரு குடிசை போட்டுக் கொள்ள அனுமதித்து விட்டார். இரண்டு நாட்கள் கழித்து குடிசையமைக்க அரசாங்க அதிபர் வழங்கிய மரந்தடிகளுடன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் கூடவே ஒரு பெண்ணும் வந்திருந்தாள். அவர் அவளை ஏறிட்டுக் கேள்விக் குறியுடன் பார்த்தார்.

'ஐயா: தப்பாக எண்ணப்படாது...இவ தையல்... எங்கடை ஊர். எவருமேயில்லை. அனாதை... எனக்கு எது சரி பிழையெண்டு தெரியவில்லை. என்ர பிள்ளைகளுக்கு ஒரு தாய் தேவை. நான் வேலைக்குப் போனா பார்த்துக்கொள்ள... சத்தியமாக... ஐயா: எனக்கு எப்படிச் சொல்லுகிறதெண்டே தெரியவில்லை. இப்படியொருத்தி இருந்திருந்தால் என்ர கடைசிப் பையன் ராசு அநியாயமாகச் செத்திருக்கமாட்டான்...' அவன் தான் செய்த காரியத்திற்கு வெட்கப்படுபவன் போல கூனிக்குறுகி நின்றிருந்தான்.

அவர் அவளை நிமிர்ந்து பார்த்தார். அவள் தலையைக் குனிந்து கொண்டு நின்றிருந்தாள். இரண்டு பிள்ளைகளும் அவளோடு ஒட்டிக்கொண்டு நின்றிருந்தன. அவள் அவனை மட்டுமல்ல: பிள்ளைகளின் இதயத்தையும் வென்றுவிட்டாளென்பது தெரிந்தது.

'நான் அப்படித் தப்பாக நினைக்கவில்லை: இராசதுரை. நீ எடுத்த முடிவு எனக்குச் சரியாகப்படுகுது. துயரங்களுக்காக அழுது புலம்பிக் கொண்டிருப்பதும் வாழ்க்கையே முடிஞ்சு விட்டதென எண்ணிக்கொள்வதும் இன்றைய எங்கட வாழ்வில் அர்த்தமில்லாதவை. நீ எடுத்த முடிவிற்காக வெட்கப்படாதை...'

அவர்கள் அவரை நன்றியுடன் பார்த்தார்கள். தையலின் முகத்தில் திருப்தியும் நாணமும் தெரிந்தது. அவரைப் பார்த்து நன்றியுடன் புன்னகைத்தாள்.

குடிசை இன்றுடன் அமைக்கப்பட்டு முடிந்துவிடும். ஒரு அடிக்குந்து வைத்துப் பனைமட்டைகளால் வரிந்து முடித்து விட்டார்கள். கிடுகு போதியளவு கிடைக்காமல் கூரை வேயப்படா திருந்தது. அதனைப் பார்த்த பாலசிங்கத்தார் தன் அசைவிலிருந்து ஐம்பது கிடுகுகளை அவனுக்கு இலவசமாக வழங்கியிருந்தார். பாலசிங்கத்தார் மயில்வாகனம் சொல்வதுபோல கஞ்சரல்லர். தேவைக்கு உதவக்கூடிய ஒருவர் எனச் சுவாமிநாதன் எண்ணிக் கொண்டார்.

திண்ணைக் கதிரையை விட்டு எழுந்து உள்ளே செல்லப் புறப்பட்டபோது கேற்றைத் திறந்துகொண்டு மயில்வாகனம் வருவது தெரிகிறது. அவர் நடையிலிருந்து நன்றாகக் குடித்திருக்கிறார் எனத் தெரிகிறது. தேங்காய் விற்ற பணம் மதுவாக வயிற்றை நிரப்பியிருக்கிறது.

அவர் மீண்டும் கதிரையில் அமர்ந்தார். மயில்வாகனம் அவர் அருகில் வந்து திண்ணையில் பொத்தென இருந்தபடி: 'தம்பி... விசயம் தெரியுமே?' என்று வினவினார். இருக்கமுடியாமல் உடல் தள்ளாடியது. விழிகள் சிவந்துகிடந்தன.

'என்ன அம்மான்...'

'நாங்க இங்கயும் இருக்கமுடியாதாம்...'

'ஏன் உங்கட மச்சான் சொன்னவரே?'

'விசர்க்கதை கதைக்கிறாய்... பேய்க்கதை. நான் அதைச் சொல்லவில்லை. தென்மராட்சியில வடமராட்சியில இருக்கிற எல்லாரும் வலிகாமத்திலிருந்து வந்த எல்லாரும் கெதியில வன்னிக்குப் போய்விடவேண்டுமாம். மீண்டும் ஓடப்போறம்... அதுவும் வன்னிக்கு ஓடப்போறம்...'

சுவாமிநாதன் திகைத்துப் போனார். மயில்வாகனம் வெறியில் உளறுகிறார். அப்படியிருக்காது. காங்கேசன்துறையி லிருந்து ஆனைக்கோட்டைக்கு ஓடிவந்தார். பின்னர் அங்கிருந்து சாவகச் சேரிக்கு ஓடிவந்தார்கள். இனி வன்னிக்கு ஓடுவதா? இப்படியே வாழ்நாள் முழுவதும் ஓடிக் கொண்டே யிருப்பதா? யாழ்ப்பாணச் சமூகம் அப்படியென்ன நாடோடிக்

கூட்டமா'

'நீ தம்பி நம்பவில்லை. நான் குடிச்சிருக்கிறன். இருட்டென்றா லும் மந்தி கொப்பிழக்காது. இப்ப முதலில் கிளாலியால மாவீரர் குடும்பங்களும் போராளிகள் குடும்பங்களும் வன்னிக்குப் போகப் போகினம். அதுக்குப் பிறகு நாங்கள்...கிளாலிப் படகுச் சேவை இலவசமாம். பதினைந்து நாட்களுக்குள்ள அங்கால போய்விட வேண்டும். இல்லாவிட்டால் ஆமி இங்க வரேக்க சொப்பிங் பாக்கோடதான் ஓட நேரிடுமாம்...'

சுவாமிநாதன் விக்கித்துப்போய் அப்படியே இருந்தார்.

# 14

சடைத்துக் கிளைபரப்பி வளர்ந்திருந்த மாமரத்தின் கீழ் அமர்ந்திருந்து ஓய்வெடுப்பதற்குச் சாவகச்சேரியில்தான் எனக்கு நேரமும் வாய்ப்பும் கிடைத்தன. கைதடியில் யாழ்ப்பாணத்திலிருந்து பலபக்கங்களிலும் ஏவப்பட்ட ஷெல்கள் ஆங்காங்கு விழுந்து எடுத்த உயிர்ப்பலிகள் அங்கிருந்து எங்களைக் கல்வயலிற்குத் துரத்திவிட்டன. எல்லாருமாகக் கல்வயல் பாலசுப்பிரமணியம் வீட்டில் தஞ்சம்புக நேர்ந்தது. பாலசுப்பிரமணியத்தின் குடும்பத்தில் அவரும் மனைவியும் அன்புக்கு ஒரு மகனும் ஆஸ்திக்கு ஒரு மகளுமாக மொத்தம் நால்வர் தாம். எங்களில் பதினைந்துபேர் மொத்தமாக அவரது வீட்டின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டோம்.

எங்களுக்கு வீட்டின் பெரும்பகுதியைத் தந்துவிட்டு அவர்கள் ஒரு அறையில் அகதியாகினர். இப்பொழுது நினைக்கும் போது அந்தக் குடும்பத்தின் பெருந்தன்மையும் அரவணைக்கும் உயர் பண்பும் உடலைச் சிலிர்க்க வைக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் எனது வீட்டில் கிடைத்த தனிமை அங்கு எனக்குக் கிடைக்கவில்லை. படிப்பதற்கும் எழுதுவதற்குமுரிய சூழல் அங்கு எனக்குக் கிடைக்கவில்லை. அதனால் அந்த வளவில் வீட்டிற்கு அருகில் நான் ஒரு கூடார வீடு அமைத்துக் கொண்டேன். அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கிய தாரப்பாள் படங்கு அதற்கு உதவியது.

அங்கும் நான் எதிர்பார்த்த தனிமை கிட்டவில்லை. அந்தக் கூடாரத்திற்குள் எனது இரு பேரன்களும் அந்தவீட்டின் பிள்ளையான குகனும் ஒட்டிக் கொண்டனர். நான்கு கட்டில்கள் போடுவதற்கு மட்டுமே இடம் போதுமானதாகவிருந்தது. இரவில் கூடாரக் கட்டிலில் படுத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால் கூரைப்படங்கூடாக வானமும் நிலவும் நட்சத்திரங்களும் நிர்மலமாகத் தெரியும். மழைபொழிகின்ற வேளைகளில் படபடவென மழைத்துளிகள் கூரையில் விழுகின்ற சத்தமும் குளிர்ச்சியும் உறக்கத்திற்கு இதமாகவிருக்கும்.

'யாழ்ப்பாண ஏ.ஜி.ஏ இருக்கவிடமில்லாமல் கூடாரத்தில் இருக்கிறாராம்...' என்ற செய்தி சாவகச்சேரி எங்கும் பரவி ஒப்பீட்டளவில் பலருக்குத் தாம் இருக்கின்ற இடத்துடன் ஒப்பிட்டுத் திருப்தி காணமுடிந்தது.

என் பெறாமகளின் மகன்: என் பேரன் சுரேஷை இப்பொழுது நினைத்துப்பார்க்கிறேன். அவன் என் நலனில் எவ்வளவு அக்கறை செலுத்தினான் என்பது எனக்குப் புரிகிறது. என்னால் சாவகச்சேரிச் சனத்திரளில் ஸ்கூட்டர் ஓட முடியவில்லை. அவன் தனது மோட்டார் சயிக்கிலில் என்னை ஏற்றித்திரிந்தான். என்னால் எனது ஈசிச்செயரின்றி ஓய்வு பெறமுடியவில்லை என்பதற்காக ஒருநாள் யாழ்ப்பாணத்திற்குப் போய் வீட்டிலிருந்து ஈசிச்செயரை எடுத்து வந்தான். யாழ்ப்பாணத்தில் குண்டுமழை பொழிகின்ற நாளில் அவன் துணிச்சலாக அங்கு சென்று வந்தான். தனது வீட்டிலிருந்து எடுத்து வந்த வெளிநாட்டு பெட்சீற்களை எனது கட்டிலில் விரித்துப் 'படுங்கோ அப்பப்பா... என சிசுரூசை செய்தான்.

யாழ்ப்பாணத்தில் நான் வாழ்ந்த வாழ்க்கையின் களைப்புத் தெரியாமல் வைத்திருப்பதில் என் பேரன்களும் பிள்ளைகளும் மிகவும் கவனமாக இருந்தனர்.

ஒவ்வொரு நாளும் பெண்கள் ஒன்று சேர்ந்து பெரும் பந்திச் சமையல் செய்வார்கள். கிடைக்கின்ற காய்கறி: மீன்: இறைச்சி என சமையல் நடக்கும். இத்தனைக்கும் நாங்கள் இருந்த வீட்டார் சுத்தமான சைவக்காரர்.

'நீங்கள் மச்சம் சமைக்கலாம்... அங்கிளால் சாப்பிடமுடியாது அதனால் ஒண்டுமில்லை!' என்று அனுமதி தந்துவிட்டார்கள்.

மாமரநிழலில் அமர்ந்திருந்து பார்க்கும் போது எனது கூடார வீட்டின் முன் நிற்கும் பலாமரத்தின் கீழ் என் குடும்பத்தினர் அமர்ந்திருந்து மாங்காய் சாப்பிடுவது தெரிகிறது. உப்பும் தூளும் கலந்து சப்புக் கொட்டிச் சாப்பிடுகிறார்கள். அந்த வீட்டின் பிள்ளை களான யசோவும் குகனும் அவர்களுடன் காணப்படுகின்றனர். கையிருப்பு மாங்காய் முடிந்ததும் குகன் எழுந்து மரமொன்றில் தாவி மாங்காய்களைப் பறித்துப் போடுகிறான். எனது கடைசி மகள் ஓடிச் சென்று பொறுக்கி வருகிறாள்.

அடுத்த வீட்டில் மாமரங்களில் குரங்குகள் அட்டகாசம் புரிவது தெரிகின்றது. அவை கிளைக்குக் கிளை தாவி மாங்காய் களைக் கடித்துச் சிதறின. புளிக்காதவற்றைக் காந்தித் தள்ளின. எங்களுடைய வளவிற்குள் நுழைவதற்கு அவற்றிற்குத் துணிச்சல் வருவது குறைவு. அவை வேலியில் தாவும்போதே கற்களும் கூச்சலும் அவற்றைத் திரும்பி ஓட வைத்துவிடும். வன்னிப் பகுதிகளில் கூட்டங்கூட்டமாக வகைவகையான குரங்குகளைப் பார்த்து இரசித்த எனக்கு சாவகச்சேரியில் இப்படியொரு கூட்டம் குரங்குகள் இருக்கும் என்பது அதிசயமாகவிருந்தது. அந்த நரைக் குரங்குகளுக் கிடையில் ஒரு சிறையான் குரங்கும் திரிந்தது. அந்தக் கூட்டத்துடன் ஒட்டாத குரங்கு.

'அது வன்னியிலிருந்து ஒரு போராளி கொண்டுவந்த குரங்கு. அவன் செத்ததும் அது இப்படித் திரியுது.' என்று குகன் அறியத்தந்தான். நரைக்குரங்குகள் இந்தச் சிறையானை யும் தம்முடன் சேர்த்துக்கொண்டு திரிந்தன.

அடுத்த வீட்டு மாமரங்களில் குரங்குகள் அமர்ந்திருப்ப தும் மாமரத்திலிருந்து அருகிலுள்ள கூனல் பட்ட தென்னைக் குத் தாவுவதையும் பட்டதென்னையின் பொந்தில் குஞ்சு பொரித் திருந்த பச்சைக்கிளி ஆக்கிரோசத்துடன் தென்னை யில் தாவும் குரங்கைக் கொத்திவிடுமாப்போல வந்து துரத்துவ தையும் பார்த்துக் கொண்டிருந்தாலும் என் மனதில் இன்று கச்சேரியில் அரசாங்க அதிபர் சொல்லிய செய்தி கவலையைத் தந்தது.

'குணம்: நாங்கள் மீண்டும் ஒரு இடப் பெயர்ச்சிக்குத் தயாராக வேண்டும் போலவிருக்குது. வன்னிக்கு எங்களைச் செல்லுமாறு கேட்கப்படப் போகின்றோம். வடமராட்சியில் வன்னிக்குச் செல்லுமாறு கேட்டதால் பல பிரச்சனைகள்

ஏற்பட் டிருக்குதாம். அவர்கள் போக மறுத்துவிட்டார்களாம் இங்கயும் அந்த விசயம் கசிந்துவிட்டது.'

'பட்ட கஷ்டம் போதாதா? இன்னமும் ஓடுவதா... என்னவானாலும் எனக்கு இன்னமும் ஓடிக் கொண்டிருக்க முடியாது. யாழ்ப்பாணத்திலிருந்து ஓடிவர முடிந்தது. ஏதோ ஒரு பாதையிருந்ததால... கிளாலிக் கடலுக்குள்ளால நான்கு இலட்சம் மக்களை வன்னிக்குக் கொண்டுசெல்ல முடியுமே...?இது சாத்தியமில்லை. வன்னி இவ்வளவு சனத்தைத் தாங்காது. வன்னியின் கொள்ளளவு எனக்குத் தெரியும். நான் அங்கு இருபது வருடங்களுக்கு மேல் கடமையாற்றினனான். இப்ப இருக்கின்ற சனத்தொகைதான் வன்னியின் தாங்குநிலையளவு... குளங்களில தண்ணியிருந்தால் காணுமா? மழையில்லா விட்டால் அதுவுமில்லை. தண்ணிக் கஷ்டம்... வீட்டுக் கஷ்டம்... குடிசை போட மரந்தடி கிடைக்கும்... கிடுகு கிடைக்குமா? சும்மா இலேசாக வன்னிக்குச் செல்லச் சொல்லலாம். ஆனால் அங்க இருக்கிற வசதிகள் மிகமிக அற்பம்... அரைவாசிச் சனம் நோய் கண்டே செத்துப் போயிடும். அதைவிட இங்க இருந்துவிடுவது சரியாக எனக்குப் படுகிறது...'

அரசாங்க அதிபர் மௌனமாக என்னைப் பார்த்தார். அவரது முகத்தில் கவலை படர்ந்தது.

'அகதிகளுக்கு குடிசை போட்டுக் கொடுக்க மரந்தடி சாமான்கள் இருக்குது... புதிதாகக் குடிசைகள் அமைப்பதைக் காலதாமதப் படுத்தும்படி சொல்லுகினம். ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டும்.'

'இராணுவம் தென்மராட்சிக்கும் வருமா?'

'வரும்...'

'வந்தால்...?'

அவர் சிரித்தார்.

அந்தச் சிரிப்பில் ஓராயிரம் அர்த்தங்கள் இருந்தன. இப்பொழுது நினைக்கும்போது கவலையாகவிருக்கின்றது. வன்னிக்குச் செல்ல நேரிடலாம் என்ற செய்தியை நான் வீட்டில் எவருக்கும் தெரிவிக்கவில்லை. இடப் பெயர்வின் துயரத்தை மறந்து புதிய வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பிள்ளைகளைக் கலக்கத்திலாழ்த்த நான் விரும்பவில்லை.

எனக்கு இந்த இடப்பெயர்வின் அரசியல் புரியவில்லை.

இடப்பெயர்வால் கலங்கித் தவிக்கின்ற மக்கள் ஆயிரக் கணக்கானோர். ஒவ்வொரு பொருளின் விலையேற்றம் சாதாரண மக்களால் எட்டிப்பிடிக்க முடியவில்லை. எத்தனை வீடுகளில் ஒரு வேளைச் சாப்பாட்டுடன் காலம் கழிகிறது. எத்தனை ஆயிரம் பேர் இன்னமும் சரியாகப் படுத்துறங்க வழியின்றிப் பாடசாலைகளிலும் தாழ்வாரங்களிலும் அவதிப்படுகிறார்கள்.

மண்ணுக்கான யுத்தத்தில் நாங்கள் மண்ணை இழந்து வருகின்றோம். இது வெறும் மண்ணுக்கான யுத்தம் தான். மக்களுக்கான யுத்தம் அல்ல எனப்படுகிறது.

வேலிக்கதியாலில் ஒரு நரைக்குரங்கு தாவி ஏறிக் குதித்துக் கொண்டு இந்த வளவை நோட்டமிட்டது. பெரிய தாட்டன் குரங்கு. அதன் கட்டளைக்குக் காத்திருந்த மற்றைய குரங்குகள் நிலத்தில் குதித்துத் தயாராக நின்றிருந்தது. நான் மாமரத்தின் கீழ் அமர்ந்திருப்பது கதிகாலில் குந்தியிருந்த குரங்கிற்குத் தெரிந்தது. அது பல்லை இழித்துத் தன் ஆத்திரத்தைக் காட்டியது. நான் குனிந்து ஒரு கல்லை எடுக்க அது மறுபக்கம் குதித்து ஓடியது. ஏனைய குரங்குகள் எல்லாம் அதனைத் தொடர்ந்து ஓடி மரங்களில் தாவித் தம்மை மறைத்துக்கொண்டன.

பலர் படலையைத் திறந்து கொண்டு சயிக்கில்களுடன் உள்ளே வருவது தெரிகின்றது. அவர்களின் சயிக்கில்களில் சூட்கேசும் பெட்டிகளும் கட்டப்பட்டிருந்தன. அவர்கள் வருவதைக் கண்டதும் எனது கூடார வீட்டின் முன் அமர்ந்திருந்தவர்கள் எழுந்து வந்தனர். வந்தவர்கள் எனது பெறாமக்கள். ஜெயா: விஜி...பிள்ளைகள். அவர்களின் கணவன்மார்கள். வடமராட்சியில் சென்று இருந்தவர்கள் மூட்டை முடிச்சுக்களுடன் புறப்பட்டு வந்ததிலிருந்து வன்னிக்குச் செல்கின்ற இரண்டாவது இடப்பெயர்வு ஆரம்பமாகி விட்டதைப் புரிந்துகொண்டேன். அவர்கள் எல்லாரையும் கண்டதும் என் மனைவிக்குத் திகைப்பு.

'என்ன...' என்று நான் கேட்டேன்.

'சித்தப்பா..நாங்க வன்னிக்குப் போகப்போறம். இங்க இருக்க முடியாது. ஆமி வரப்போகுதாம். பிள்ளை குட்டிகளை வைத்துக் கொண்டு இங்க இருக்கேலாது. வடமராட்சியில்

பலர் வெளிக்கிடுகினம். வரேக்க வந்ததுபோலக் கஷ்டப்பட முடியாது... அதனால நேரகாலத்தோட கிளாலியால போகப் போறம்...' என்றாள் விஜி.

'அங்க போய் என்ன செய்யப் போறியள்?'

'எல்லாரும் போகினம் போறன்...வசதியள் செய்து தருகினமாம்...'

'உங்களை நான் தடுக்கவில்லை. ஆராருக்கு எது சரியாகப் படுகுதோ அதைச் செய்யுங்கோ...'

'நீங்க வரவில்லையே...?'

'நாங்க இனி எங்கும் வரமாட்டம்.'

என்னுடைய இந்தப் பதில் அவர்களின் முகங்களை வாட வைத்துவிட்டது. வன்னி வளம் கொழிக்கின்றது என அவர்கள் நம்புகிறார்கள். வன்னியின் வளத்தின் தாங்குநிலை எனக்குத் தெரியும். ஒரு குழந்தைக்குக் காய்ச்சல் வந்தாலே மருத்துவ வசதிக்கு யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும். பாதைகள் அடைபட்ட நிலையில் அது சாத்தியமல்ல. மழைக்குக் கிளம்புகின்ற ஈசல் போல வன்னிக்குப் போக இவர்கள் துடிக்கிறார்கள். மிகவும் கஷ்டப்படப் போகிறார்களென உள்மனம் எச்சரித்தது.

காட்டுவெப்பமும் நுளம்புத்தொல்லையும் நான் அனுபவித்தவை. மலேரியாவின் கொடூரம் எனக்குத்தெரியும். அது வந்தால் அதிலிருந்து ஆரோக்கியமாக மீள்வதென்பது மிகவும் கடினமான விடயம்.

'உங்களோட இருக்கிற என்ர பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போகப் போறன்'...என்ற ஜெயாவை நான் கவலையோடு பார்த்தேன். அரவிந்தன் அவள் மகன். அவள் தான் முடிவெடுக்க வேண்டும்.

'அவன் வருவானென்றால் கூட்டிக்கொண்டு போ'...என்றாள் என் மனைவி.

'நான் வரமாட்டன் அம்மா. அப்பப்பாவை விட்டிட்டு வரமாட்டன்' என்ற அவனின் பதில் தாய்க்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. சற்று நேரம் விழிகளில் நீர் சுரக்க மகனைப் பார்த்தபடி இருந்தாள்.

'நீ வராவிட்டால் நாங்களும் போகவில்லை.'

ஒரு குடும்பம் வன்னிக்குப் போகிற எண்ணத்தைக் கைவிட்டுவிட்டது. மற்றைய குடும்பம் பிடிவாதமாக கிளாலிக்குச் செல்லத் தயாராகியது.

'அவர் சரியாகப் பயப்படுகிறார் சித்தப்பா. நாங்க ஆமி வரேக்க இங்க நிக்க முடியாது.' என்ற பெறாமகளை நான் கவலையுடன் பார்த்தேன்.

'அப்படியெண்டால் எல்லாருந்தான்... தெரிந்தோ தெரியாமலோ எல்லாரும் இயக்கத்துக்கு ஏதோ ஒரு வகையில் விரும்பியோ விரும்பாமலோ கட்டாயமின்றியோ கட்டயப்படுத்தியோ உதவியிருக்கிறம். ஆமி சுடுகிறதெண்டால் முழுமக்களையும் சுட வேண்டும்.'

என்னுடைய வார்த்தைகள் அந்தக் குடும்பத்தின் எண்ணத் தைக் கலைக்கவில்லை. அவர்கள் அன்றிரவு அங்கு தங்கிவிட்டு அதிகாலை கிளாலிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். விழிகளில் நீர் சோர விடைபெற்றார்கள். உயிர் தப்பிவிட வேண்டுமென்ற எண்ணமா அவர்களை வன்னிக்கு தோணி ஏற வைத்தது?

இனி எந்தத் துயரமும் என்னை உசுப்பமுடியாது. யாழ்ப்பாணத்தில் அனுபவிக்க வேண்டிய அனைத்துத் துன்பங் களையும் கண்டாகிவிட்டது. அனுபவிக்க வேண்டிய அனைத்து இன்னல்களையும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அனுபவித் தாகிவிட்டது என்று உணர்பவர்கள் அச்சத்துக்கு இரையாக மாட்டார்கள். தமக்கென ஒரு அபிப்பிராயமில்லாதவர்கள் ஓடிக் கொண்டிருக்க வேண்டியதுதான். இவ்வளவு இன்னல்க ளுக்குப் பின்பும் தொடர்ந்து வரும் துயரங்களை எதிர்கொள்ள வழி தெரியாது வலிகாமத்து மக்கள் பரதவித்ததை நான் எங்கும் பார்த்தேன். எல்லாரது முகங்களிலும் மகிழ்ச்சியின் இனிய ஒளி அழிந்து மரணத்தின் பயங்கர இருள் அப்பிக்கிடந்தது.

எல்லாவற்றிலும் மிகக் கொடியது, மாணமல்ல. மரண பயந்தான். தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் அடைக்கலம் புகுந்த நான்கு இலட்சம் மக்களும் மரணபயத்தின் அரக்கக் கரங்களுள் சிக்கிக் கிடந்தனர்.

வானத்தில் பருந்தொன்று கேவியது. அதனைக் காகங்கள்

தமது ஆள் பரபபிறகுள் வரவிடாது தூரத்திக் கொண்டிருந்தன.

அரசாங்கம் கப்பல்களில் அனுப்புகின்ற பச்சை அரிசியையும் பருப்பையும் நம்பி பெரும்பாலான மக்கள் சீவியத்தைக் கழித்தனர். உலர் உணவிற்காகப் பேமிற் பத்திரங்களைப் பெறுவதற்காகக் கிராமசேவகர் வீட்டிற்கும் ஏஜின கந்தோருக்கும் கச்சேரிக்குமாக விடிந்ததும் மக்கள் அலைந்தனர். குடிசை கட்டுவதற்கு மரந்தடி கிடுகு கிடைக்கும் செய்தி அறிந்த மக்கள் அலுவலகம் அலுவலக மாக ஏறியிறங்கினர். வெளிநாட்டுத் தாபனங்கள் இலவசமாகப் பாய்; பெட்சீற்; லாந்தர்; பால்மா என்பன வழங்கும்போது கொதிக்கும் வெயிலில் கால்கடுக்க நின்று கையேந்திப் பெற்றனர். வலிகாம இடப்பெயர்வு தன்மானமுள்ள மக்கள் அனைவரையும் பிச்சைக்காரர்களாகத் தெருக்களில் அலைய வைத்திருந்தது. வலிகாமத்தில் வானத்தைப் பார்த்த புறங்கைகள் தென்மராட்சியில் நிலத்தைப் பார்த்தன. எனக்குத் தெரியத்தக்கதாக வலிகாமத்தில் ஆளுமையும்; கர்வமும்; கௌரவமும் கொண்டு வாழ்ந்திருந்த பலர் வெளிநாட்டான் கொடுத்த சிங்கப்பூர்ப்பாயைக் கைநீட்டி வாங்கிக்கொண்டு தலையைக் குனிந்தபடி நடப்பதைக் கண்டேன்.

எந்த மாபெரும் புரட்சியாலும் சாதிக்க முடியாத காரியத்தை வலிகாமம் இடப்பெயர்வு சாதித்துவிட்டது. ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை உருவாக்க என் ஆசிரியர் கார்த்திகேயன் எவ்வளவு கனவு கண்டார்! வர்க்கபேதமற்ற ஒரு சமூகத்தை உருவாக்க எத்தனை பொதுவுடைமைவாதிகள் வலிகாமத்தில் முயன்று பார்த்தார்கள். முடியவில்லை. ஆனால் 1995 ஒக்டோபர் இடப் பெயர்வு யாழ்ப்பாண மக்கள் அனைவரையும் ஒரே தரத்தினராக் கியது. பெரும் யுகப்புரட்சி சாதிக்க வேண்டிய காரியத்தை ஒருமணி நேரத்தில் சாதித்துக் காட்டிவிட்டது.

எல்லாவற்றையும் இழந்து எல்லாரும் கோவணத்தோடு நின்றார்கள்.

'இந்த இடப்பெயர்விற்குப் பின்னால் பெரியதொரு சமூகப் புரட்சி செயற்பட்டதாகவே எனக்குப் படுகின்றது' என்ற என்னை வைத்திலிங்கம் வியப்புடன் பார்த்தான்.

'ஏன் அப்படிச் சொல்லுறாய்?'

'யாழ்ப்பாணத்தானின் சாதியவெறி: தனக்கென ஒரு சிறிய வட்டத்திற்குள் கிடுகு வேலிகளுக்குள் அடங்கி வீடு வாசல் காணி பூமி கார் நகை என்ற சொத்துச் சேர்த்துக் கொண்டுவாழ்ந்த ஒரு பகுதி: வசதியோடு வாழ்கின்ற ஒரு கூட்டமும் வசதிக் குறைவாக அல்லற்பட்ட இன்னொரு கூட்டமும்... கல்வியாலும் பணத்தாலும் முன்னேறிவிட்ட வர்க்கத்தைப் பார்த்துப் பொறாமைப் பட்ட ஒரு கூட்டம்... அந்த வாய்ப்புகள் தமக்குக் கிடைக்க வில்லையே என்ற மன ஆதங்கம்... அந்த மட்டத்திற்கு உயர்வதற்குப் பதிலாக அந்த மட்டத்தில் இருப்பவர்களைத் தம்மட்டத்திற்கு இழுத்துச் சரித்துவிடுகின்ற ஆவேசம்...எல்லாம் இந்த இடப்பெயர்வின் பின்னால் செயற்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தானுக்கு இவை வேண்டும்.'

'இந்த இடப்பெயர்வால் பணக்காரர்கள் மட்டந் தட்டப்பட்டிருக்கிறார்கள்'... எனப்படுகிறது.

'அப்படிச் சொல்லவில்லை. எல்லாருக்கும் இழப்புத்தான். தத்தமதளவில் ஒவ்வொருவரும் இழந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சம்பவத்திற்குக் காரணம் எனக்குப் புரியவில்லை...'

நண்பர் என்னை ஆவலோடு பார்த்தார். நான் வெளியே எங்கோ வெறிக்கப் பார்த்தேன். யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்து கல்வயலில் பாலசுப்பிரமணியத்தாரின் வீட்டில் ஒட்டிக் கொண்டதன் பின்னர் எவருக்கும் சொல்லாமல் யாழ்ப்பாணத்திற்கு ஸ்கூட்டரில் புறப்பட்டேன். சிறிய அளவில் மக்கள் அங்கு சென்று தங்களது பொருட்களை எடுத்துவந்து கொண்டிருந்தார்கள்.

நாவற்குழியில் நான் மறிக்கப்பட்டேன்.

'யாழ்ப்பாணத்திற்குப் போகமுடியாது: சேர். பாஸ் வேண்டும்.' என்று தமிழீழக் காவல்துறையினர் தடுத்தனர். நான் எதுவும் பேசாது திரும்ப முயன்றபோது: 'அவர் ஏஜிஏ... விடு... ஏதாவது ஒபீசில் பைல் எடுக்கப் போறாராக்கும். நீங்க போங்கோ சேர். கெதியாக வந்திடுங்கோ. நிலமை சரியாகவில்லை. கண்டபாட்டிற்கு ஷெல்கள் ரவுனுக்க வருகுது.' என்று ஒருவன் கூறினான். நான் அவனை நன்றியுடன் பார்த்துவிட்டு ஸ்கூட்டரை யாழ்ப்பாணம் நோக்கிச் செலுத்தத் தொடங்கினேன். கச்சேரி வீதியில் ஏறியபோது தனிமையின் பயங்கரம் புரிந்தது. எவருமற்று வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. ஆங்காங்கு நாய்கள் செத்துக் கிடந்த ஆடுகளைத்

தின்று கொண்டிருந்தன. மருதடிச்சந்தியில் வீதியில பெரும் பள்ளம் காணப்பட்டது. வீதிகள் பலவிடங்களில் துண்டிக்கப் பட்டி ருந்தன. பெரும் பங்கர்கள் வீதிகளுக்குக் குறுக்கே ஊடறுத்தச் சென்றன.

வீதிகளில் எவருமேயில்லை. நெஞ்சு படக்படக்கென்று அடித்துக் கொண்டது. மயான அமைதி. வீடுகள் எல்லாம் திறந்து கிடந்தன. மாடுகள் சில தண்ணீருக்காக அலைந்து கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் நாய்களும் அவை தின்று கொண்டிருக்கின்ற கோழி; ஆடுகளின் சடலங்களும்தான். ஸ்கூட்டர்ச் சத்தம் கேட்டு அவை என்னை மூர்க்கத்துடன் பார்த்தன.

இப்பொழுது ஏதாவது ஷெல் வந்து நான் இவ்விடத்தில் செத்தால் செய்தி தெரிவிக்கவும் எவருமில்லை. அந்தக் கணங்கள் மிகப் பயங்கரமானவை. திரும்பிவிடலாம் என்ற எண்ணத்தோடு ஸ்கூட்டரை மெதுவாக்கியபோது தூரத்தில் ஒரு றக்ரர் ஒரு வீட்டின் முன் நின்றிருப்பது தெரிந்தது. அந்த வீடு என் மைத்துன னுடையது. அவன் எப்படி இங்கு வந்தான்? சாமான் ஏற்றிச் செல்ல வந்தானோ?

நான் வீட்டை நெருங்கியபோது றக்ரர் நிறையப் பொருட்கள் ஏற்றப்பட்டிருந்தன. வீட்டிற்குள் நால்வர் நிற்பது தெரிந்தது. எனது மைத்துனர் உள்ளே இருக்கலாம். ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு படியில் ஏறியபோது கண்ணாடி கள் உடைகின்ற சத்தம் எழுந்தது. ஓடிச் சென்றேன். ஹோலில் நின்றிருந்த ஒருவன் அடங்கா வெறியுடன் சுவரில் பதித்திருந்த அலங்காரச் சோக்கேசின் கண்ணாடிகளைக் காலால் எட்டி உதைத்து உடைத்தான்.

என்னைக் கண்டதும் நிறுத்திவிட்டான்.

'சரி வாங்க போவம்...' என்று அவர்கள் அவசர அவசரமாக வெளியேறப் பார்த்தனர்.

'நீங்கள் யார்?'

என் குரலில் ஒலித்த கடுமை அவர்களைச் சற்றுத் திகைக்க வைத்தது. அவர்கள் தங்களைச் சமாளித்துக் கொண்டார்கள்.

'இது உங்கட வீடா?'

'இல்லை... மச்சானின்ர.'

'அப்ப பேசாமல் போங்க... ஆமி எடுக்கிறதை நாங்க எடுக்கிறம்...'

'எல்லாத்தையும் எடுத்திட்டியள் போகிறது...அந்த சுவர்ச் சோக்கேஸ் கண்ணாடி என்ன கேட்டது?'

அவர்கள் என்னை அவதானமாகக் கூர்ந்து பார்த்தார்கள். அவர்களை எனக்குத் தெரியவில்லை. அவர்களை எதிர்க்கவும் எனக்குத் தைரியமில்லை. அவர்கள் றக்ரரில் ஏறி வேகமாகச் சென்றுவிட்ட பின்னர் என் மனதில் எஞ்சி நின்ற கேள்வி இதுதான். 'அவர்கள் என் சுவர்ச் சோக்கேஸ் கண்ணாடியை உடைத்தார்கள்?

'உங்கட சுகபோக வாழ்க்கை அவர்களுக்குப் பிடிக்கவில்லை அவ்வளவுதான்.' என்று நண்பன் சிரிக்கிறான்.

# 15

வயல்வெளி ஓரமாகத் தடித்த பூவரசு மரங்கள் வளர்ந்து வயற்புறமாகச் சற்றுச் சரிந்திருந்தன. வயல் நிலத்திலும் பார்க்க இரண்டடி உயரத்தில் நெளிந்தபடி ஒழுங்கை புழுதியுடன் காட்சி தந்தது. ஒழுங்கையிலிருந்து வயலிற்கு இறங்கும் இடத்தில் பதிந்த ஒரு மதகின் அருகாக நடைபாதையொன்றும் வயல் வரம்பினூடாக நல்ல தண்ணீர்க் கிணற்றிற்குச் சென்றது. மதகுக்கட்டில் அமர்ந்திருந்தபடி மேலை வானில் சரிந்து கொண்டிருக்கும் சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்தான் நகுலன்.

மாலைக்கருக்கலில் பச்சைப் பசேலென்று காற்றில் மெல்லென அசையும் நெற்கதிர்களுக்கு மேல் கிளிக்கூட்டமொன்று தாழப் பறந்து கிணற்றடியை அடைந்ததும் மனிதருக்கெட்டாத உயரத்திற்கு விண்ணில் சரிந்தெழும்பியது. அவற்றின் சத்தம் அவ்விடத்தின் அமைதிக்குச் சற்றும் பங்கத்தை ஏற்படுத்தவில்லை. இனிமையைச் சேர்ப்பதாக அவன் எண்ணிக் கொண்டான்.

வயலும் வயல் சார்ந்த நிலப்பரப்பும் எவ்வளவு இனிமையானவை என்பதை நகுலன் சாவகச்சேரிக்கு வந்ததன் பின்னர்தான் உணர்கிறான். யாழ்ப்பாணத்தில் இக்காட்சிகள் இருந் தாலும் அவற்றினை இரசிக்கும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிட்ட வில்லை. பாடசாலை: ரியூசன் என்ற சுற்றில் வலம்வந்த அவன் போன்றோருக்கு இந்த இடப்பெயர்வின் புதிய காட்சியனுபவங்கள் வித்தியாசமானவைதாம். அவனது வீடு: அது

அமைந்த சுற்று வட்டத்திற்கு அப்பால் அவனைச் செல்வதற்கு அவனது பெற்றார் அனுமதித்ததில்லை.

சாவகச்சேரியில் அவன் பலவிடங்களுக்குச் செல்ல ஒருவரும் தடுக்கவில்லை. இங்குள்ள கோயில்கள் அமைந்திருந்த இயற்கைச் சூழல் மனதிற்கு இனந்தெரியாத நிம்மதியைத் தந்தன. முந்தாநாள் வெள்ளிக்கிழமை அவன் வசந்தனுடன் சோலையம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தான். முறுகிய பூவரசுக ளும் உயர்ந்து வளர்ந்திருந்த வேம்பு. நாவல் மரங்களும் சுற்றிச் சோலையாகப் பசுமை போர்த்திருக்க அதன் நடுவில் அம்மனின் கோயில் சிறப்பாக அமைந்திருந்தது.

அவர்கள் உள்ளேசென்று வீதிவலம் வந்து வெளியேறிய போது சுகந்தியும் இன்னொரு பெண்ணும் சயிக்கிலில் வந்து கோயில் முன்றலில் இறங்குவது தெரிந்தது.

'வசந்தன்: உம்மடை தங்கச்சி வாறா...' அவன் கூறியபடியே அவளை ஆவலுடன் பார்த்தான். அவள் அன்று சேலை அணிந்திருந்தாள். சயிக்கிலை ஓரமாக நிறுத்திவிட்டு சேலை சில்லினுள் அகப்படாதிருக்கக் காலில் மாட்டியிருந்த கிளிப்பைக் கழற்றக் குனிந்தாள். கழற்றியபடி நிமிர்ந்தபோது தன்னை நகுலன் பார்த்தபடி நிற்பது தெரிந்தது. அவள் உதடுகளில் புன்னகை கோடிட்டது. முன்னால் சரிந்த பின்னலை அலட்சியாகப் பின்னால் தள்ளிவிட்டு கோயிலை நோக்கி அவள் நடக்க அவள் கூடவந்த பெண்ணும் தொடர்ந்தாள்.

நகுலனின் உள்ளம் ஏன் இப்படி அலைபாய்கிறது? எவ்வளவு பெண்களை அவன் வாழ்க்கையில் சந்தித்திருக்கி றான். பேசியிருக்கிறான். ஆனால் சுகந்தியைக் கண்டதும் இப்படியொரு சலனம் எப்படி வந்ததென அவனுக்குப் புரியவில்லை. அவளுடன் அளவளாவ அவன் இதயம் யாசித்தது. அவளுடன் பேசுவது ஒரு தனிச் சுகமாகப்பட்டது.

'கடலை வாங்குவம்...' என்றான் வசந்தன்.

'வாங்கிவா...அப்படிக் கொஞ்ச நேரம் இருந்து சாப்பிடுவம்'

கோயிலில் ஒரு பக்கமாகச் சரிந்து இருக்கையாகப் பயன்படும் விதத்தில் நின்றிருந்த பூவரசில் இருவரும் அமர்ந்து கொண்டனர். கச்சானை உடைத்துக் கொறித்தபடி அவன் இருந்தாலும் கண்கள் கோயில் பக்கமாகவே சென்றன. திறந்த

கோயில். அவள் அங்கு நின்று வணங்குவது தெரிந்தது.

அவர்கள் இருந்தவிடத்தின் பின்னால் மாங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அந்தச் சோலையை அகதிகள் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதால் மெல்லிய நாற்றமும் காற்றில் மிதந்தது.

'என்ன சனம்... கோயில் சுற்றாடலையும் விட்டு வைக்க வில்லை. மணக்குது...' என்றான் வசந்தன். சாவகச்சேரியில் நான்கைந்து பேருக்கெனக் கட்டப்பட்ட கக்கூசுகளின் குழிகள் நிரம்பிக் கொண்டன. அவற்றினைத் துப்பரவு செய்யவென யாழ்ப்பாண மாநகரசபை ஒரு பிரிவையே அமைத்திருந்தது. நகுலனின் வீட்டில் இதுவரை இரண்டு தடவைகள் குழியைத் துப்பரவு செய்துவிட்டார்கள். ஒரு தடவை சுத்திகரிக்க ஆயிரத்திமுன்னூறு ரூபா செலவாகியது. நகுலனின் அப்பா தான் அப்பணத்தைக் கட்டினார். பொன்னுத்தரையைக் கட்ட அவர் விடவில்லை.

கோயிலுக்கு வந்தவிடத்தில் இந்தச் சிந்தனை வந்திருக்கக்கூடாது. காற்றில் மிதந்துவந்த சங்கதி எண்ண வைத்துவிட்டது. நகுலன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

'என்ன நகுல்...சிரிக்கிறாய்?'

'இல்லையடா... காலமையில நாங்கள் கியூவில காத்திருக்கிறதை நினைச்சுக் கொண்டன்.'

'இப்ப சாவகச்சேரியில எல்லா வீட்டிலும் இப்படித்தான்... காலையில நிவாரணச்சாமான் வாங்கக் கியூ... ஆஸ்பத்திரியில மருந்துக்குக் கியூ... கக்கூசுக்குக் கியூ' என்று வசந்தன் சிரித்தான்.

சுகந்தி கோயிலைவிட்டு வெளியேறி வருவது தெரிகிறது. அவள் அசைந்து வருவது அவன் உள்ளத்தை அப்படியே அசைத்தது. நெளிகின்ற அவள் இடையோடு அவன் மனமும் அசைந்தது. வெட்கங்கெட்ட மனமே! என் இப்படி அலைபாய்கிறாய்?

அவர்கள் அவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்தார்கள். வசந்தன் அவர்கள் வந்ததை விரும்பவில்லையெனத் தெரிந்தது.

'அண்ணை! கடலை வாங்கித் தாறியா?'

வசந்தன் கடலைக்காரியை நோக்கிச் சென்றான். நகுலன் எழுந்து நின்று 'கோயிலுக்கு வந்தியளா?' என்று கேட்டான்.

'பின்ன எதுக்கு வந்தமாம்...'

அவள் பளீரெனச் சிரித்தாள்.

'தண்ணியள்ள இப்ப நீர் வருவதில்லையா?'

'வாறனான்...'

'நான் காணவில்லை..'

'நேரத்துக்கே வந்து அள்ளி வந்திடுவன்' என்றாள் சுகந்தி.

வசந்தன் கடலைச் சரையோடு அவர்களிடம் வந்து தங்கையிடம் அதைக் கொடுத்தான்.

'வாறம்..' அவர்கள் சயிக்கில்களில் ஏறிச் சென்ற பின்னரும் நகுலனின் உள்ளம் களிநடமிட்டது.

'போவம்..' என்று வசந்தன் எழுந்தான். சயிக்கில் பாரில் வசந்தனை ஏற்றிக்கொண்டு சயிக்கிலை மிதிக்கும் போது: 'எனக்கு இவர்களின் போக்கு பிடிக்கவில்லை..' என்றான் இருந்தாற்போல.

'யாருடைய போக்கு...?' நகுலன் சற்றுப் பயத்துடன் கேட்டான். நெஞ்சு படபடத்தது. தான் சுகந்தியை ஆழமாகப் பார்ப்பதையும் தன் விழிகளில் தேங்கிய பரவசத்தையும் வசந்தன் கண்டு கொண்டானோ?

'சுகந்தி அவளோடு சேர்வது...'

அவனுக்கு எதுவும் புரியவில்லை.

'அந்தப்பிள்ளை இயக்கத்தில இருக்குது: நகுலன். சுகந்தியோட ஒண்டாகப் படித்தவ. சுகந்தியை ஒருக்காத் தன்னோட இயக்கத்திற்குக் கூட்டிக்கொண்டுபோயிட்டா. கஷ்டப்பட்டுத்தான் வெளியில எடுத்தம். இப்ப திரும்பவும் அவவோடு சோந்திட்டா. அம்மாவுக்குத் தெரிந்தா பதறிப்போவா.'

அவனுக்கு இவை தெரிந்த விடயங்கள்தாம்.
'சுகந்தி இனிப் போவாவா?'

வசந்தன் மௌனமாக இருந்தான்.

'அதைச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. உனக்குத் தெரியாது நகுலன். இயக்கம் என்பது இன்று ஒரு பெரிய காந்தம் மாதிரி... சுகந்தியோடு நீ பேசிப்பாத்தியெண்டால்

புரிந்து கொள்வாய். தமிழ் மக்கள் ஒவ்வொரு கட்டத்திலும் பாதிக்கப்பட் டிருக்கிறம். ஏமாற்றப்பட்டிருக்கிறம்... இனிச் சிங்கள மக்களோடு சேர்ந்து வாழமுடியாதெண்ட நிலைக்கு வந்திருக்கிறம்... உண்மைதான். ஆனால் இப்படி ஆயுதமேந்தி அவமாகச் சாகிறதை நான் வெறுக்கிறன். உடம்பில குண்டுகளைப் பொருத்திக் கொண்டு சாகின்ற வேளையைக் கணத்தைத் தெரிந்து கொண்டு அழிகின்றதை என்னால் நியாயப்படுத்த முடியவில்லை.

அவன் அவளோடு பேசிப் பார்த்திருக்கிறான். அவளது கருத்துக்களின் ஆழத்தைப் புரிந்து கொண்டிருக்கிறான். தன் கருத்துக்கான நியாயங்களை கால ஒழுங்கில் புள்ளிவிபரங்களுடன் எடுத்து முன்வைக்கத் தெரிந்திருக்கிறாள்.

பாதை சீராகவில்லை. குண்டும் குளியுமாகக் கிடந்தது. சயிக்கில் ஓடுவது கடினமாகவிருந்தது. அவதானமாகக் காண்டிலைப் பிடிக்காவிட்டால் சரிந்துவிட வேண்டியதுதான். பாரச் சுமையோடு வந்த ஓரிருவர் சரிந்து எழுந்து சென்றனர்.

'நான் சயிக்கில் விழக்குறன். பாரில் இருந்ததால் கால் விறைத்துவிட்டது...' என்றபடி வசந்தன் சயிக்கிலில் இருந்து இறங்கிக் கொண்டான். இருவரும் சயக்கிலை உருட்டிக் கொண்டு சிறிது தூரம் நடந்தனர்.

'எங்கட வீட்டில சுகந்தியை வெகு அன்போடும் அவதானிப் போடும் கவனிக்கிறம்: நகுலன். அவள் மனம் நோகாமல் பார்த்துக் கொள்ளுகிறம். எங்க கோவிச்சுக் கொண்டு பழையபடி சென்று விடுவாளோவென்ற பயம் எங்களுக்கு... எங்கட அப்பா மிகக் கண்டிப்பானவர். எதற்கும் கண்டிப்பார். எங்கள் விருப்பப்படி எதையும் செய்ய விடமாட்டார். அந்தக் கடும் கண்டிப்புத்தான் சுகந்தியின் இந்தப் போக்குக்குக் காரணமோ என அப்பா இப்ப அடிக்கடி அம்மாவிடம் சொல்வார். அதனால் இப்ப அப்பா எங்களைக் கண்டிக்கிறதில்லை. மாறிவிட்டார்...அப்பா இப்படி மாறினது எனக்குச் சங்கடமாகப்படுகுது. பழைய அப்பாவிலிருந்த கம்பீரம் இப்ப அவரிடம் இல்லை. தோற்றுவிட்டவர் போல இருக்கிறார்...'

நகுலன் வியப்புடன் நண்பனைப் பார்த்தான். வசந்தன் தொடர்ந்தான்: 'அப்பா... ரவுனுக்குப் போயிட்டு வாறன்... எண்டு முன்னர் கேட்டால் கோபத்தோடு எரிந்து விழுந்து

மறித்துவிடுவார். சுகந்தி சென்று வந்ததன் பின்னர் எதைக் கேட்டாலும் மறுப்பதில்லை. சரி கவனம் என்பார்.'

வசந்தன் சயிக்கில் சீற்றில் ஏறி அமர்ந்துகொண்டான். நகுலன் பாரில் தாவி ஏறிக்கொண்டான்.

'நான் நினைக்கவில்லை இனிச் சுகந்தி போவாள் என்று'

'ஏன் அப்படிச் சொல்லுறாய்... எனக்கு மனதில் பயம் இருக்கிறது...அவள் ஆழ் மனதில் பூதம் ஒன்று உறங்கிக் கிடக்கின்றது. அதை அப்படியே உறங்க வைக்க ஒரு வழிதான் இருக்கிறது...'

வானத்தில் பருந்தொன்று கேவியது. சாவகச்சேரியில் பருந்துகளுக்குக் குறைவில்லை.

'என்ன வழி...'

'அவள் உன்னைக் காதலிக்க வேண்டும்...'

நகுலன் அப்படியே உறைந்து போனான். சயிக்கில் காண்டிலைப் பற்றியிருந்த கரங்கள் படபடத்தன. பாரில் இருப்புக் கொள்ளாமல் அப்படியே நெளிந்தான். வசந்தன் பிறேக்கினைப் பிடித்துச் சயிக்கிலை நிறுத்தினான். நகுலன் கீழே இறங்கி அவனை அடங்கா வியப்புடன் ஏறிட்டான்.

வசந்தன் உதடுகளுக்குள் சிரிப்பது தெரிந்தது.

'நகுல்: உன்னை எனக்குத் தெரியும். சுகந்தியைக் கண்டதும் உன் விழிகள் படுகின்ற தவிப்பு எனக்குத் தெரியும். ஒரு அண்ணன் இப்படிக் கேட்கிறானே என்று வியக்காதே... முன்னைய யாழ்ப்பாணத்து அண்ணனாக இருந்திருந்தால்... ஒரு தடவை என் தங்கச்சியைச் சயிக்கிலாலை பின்தொடர்ந் தான் எண்டதுக்காக ஒரு பையனை நடுறோட்டில போட்டுப் புரட்டி எடுத்துவிட்டவன் நான். அப்படிப்பட்ட நான் உன்னிடம் இப்படிக் கேட்கிறன். எனக்கு என்ர தங்கச்சி வேணும்... எல்லாரையும்போல குடும்பமாக வாழ்வதை நான் காணவேண்டும். உடம்பில குண்டுகளைக் கட்டிக்கொண்டு சிதறிப்போவதை நான் விரும்ப வில்லை. நகுல்: எனக்காக... முயன்று பார். சுகந்தியின் மனதை உன்னால கவரமுடியு மெண்டால் என்னைவிட மகிழ்கின்ற ஒருவனும் இருக்க முடியாது... நீ அவளை வெற்றி கொள்ள வேணும்... எனக்காக...

வசந்தன் அவனிடம் யாசிப்பதுபோல விழிகளில் நீர்த்துளிகள் அரும்பக் கேட்டான். நகுலனால் அவனது வேண்டுகோளிற்குப் பதில் கூற உடனடியாக முடியவில்லை. திக்கு முக்காடிப் போய் அவனை இரக்கத்தோடு எறிட்டுப் பார்த்தான்.

'என்ன சொல்லுறாய் நகுல்?'

'வசந்தன்: நான் உன்ர தங்கச்சியை மனதார விரும்புவதை மறுக்கவில்லை. என்னால் அதை மறைக்கவும் முடியவில்லை. ஆனா: எனக்கு அதில நம்பிக்கையில்லை...'

'எதில...'

'அவளை மாற்றமுடியுமென்பதில. அவளோடு பலதடவை பேசிப் பார்த்திருக்கிறன். என் உள்ளக்கிடக்கையை மறைமுகமாக அவளை உணர வைத்திருக்கிறன். அவள் பிடி கொடுத்துக் கதைக்கவில்லை. ஒருநாள் ஏதோ பேச்சிடையே அவள் என்ன சொன்னாள் தெரியுமா?'

நகுலன் மெதுவாக நடந்தபடி விழிகளை ஒழுங்கையில் படரவிட்டான். சயிக்கில் ஒன்றில் விறகுகளைக் கட்டிக் கொண்டு முக்கிமுணுகியவாறு ஒருவன் உருட்டிச் செல்வது தெரிகிறது. அதனைத் தொடர்ந்து நான்கு சிறுபிள்ளைகள் தாயுடன் தொடர்ந்து செல்வதும் அவர்களின் தள்ளாடிய நடையிலிருந்து அவர்கள் பசிக்களைப்பும் தெரிந்தது.

'என்னடா சொன்னாள்?' என்று வசந்தன் ஆவலுடன் கேட்டான்.

'யாழ்ப்பாணத்தில கலியாணம் கட்டிக் குடும்பமாகிப் பிள்ளைகள் பெறுவதற்கு ஓராயிரம் பெண்கள் இருக்கிறார்கள். அந்த வட்டத்திற்குள் வாழ்ந்துவிட எத்தனையோ பேர் தயாராக இருக்கிறார்கள். ஆனா: இந்த மண்ணின் விடிவிற்காக ஒருசில பெண்கள்தான் இருக்கிறார்கள்: என்றாள். அவள் என்ன அர்த்தத்தில் சொன்னாள் என்பதை நான் புரிந்துகொண்டேன். எப்படித்தான் அவளோடு பேசினாலும் அவள் பேச்சு: உணர்வு அனைத்தும் கடைசியில் மண்மீட்பு என்ற பேச்சில்தான் வந்து நிற்கும்.'

அவர்கள் மௌனமாகச் சயிக்கிலை உருட்டிக் கொண்டு நடந்தனர். வசந்தன் அதன்பின்னர் எதுவும் பேசவில்லை. ஆழமான பெருமூச்சொன்றினை வெளிவிட்டான்.

இப்பொழுது வயற்கரையோர மதகில் அமர்ந்தபடி வயலின் மேற்கோரத்தில் தென்னை மரங்களுக்கு அப்பால் இறங்கிக் கொண்டிருக்கும் சூரியனைப் பார்க்கும்போது நகுலனுக்கு சுகந்தியின் வார்த்தைகள் காதில் ஒலிப்பது போன்ற பிரமை. நிலைமை சீரடைந்தால் அவன் பல்கலைக் கழகத்திற்குப் பட்டப் படிப்பிற்காகப் போய்விடுவான். சுகந்தி நிலைமை சீரடைந்தால் பரீட்சை எடுக்காமலேயே விரும்பியவிடத்திற்குப் போய்விடுவாளோ?

நெஞ்சு கனத்தது.

வயற்கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டு பலர் பல திசைகளில் செல்வது தெரிகின்றது. அவன் வயதொத்த பலர் துப்பாக்கிகளை ஏந்திக்கொண்டு திரிவதை அவன் கண்டிருக் கிறான். எல்லாரும் ஒரு விசயத்தையே சீராகப் பேசுவதையும் அவன் கேட்டிருக்கிறான். கழுத்தில் மரண அழைப்பைக் கட்டிக்கொண்டு அவர்களால் எப்படித்தான் அப்படி நிம்மதியா கவும் மகிழ்ச்சியாகவும் நடமாட முடிகின்றது என்பது அவனுக்குப் புரியவில்லை.

அவன் பிளாஸ்ரிக் கானைத் தூக்கிக் கொண்டு எழுந்த போது சுகந்தி சற்றுத் தூரத்தில் தண்ணீர் அள்ள வருவது தெரிகின்றது. அவன் உள்ளம் குதூகலிக்கத் தொடங்கியது. மாலைக் கதிர்கள் அவள்மீது தெளிவாகப்பட்டன. மஞ்சட் கதிர்களால் அவள் குளிப்பாட்டப்பட்டாள். வயற்காற்றின் வீச்சுக்கு அவள் தலை மயிர்கள் எதிர்த்திசையில் தோகை விரித்தன. பின்னிவிடாது கூந்தலை பின்னுச்சியில் கிளிப் பிட்டிருந்தாள். மெலிந்து உயர்ந்த அவளுடலிற்கு நீண்ட அவள் கூந்தல் தனி அழகுதான். கருமுகிலெனக் காற்றில் சரியும் அந்தக் கூந்தலுள் முகம் புதைத்தால் எப்படியிருக்கு மென அவன் எண்ணிக் கொண்டான். எண்ணம் மனதில் கிளைவிட்ட அதேவேளை அவள் சாதாரணப் பெண்ணல்லள் என்ற எச்சரிக்கையும் எழுந்தது.

சுகந்தி அருகில் வரும்வரை அவன் அப்படியே காத்திருந்தாள்.

அவனைக் கண்டதும் அவள் புன்னகைத்தாள்.

'என்ன நகுலன்: தண்ணி இன்னமும் அள்ளவில்லையா?

'கிணற்றடியில் ஆட்களாகவிருந்தினம். அதுதான் இங்க

காத்திருந்தன். அள்ளலாமெண எழ நீரும் வருகிறீர்...'

'பொய்'... என்றாள் அவள் சிரித்தபடி 'எவரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போலப்படுகுது...'

'உமக்கு ஆக்களின்ர மனதைப் படிக்கவும் தெரியும் போல...'

'அப்ப ஆருக்காகக் காத்திருந்தீர்?'

அவள் கேள்விக்குப் பதில் கூற அவனால் முடியும். ஷபெண்ணே: உன் வருகைக்காகத்தான் இவ்வளவு நேரமும் இவ்விடத்தில் காத்திருந்தேன். வழிமேல் விழிகளைப் பதித்து உனக்காகத்தான் இங்கு இரந்திருந்தேன். ஒழுங்கையில் ஏறுகின்ற ஒவ்வொரு அசைவையும் நீ என மகிழ்வோடு எறிட்டுப் பார்த்தபடி இங்கிருந்தேன்.'

'ஏதோ சொல்ல நினைக்கிறீர்'...நகுலன்.

'ஆம் சுகந்தி...சொல்ல நினைக்கிறன். வார்த்தைகள் தான் தொண்டைக் குழிக்குள்ளிருந்து வர மறுக்குது. தயங்குது...

அவர்கள் கிணற்றடிக்கு வந்துவிட்டார்கள். தண்ணீர் அள்ளிப் பிளாஸ்ரிக் கான்களை நிரப்பிக் கொண்டார்கள். மீண்டும் ஒழுங்கையில் ஏறி நடக்கும்போது அவள் கேட்டாள்: 'என்ன சொல்ல நினைத்தீர்?'

அவன் தொண்டைக்குள் வார்த்தைகள் சிக்கித் தவித்தன. அவளை ஏக்கத்துடன் எறிட்டுப் பார்த்தான். அவள் சிரித்தாள்.

'நகுலன்: நீர் என்ன சொல்ல வருகிறீர் என்பது எனக்குத் தெரியும். தயவுசெய்து மனதிற்குள்ளேயே அதை ஆழப் புதைத்துவிடும். சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் போக ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் எல்லாரும் ஓடிப் போய்விடு வீர்கள். எப்ப சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர் பார்த்துக் கொண்டு தான் இங்க பலர் காத்திருக்கினம். துப்பாக்கி அடக்கு முறைக்குள்: பேரினவாதத்தின் சப்பாத்துக் களுள் மிதியுண்டு வாழத்தான் தயாராகவிருக்கினம். அது நன்றாக எங்களுக்குத் தெரியும்.'

'யாழ்ப்பாணம் போவமெண்டு நினைக்கிறீரா?'

'உமது கேள்வியிலேயே ஆர்வம் தொனிக்கிறது'

'நீர் வரமாட்டீரா?'

அவள் வயல்வெளியையும் தூரத்தில் தெரியும் பிள்ளையார் கோயிற் கோபுரத்தையும் வெறிக்கப் பார்த்தாள்.

'வருவன்... இப்பவல்ல... வீதிக்கு வீதி துப்பாக்கிகளை ஏந்தியபடி சென்றிகளில் இராணுவம் நிக்கும் போதல்ல. எங்கள் ஊரை இரண்டாக்கி இராணுவவேலிகள் தலையெழும்பி நிற்கும் போதல்ல... இவை எதுவும் இல்லாது யாழ்ப்பாணம் வாடையில் குளித்து சோளகத்தில் வறண்டிருக்கும்போது... எங்கள் வானத்தில் பொம்பர்களும் ஹெலிகளும் பறக்காத ஒரு காலத்தில்...' அவள் தன்னையிழந்து உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள்.

'நீங்கள் துப்பாக்கிகளைக் கரங்களில் வைத்திருக்கும்வரை இப்படியொரு யாழ்ப்பாணம் வந்துவிடாது.' அவன் தன்னையறியாமல் கூறிவிட்ட வார்த்தைகள் அவளை மிகவும் புண்படுத்திவிட்டன வென அவள் முகபாவம் மாறிய விதத்திலிருந்து அவனுக்குப் புரிந்தது. அவள் அமைதியாகச் சொன்னாள்: 'நகுலன்; உமக்கு நாங்கள் ஏன் துப்பாக்கிகளை ஏந்தினோமென்பது சரியாகத் தெரியவில்லை. அவற்றை உம்போன்றோருக்கு விளங்கப்படுத்துவதில் பயனில்லை. உண்மையில் நாங்கள் துப்பாக்கி ஏந்தத் தூண்டப்பட்டோம்.'

'சுகந்தி; உம்முடைய மனதைத் துன்புறுத்திவிட்டன் போல இருக்குது. மன்னிச்சுக் கொள்ளும்.'

அவள் அதன் பின்னர் எதுவும் பேசவில்லை. அவன் தன்னை நொந்துகொண்டான். அவளுடன் பேச எண்ணியவை என்ன பேசியது என்ன? சரியான விசரன் நான்.

'சுகந்தி...'
'என்ன?'
கோபமா?'

'என்னுடைய கோபம் உம்மீதல்ல. இந்த சமூகத்தின்மீது. குட்டக்குட்டக் குனிந்து கொண்டு கால்பிடிக்கத் தயாராகவிருக்கிற சமூகத்தின் மீது...நீரும் அப்படியான சமூகத்தின் ஒரு அங்கந்தான்... பிறகேன் உம்மைக் கோபிப்பான்...'

இருள் பரவத் தொடங்கியது.

# 16

இரவு முழுவதும் துப்பாக்கிச் சத்தங்கள் எழுந்து கொண்டிருந்தன. துப்பாக்கிச் சத்தங்களிலிருந்து இராணுவமும் போராளிகளும் எதிரெதிராக மோதிக் கொள்கின்றனர் என்பதை மாணிக்கத்தார் புரிந்து கொண்டார். அவர் வீட்டிற்கு முன்னுள்ள ஒழுங்கையில் காலடிச்சத்தங்களும் இடையிடையே எழுந்து வெளியில் வரவில்லை.

காலை எழுந்ததும் அம்மன் கோயிலுக்குச் சென்று வரவேண்டுமென எண்ணமிட்டிருந்தார். ஜெகனின் மரணத்துடன் கோயில் பக்கமாக அவர் செல்லவில்லை. வீட்டில் இருந்த உணவுப் பொருட்கள் முடியுந்தறுவாய்க்கு வந்துவிட்டன. அரிசி முற்றாக முடிந்துவிட்டது. தேயிலைத் தூள் ஓரிரு நாட்களுக்கே போதும். ஆனால் கோயில் களஞ்சியச்சாலையில் அம்மனுக்காகச் சேகரித்து வைத்திருக் கும் அரிசி: கற்கண்டு போன்ற பொருட்கள் இருக்கின்றன. வேறு வழியில்லை. அவற்றிலிருந்து எடுத்து வந்தால்தான் உயிர் வாழமுடியும்.

அவர் வாழ்வதற்காக உண்கிறார். தேங்காய்க்குப் பஞ்சமில்லை. வாழைப்பழத்திற்கும் வாழைக்காய்க்கும் பஞ்ச மில்லை. அவை எல்லார் வீடுகளிலும் சொரிந்து கிடந்தன. எடுப்பாரின்றி நிலத்தில் கிடந்து காய்ந்தன.

முந்தாநாள் அவர் கொக்குவில் பக்கமாகச் சென்றபோது ஒரு வீட்டிற்குள் பேச்சுச்சத்தம் கேட்டது. போராளிகளோ?

அல்லது இராணுவமோ? என்ற ஐயப்பாடு நின்றபோது அந்த வீட்டின் கதவு மெதுவாகத் திறந்தது. கதவை முழுமையாகத் திறக்காமல் ஒரு குரல் அவர் பெயரைச் சொல்லி அழைத்தது.

'மாணிக்கமண்ணை... உள்ளே கெதியாக வாருங்கோ...'

அவர் திகைத்துப் போனார். எவருமேயில்லாத ஊரில ஒரு மனிதக்குரல் எழுகிறது. அதுவும் அவர் பெயர் சொல்லி அழைக்கிறது. அவர் தயங்கி நின்றபோது மீண்டும்: 'அது நான் விநாயகம்... கிளாக்கர். கெதியாக உள்ள வாருங்கோ...' என்றழைத்தது. விநாயகம் கிளாக்கரை அவருக்கு நன்கு தெரியும். ஓய்வூதியராகிப் பல வருடங்களாகின்றன.

அவர் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். வீட்டிற்குள் இன்னும் இரு வயதான பெண்கள் இருந்தனர். ஒருத்தி விநாயகத்தின் மனைவி. மற்றவர் வினாயகத்தின் மூத்த தமக்கை. அவர்களை அவர் அங்கு எதிர்பார்க்கவில்லை. ஊரே தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் ஓடிவிட்ட நிலையில் இவர்கள் இங்கு என்ன செய்கிறார்கள்?

'இங்க என்ன செய்யிறியள்...?'

'ஆருக்குந் தெரியாமல் ஒளிச்சிருக்கிறம். இந்த வயதான காலத்தில இடம்பெயர்ந்து ஓடி முடியுமே? வாறது வரட்டுமென்று இரகசியமாக வீட்டிற்குள்ள பூட்டிக் கொண்டிருக்கிறம். சா எங்க வந்தாலும் வரும். அங்க போனாலும் வரும்... இங்க இருந்தாலும் வரும் மாணிக்கமண்ணை.' என்ற விநாயகத்தை அவர் இரக்கத்துடன் பார்த்தார்.

'நான் மட்டுந்தான் விசர் வேலை செய்திட்டு இங்க இருக்கிறன் எண்டு எண்ணியிருந்தன். இப்ப எனக்குத் தெம்பாக விருக்குது... இப்படி ஒளிச்சுக் கனபேர் இங்க இருப்பினமோ?'

'ஆருக்குத் தெரியும்... விசர் வேலை செய்திட்டம் எண்டு இப்ப படுகுது... சாப்பாடெல்லாம் முடிஞ்சிட்டுது... அரிசி துண்டா இல்லை. இனி என்னத்தைச் சாப்பிடுவது? தேங்காய்... மாங்காய் கிடக்குது...' என்றார் விநாயகம் கவலையோடு. 'நாலைஞ்சு நாளில போன சனம் திரும்பிவந்திடும் எண்டு நினைச்சம்... இப்ப ஒரு மாதத்திற்கு மேலாகிறது. நாங்க இங்கால...அவங்க அங்கால போலத்தான் இருக்குது...'

'பார்ப்பம்...'

அவர் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு வந்தார். வெறிச்சோடி ஆளரவமின்றிக் கிடக்கும் ஒழுங்கையில் தனியாக நடப்பது போன்ற பயங்கர அனுபவம் வேறில்லை. பெருங்காட்டிற்குள் திக்குத்திசை தெரியாமல் அலைவது போன்ற உணர்வு. கட்டிடக்காடுகள் சூழ்ந்து கிடக்கின்றன. அவற்றிடையே அவர் நடக்கிறார்.

அம்மன் கோவிலுக்குச் சென்றுவரும் எண்ணம் எழுந்த போது விநாயகம் கிளார்க்கரின் நினைவும் அவர் அரிசியின்றித் தவிக்கின்ற நிலையும் மனதிலெழுந்தது. கோயில் களஞ்சியத்திலிருந்து எடுத்து வரத்தான் வேண்டும். அவை இப்பொழுது இருக்குமோ?

அவர் ஒழுங்கையில் இறங்கி மெதுவாகக் கோயில் பக்கமாக நடக்கத் தொடங்கினார். வடக்கு வீதியில் ஏறியவர் கோயில் சுவருடன் குப்புறக் கிடக்கின்ற ஒரு சடலத்தைச் சுற்றி நாய்கள் இரண்டு நிற்பதையும் காகங்கள் வேலியில் அமர்ந்து அவதானிப்பதையும் கண்டார். நாய்கள் மெதுவாக உறுமியபோது அந்தச் சடலத்தின் ஒருகரம் அதைத்துரத்தும் பாங்கில் அசைந்ததையும் கண்டார். உயிர் இருக்கிறது.

'சூய்.. சூய்..' என்று சத்தமிட்டபடி குனிந்து கல்லொன்றை எடுக்க நாய்கள் அவ்விடத்தை விட்டு விரைந்து ஓடிச்சென்று நின்று திரும்பி அவரைக் கோபத்துடன் பார்த்தன. சடலங்களைக் கிழித்துத் தின்ற சுவையை அவர் கெடுத்துவிட்டார் என்ற கோபம் கண்களில் தெரிந்தது.

அவர் ஓடிவந்தார். யாராவது போராளியோ?

பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளைஞன். சீருடை அணிந் திருந்தான். மேல் தோளில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்திருந்தது. ஏராளமான இரத்தம் கசிந்து வெளியேறி விட்டதால் அப்படியே மயக்கமடைந்து கிடந்தான். அவன் அருகில் எதுவிதமான ஆயுதமுமில்லை. சுட்டவர்கள் அபகரித்துச் சென்றிருப்பார்கள். அவர் அவனை மெதுவாகப் புரட்டினார். அவன் மெதுவாக முனுகியவாறு நிமிர்ந்து சரிந்தான். காயத்தின் வேதனை அவன் முகத்தில் தெரிந்தது.

'தம்பி... தம்பி மோனை...'

அவன் விழிகளைத் திறக்கவில்லை. இவனைச் சாக விடக்கூடாது. யார் பெற்ற பிள்ளையோ? அன்றிரவு அவர் கொஞ்சம் விழிப்பாக இருந்திருந்தால் காயம்பட்டுத் தன்வீடு தேடி வந்த ஜெகனைக் காப்பாற்றியிருக்கலாம். நன்றாக உறங்கிவிட்டு விடியற் பொழுதில் வெளியில் வந்தபோது தான் போர்ட்டிக்கோவில் அவரிடம் உதவி நாடி வந்த ஜெகன் உயிரற்றுச் சரிந்து கிடந்தான்.

இந்தப் பிள்ளையை அப்படிச் சாகவிடக்கூடாது. இவனை எப்படி வீட்டிற்கு எடுத்துச்செல்வது? சால்வையால் இரத்தம் கசிந்து கொண்டிருந்த காயத்தின் மீது வைத்து அழுத்திக் கட்டினார். தோள்மூட்டு வீங்கிக் கிடந்ததிலிருந்து தோள்மூட்டு எலும்புகள் முறிந்திருக்க வேண்டுமெனப்பட்டது. அவனைத் தூக்கித் தோளில் போட்டுச் சுமக்கும் வலு அவரிடமில்லை. எழுபது வயோதிபர் அவர். வீட்டிற்குக் கொண்டு சென்றால் ஏதாவது செய்யலாம்.

'உன்னைப்பொடி; நான் சாகவிடமாட்டன்...பேரா; உன்னைச் சாக விடமாட்டன்.' அவர் உதடுகள் இவ்வாறாக முணுமுணுத்தன. யாராவது உதவிக்குக் கிடைத்தால் தூக்கிச் செல்லலாம். விநாயகத்தைக் கூட்டி வருவோமோ? சாய்... சாய்... போய்விட்டு வருவதற்குள் நாய்கள் குதறிவிடலாம். இழுத்துச் செல்வோமோ? இந்த நிலையில் அப்படிச்செய்தால் குற்றுயிராகக்கிடக்கும் அவன் இறந்தே போவான். என்ன செய்வது? அம்மாளாச்சி என்ன செய்வது?

பொறி தட்டினாற்போல ஒரு வழி தென்பட்டது. கோயிலுக்குள் ஓடிச் சென்று களஞ்சிய அறையைத் திறந்தார். ஏதாவது சாக்குக் கிடைத்தால் போதும். அதில் வளர்த்தி அவனை இழுத்துச் சென்றுவிடலாம். அரிசியோடு குறை மூடையாகக் கிடந்த சாக்குக் கண்களில் பட்டது. அவசரம் அவசரமாக அரிசியை அப்படியே நிலத்தில் கொட்டினார். அந்த நேரத்தில் ஒவ்வொரு அரிசி மணியின் பெறுமானம் எவ்வளவு என்பதை அவர் சிறிதும் சிந்திக்கவில்லை. அவருடைய பேரன் போன்றவன் சூடுபட்டுக் கிடக்கிறான். அவன் சாகக்கூடாது. எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும்.

சாக்கோடு வெளியில் ஓடிவந்தார். தூர நின்றிருந்த நாய்கள் சற்று நெருங்கி வந்திருந்தன. அவரைக் கண்டதும் அவை திரும்பி ஓடின.

அவள் அருகில் சாக்கை விரித்தார். அதில் அவனைப் புரட்டிக் குப்புறச் சரித்து; தலைமாட்டை உயர்த்திப்பிடித்து சாக்கினைப்பற்றி இழுக்கத் தொடங்கினார். இழுப்பது முதலில் சிரமமாகவிருந்தது. பின்னர் இழுப்பது இலகுவானது. ஒழுங்கை யில் ஏறியபோது இழுத்துச் செல்வது பாரிய கஷ்டமாகியது. மணல்; கற்கள் தடை செய்தன. அவர் உடல் வியர்வையில் குளித்தது. நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. தலை மெதுவாகச் சுற்றியது. அப்படியே விட்டுவிட்டு அவன் அருகில் அமர்ந்து கொண்டார். திறந்து கிடந்த வீடும் கிணறும் அவர் கண்களில் பட்டன. ஆவலோடு அந்த வீட்டு வளவிற்குள் நுழைந்து கிணற்றில் தண்ணீரை அள்ளினார். பல நாட்களாகச் சுழராத கப்பி சத்தமிட்டது. கிணற்று வாளியுடன் நீரை அப்படியே தூக்கிக் கொண்டு ஒழுங்கைக்கு வந்தார். வலக்கரத்தால் நீரை அள்ளி அவன் முகத்தில் விசிறிவிட்டார். இரண்டு மூன்று முறைகள் அப்படியே செய்தார். முகத்தில் கசிந்த நீரை அவன் உதடுகள் திறந்து ஏற்பது தெரிந்தது. வலக்கரத்தில் நீரை அள்ளி அவன் வாயருகில் எடுத்துச்சென்று பருக்கிட அவன் மெதுவாக நீரை உறிஞ்சிக் கொண்டு பரிதாபமாக விழிகளை மெதுவாகத் திறந்து அவரைப் பார்த்தான். அவன் விழிகளில் இனந்தெரியாத அச்சம் படர்ந்திருந்தது.

'பயப்படாதை தம்பி... நான் ஆமியல்ல... மாணிக்கம்... ஒண்டுக்கும் பயப்படாதை.'

அவன் எதுவும் பேசாமல் அவரிடம் எதையோ யாசிப்பது போலப் பார்த்தான். அந்த விழிகளில் தேங்கிக்கிடந்த பயத்தையும் யாசிப்பையும் அவர் எவரிடமும் கண்டவரல்லர்.

'நீ ஆரடா பொடி...?'

அவன் எதுவும் பேசவில்லை. கரங்களை எடுத்து அந்தப் பெரியவரைக் கும்பிட விரும்புபவன் போல வலக்கரத்தை அசைத்தான். இடக்கரத்தை அவனால் தூக்க முடியவில்லை. அப்படியே மீண்டும் மயங்கிப் போனான்.

'நான் உன்னைச் சாகவிடமாட்டன்...'

மாணிக்கத்தார் வாளியிலிருந்து நீரையள்ளிப் பருகினார். உடல் சற்றுத் தெம்பாகியது. மீண்டும் சாக்கின் முனையைப் பற்றி இழுக்கத் தொடங்கினார். அவர் வீட்டை அடைந்தபோது சூரியன் உச்சியில் ஏறியிருந்தான்.

அவனது உடுப்புக்களை அவர் கவனமாகக் களைந்தார். சூடுபட்ட பயத்தில் மலம் வெளிவந்திருந்தது. அருவருக்காது அதைத் துடைத்து வெந்நீரால் அவன் உடல் முழுவதையும் ஒத்தியெடுத்து துப்பரவு செய்தார். வாங்கில் பக்குவமாகக் கிடத்தி விட்டு; தனது நாலுமுழம் வேட்டியை அரையில் கட்டிவிட்டார். நெற்றியில் விபூதியை அள்ளிப் பூசிவிட்டார்.

இரத்தக்கசிவு நின்றிருந்தது. தோள்பட்டையில் துளைத்த சன்னம் முன்பக்கத்தால் வெளிவந்திருந்தது. துளைகாயம் இரு பக்கங்களிலும் தெரிந்தன. காயத்திற்கு என்ன செய்வது என்று அவருக்குத் தெரியவில்லை. வெறும் துணியை மடித்து வைத்து பழந்துணியொன்றினால் பக்குவமாகக் கட்டுப் போட்டார். கிருமி தொத்தாது இதில் ஊற்றியிட ஏதாவது ஸ்பிரிட் கிடைத்தால் நல்லது. யாருடைய வீட்டிலாவது இல்லாமலா போகப் போகுது. முதலில் சூடாக இவனுக்கு ஏதாவது பருகக் கொடுக்க வேண்டும். அடுப்பை மூட்டிக் கேத்திலை வைத்தார். எரியும் நெருப்பைப் பார்த்தபடி ஏதோ நினைவில் சற்று நேரம் நின்றிருந்தார். யாராவது இவனைத் தேடிவந்தால் எவ்வளவு நல்லது? அன்று ஜெகனைத் தேடி வந்ததுபோல போராளி எவனாவது வருவான். அதுவரை இவனைக் காப்பாற்றிவிட வேண்டும்.

வெறுந் தேநீரைத் தம்பளரில் நிரப்பிக்கொண்டு தேக்கரண்டி ஒன்றையும் கூட எடுத்து வந்தார். வாங்கில் அவன் அருகில் அமர்ந்து இரண்டு தலையணைகளால் உயர்த்திய தலையைப் பரிவோடு தடவி; 'தேத்தண்ணி குடியடா தம்பி... என்றபடி வாயில் கரண்டியால் அள்ளிய தேநீரைப் பருக்கினார். அவன் மிக ஆவலுடன் அவர் வார்த்த தேநீரை அருந்தினான். முக்கால் தம்ளர் தேநீரை அவன் தாகத்தோடு குடித்து முடித்தான். அவனிற்குச் சற்று மயக்கம் தெளிந்திருந்தது. விழிகளை மெதுவாகத் திறந்து பார்த்தான். கருணையோடு அவனை நோக்கியவாறு ஒரு வயோதிபர் பக்கத்தில் அமர்ந்திருப்பது அவனுக்குத் திடத்தைக்கொடுத்தது. விழிகளில் முந்தைய பயமில்லை. எதுவோ பேச முயன்றான். வார்த்தைகள் வெளிவரவில்லை. முனகல் மட்டுமே வெளிவந்தது.

'கதையாதை தம்பி... அப்படியே படுத்திரு. நான் போய் ஏதாவது மருந்து கிருந்து கிடைக்குமா எண்டு பார்த்து வாறன்...'

அவன் ஏதோ கூறித் தடுக்க முயல்வதுபோலப்பட்டது.

விழிகளை மூடிக்கொண்டான். அவர் வீட்டுக் கதவை மூடிக் கொண்டு ஒழுங்கையில் இறங்கியபோது; ஓவசியர் ஸ்ரீபதி வீட்டு ஹோலில் ஒரு மூலையில் றெட்குறொஸ்சுடன் ஒரு முதலுதவிப் பெட்டி இருந்தது நினைவுக்கு வந்தது. மகிழ்ச்சி மனதில் ஊற்றெடுக்க ஓவசியர் வீட்டை நோக்கி ஓடிச்சென்றார். இன்று இந்த ஊரிலுள்ள அனைத்து வீடுகளும் அவருக்குத்தான். எந்த வீட்டிற்குள் நுழையவும் எவருடைய அனுமதியும் தேவையில்லை.

முதலுதவிப் பெட்டியுடன் திரும்பி வந்தார். அதிலிருந்த மருந்துகளைப் பயன்படுத்தி அவன் காயத்திற்குக் கட்டுப் போட்டார். அவன் மீண்டும் தன் விழிகளை நன்றியுடன் திறந்து அவரைப் பார்த்தான்.

மாலை கவியத்தொடங்கியது. சிக்கன விளக்கினை அவர் கொழுத்தி மேசையில் வைத்தார். மீண்டும் சண்டை தொடங்கி விட்டதற்கு அறிகுறியாகக் குண்டுகள் வெடித்தன. துப்பாக்கிகள் படபடத்தன. அவருக்கு அவை பழக்கப்பட்டவை.

ஹோலின் பக்கத்தில் குவிந்துகிடந்த அவன் சீருடைகள் கண்களில் பட்டன. அவற்றை இராணுவம் பார்த்தால் ஆபத்து. அகற்றிவிட வேண்டும். அவர் எழுந்துசென்று அவற்றைத் தூக்கினார். சேட் பைக்குள் ஏதோ கனத்தது. எடுத்தார். தோல் பேர்ஸ் ஒன்று எடுத்த எடுப்பில் தானாகப் பிரிந்தது. ஒரு படம் பேசில் செருகப்பட்டிருந்தது. ஒருவித ஆவலுடன் விளக்கடியில் பிடித்துப்பார்த்தார். ஒரு இளம்பெண் அதில் சிரித்துக் கொண்டிருந்தாள். வாங்கில் கிடக்கும் இளைஞனையும் அப்பெண்ணின் படத்தையும் மாறிமாறிப் பார்த்தார். விழிகள் கலங்கின.

இளைஞர்கள் இப்படிச் சூடுபட்டுக் கிடப்பதற்காகவா பிறந்தார்கள்? அந்த அந்த வயதுகளில் இந்த உலகத்தில் அனுபவிக்க வேண்டிய இன்பங்கள் எத்தனையுள்ளன? இவன் எவ்வளவு ஆசையோடு தன் காதலியின் படத்தைக் காவித் திரிகிறான். கரத்தில் துப்பாக்கியையும் நெஞ்சில் அவளையும் சுமந்து கொண்டு அலைந்திருக்கிறான். அவரால் தன் விழிகள் நீரைச் சொரிவதைத் தடுக்க முடியவில்லை. இவர்களுக்கு என்ன பிடித்துவிட்டது? இப்படி ஒருவரையொருவர் சுட்டுக் கொண்டு... கடவுளே.

அவன் மெதுவாக உதடுகளை அசைந்து முணுமுணுப்பது

கேட்கின்றது. மாணிக்கத்தார் அவன் அருகில் வந்து வாங்கில் அமர்ந்து கொண்டார். அவன் தன் விழிகளை மிகக் கஷ்டப்பட்டுத் திறந்து அவரை நன்றியுடன் பார்த்தான்.

'நீ ஆரடா மோனை?'

அவன் ஏதோ சொல்ல முயன்றான். வார்த்தைகள் உதட்டளவில் வந்து வெளிவராது நின்றன. அவன் எதையோ கூற மறுப்பது போலப்பட்டது. அவர் வாங்கினைவிட்டு குசினியை நோக்கி நடக்க முயன்றபோது: அவன் 'அம்மே.. என வேதனை தாங்காது அனுங்கினான். அவர் கால்கள் அப்படியே தரித்து நின்றன. அவர் சந்தேகப்பட்டது சரியாகிவிட்டது. அவன் கழுத்தில் தாயத்துக் கட்டியிருந்தான். அது நிச்சயமாகச் சயனைற் குப்பி அன்று. அவன் அணிந்திருந்த சீருடையிலும் சிறு வித்தியாச மிருந்தது. எவனாகவிருந்தாலும் இருக்கட்டும். காயம் பட்டு உயிருக்கு மன்றாடுகின்றான் மனிதன். அவரின் பேரனைப் போன்றவன். அவன் சாகக்கூடாது. அவர் அடுக்களைக்குள் நுழைந்து தேநீர் தயாரிக்கத் தொடங்கிய வேளையில் வெளியே பலர் ஓடிவருவதும் வீட்டிற்குள் நுழைவதும் ஆரவாரத்திலிருந்து தெரிகின்றது. போராளிகளோ? கட்டிலில் மரணப்படுக்கையில் கிடக்கும் அவனைக் காப்பாற்றிவிட வேண்டும். அவர் ஹோலுக்கு வேகமாக ஓடி வந்தார்.

'தம்பிமாரே: அவனைச் சுட்டுப் போடாதையுங்கோ...'

துப்பாக்கிகளுடன் மூவர் நின்றிருந்தனர்.

கட்டிலில் படுத்திருந்தவன் மிகக் கஷ்டப்பட்டுக் கத்தினான்.

'வெடிதாண்ட எப்பா... மம கோப்பரல் சிறிபால... வெடிதாண்ட எப்பா... (சுட்டு விடாதை... நான் கோப்பரல் சிறிபால... சுட்டுவிடாதை...)'

அவன் கத்திய அதே நேரத்தில் துப்பாக்கியொன்றி லிருந்து விடுபட்ட சன்னம் மாணிக்கத்தாரில் பாய்ந்தது.

'அம்மா...' என்றபடி அவர் நிலத்தில் சரிந்தார்.

## பகுதி : இரண்டு

# 17

**1997,** ஜுலை: 28

யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்து இருபத் தொன்பது மாதங்கள் ஆகிவிட்டன. யாழ்ப்பாணத்தை புலிக ளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்திருப்பதாக இராணுவம் கூறிய போதிலும் நாளாந்த வாழ்க்கையின் ஊடாடத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் மக்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப் பட்டிருப்பதை உணர முடிகின்றது. இராணுவச் சென்றிகளூ டான பயணம்; சுற்றி வளைப்புத் தேடுதல்கள், உடல் பரிசோதனை என்பன சுதந்திர மாக வீதிகளில் திரிந்த யாழ்ப்பாண மக்களுக்கு அவமானகரமாகப் படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே பயணப்படுவ தாயின் அதற்கான பாஸ் பெறுதல் நீண்டகாலக் கழிவாக இருக்கின்றது. விடுதலைப்புலிகள் பயணப்பாஸ் வழங்கல் முறையில் சிங்கள இராணுவத்திற்கு வழிகாட்டியாக விளங்கி யுள்ளனர் எனப்படு கின்றது. பாஸ் பெறும் சிவில் அலுவலகத் திற்கு முன் அதிகாலை யிலிருந்தே நீணட வரிசையில் மக்கள் வெயிலிலும் மழையிலும் காத்திருக்கின்ற காட்சி நித்தம் விடியும். மாதக்கணக்கான அலை வின் பின்னர் பயண அனுமதி கிடைக்கும். கொழும்பு சென்றுவர ஒரு பிள்ளை சீதனத்தைக் கையில் வைத்திருக்க வேண்டியநிலை.

யாழ்ப்பாணக் குடாநாடு வெளியுலகின்றி தனித்து விடப் பட்டுள்ளது. நவீன உலகின் ஆரம்ப வசதிகளைக்கூட இங்கு

காணமுடியாது. வெளிநாட்டிலுள்ள கணவனுடன் அல்லது பிள்ளைகளுடன் பேசுவதாயின் இருபதினாயிரம் செலவழித்துக் கொழும்பு செல்ல வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித் துறை செல்வதாயின் ஒருநாள் எடுக்கின்றது. பருத்தித்துறைக்குள் பிரவேசிப்பதாயின் அடையாள அட்டைகளை வல்லைவெளிச் சென்றியில் ஒப்படைத்துவிட்டு விசேஷ துண்டொன்றினைப் பெற்றுத்தான் போகமுடியும்.

ஈசிச்செயரில் படுத்திருந்தபடி யாழ்ப்பாணத்தின் நிலையை மனக்கண்களில் படரவிட்டேன். வீட்டிற்குள்ளிருந்து என் மனைவி அவசரமாக என்னிடம் வந்தாள்.

'கந்தர்மடம் பக்கம் இன்று சுற்றி வளைப்புச் செக்கிங்காம்.

இந்தப் பெண்களுக்கு எப்படித்தான் தகவல்கள் உடனுக்குடன் தெரிய வருகின்றனவோ தெரியவில்லை.

'அதுக்கென்னப்பா?'

'இல்லைச் சொன்னன்.'

இராணுவச் சற்றிவளைப்பும் சோதனைகளும் சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டன. வயது வித்தியாசமின்றி பால் வித்தியாசமின்றி சுற்றி வளைப்புத் தேடுதலின் போது பலரைப் பிடித்துச் செல்வதும் பின்னர் அன்று மாலையில் அல்லது ஓரிரு நாட்கள் கழித்துச் சிலரை விடுவதும் சகஜமாகிவிட்டன.

ஆனைக்கோட்டையில் நிகழ்ந்த சுற்றி வளைப்பின்போது சுவாமிநாதன் பிடிபட்டு ஒரு நாள் இராணுவ முகாமில் இருந்தமை நினைவு வருகின்றது.

சுவாமிநாதன் எனக்கு நன்கு பரிச்சயமானவன். நாற்பத்தாறு வயது. இலங்கை முழுவதும் தொழில் நிமித்தம் சென்று வருபவன். எண்பத்தி மூன்று இனக்கலவரத்தின் பின்னர் தான் தென்னிலங் கைக்குப் போவதைக் கைவிட்டுவிட்டு ஆனைக்கோட்டையில் வர்த்தக நிலையம் ஒன்றினை அமைத்துக்கொண்டு தங்கி விட்டவன். பின்னேரங்களில் குடிவகை சிறிது பாவித்தால் தன் மனதில் பட்டதை ஒளிவு மறைவின்றி பட்பட்டென்று கக்கிவிடுவது சுவாமிநாதனின் தனிச்சிறப்பு.

இராணுவச் சுற்றிவளைப்பின் போது சுவாமிநாதன்

சாராயம் அருந்திவிட்டு வளவிற்குள் தான் வைத்த செவ்விளந் தென்னங் கன்றுகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந் தார். திடுதிப்பென இராணுவம் வளவிற்குள் நுழைந்ததும் வீட்டிற்குள் பாய்ந்ததும் அவருக்கு எரிச்சலை மூட்டியது.

'உங்களால மனிசர் நிம்மதியாக வாழமுடியாதிருக்குது. ஒரே கரைச்சல். ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறியள்? புலிகளை என்ன வீட்டிற்குள்ளயே வைச்சிருக்கிறம். கொஞ்ச மெண்டாலும் நிம்மதியாக வாழ விடுங்கோ. விடிய விடுகிறிய ளில்லை.' சிங்களத்தில் இவ்வாறு கூறியது இராணுவத்தின ருக்குப் பிடிக்கவில்லை.

'நீ எல்ரிரிஈ சப்போட்டர்...' எனப் போகும் போது அவனையும் அழைத்துச் சென்றுவிட்டனர்.

'ஓம் நான் வாறன்...பெரியவனோட நான் கதைக்கிறன். என்றபடி சுவாமிநாதன் கூடவே நடந்தார்.

பின்னர் சுவாமிநாதன் என்னிடம் தன் அனுபவத்தைச் சொன்னார்.

'என்னைக் கொண்டு போய் இருத்தி வைச்சினம். எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வெறி தணிந்ததும் பார்த் தன். இருக்கிற இடம் இராணுவ முகாம். வாசலில் இருத்தி விட்டு அழைத்து வந்தவர்கள் போய்விட்டார்கள். மத்தியானம் போல ஒருவன் வந்து என்னிடம் கேட்டான்: ஏன் இருக்கிறாய் இங்க எண்டு. பெரியவரைப் பார்க்க என்றன். அவரை இப்ப பார்க்கேலாது நாளைக்கு வா என்றான். அங்கு அமர்ந்திருந்த நாலைந்து பேரும் மெல்ல வந்திட்டம். பிடிப்பதிற்கூட அலட்சியம் சேர்...'

சுவாமிநாதனின் தென்மராட்சி இடம் பெயர்வு மறக்க முடியாதது.

சுவாமிநாதன் சொன்னான்: 'அந்தக் கணத்தை என்னால் இன்னமும் மறக்கமுடியவில்லை. சேர். அந்தப் பரிதாபத்திற் குரிய இராசையா நவாலியிலிருந்து காவிவந்த தாயைப் பறிகொடுத்து விட்டுக் கண்களில் நீர் சோர நின்ற காட்சி... இப்படி உயிர்களைப் பலிகொடுத்து எடுத்துக்கொள்கின்ற பயன் யாருக்கு எனப்படுகின்றது. மனிதர்கள் வாழ்ந்து நிறைவு றப் பிறந்தவர்கள். இடைநடுவில் அழிவதற்கல்ல. எவ்வளவு பெறுமதியான வாழ்க்கை? எவ்வளவு இனிமையான வாழ்க்கை?

துப்பாக்கி எந்தியவர்களின் கரங்களில் எங்கள் வாழ்க்கையின் எதிர்காலம் கொடுக்கப்பட்டுவிட்டது.'

நான் அவனை எறிட்டுப் பார்த்தேன். அவன் தொடர்ந்தான்:

'இடம் பெயர்ந்த அந்த வேளையில் தண்ணீருக்காக மக்கள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. மழை பெய்து பாதையின் இருமருங்கும் வயல்வெளியெல்லாம் வெள்ளக் காடாக இருக்குது. குடிக்க நல்ல தண்ணியில்லை. குடையில் வழிந்த நீரை எத்தனைபேர் ஆவலோடு குடித்தார்கள் தெரியுமா? இணுவில் கவிஞர் பஞ்சாட்சரம் தன் குடையில் வழிந்த மழைநீரைக் குடித்ததை நான் கண்ணால் பார்த்தன்.'

சுவாமிநாதனை ஒரு தடவை சென்று பார்க்க வேண்டும்.

அதிகாலை வேளையில் என்னைச் சுவாமிநாதன் எதிர் பார்க்கவில்லை. என்னை அடங்கா வியப்புடன் எறிட்டுப் பார்த்தான். நீராவியடியிலிருந்து புறப்பட்டுச் சென்றிகளைக் கடந்து ஆனைக்கோட்டைக்கு வந்திருப்பதை அவனால் நம்ப முடியவில்லை. யாழ்ப்பாண நகரத்தையும் வலிகாமத்தையும் பிரித்தபடி பெர்லின் சுவராக நீண்டு கிடக்கின்ற இராணுவ வேலியைக்கடந்து பொதுவாகச் செல்வதற்கு எவரும் பிரியப்படுவதில்லை. கலட்டிச்சந்தியின் ஒருவழிச் சென்றியில் காத்திருந்து சோதனையின் பின்னர் இராமநாதன் வீதியில் பிரவேசித்தேன். அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது இராணுவ வேலிக்கு இப்பால் வேறொரு உலகம் இருக்கின்ற சங்கதி.

மக்கள் வெகு சுதந்திரமாகப் பயணப்படுவதாக எனக்குப் பட்டது. அடிக்கடி இறங்கி ஏறி உருட்டி நடந்து செல்கின்ற பிரச்சனைகள் இப்பக்கத்தில் மிகக்குறைவு. குளப்பிட்டிச் சந்தியால் திரும்பி ஆனைக்கோட்டைக்கு வந்தேன்.

நம்பமுடியாத வியப்புடன் சுவாமிநாதன் என்னைப் பார்க்கிறான். பின்னர் கேட்டான்:

'சாவகச்சேரிக்கு ஆமி வந்தபோது நீங்கள் அங்கில்லை. குடும்பத்தை அங்க விட்டுவிட்டு கொழும்புக்குச் சென்றிருந் தீர்கள்...ஆமி வந்த அந்தநாள் மகா பயங்கர அனுபவம்....'

அந்த அனுபவங்களை என் மனைவியும் பிள்ளைகளும்

கதை கதையாகச் சொல்லியிருந்தார்கள்.

அதிகாலைப்பொழுதில் கைதடிப்பக்கமிருந்து ஷெல்கள் ஒரு நிமிட இடைவெளி கூட இன்றிக் கல்வயல் பக்கமாகத் தொடர்ந்து வந்து வெடித்துச் சிதறின. ஊரே கலங்கிப் போனது. கல்வயலைக் கடந்து ஆட்லறி ஷெல்கள் மீசாலைப் பக்கமாக விரைந்தன.

'ஆமி நாவற்குழியைக் கடந்து மட்டுவில் வீதியெங்கும் வந்திட்டுதாம்.. என்ற செய்தியை அறிவித்தபடி மக்கள் கையில் பெட்டி படுக்கைகளுடன் கிழக்குப் பக்கமாக ஓடத் தொடங்கியிருந் தனர். அப்படி ஓடியவர்களில் வலிகாமத்து மக்களிலும் சாவகச்சேரி மக்களே அதிகமாகவிருந்தனர். மட்டுவிலிலிருந்து இடம் பெயர்ந்து ஓடிவந்த என் மூத்த அண்ணர்: அண்ணி இருவரும் எங்கள் வீட்டில் அடைக்கலம் புகுந்தனர்.

'வெளிக்கிடுங்கோ.. வெளிக்கிடுங்கோ..' என்று அவசரப் பட்டனர்.

'எங்க...' என்று என் மனைவி கேட்டபோது அவர்கள் வியப்புடன் அவளை எறிட்டனர். கல்வயல் வயலில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. முற்றத்தில் நின்றவர்கள் மீது மண் வாரிக் கொட்டப்பட்டது.

எல்லாரும் என் மனைவியைச் சுற்றிக் குழுமிவிட்டனர். மனைவி எடுக்கின்ற முடிவில்தான் எல்லாரும் தங்கியிருப்பது போலவிருந்தது. வீதியால் ஓடிக் கொண்டிருக்கின்ற சனக் கும்பல் கத்திக் குளறியபடி ஓடிக்கொண்டிருந்தது.

'என்ன சொல்லுறியள்...பிள்ளையளையும் வைச்சுக் கொண்டு இங்க இருக்க மாட்டன். யாழ்ப்பாணத்தில் இருந்து தப்பி வந்து இங்க பலிகொடுக்க நான் தயாராகவில்லை... ஆமி வெட்டிக் கொட்டிக்கொண்டு சுட்டுத் தள்ளிக்கொண்டு வருகுதாம்...' என்ற என் மச்சானை மனைவி எறிட்டுப் பார்த்தாள்.

'உங்கள் ஒருவரையும் நான் தடுக்கவில்லை. வீணாக என்னில பழி போட வேண்டாம். நான் என்ர குமருகளை இழுத்துக்கொண்டு வீதிவீதியாக ஓடுவதிலும் வாறதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறன். தயவுசெய்து என்னைக் குழப்ப வேண்டாம். உங்களுக்கு எது சரியெண்டு படுகிறதோ

அதைச் செய்யுங்கோ.' என் மனைவியின் திடமான பதில் எல்லாரையும் குழப்பிவிட்டது.

'அப்ப நாங்களும் நிக்கிறம்.'

மனைவி அந்த நாளை விபரித்தாள். 'பயங்கரமாக இருந்தது. எங்கள் வீட்டிற்கு மேலாக ஷெல்கள் இடைவிடாது இருபத்தி நான்கு மணி நேரம் பாய்ந்து சென்றது. எங்கள் வீட்டிற்கு முன்பிருந்த வயல்வெளியில் விழுந்து வெடித்தது. நாங்கள் எல்லாரும் கட்டிலுக்கடியிலும் நிலத்திலும் படுத்துக் கிடந்தோம். துப்பாக்கிச்சன்னங்கள் சடபடவென வெடித்தன. நான் திடமாகவிருந்தன். என் பிள்ளைகளும் திடமாவிருந்த னர். என்ன வந்தாலும் அங்கிருந்து ஓடுவதில்லை. ஒரு தடவை பட்ட அவலம் போதும்... சிலவேளை நீங்கள் அங்க இருந்திருந்தால் நாங்கள் எல்லாரும் ஓடியிருப்பமோ? எனக்குத் தெரியவில்லை. முதல் நாள் மணியத்தார் வந்து என்னிடம் சொன்னார். தான் பிள்ளையார் கோயிலில் பூக்கட்டிப் பார்த்ததாக... கோயில் ஐயர்தான் பூக்கட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னாராம்: ஓரிடமும் ஓடத் தேவையில்லை என்று. எனக்கு அந்த வாக்கில நல்ல நம்பிக்கை... ஆனால் என் அயலில என் வீட்டிலிருந்தவர்களையும் பக்கத்து வீட்டு மணியத்தாரை யும் தவிர மற்ற எல்லாரும் கிளாலிப் பக்கமாக ஓடி விட்டார் கள். பூக்கட்டித் திடம் சொன்ன ஐயரும் பிள்ளையாரை நம்பாமல் குடும்பத்துடன் ஓடிவிட்டார். எங்களுக்கு வீடு தந்தவர்களில் குகன் தவிர மற்றவர்கள் மீசாலைப் பக்கமாக ஓடிவிட்டனர். மீசாலையில் மகள் யசோவை மாமன் வீட்டில் விட்டுவிட்டுத் திரும்பி வந்தனர். அதையேன் கேக்கிறியள்... மீசாலைக்கு ஆமி போனதும் அந்தப் பிள்ளை கிளாலி யெல்லாம் அலைந்துவிட்டு: கிளாலியில குண்டு விழுந்து வெடித்து அமர்க்களப்பட திக்குத் திசை தெரியாமல் ஓடி... கையில நகைச்சரை... தண்ணிவென்னியில்லாமல் மூன்றாம் நாள் திரும்பி வந்து சேர்ந்தது...பெரிய கதை. இரண்டு நாட்களுக்குள் ஆமி மீசாலைச் சந்திக்கு வந்துவிட்டது. கல்வய லில நாங்கள் ஆமியைக் காணவேயில்லை. நீங்கள் திரும்பி வந்து எங்களை அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பியபோது தான் வழியில ஆமியைக் கண்டன்...'

'நீ புத்திசாலிதான்.'

என் மனைவி என்னைக் கவலையோடு பார்த்தாள்.

'ஓடுவதில்லையெண்டு முடிவெடுத்திட்டன்... ஆனால் விழுந்து வெடித்த குண்டுகளைப் பார்த்தபடி நிலத்தில இருபத்திநான்கு மணிநேரம் கிடந்தபோது... என்ர பிடிவாதத்தால தங்கிவிட்ட எல்லாரும்... ஒரு ஷெல் வீட்டில விழுந்தால் காணும்... அவ்வளவு பேரும் சமாதிதான்... அந்த ஷெல் அடிகளுக்கிடையில புட்டு அவித்தம்... எல்லாரும் சாப்பிடக் கோப்பைகளில இட்டுவிட்டு ஆயத்தப்படுத்த மிக அருகில ஒரு ஷெல் விழுந்தது...வீடு ஒரு கணம் ஆடியது... எல்லாருடைய புட்டுக் கோப்பைகளிலும் குவியலாக மண்... எல்லாரும் என்னைக் குற்றம் சாட்டுவது போலப் பார்த்தனர்...'

சாவகச்சேரிக்கு இராணுவம் வந்ததும் சனவெள்ளத்தின் அணை உடைந்தது. மேட்டில் தேங்கிய நீர் சீறிக் கொண்டு பாய்வது போல மக்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி விரைந்தனர்.

மடைதிறந்த வெள்ளமாக யாழ்ப்பாணத்து மக்கள் கண்டி வீதியில் குவிந்து நகர்ந்தனர். கிளாலியில் வன்னிக்குச் செல்வதற்காகக் காத்திருந்த மக்கள் செய்தி அறிந்து திரும்பி வந்தனர். தங்கள் இல்லங்களுக்கு முந்திச் சென்றுவிட வேண்டுமென்ற ஆவல் எல்லாருக்கும் பிடரிபிடித்துத் தள்ளியது. வடமராட்சியிலிருந்தும் மக்கள் நகர்ந்தனர். இருபது நாட்கள் வரை மக்களின் யாழ்ப்பாணம் நோக்கிய நகர்வு இருந்தது. இலட்சக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளுக்கு ஓடி வந்தனர். முந்தி வருகின்ற மக்கள் திறந்து கிடக்கின்ற தங்களது வீடுகளில் கொள்ளை யடித்துவிடலாமென்ற பயம் ஒவ்வொருவரிடமும் இருந்தது.

யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்த மக்களில் மிகச் சிலரே மகிழ்ச்சியுடன் சிரிக்க முடிந்தது. பொருட்கள் இல்லாவிடினும் வீடாவது எஞ்சியதே என்ற மகிழ்ச்சி. கற்குவியலாகிக் கிடந்த தங்கள் வீடுகளைப் பார்த்து வீதிகளில் விழுந்து ஒப்பாரி வைத்தோர் ஏராளம். ஷெல் குண்டுகள் பட்டுச் சிதறிய கூரைகள்... சுவர்கள்... பாதிக்கப்படாத வீடுகளேயில்லை.

அரசாங்க அதிபர் பத்மநாதனும் நானும் ஒரு அரசாங்கக் கூட்டத்திற்காகக் கொழும்பு சென்றிருந்தோம். சாவகச்சேரியை இராணுவம் கைப்பற்றியபோது நாங்கள் கொழும்பில் நின்றிருந் தோம். தொலைக்காட்சியில் சாவகச்சேரியிலிருந்து மக்கள் திரள் திரளாகச் செல்வதைக் காட்டினார்கள். அரசாங்க அதிபரும் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபரும்

கொழும்பில் நிற்கின்ற செய்தி பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியவந்தது. எங்களைத் தேடிப்பிடித்து விமானமூலம் யாழ்ப்பாணத்திற்கு உடன் அனுப்பி வைத்தனர். நாங்கள் பலாலி விமானத் தளத்தில் இறங்கினோம். மாலைநேரம். அங்கிருந்து எங்களை இராணுவ வண்டியில் ஏற்றி சுபாஸ் விடுதியில் இறக்கிவிட்டனர்.

இருவர் முகத்திலும் பயத்தின் இருள்.

விடிந்தது. சுபாஸ் விடுதியை விட்டு வெளியே வந்தோம். இராணுவத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாண நகரத்திற்குச் சென்றோம். நகரம் வெறிச்சோடிக் கிடந்தது. மனம் குடைந்து கலங்கியது. இடிபாடுகள். பாழடைந்த பேய் நகரம். இராணுவத்தின் கனத்த சப்பாத்துக்கள் எங்கும் பதிந்திருந்தன. சந்தைப் பக்கத்தில் சாவகச்சேரியிலிருந்து திரும்பி வந்த மக்களின் கூட்டம் காணப்பட்டது.

என் வீட்டினைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் என்னுள் விசுவரூபமெடுத்தது. பிறவுண் வீதியிலுள்ள மாடி வீடுகள் எல்லாம் தரைமட்டமாகி விட்டன என்ற செய்தி சாவகச்சேரியில் எனக்குத் தெரிந்திருந்த வதந்தி. என்னுடைய வீடு குண்டு வைத்து அப்படியே இறக்கப்பட்டுவிட்டது என்ற சங்கதி என் காதுகளில் விழுந்திருந்தது.

'முதலில் என்ர வீட்டிற்குப் போக வேண்டும்... என் நூல்கள் பாதுகாப்பாகவிருக்கின்றனவா என்று பார்க்க வேணும்... பிறகு சாவகச்சேரியிலிருந்து என் குடும்பத்தை இங்க கொண்டு வரவேணும்... அதுக்குப் பின்னாலதான் மற்றதெல்லாம்...'

போய்ப்பார்த்தோம். என்னால் நம்பமுடியவில்லை. அப்படியே என் வீட்டினைப் பார்த்துக் கொண்டே நின்றேன். வீதி வெறிச்சோடிக் கிடந்தது. நாய்கள் தென்பட்டன. ஒரு சனமுமில்லை. இன்னமும் எவரும் பிறவுண் வீதி வீடுகளுக்கு வரவில்லை.

இடப்பெயர்வின் துயரவடுக்கள் மனதில் இருந்தாலும் வீட்டினை இழக்காத அதிர்ஸ்டசாலிகளில் நானும் ஒருவனாகவிருந் தேன். ஆனால் என் உறவினர்கள் பலரின் வீடுகள் இராணுவ வேலிக்குள் அகப்பட்டு அப்படியே தரைமட்டமாகியிருந்தன.

சுவாமிநாதன் என்னை உலுப்பினான்.

'என்ன சேர்... வந்திட்டு எதுவும் பேசாமல் இருக்கிறியள்...

நான் சுயநினைவுக்கு வந்தேன்.

'சாவகச்சேரியிலிருந்து இங்கு திரும்பி வந்த நாடகத்தை நினைத்துக் கொண்டன்.'

'சாவகச்சேரியில எவ்வளவு கஷ்டப்பட்டம்... குந்தியிருக்க ஒரு துண்டு நிலமில்லாமல் தவித்தவர்கள் எத்தனை பேர்? நல்ல தண்ணீருக்காகக் காலையும் மாலையும் அலைந்தோம். ஆனைவிலை குதிரைவிலைக்குச் சாமான்கள் வாங்கினோம். தேங்காய் நாற்பது ரூபாவிற்கு வாங்கியதை மறக்கத்தான் முடியுமா? பாணுக்காகக் கியூவிலை நிண்டம்...கிடுகின் விலை இருபத்தைந்து ரூபா. காசோலைகளை மாற்ற முடியாமல் உத்தியோகத்தர்கள் தவித்த தவிப்புக்கள் கொஞ்ச நஞ்சமா? ஒரு கட்டத்தில் ஆயிரம் ரூபாத் தாள்களை மாற்ற முடியாமல் சில்லறைக் காசுக்காகக் கடைகடையாகத் திரிந்தம்...செக் மாற்றுவதற்குக் கொமிசன் கொடுத்தார்கள்... ஆயிரம் ரூபாத் தாள்களை மாற்றுவதற்காக விலைப்படாத: தேவைப்படாத பொருட்களைக் கடைக்காரர் எங்களிடம் திணித்தார்கள்...'

'சாவகச்சேரி வாழ்க்கையை இப்ப நினைக்கும்போது சந்தோஷமாக இருந்தம் போலப்படுகுது.'

'பாதிப்பு இல்லாதவர்களுக்கு அந்த இடப்பெயர்வு வாழ்க்கை ஒரு உல்லாசப்பயணமாகப்படலாம். ஆனால் எதிரிக்குக் கூட அப்படியொரு அவலம் வரக்கூடாது...எவ்வளவு உயிரழிவு? எவ்வளவு சொத்தழிவு?.'

'யாழ்ப்பாணத்தான் அங்க போயும் சாதி பார்த்த கதை தெரியுமா? கனகசபையருக்கு அடைக்கலம் கொடுத்த வீட்டுக்காரர் தங்கள் பகுதியில்லையெண்டு அவர் வடமராட்சிக்கு இடம் மாறிச் சென்றார். அங்கயென்னவெண்டால் ஒரு கோயிலுக்கை அவரையும் அவர் பிள்ளைகளையும் உள்ள விடவிலலையாம்... இது எங்கட கோயில். வெளியாக்கள் உள்ள விடுகிறதில்லை என்றிட்டினமாம். அவரே சொல்லிக் கவலைப்பட்டார்.'

சுவாமிநாதன் சிரித்தான்.

தென்னைமரத்தின் இடைநடுவில் தலைகீழாக நின்றபடி

அணில் ஒன்று கத்தியது முற்றத்தில் நின்றிருந்த பூனையை அது கண்டிருக்க வேண்டும். முற்றத்தில் ஒதுக்காகப் படுத்திருந்த நாய் தூக்கம் கலைந்து தலையை நிமிர்த்திப் பார்த்துவிட்டு பின்னங்கால்களுக்கிடையில் தலையைப் புதைத்துக்கொண்டது.

முற்றத்தில் யாரோ வந்து நிற்பது தெரிந்தது.

நிமிர்ந்து பார்த்தேன். இராசதுரை நின்றிருந்தான்.

'ஐயா...'

'என்ன இராசு?...என்று சுவாமிநாதன் கேட்டான்.

'பின்வளவுத் தென்னங்கன்றுகளுக்கும் பாத்திபிடிச்சுத் தண்ணி இறைக்கவோ?'

'ஓமோம்...'

அவன் சென்றதன் பின்னர் நான் அவனைப் பார்த்தேன். என் பார்வையின் அர்த்தத்தை அவன் புரிந்து கொண்டான்.

'இராசதுரையும் பிள்ளைகளும் என்னோடதான் இப்ப இருக்கினம். அவன்ர பிள்ளைகளில மங்கைக்கு வலு வாரப்பாடு...'

'தையல்...?'

'ஓ சொல்ல மறந்து போனன்...அவளுக்கும் ஒரு பிள்ளை இருக்குது. இப்ப தான் பிறந்தது...என்ர மனிசிதான் பராமரிப்பு...'

சுவாமிநாதன் சற்று வித்தியாசமான மனிதன் என்பது எனக்குத் தெரியும். கஷ்டப்பட்டவர்களுக்குத் தயங்காது உதவி செய்யும் உயர்ந்த குணம் அவனிடமிருந்தது.

அவனுடைய வீட்டிற்குள் இராசதுரையின் பிள்ளைகள் தான் விளையாடிக்கொண்டிருந்தன. சாவகச்சேரியில் அவர்களை நான் பார்த்திருக்கிறேன். உடல்வாளிப்பில் வித்தியாசம் தெரிந்தது.

'இவர்களை நான் வீட்டிற்குள் சேர்த்துவிட்டேன் என்று அம்மான் மயில்வாகனத்தாருக்குக் கொஞ்சம் வருத்தம்.'

'ஏன்...?'

'எங்க பிள்ளையில்லாத நான் என்ர சொத்துக்களை

எழுதி வைச்சுவிடுவனோ என்று பயப்படுகிறார். சொத்தும் பத்தும்தான். பிள்ளை வேணுமென்றால் எங்கட பகுதியில தத்தெடுத்திருக்க லாமாம். மனிசன் உழைக்கிறது வாழ்கிறது. சந்தோஷமாக வாழ்கிறதுக்கு... அழியுறதுக்கில்லை. எனக்கும் என்ர மனிசிக்கும் இண்டைக்கு இந்தப் பிள்ளையளால ஒரு சந்தோஷம் கிடைக்குது. அதுகளின்ர துயர் துக்கங்களில பங்கு கொள்கிறதால நிம்மதி கிடைக்குது. மெய்யாச் சேர்...இப்ப நான் குடிக்கிறதும் குறைவு. முந்தி என்ர பொழுதுபோக்கு குடிக்கிறது...இப்ப அப்படியில்ல. இந்த உலகம் எவ்வளவு இனிமையானது! இனிமையான விசயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. காலம் வந்து சாகிறது என்பது இன்று எங்கட நாட்டில பெரிய விசயமாகிவிட்டது.'

படலை திறந்து மூடும் சத்தம் எழுகிறது. இரண்டு பிள்ளைகள் அலங்காரமாகக் கூடவர மங்கை வருகிறாள். அவள் முகத்தில் முன்னர் இல்லாத மலர்ச்சி இருப்பதாகப் பட்டது. என்னைக் கண்டதும் வியப்பினை முகத்தில் படரவிட்டாள்.

'அதிசயம் தான்..'

'நான் வந்தது அதிசயமில்லை; தங்கச்சி. உன்னைப் பாக்கத்தான் எனக்கு அதிசயமாக இருக்குது... பிள்ளை குட்டிக் காரியாகிவிட்டாய்?'

அவள் முகம் மலர்ந்து சிரித்தாள்.

'பெத்தால்தான் பிள்ளையா?'

'வாத்தியாரின் படமென்றால் அவளுக்கு நல்ல விருப்பம்..' என்று சுவாமிநாதன் சிரித்தான். 'கெதியாகச் சமையும்... சேருக்கு இண்டைக்கு இங்கதான் சாப்பாடு...'

நான் சம்மதத்துடன் தலையசைத்தேன்.

அங்கிருந்தபோது ஒரு அழுத்தத்திலிருந்து விடுபட்டிருப் பது போன்ற உணர்வு எற்பட்டது. கம்பி வேலிகளும் சென்றிகளும் வெகு தூரத்தில் இருக்கின்றன. கனத்த சப்பாத்து ஒலிகள்; இராணுவ டிறக்குகளின் சத்தங்கள் இங்கு கேட்கவில்லை.

மங்கை தேநீருடன் திரும்பி வந்தாள். தேநீரை என்னிடம் தரும்போது கேட்டாள்: 'என் நீங்கள் உங்கள் மகளுக்கு யூனிவேசிற்றிப் படிப்பு முடியும் முன்னர் கலியாணம் கட்டி வைத்தியள்?

நான் சிரித்தேன்.

'அவளுக்கு வயது வந்துவிட்டது...அவளுடைய வயதில என் மனைவி அவளைத் தன் கரங்களில் ஏந்தியிருந்தாள் தங்கச்சி. இண்டைக்கு ஒரு பிள்ளை பல்கலைக்கழகத்தில் படித்து விட்டு வெளிவரும் போது வயது இருபத்தாறு இருபத்தேழாகி விடுகிறது... முன்னர் போலவா? சோதனை எடுத்துவிட்டு இரு வருடங்கள் காத்திருப்பு... பின்னர் பல்கலைக்கழகத்தில் காலதாமதம்... மருத்துவ மாணவன் ஒருவன் பத்தாண்டுகளைப் பல்கலைக்கழகத்திலே கழிக்க வேண்டியிருக்குது. இளமைக்குரிய இனிமைகளை அவர்கள் அனுபவிக்காமல் படிப்பில் காலத்தைக் கழித்துவிட்டார்கள்...நான் செய்தது சரியாகப்படுகிறது. பேரனை எங்களிடம் தந்துவிட்டு என் மகள் யூனிவேசிற்றிக்குப் போய் வருகிறாள்... வருங்காலத்தில் இது சர்வசாதாரணமாகிவிடும். படிப்பிற்கு வயதில்லை. அதுக்காக இளமைப்பருவத்தை அவமாக்கிவிடக் கூடாது... அது அது அந்த அந்தப் பருவத்தில கிடைக்கவேண்டும்...'

'எங்கட எத்தனை பிள்ளையள் வாழ்கிற வயதில துப்பாக்கி களை ஏந்திக் கொண்டும்... உடலில குண்டுகளைக் கட்டிக் கொண்டும்... இந்த நாட்டின் இனவாதம் வன்செயல் களுக்கான பாதையைத் திறந்துவிட்டது. எனக்கு மட்டும் தவச் சக்தியிருந்தால் நான் எப்படிச் சபிப்பேன் தெரியுமா?'

நான் அவளை வியப்புடன் பார்த்தேன்.

'எப்படி?'

'இந்தப் பூமியில் இருக்கின்ற எல்லாத் துப்பாக்கிகளும் வெடிக்காது போய்விடவேண்டும்... ஷெல்கள் குண்டுகள் கண்ணிகள் எல்லாம் அவற்றினைச் செய்தவர்களோடு செயலிழந்து போகக்கடவது...'

தூரத்தில் எங்கோ குண்டொன்று வெடித்தது.

# 18

வீட்டு வாசலில் கச்சேரி பிக் அப் வாகனம் ஒன்று வந்து நிற்கின்ற சத்தம் எழுந்தது. இந்த மாலை வேளையில் யார் வருவார்கள்? கேற்றைத் திறந்தபடி பத்மநாதன் உள்ளே வந்தான். யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க அதிபராக அவன் பதவியேற்று ஒன்றரை வருடங்களுக்கு மேலாகின்றது. துணிச்சல் மிக்க அரசாங்க அதிபராக அவன் கடமையாற்றி வருவதாக எனது கணிப்பு. தனக்குச் சரியெனப்பட்டதை எந்த எதிர்ப்பு வந்தாலும் நிறைவேற்று கின்ற உறுதி அவனிடம் இருந்தது. எனது இருபத்தாறு வருட நிர்வாகசேவை வாழ்க்கையில் நான் சந்தித்த பல அரசாங்க அதிபர்களில் பத்மநாதன் வித்தியாச மானவன். அவனுடைய கண்டிப்பான நிர்வாகத்தில் அவன் நண்பர்களைவிட எதிரிகளையே அதிகம் சம்பாதித்திருந்தான்.

யாழ்ப்பாணத்து மக்கள் நான்கு இலட்சம் பேர் அவலமாகத் தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் அகதிகளாக இடம் பெயர்ந்த ஒரு இக்கட்டான காலகட்டத்தில் நிர்வாகப் பொறுப்பை அவன் ஏற்றுக்கொண்டான். நிர்வாகசேவையில் அவனிலும் பார்க்க மூத்த அதிகாரிகள் பலர் இருந்தும் அப்பதவி அவனைத் தேடி வந்தது.

சாவகச்சேரிக்கு நாங்கள் இடம்பெயர்ந்த பின்னர், 1995 நவம்பர் பத்தாம் திகதி எனக்கு நல்ல ஞாபகம். சாவகச்சேரியி லிருந்து யாழ்ப்பாணத்திற்கு எனது வீட்டிற்கு ஒரு தடவை வந்தேன். எனது வீடு திறந்து கிடந்தது. கிணற்றில் அள்ளி

உடல் தோயத் தோயக் குளித்துவிட்டு எனது ஈசிச்செயரில் சிறிது நேரம் படுத்திருந்தேன். தனிமை. என் அயல் அட்டையில் ஒருவரும் இல்லை. வீதிகளில் மாடுகளும் நாய்களும் அலைந்து திரிந்தன. நான் அன்போடு வளர்த்த பூனையும் எங்கோ ஓடிவிட்டது.

யாருமேயில்லாத மயான பூமியில் தனித்திருப்பது போன்ற உணர்வு.

வீதியில் போராளிகள் சிலர் செல்வது தெரிந்தது. நான் எழுந்து ஸ்கூட்டரில் ஏறிக்கொண்டேன். நாவலர் வீதியில் ஏறி: மருதடி வீதியால் கண்டிவீதியில் பிரவேசித்து அரியாலையை நெருங்கியபோது எதிரில் வான் ஒன்றில் பத்மநாதன் வந்து கொண்டிருந்தான்.

என்னைக் கண்டதும் வான் அருகில் நிறுத்தப்பட்டது.

'குணம்: எங்கை போறாய்? ஷெல் அடிக்கிறான்கள்...நீ விசரன் மாதிரி இங்க நிற்கிறாய்?' என்று கவலையோடு விசாரித்தான்.

'அது சரி நீ என்னடாப்பா செய்யிறாய்?'

அவன் சிரித்தான்.

'ஸ்ரோருக்குப் போறன்...பின்னால வா...'

அந்த வேளையில் அவன் யாழ்ப்பாணத்தின் திட்டப் பணிப்பாளராக இருந்தான். ராஜா தியேட்டரில் உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. பல லொறிகள் அங்கு நின்று அரிசி: மா: சீனி: பருப்பு ஆகிய பொருட்களை ஏற்றிக் கொண்டிருந்தன. வானத்தைக் கூவிக்கொண்டு விரைகின்ற ஷெல்களுக்கிடையில் பொருட்கள் ஏற்றப்பட்டன.

'நாலு இலட்சம் மக்கள் அங்கால போயிட்டினம். அவ்வளவு பேருக்கும் சாப்பாடு கொடுத்தேயாகவேண்டும். இவற்றைக் கொண்டு போனால் அங்கு வரப்போகின்ற பஞ்சம் பசியை ஓரளவாவது தீர்க்க முடியும். எல்லாரையும் போல நானும் ஓடிவிட இயலவில்லை. இந்த இக்கட்டான நேரத்தில இதுதான் என்ர முக்கிய பணியாகவிருக்குது... என்னோட உதோ பார் குணம்: கதிர்காமநாதன்... விக்னேஸ்வரமூர்த்தி எல்லாரும் நிக்கினம். எனக்கு இதுதான் இப்ப முக்கிய பணியாகத் தெரியுது...'

'இதெல்லாவற்றையும் எப்படி எக்கவுன்ட் பண்ணுறது...'

அவன் என்னை ஏறிட்டுப்பார்த்தான்.

'அதல்ல இப்ப முக்கியம்...நாலு லட்சம் மக்களின் உயிர் வாழ்க்கைதான் முக்கியம்...'

வெகு நேரம் அங்கிருந்தோம்.

'பத்: உன்ர குடும்பம் எங்க...?'

'பருத்தித்துறையில... எண்டு கேள்வி. அவர்கள் இருந்த வீட்டில முந்தநாள் ஷெல் விழுந்திட்டுதாம்...'

'என்ன?'

அவன் அமைதியாக என்னைப் பார்த்தான்.

'ஒருவருக்கும் ஒன்றுமாகவில்லை. இப்ப கோயில் ஒன்றில இருக்கிறதாகச் சொல்லுகினம்...'

'நீ போகவில்லையா?'

'கோயிலில... பள்ளிக்கூடங்களில எத்தனை ஆயிரமாயிரம் மக்கள் அப்படியிருக்கினம்... அவர்களுக்கு உணவு அனுப்ப வேண்டும்.'

பத்மநாதன் என் மனத்தராசில் ஒருபடி உயர்ந்து நின்றான். இந்த ஒரு பணிக்காக அவன் யாழ்ப்பாண மக்களால் என்றும் நினைவு கூரப்படுவான் என நான் எண்ணமிட்டேன்.

கொழும்பிலிருந்த யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் தனது பதவி விலகலோடு: பத்மநாதனின் நியமனக் கடிதத்தையும் சாவகச்சேரிக்குக் கொண்டுவந்து கொடுத்தபோதும் அவன் முகத்தில் எதுவித சலனமும் ஏற்படவில்லை. அவன் அரசாங்க அதிபராக வந்ததும் அதிகாரிகள் வேலை வாங்கப்பட்டனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கச்சேரி செயற்படத் தொடங்கியது. பணிச்சுமையை ஏற்கத் தயாராகவில்லாத அதிகாரிகள் ஓரங் கட்டப்பட்டனர். அரசாங்க அதிபரைச் சுற்றி ஒரு சிறிய செயற்படும் வட்டம் இயங்கத்தொடங்கியது.

பிரச்சினைக் காலகட்டத்து நிர்வாகத்தில் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு செயற்படுவது தவிர்க்க முடியாதது.

யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் திரும்பி வந்தபோது மீளக் குடியமரும் பணிகள் கச்சேரியால் துரிதமாக மேற்கொள்ளப் பட்டன. இராணுவம்; போராளிகள்; மக்கள் என்ற மும்முனைச் சிக்கல் வலுப்பட்டிருந்தது. இடிந்து போன கட்டிடங்கள்; வீடுகள்; உயிரிழப்புகள்; உணவுத்தட்டுப்பாடு; தனியார் வர்த்தகர்களின் பதுக்கல்கள் என யாழ்ப்பாணம் திக்குமுக்காடியது.

கேற்றைத் திறந்து கொண்டு பத்மநாதன் வருகிறான்.

'வா; பத்...' என அவனை வரவேற்றேன்.

கதிரையில் அமர்ந்து கொண்டான். முகத்தில் நிலவிய அழுத்தத்திலிருந்து பிரச்சினைகளின் தாக்கம் புரிந்தது. என்னைப் பார்த்துச் சிரித்தான்.

'சொல்லு...'

'எதைச் சொல்வது...இந்த நிர்வாக அதிகாரிகளைக் கொண்டு வேலை வாங்க முடியவில்லை. எங்கள் நிர்வாகத்தின் ஷராகற் குறூப்' மக்கள் என்பதை எல்லாரும் மறந்துவிட்டனர்...'

'வெளியில ஆயிரம் எதிரிகள் இருந்தாலும் ஒரு எதிரிகூட உள்ளுக்க இருக்கக்கூடாது; பத்.'

'நான் எல்லாரையும் வேலை செய்யும்படிதான் வற்புறுத்துகிறன். ஒருத்தரையும் பகைக்கவில்லை.'

'ஒவ்வொருவரும் தம்மளவில் பணி செய்துகொண்டு தான் இருக்கினம். உன்னுடைய வேகத்திற்கு; அல்லது நீ விரும்புகிற போக்கில் அவர்களால் வேலை செய்ய முடியவில்லை. பத்; ஒன்று சொல்வேன். நேர்மையாகவும் கடமையுணர்வுடனும் பணி செய்தவர்கள் பிரச்சினைக்கு உள்ளாவார்கள். அதுதான் நான் கற்ற பாடம்...'

'எனக்கு அது தெரியும். அதுக்காக... குணம்; என்னை அரசாங்க அதிபர் பதவியிலிருந்து நீக்கப் பலர் முயல்கின்றனர். இப்பதான் எனக்கு இந்தப்பதவி அதுவும் யாழ்ப்பாணத்து அரசாங்க அதிபர் என்ற பதவி எவ்வளவு முக்கியமானதென்பது தெரியுது. நீ நம்பினால் நம்பு நான் பதவியைத் தேடிப் போகவில்லை. அதுவாக வந்தது. என் காலத்தில மக்களுக்கு எவ்வளவு செய்ய முடியுமோ அதைச் செய்து போட்டுத்தான் போவன்.'

மனைவி கொண்டுவந்த கோப்பியை வாங்கிப் பருகினான்.

'இந்த யாழ்ப்பாணக் குடாநாடு மயான பூமியாக மாறி விட்டது. எட்டரை லட்சம் மக்கள் இருந்த இடத்தில இப்ப நாலரை லட்சம் மக்கள்தான் இருக்கினம். இதில மூன்று லட்சம் மட்டில் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டது. மிகுதி வன்னி யிலும் தென்னிலங் கையிலும் தவிக்கினம். யாழ்ப்பாணத்தில ஒழுங்கீனங்கள் அதிகரித்து விட்டன.. களவு எல்லாவிடங்களி லும் நடக்குது. ஆக்கள் இல்லாத வீடுகளில் பட்டப்பகலில் புகுந்து சாமான்களைக் களவெடுத்துச் செல்கிறார்கள். ஓடுகள் கழற்றப்படுகின்றன. கதவுகள் கழற்றப்படுகின்றன. நிலைகள் விறகுக்காகக் கொத்திப் பிளக்கப்படுகின்றன. பக்கத்து வீட்டுக்காரன் கேட்டால் உங்கட வீடோ எனச் சண்டித்தனம் பண்ணுகினம். முன்பு அப்படியிருக்கவில்லை. இப்ப சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டுவிட்டது. மனித நேயம்; மானிட உறவு நிலை பாதிக்கப்பட்டுவிட்டது.'

'குடாநாட்டில் பெரும்பகுதி அழிந்து விட்டது. எட்டரை இலட்சம் மக்களும் இங்கிருந்திருந்தால் யாழ்ப்பாணக் குடா நாட்டின் தாங்குநிலை பாதிக்கப்பட்டிருக்குமென நினைக்கிறன்...'

'அறுநூற்றைம்பது பேர் காணாமல் போயிட்டினம். தகவ லில்லை. பெற்றவர்கள் நித்தம் கச்சேரிக்குப் படையெடுத்தபடி...'

'கப்பல் போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டால் போதும். வியாபாரிகள் பொருட்களைப் பதுக்கிவிடுகிறார்கள். விலைகள் ஏறிவிடுகின்றன. மக்களின் நெருக்கடிகளையும் கஷ்டகாலத்தையும் லாபமாகப் பயன்படுத்திக் கொண்டிருப் பவர்கள் வியாபாரிகள்தான். எனக்குச் சில வேளைகளில் ஒரு எண்ணம் வரும்...நூறு நூற்றைம்பது பேர் சேர்ந்து மண்வெட்டி பொல்லுகளோடு இந்தப் பதுக்கல் வியாபாரிக ளின் கடைகளில் புகுந்து அடித்து நொறுக்கி பொருட்களை மக்களுக்கு விநியோகித்தால் என்னவென்று...'

'உனக்கும் வன்செயல் புத்தி வந்திட்டுது. நீ இந்தப் பிரதேசத்தின் ஏஜீஏ...சட்டப்படி செய்யன்...'

நான் சிரித்தேன்.

யாழ்ப்பாண மண்ணில் சட்டம் செத்து வெகு காலமாகி

விட்டது.

'வன்னிக்குப் போன மக்களில் ஒரு பகுதியினர் திருகோணமலைக்குப் போய் கப்பல்கள் மூலம் வந்திட்டினம். ஒரு பகுதியினர் இப்ப நாச்சிக்குடாவிலிருந்து கடலூடாகக் குருநகருக்கு வந்து கொண்டிருக்கினம். அதுவும் கல்முனையைக் கடந்ததும் இருக்கிற மணல்பிட்டியில் இறக்கிவிட கடலில் நடந்து வருகினம். முருகைக்கற்கள் கீறிக் கிழித்து காலெல்லாம் இரத்தக் காயம். மக்கள் மிகவும் கஷ்டப்படுகினம்...'

'தென்மராட்சியிலிருந்தும் வடமராட்சியிலிருந்தும் வன்னிக்கு ஓடிப்போன மக்கள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அங்க யுத்தம் தொடங்கியதும் அவர்கள் தாங்கொணாத துயரங்களை அனுபவிக்கினம். குண்டுவீச்சுக்கள் அப்பிரதேசத்தில் தொடருகின்றன. அக்கராயன், மல்லாவி பக்கங்களில் அவர்கள் ஒதுங்கியுள்ளனராம். மன்னாரை நோக்கி அவர்கள் ஓடியபடி... போதிய உணவு இல்லை... மருந்தில்லை... மலேரியா... வயிற்றோட்டம்... அவலம். ஒரே அவலம்... இந்த மண்ணில ஒரு பகுதி மக்கள் நித்தம் நகர்ந்து கோண்டேயிருக்கிறார்கள்... எப்பதான் விடிவு வருமோ?'

கிளிநொச்சிக்குச் சாவகச்சேரியிலிருந்து கிளாலியூடாக வள்ளமேறி ஓடிப்போன எனது பெறாமகளின் கடிதம் நினைவு வருகின்றது.

...'கிளாலிக் கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் காத்திருந்தனர். தாங்கள் கொண்டுவந்த சயிக்கில்கள்; மோட்டார் சயிக்கில்கள்; வண்டில்கள் என்பனவற்றைக் கிளாலிக் கரையில் விட்டுவிட்டு உடுப்புப்பெட்டிகளுடன் உயிர்களைக்காக்க வள்ளங்களில் ஏறிச்செல்கிறார்கள். நாங்களும் எங்களுடைய சயிக்கில்களை இங்கால விட்டுவிட்டு நான்காம் நாள் வள்ளத்தில் ஏறிப் பூநகரிக்கு வந்தோம். ரவி சொன்னமாதிரி அவரின் சொந்தக்காரர் வீட்டிற்கு நல்லூருக்குச் சென்றோம். அங்கு ஒரே உறவினர் கூட்டம் ஏற்கனவே இடம் பிடித்துவிட்டது. அவர் என்னையும் பிள்ளைகளையும் இங்கு ஓரிடத்தில் ஒரு வீட்டு நாத்தியில் இருக்கவிட்டுவிட்டு விசுவமடுவிற்குப் போனார். அங்கு ஏதாவது இடம் கிடைக்குமா எனப் பார்ப்பதற்கு. ஐந்தாறு நாட்களில் திரும்பி வந்தார். அங்கு போனோம். பெருஞ் செலவில் ஒரு சிறு குடில் அமைத்துக் கொண்டோம். பிள்ளைகளுக்கு ஒரே காய்ச்சல். ஆமான சாப்பாடும்

தண்ணியும் இல்லை. படுப்பதற்கு வசதிகளில்லை. மண்தரையில் வெறும் பாயில் படுத்துறங்குகிறோம். சாவகச்சேரியில் உங்களுடன் நின்றிருக்க லாம். பயந்து இங்க ஓடிவந்து கண்டது மலேரியா தான். விசுவமடுவில் ஒரே சனம். இருக்க இடமில்லை. கூரை வேயக் கிடுகு இல்லை. மரங்களைச் சுற்றிச் சேலைகளை மறைப்புக் கட்டிவிட்டுப் பல நூறு குடும்பங்கள் வாழ்கின்றன. மழை இடைக் கிடையே பெய்கின்றது. இருக்கிறநகைகளை அறாவிலையில் விற்றுச் சாப்பிடுகினம். ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையால் நாங்கள் இருக்கின்ற பகுதிகளில் எல்லாம் இரவும் பகலும் விமானக் குண்டுவீச்சு நடக்கிறது. எங்கள் வீட்டிற்கு அருகில் குண்டு விழுந்து பத்துப்பேர் வரை செத்துவிட்டார்கள். அவ்வேளை நாங்கள் அங்கில்லாததால் தப்பிப்பிழைத்தோம். இப்பொழுது மல்லாவிக்கு நடந்து வந்துவிட்டோம். தெருவோரத்து மரநிழலில் தங்கியிருக்கிறோம். மன்னாருக்கு வந்து யாழ்ப்பாணம் வர எண்ணம். அல்லது நாச்சிக்குடா வந்து குருநகருக்கு வரலாமாம். வள்ளத்திற்கு ஓராளுக்கு ஆயிரத்திஐநூறு கேட்கிறார்கள். எங்களிடம் காசில்லை. நகையுமில்லை. இருந்தால் வள்ளக் காரரிடம் கொடுத்து வரலாம். குழந்தைகள் அழுகின்றன. சாவோ வாழ்வோ பிறந்த மண்ணில இருந்துதான் அனுபவிக்க வேணும். இப்படி இலட்சக் கணக்கான மக்களின் அவதியில் கிடைக்கின்ற விடுதலை யாருக்கு வேணும்? எங்கும் குண்டு வெடிப்புச் சத்தமும் துப்பாக்கிச் சத்தமும்தான். நோயினாலும் பசியினாலும் நித்தம் இருபது பேர்வரை செத்து வருகிறார்கள். யாழ்ப்பாணத்தில் ஒரே கற்பழிப்பும் உயிர்ப்பலிகளும் நடப்பதாக இங்கு எல்லாரும் கூறுகிறார்கள். யாழ்ப்பாணத்திலும் பார்க்க இங்கு பரவாயில்லை யெனவும் தங்களைச் சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள். என்ன செய்வதென்று தெரியவில்லை. பிச்சைக்காரர்கள் மாதிரிக் கையேந்தி வாழும் நிலைக்குத் தள்ளுப்பட்டுவிட்டோம். இலவச உணவிற்காகக் காத்திருந்து கையேந்திச் சீவிக்கிறோம். எங்களுக்கு விடிவேயில்லையா?...'

எனது நினைவை பத்மநாதனின் கேள்வி கலைத்தது.

'என்ன யோசிக்கிறாய்?'

'யோசிப்பதற்கு என்ன இருக்கிறது...மேடை ஒன்றுதான். நடிகர்கள் மாறிவிட்டார்கள். எப்பவும் துப்பாக்கிகள் தான் நிர்வாகத்தைச் செய்கின்றன. வாழவேண்டுமாயின் இயைந்து

போகத்தான் வேணும் போலப்படுகுது.'

'பழைய புதைகுழிகள் கிளறப்படப் போகின்றன என்கிறாய்.'

'அப்படித்தான் படுகிறது...'

அவன் மௌனத்தில் ஆழ்ந்திருந்தான்.

பலவற்றையும் பேசிக் கொண்டோம். இறுதியாக விடைபெறும் போது: 'இந்தப் பதவியில் வெகு காலம் இருப்பேன் என்ற நம்பிக்கை எனக்கில்லை. நீ ஒரு நாவலில் எழுதியிருந்தாய் நினைவிருக்கிறதா? எல்லாரும் நிர்வாணமாக நிற்கும்போது ஒருவன் கோவணத்துடன் நின்றிருந்தான் என்று...அதுதான் நினைவு வருகிறது.' என்று சிரித்தான். அழுத்தமான சிரிப்பு.

# 20

**சோ**ளகத் தழுவலில் வேப்பங்காற்று வீறுடன் சலசலத்த படி யன்னலூடாக புகுந்து பரவியது. சருகுகளும் அள்ளுப்பட்டு உள்ளே படுக்கையில் விழுந்தன. விமானங்களின் சத்தம் விண்ணில் கிளம்பியதும் துள்ளியெழுந்து மாடிப்படிகளில் இறங்கி பிளாற்றின் கீழ் தஞ்சம் புகுந்துவிடும் முன்னைய அனுபவம் நினைவில் சதிராடுகின்றது. நினைவைக் குலைக்குமாப்போல வீதியில் தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக மோட்டார் சயிக்கில்கள் இரைந்தபடி விரைகின்றன. இராணுவம் செல்கின்றது.

வெளிக்கேற்றை எவரோ தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து யன்னலூடாகப் பார்த்தேன். சிவசாமி மாஸ்ரர் நின்றிருப்பது தெரிகின்றது. என்னுடன் கல்லூரியில் ஒன்றாகக் கற்றவன். நினைவு வரும்போது எப்போதாவது வருவான். கீழிறங்கி விரைந்து வந்தேன்.

'வாடா, சிவா..' - வந்து கதிரையில் அமர்ந்தான்.

'எனக்கு என்ன செய்யிறதெண்டு புரியவில்லையடா... அவன் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தை நான் தெரிந்து கொண்டேன். அதற்கான காரணம் இராசரத்தினத்தின் மகள் சுகந்திதான் என்பது எனக்குப் புரியாமலில்லை. இளந்தாரிப் பொடியன். எனக்கு அவன் மனநிலை புரியுது... நான் அவனை இரக்கத்துடன் பார்த்தேன்.

'அப்ப சுகந்தியை அவனுக்குப் பேசி முற்றாக்கிவிடன்...

அவன் வயதில நீ கலியாணம் கட்டிவிட்டாய்... அவனுக்குத் தொழில் இல்லையெண்டு யோசிக்க வேண்டாம். அவன் பல்கலைக்கழக மாணவன்... பேசி முற்றாக்கிவிட்டால் அவன் படிப்பான். நீ சாதி சனம் பார்க்கிறாய் போலிருக்குது சிவா..'

'விசர்க்கதை... அதெல்லாம் நான் பார்க்கவில்லை. என்ர பொடியனை நான் கட்டுப்பாடாக வளர்த்தாலும் அவனுடைய சுதந்திரத்தில தலையிடுகிறதில்லை. பிரச்சினை அங்கில்லை'...என்றான் சிவசாமி துயரத்துடன்.

'எங்க பிரச்சினை?...'

அவன் வெகு நேரம் அப்படியே இருந்தான்.

'தெரியாமல்தான் கேக்கிறாயா?'

நான் அவனை ஏறிட்டுப் பார்த்தேன். உண்மையில் எனக்குக் காரணம் தெரிந்திருக்கவில்லை.

'சுகந்தியை எங்கு தேடிப்பிடிப்பன்? எங்க எந்த யுத்தகளத்தில நிற்கிறாளோ?'

நான் நிமிர்ந்து அமர்ந்து கொண்டேன். முதுகெலும்பினூடாகச் சுளீரெனக் குளிரேறிய உணர்வு.

'என்னடா சொல்கிறாய்?'

'நான் உனக்கு இதெல்லாம் தெரியுமென்றிருந்தன். உனக்குக் கனகதை தெரியாது போல... சுகந்தியால் என்ர ரெண்டு பிள்ளையளை நான் இழந்திட்டன். அவளிடம் ஆசை வைச்சதால நகுலன் படிக்கும் நிலையிலில்லை. ஒரு வருடம் பிந்தி யூனிவேசிற்றியில படிக்கப் போகிறதாக எழுதிக் கொடுத்துட்டான். எவ்வளவோ சொல்லிப் பார்த்தம். அழுது பார்த்தம்... பயமுறுத்திப் பார்த்தம். கேட்கிறதாகவில்லை. தாய்க்காரி வற்புறுத்தினால் ஒரேயடியாக ஷநானும் போயிடுவன்' என்கிறான்...

சிவசாமியின் தோள்களில் ஆதரவோடு கரங்களைப் பதித்தேன். அவன் குரல் கம்மியது. யாழ்ப்பாணத்துத் தந்தையரின் சோகம் அவன் கண்களில் தெரிந்தது. அவன் தொடர்ந்தான்: 'சுகந்தி வன்னிக்குப் போகும்போது என் மகள் மாலதியையும் கூட்டிச் சென்றுவிட்டாள். இந்தப் பிள்ளைகளுக்கு என்ன பிடித்துவிட்டது? ஷநான் விரும்பித் தான் போறன்' என்ற ஒரு சிறு கடிதத்துடன் மாலதி காணாமல் போயிட்டாள்...பெத்த வயிறு எப்படி எரியுது

என்பது உதுகளுக்குத் தெரியவில்லை...

நான் சிவசாமிக்கு ஆறுதல் கூறி அனுப்பிவைத்தேன்.

மறுநாள் அதிகாலை நான் கேற்றைத் திறந்தபோது, சோகமே உருவாக சிவசாமி நின்றிருந்தான்.

'உள்ளே வா, சிவா...'

அவன் உள்ளே வந்து கதிரையில் அமர்ந்தான். அவன் முகத்தில் மலர்ச்சி மறைந்திருந்தது. பலவேறு சிக்கல்கள் அவன் குடும்பத்தில் ஏற்பட்டுவிட்டன. ஒவ்வொன்றையும் நானறிவேன்.

'என்னடா, சிவா...ஒரு மாதிரியிருக்கிறாய்...'

'ஒண்டும் புதிதாகவில்லை. வன்னியில் யுத்தம் கடுமையாகி விட்டது. நகுலன் திக்பிரமை பிடித்தவனாகத் திரியிறான்... மாலதி பற்றிய தகவலுமில்லை.'

என் மனைவி சிவசாமியின் குரல் கேட்டு ஹோலிற்கு வந்தாள்.

'சரோசா எப்படி அண்ணை?'

'என்னத்தைச் சொல்லத் தங்கச்சி...பிள்ளையளைப் பற்றிய கவலைதான். வருத்தக்காரியாகிவிட்டாள். இங்கிருந்து சாவகச்சேரிக்கு ஓடேக்க கூட அவள் இப்ப கலங்குவதுபோல வருந்தவில்லை. பிள்ளையளைப் பெற்று அனுபவிக்கிற துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.'

என் மனைவியால் அவனுக்கு ஆறுதல் கூறமுடியவில்லை.

'எல்லாம் சரியாகும் அண்ணை. இருங்கோ...என்றபடி உள்ளே செல்ல முயன்றவளைச் சிவசாமியின் குரல் தடுத்தது. 'எனக்கொண்டும் வேண்டாம் தங்கச்சி. இப்பதான் தேத்தண்ணி குடிச்சிட்டு வாறன்.'

அவன் இராணுவ வேலிக்கு அப்பால் தலையாளியில் மாமனார் மாணிக்கத்தாரின் வீட்டில் குடும்பத்துடன் இருக்கிறான். அம்மன் கோயிலின் முன்றலில் இருந்த வீட்டை இராணுவ வேலியிடுவதற்காக இராணுவம் புல்டோசர்களால் இடித்துத் தள்ளிவிட்டது. சாவகச்சேரியிலிருந்து திரும்பி வந்து பார்த்தபோது வெறும் கற்குவியல்தான் காட்சி தந்தது.

'இதென்ன கொடுமை!' என்று அவன் வாய்விட்டலறி

னர்ன். அவனுடைய வீடு மட்டுமல்ல. அந்த வரிசையிலிருந்த நூற்றுக்கணக்கான வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டுவிட்டன.

'நான் சாவகச்சேரிக்கு ஓடியிருக்கக்கூடாது. அம்மான் மாதிரி இங்கயே இருந்திருக்க வேணும்...அங்க ஓடிப்போனதால தான் இவ்வளவு பிரச்சினைகளும் சிக்கலும்...'

அவன் கரங்களால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். அவன் துயரம் ஆறவில்லை. தொடர்ந்து பேசு வதற்குக் குரல் இடறியது. விழிகளில் நீர்கோர்க்க என்னை ஏறிட்டுப் பார்த்தான்.

'என்னடா சிவா?' என்று நான் அவனை உலுக்கினேன்.

அவன் திடுக்கிட்டுப் போய் என்னைப் பார்த்தான்.

'நாங்கள் ஊரைவிட்டு ஓடியிருக்கக்கூடாது. அப்படி ஓடியிருக்காவிட்டால் நகுலன் சுகந்தியைச் சந்தித்திருக்கவே மாட்டான். அப்படியொரு சந்தர்ப்பம் வந்திருக்கவே மாட்டாது. சுகந்தியின் தகப்பன் இராசரெத்தினமும் நானும் சினேகிதம் தான். அதுக்காக... அதுவும் சுகந்தியை அவன் விரும்பினானே? அதன்ால வந்த சிக்கல் தான் இவ்வளவும்...அந்தச் சினேகிதம் ஏற்படாதிருக்கில் மாலதியும் எங்களுடன் இருந்திருப்பாள்.'

'சிவா... சிலவற்றிற்கு நாங்க காரணம் கூறமுடியாது...'

'நல்லூர் வீதியில் இரவில தங்கி... பக்கத்தில இருந்ததால அறிமுகமாகி... தன்னால தான் இப்படி வந்ததெண்டு என்ர மனிசிக்கு ஒரே கவலை. முந்த நாள் கூட தலையாளிமுழுவதும் ஒரே சுற்றிவளைப்பு... ஆமிக்காரர் வீடுவீடாகச் சோதனை செய்தினம். நகுலனை ஐயப்பட்டு அழைத்துச் சென்றினம். நான்தான் பேசிக்கீசிப் பின்னேரம் தான் விட்டினம். ஆமிக் காரர் கேட்டவற்றிற்கு நகுலன் முறைப்பாகப் பதில் சொல்கி றான்... இதெல்லாம் எங்கபோய் முடியப்போகிறதோ என்று பயமாக இருக்குதடா...' சிவசாமி கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

'மனந்தளராதை சிவா...எல்லாம் மனிசருக்குத்தான்.'

என் மனைவி கொண்டுவந்த தேநீரை வாங்கிப் பருகி விட்டு அவன் விடை பெற்றுச் சென்றான். நான் ஈசிச்செயரில் சாய்ந்து கொண்டேன்.

'என்ன இண்டைக்கு ஒபீஸ் இல்லையா? லீவா?' என்றபடி என் மனைவி வந்தாள்.

'என்ன நேரம்?'

'எட்டரை...'

அவசரமாகப் புறப்பட்டுப் பணிமனைக்குச் சென்றேன்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் பொது மக்களால் நிரம்பி வழிந்தது. தலை நிமிர்ந்து பார்த்து விசாரித்துப் பணிகளைச் செய்ய முடியாத அளவிற்கு ஒருவர் பின் ஒருவராகப் பலவேறு பிரச்சினைகளுடனும் கோரிக்கைகளுடனும் வந்து சென்றனர். பன்னிரண்டு மணியளவில் ஓரளவு நெருக்கடி குறைந்தது. தலை நிமிர்ந்தபோது வாசலில் இராசதுரை தயங்கி நின்றிருப்பது தெரிந்தது.

'வா... வா... இராசதுரை: என்ன இங்கால...'

அவன் தயங்கியபடி உள்ளே வந்தான். அவனை நான் முதன் முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கிய தற்காலிகக் கச்சேரியில் சந்தித்திருந்தேன். அதன் பின் சுவாமிநாதன் வீட்டிலும் சந்தித்த நினைவு.

அவன் மிகுந்த சோர்வுடன் காணப்பட்டான். வாழ்க்கையில் தொடர்ந்து துயரங்களை அனுபவித்தவன். நவாலிக் குண்டு வீச்சில் மனைவியையும் ஒரு பிள்ளையையும் பலி கொடுத்தவன். இடம் பெயர்ந்து சாவகச்சேரிக்கு அவலமாக ஓடும்போது பெற்ற தாயைப் பறிகொடுத்தவன்.

'இரு தம்பி...'

'வேண்டாம்: சேர்...'

நான் வற்புறுத்தியதன் பின்னர் கதிரையில் அமர்ந்தான்.

'என்ன சொல்லும்...'

'நான் நவாலியில் இருக்கிறவன். இப்ப ஆனைக்கோட்டையில் இருக்கிறன். எங்களுக்கு இப்ப நீங்கள் கொடுக்கிற மீள்க்குடியேற்ற நிவாரணம் ஐயாயிரம் ரூபா கிடைக்காதாம். சண்டிலிப்பாய் ஏஜீஏ யிடம் போகட்டாம். எனக்கு ஒண்டும் விளங்கவில்லை. நீங்க தான் பார்த்து உதவ வேண்டும்.'

அவனுக்குரிய வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்து

விட்டு எழுந்திருந்தேன். பத்திரிகைகளில் யாழ்ப்பாணத்திற்கு ஏதோவெல்லாம் கொடுக்கப்படுவதாகச் செய்திகள் வருகின்றன. இடம் பெயர்ந்து மீளக் குடியேறிய மக்கள் கந்தோர்களுக்கு அலைகிறார்கள்.

மத்தியானம் சாப்பாட்டிற்காகப் புறப்பட்டபோது மீண்டும் சிவசாமியைக் கண்ணுற்றேன்.

சிவசாமி பணிமனை வாயிலில் எனக்காகக் காத்திருந் தான். அவன் சோர்ந்து இருந்ததிலிருந்து ஏதோ நடக்கக்கூடா தது நடந்துவிட்டது என்பது புரிந்தது. கண்கள் சிவந்து முகம் சற்று வீங்கியிருந்தது. என்னைக் கண்டதும் எழுந்து நின்றான்.

'வா... சிவா... உள்ள வா...' என்று அவனை என் பணிமனை அறைக்குள் அழைத்துச் சென்றேன். என் அலுவலக மேசை முன்னிருந்த கதிரையில் பொத்தென அமர்ந்து கொண்டான்.

'என்னால இனியும் இந்தத் துயரங்களைத் தாங்க முடியாது. செத்துவிடலாமோ எனப்படுகிறது...' என்றபடி விழிகளைத் துடைத்துக் கொண்டான்: 'அதிகாலை சுற்றி வளைப்பில் நகுலனை நேற்று ஆமி பிடித்துக் கொண்டு போய்விட்டது. விசாரித்துப் பார்த்தேன். எங்கெண்டு தெரியவில்லை...'

'ஏன் நகுலனைத் திரும்பத் திரும்பப் பிடிக்கிறான்கள்.'

'அவனுடைய முறைப்பு அவர்களுக்குப் பிடிக்கவில்லை. யூனிவேசிற்றித் துணைவேந்தருக்கும் முறையிட்டுள்ளேன். ஜீ ஏ யிடமும் ஒரு முறைப்பாடு செய்யலாமென்று வந்திருக்கிறன். மாலதிதான் போயிட்டாள். நகுலனாவது எஞ்சுவான் என்று பார்த்தன். ஏதாவது உதவி செய்யடாப்பா... உன்னைத்தான் நம்பி வந்திருக்கிறன்...

என்னால் என்ன உதவியைச் செய்துவிட முடியும்? நாங்கள் அவ்வளவு அதிகாரத்துடனா இருக்கின்றோம்? காணாமல் போன நூற்றுக்கணக்கான பிள்ளைகளைப் பற்றிய தகவல்களில்லை. அவர்களுடன் நகுலனும் ஒருவனாகிவிடு வானோ? மனக்கிலேசத்துடன் இருக்கும் நகுலனின் பதில்கள் அவர்களுக்குச் சிலவேளைகளில் சந்தேகத்தையும் வெறுப்பை யும் ஏற்படுத்திவிடலாம். புலியென முத்திரை குத்திவிடுவதற்கு முன்னர் கண்டறியப்பட வேண்டும்.

'சிவா... கவலைப்படாதை... ஒண்டும் நடக்காது. விண்ணப்பம் எழுதிக் கொண்டு வந்திருக்கிறாயா?'

அவன் என்னிடம் ஒரு நீள என்வலப்பை நீட்டிவிட்டு விடைபெற்றான்.

'நீ போ சிவா.. நான் பின்னேரமாக வீட்டிற்கு வருகிறன்..'

எல்லாவகையாலும் மக்களுக்குக் கஷ்டங்கள் அதிகரித்து வருகின்றன. நெருக்குவாரங்களால் மக்கள் நிம்மதியை இழக்கத் தொடங்கிவிட்டனர். இரு தசாப்தங்களாகத் தொடரும் துன்பங்களு க்கு இன்னமும் விடிவு கிட்டவில்லை. எங்கும் அழிவுகள்... அழிவுகள்...

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்களில் ஒன்றாவது செயற்படுத்தப்பட்டிருந் தால் இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடுவது ஓரளவு தடைப் பட்டிருக்கும். பேரினவாதிகள் அந்த ஒப்பந்தங்களைக் கிழித் தெறியச் செய்வதில் வெற்றிகண்டார்கள். ஆனால் இந்த மண்ணில் சரியும் உடலங்களின் எண்ணிக்கையை அவர்களால் தடுத்துவிட முடியவில்லை.

அலுவலகப் பணிகளில் மூழ்கிப்போனேன். அவற்றிற் கிடையில் அரசாங்க அதிபர் மூலம் நகுலனைப் பற்றிய தகவலும் கிடைத்தது. திருநெல்வேலி இராணுவ முகாமில் விசாரணைக்கா கத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறானாம். விசாரணை முடிந்ததும் நிரபராதியாயின் விடுவார்களாம்.

மத்தியானம் சாப்பாட்டிற்காக வீடு செல்லும்போது சிவசாமியின் இல்லத்திற்குச் செய்தி தெரிவிக்கச் சென்றேன். வீட்டில் சந்தோஷம் நிலவியது. என்னைக் கண்டதும் சிவசாமி ஓடிவந்தான்.

'நகுலனை விட்டிட்டினம்..அம்மான் தான் காம்பிற்குப் போய் வாதாடிக் கூட்டி வந்தார்...'

'யார் மாணிக்கத்தாரோ?'

'ஓமோம்...'

நகுலன் ஹோலில் சோகமாக உட்கார்ந்திருந்தான். என்னைக் கண்டதும் எழுந்திருந்து சிரிக்க முயன்றான்.

'இரும் தம்பி..'

'இப்படி இவங்கள் தேவையில்லாமல் எங்களைப் பிடித்து அடைத்து அவமானப்படுத்துவதன் மூலம் எங்களை அங்கால போக வைத்துவிடுவான்கள். சும்மா இருக்கிற எங்களை நிம்மதியாகத் திரிய விடுகிறான்களில்லை...'

அவனுடைய வேதனை எனக்குப் புரிந்தது.

'நீர் ஒழுங்காக யூனிவேசிற்றிக்குப் போய்ப்படியும்...'

அதற்கு அவன் எதுவும் பேசவில்லை. தலையைக் கவிழ்த்துக் கொண்டான். அவன் மனதில் என்ன என்ன எண்ணங்கள் அலையெறிந்தனவோ?

மாணிக்கத்தார் வெளியிலிருந்து வந்தார். என்னைக் கண்டதும் அன்புடன் சிரித்தார்.

'தம்பியே? எப்ப வந்தீர்..'

'இப்பத்தான்...நீங்கள் எப்படி நகுலனை விடுவித்தியள்?

'அங்க எனக்குத் தெரிந்த ஒருவன் இருந்தான்...'

'ஆமியோ?'

'ஓமோம்... கப்ரின் சிறிபால... சிறிபால..' அவர் தனக்குள் அவன் பெயரை இருதடவை உச்சரித்துக் கொண்டார். நகுலன் குறுக்கிட்டான்.

'அப்புவுக்கும் கப்ரின் சிறிபாலவுக்கும் வலு ஒட்டு... இவரைக் கண்டதும் அவன் எழுந்து ஓடிவந்து ஷதாத்தே' என்று வரவேற்றான்...'

நான் மாணிக்கத்தாரை அர்த்தத்துடன் பார்த்தேன்.

அவர் நீண்ட நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தார். எங்கோ வெறிக்கப் பார்த்தார்.

'சிறிபால..' என்று உச்சரித்துக் கொண்டார். பின்னர்: 'இன்று வெள்ளிக்கிழமை. அம்மன் கோயிலுக்கு வாறீரோ? நீர் அங்கால வந்து கனநாள்.

எனக்கும் அவர் அழைப்பு இதமாகவிருந்தது.

வெள்ளிக்கிழமை. அம்மன் கோயிலில் ஐந்து பக்தர்களுககு மேலிருக்கவில்லை. இராணுவ வேலிக்கு அருகில் கோயில் வந்துவிட்டதாலும் போக்குவரத்துக் கஷ்டம் காரணமாகவும்

மக்கள் தொகை குறைந்துவிடவில்லை. கோயிலுக்கு அருகிலிருந்த அனைத்து வீடுகளும் இராணுவ வேலிக்காகத் தரைமட்டமாக்கி விட்டதனால் அயலில் மக்களில்லை.

நான் கோயிலுக்கு வந்தபோது வெளிமண்டபத்தில் மாணிக்கத்தார் அமர்ந்திருந்தார். பூசை தொடங்க நேரம் இருந்ததால் நான் அவர் அருகில் அமர்ந்துகொண்டேன்.

'எப்படியிருந்தவிடம்' இன்று சுடுகாடாகக் கிடக்குது... என்று பெருமூச்செறிந்தார். 'அயலட்டையெல்லாம் இங்கிருந்து மழையுக்க தோய்ந்து விழுந்து வெளியேறிய பின்னர் இந்த மண்டபத்தில் நான் மட்டும் விசரன் மாதிரி இருந்ததை எண்ணிக் கொண்டன். பார்வதி ஆச்சியை வளவுக்குள் புதைக்க நேர்ந்த அவலத்தை நினைச்சுக் கொண்டன்...

அவர் விழிகள் எங்கோ ஆழமாக நிலைத்தன. துயரத்தின் கருநிழல் முகத்தில் படிந்தது. எதையோ எண்ணிக் கொண்டவராக மீண்டும் நெடுமூச்செறிந்தார்.

நான் மாணிக்கத்தாரைப் பார்த்தேன்.

'கனகசபை குடும்பம் இன்னமும் திரும்பி வரவில்லை. வந்தால் பார்வதி ஆச்சியின்ர கடைசி விருப்பத்தை நிறைவேற்றலாம்... அவ விரும்பியபடி கோம்பயன்மணல் மயானத்தில் இறுதிக் கிரியைகளைச் செய்துவிடலாம்...'

'கனகசபை அண்ணன் குடும்பம் வன்னியில எண்டு கேள்வி. சாவகச்சேரியிலிருந்து வன்னிக்கு ஓடிவிட்டினம். அங்க இப்ப என்ன கஷ்டப்படுகினமோ... வன்னி யுத்தகளமாக மாறிவிட்டது. உணவுத் தட்டுப்பாடும் மருந்துத் தட்டுப்பாடும் எத்தனை பேரையோ பலியெடுத்திட்டுதாம். கனகசபை என்னவானானோ?...'

மாணிக்கத்தார் என்னைக் கவலையோடு பார்த்தார்.

'நாளாந்தம் பயமும் பீதியும் நாடெங்கும்... மக்களும் பயந்தபடி இந்த ஆமியும் பயந்தபடி... நேற்றுக் கலட்டிச் சந்தியில நிக்கிற ஆமிக்காரப் பொடியன் எங்க போறியள் எண்டான். கோயிலுக்கு எண்டன். வரேக்க நூல் கொண்டு வாங்க... கையில கட்ட என்று இரந்தான். அவனைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது. எங்கட சாமிமார் மரணத்திலிருந்து காப்பாற்றுவினம் என்று நம்புகிறான். உயிர்ப்பயம் யாரை விட்டது'

'இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவு வராவிட்டால் அது எங்கள் எல்லாரையும் ஒரு முடிவிற்குக் கொண்டு வந்துவிடும். அது சரி அம்மான். சிவசாமி எப்படியிருக்கிறான்? அவன் வீட்டிற்கு அன்று வந்தான். பிள்ளைகள் பற்றிக் கவலைப்படு கிறான். நீங்கள் நகுலனுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதே?'

'எதை அவளை மறந்துவிடு என்றா? நகுலன் ஒரு வித்தியாசமான பையன். தம்பி. சிறு ஏமாற்றத்தைக்கூடத் தாங்க வலுவற்றவன்.'

'சிவசாமியின்ர மற்றப் பிள்ளையும் இப்படிச் செய்திருக்கக் கூடாது.'

'இந்தக் காலத்துப் பிள்ளையள் யார் சொல்லைக் கேட்குதுகள்... கொஞ்சமாவது யோசித்துச் சரிபிழை பார்க்குது களா? அறிவுபூர்வமாகச் சிந்திக்காது உணர்ச்சிபூர்வமாகச் சிந்திக்கப் பழகிவிட்டுதுகள்... சிவசாமி சாவகச்சேரிக்குப் போயிருக்கக் கூடாது.' என்றபடி மாணிக்கத்தார் மௌனத்தில் ஆழ்ந்தார்.

# 21

மாணிக்கத்தாரின் செயற்பாடுகள் எனக்கு இப்பொழுது நினைத்தாலும் வியப்பாகவிருக்கின்றது. கட்டிலில் படுத்திருந்த படி யன்னலுக்கு வெளியே நிலவில் குளித்துக்கொண்டிருக்கும் பிள்ளையார் கோயில் கோபுரத்தைப் பார்த்தபடி இருந்தாலும் மனதில் மாணிக்கத்தாரின் வார்த்தைகளே நிறைந்திருக்கின்றன.

'அவனை வீட்டிற்கு இழுத்துவந்து கழுவித்துடைத்துக் காயத்திற்கு ஏதோ மருந்திட்டுத் தேத்தண்ணி பருக்கிப் பார்க்கும்வரை அவன் ஆமிப்பொடியன் என்பது எனக்குத் தெரிந் திருக்கவில்லை. பின்னர் பின்னர் ஐயப்படத் தொடங் கினேன். 'அம்மே' என்று புலம்பியதும் அது உறுதியானது. அவனை வெறுக்க என்னால் முடியவில்லை. ஜெகன் மாதிரித்தான் அவன் எனக்குத் தெரிந்தான். உயிருக்காக மன்றாடுகின்ற ஒரு மனிதனாக கத்தான் தெரிந்தான். அவர் சற்று நிறுத்திவிட்டு என்னை ஆழமாக ஏறிட்டார். 'திடீரென உள்ளே நுழைந்தவர்கள் பொடியள் என்று நான் நினைச்சன். அதனால தம்பிமாரே சுட்டிடாதையுங்கோ என்று கத்தினன். அதுக்கிடையில வெடி என் காலைத் துளைத் துக் கொண்டு சென்றுவிட்டது. நான் அப்படியே அலறியபடி நிலத்தில் சாய்ந்தேன். வாங்கில் படுத்திருந்த சிறிபால் ஆவேசத் தோடு எழுந்து சுட்டவனை ஓங்கியறைந்தான். பின்னர் என்னருகில் வந்து என்னைத் தூக்கிக் கொண்டான். அவன் கண்கள் கலங்கின.

'தாத்தே... சமாவென்ன... சமாவென்ன... அப்பு... என்னை மன்னியுங்கள்' என்று அழுதான்.

'நான் கண்விழித்தபோது பலாலி ஆஸ்பத்திரியில் இருந்தேன். சிறிபால அருகில் இருந்தான். பிறகு என்னைக் கொண்டு வந்து அச்சுவேலி வயோதிபர் இல்லத்தில் வைச்சிருந்தினம். பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டன். சிறிபாலவை நான் பின்னர் காணவில்லை. இப்ப திருநெல்வேலி காம்பில் பார்த்தபோது அவன் என்னை அடையாளம் கண்டுகொண்டான். ஓடிவந்தான். தாத்தே. நீங்கதான் எனக்கு உயிர் தந்த தெய்யோ...என்று தளுதளுத்தான். மாணிக்கத்தார் தயங்கினார்.

'ஏன் இங்க வந்தது: தாத்தே?'

'நகுலன் என்ர பேரன் இஞ்ச இருக்கிறான். பிடிச்சு வைச்சிருக்கிறியளாம் தம்பி...என்ர பேரன்...சோலி சுரட்டிக்குப் போகாத பிள்ளை.'

'உங்க பேரன் உங்க மாதிரித்தான் இருப்பான்.'

அவனை அழைத்து வந்து என்னிடம் ஒப்படைத்தான்.

'வாறம் பிள்ளை...'.

'சந்தோசம் தானே?...'

மாணிக்கத்தார் சிறிபாலவை நிமிர்ந்து பார்த்தார். இல்லையென்பது போலத் தலையை அசைத்தார்.

'கியன்ன தாத்தே...'

'கண்டபாட்டிற்குச் சந்தேகமெண்டு இளம் பிள்ளையளைப் பிடிக்காதையுங்கோ. இப்ப எஞ்சியிருக்கிறது கள் அதுகள் தான். புலிகளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ விரும்பியோ வற்புறுத்தியோ உதவியவையெல்லாரும் கொட்டியாக்கள் என்றால் தம்பி: யாழ்ப்பாணத்தில எல்லாரும் கொட்டியாக்கள் தான்... துப்பாக்கி ஏந்திய கரங்களுக்கு முன்னர் நாங்கள் எல்லாரும் எம்மாத்திரம்...'

சிறிபாலவின் விழிகளில் வியப்புப் படர்ந்தது.

'விளங்குது... விளங்குது...' என்று சிரித்தான்.

நிலவில் கோபுரக்கவசங்கள் பிரகாசமாகத் தெரிந்தன. கோபுரத்தில் பிளாஸ்ரிக்கில் வெட்டி ஒட்டிய 'ஓம் கணபதி என்ற வாக்கியம் ரியூப் லைற்றின் பின்னணியில் அபயம்

தந்தபடி இருந்தது. இன்னும் ஒருமணி நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிடும்.

அந்த எழுத்துக்களைப் பிளாஸ்ரிக்கில் வெட்டி ஒட்டிக் கோபுரத்தில் பிணைத்த என் சகலன் இன்று யாழ்ப்பாணத்தில் இல்லை. இந்திய இராணுவம் யாழ்ப்பாண வீதிகளில் அட்டகாசம் செய்த வேளையில் இந்தியாவில் குடும்பத்துடன் தஞ்சம் புகுந்துவிட்டார். இராணுவ அட்டகாசங்களுக்குப் பயந்து வெளிநாடுகளுக்கு ஓடிப்போனவர்கள் எத்தனை ஆயிரம்?

'என்ன கோபுரத்தைப் பார்த்தபடி கிடக்கிறியள்... நித்திரை வரவில்லையே?' என்று மனைவி உலுப்பினாள்.

நான் திரும்பி அவளைப் பார்த்தேன்.

'உங்களுக்கு ஒரு புதினம் தெரியுமே?'

'என்ன?'

'சிவசாமி அண்ணற்றை மாலதியும் இராசரெத்தினத்தாரின்ர சுகந்தியும் வன்னியிலிருந்து திரும்பி இங்க வந்திட்டினமாம்.'

நான் எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

'மெய்யாகவா?'

'நான் ஏன் பொய் சொல்கிறன். எனக்கு என்னவோ இவர்களின் வருகை நல்லதாகப்படவில்லை... இந்த நேரத்தில் இப்படியான சூழ்நிலையில் வந்திருக்கத் தேவையில்லை. எல்லாருக்கும் பிரச்சினை...'

'அது சரி எப்படி வந்தவயாம்?'

'அது எனக்குத் தெரியாது...'

நாச்சிக்குடாக்கரையில் கிளிநொச்சி; முல்லைத்தீவுப் பகுதிகளிலிருந்து ஓடிவந்த மக்கள் குழுமி நின்றனர். வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு ஓடி அங்கிருந்து வன்னிக்குக் கிளாலியால் ஓடிக்களைத்து இப்பொழுது நாச்சிகுடாக் கரையில் வள்ளங்களுக்காகக் காத்திருக்கிறார்கள். எப்படியாவது யாழ்ப்பாணத்திற்குப் போய் விடவேண்டும் என்ற ஆர்வமும் கவலையும் எல்லார் முகத்திலும் கவிந்து கிடந்தது.

எல்லாரும் சோர்ந்து காணப்பட்டனர். வயோதிபர்கள்; நோய் வாய்ப்பட்ட சிறுவர்கள்; குழந்தைகள் ஆங்காங்கு வெறுந்

தரையில் சுமைகளுடன் கிடந்தனர். இந்த மக்கள் இப்படி அவலப்பட என்ன குற்றம் செய்தார்கள்?

'தமிழனாகப் பிறந்ததே குற்றம்...' என்றார் அங்கிருந்த ஒருவர்.

'மண்டைதீவிற்கும் கல்முனைக்குமிடையில் ஒரு மண் பிட்டியில் இறக்கி விடுவான்களாம். பின்னர் குருநகர்க்கரை நோக்கி நடந்து செல்ல வேண்டுமாம். சிலவிடங்களில் மார்பு வரை நீராம்... சாமான்களைச் சுமந்து கொண்டு எப்படிப் போய்ச் சேர்வது...'

'குருநகருக்குப் போயும் மூன்று நாள்கள் காம்பில் இருக்க வேணுமாம். விதானையார் வந்து பிணையெடுத்தால் தான் விடுவினமாம்...'

'வள்ளக்காரர் கரையில கொண்டு போய் விட்டால் என்ன?'

'வள்ளம் யாழ்ப்பாணத்திற்குப் போனால் திரும்பி வர விடமாட்டான்களாம். இங்கால வள்ளக்காரருக்கு நல்ல உழைப்புக் கண்டியளோ? ஆளுக்கு ஆயிரத்து ஐநூறு எண்டு வாங்கினம்.'

'வழியில ஆமிப்பயம் இல்லையே?'

'இருக்குது...வெள்ளைக் கொடியேத்திக் கொண்டு தான் போறது.'

'ஏன் வந்தம்? ஏன் போறம்?'

அன்றிரவு வெறும் வெளியில் சோளகக் காற்றின் கடும் வீச்சுக்கிடையில் கட்டாந்தரையில் உறங்கி விழித்தனர். அதி காலையிலேயே நாச்சிக்குடாவிலிருந்து வள்ளங்கள் புறப்பட்டு விட்டன. ஏற்கனவே பெயர் பதிந்தவர்கள் வள்ளங்களில் ஏறிக் கொண்டனர். ஒரு வள்ளத்தில் சுகந்தியும் மாலதியும் ஏறியிருந்தனர்.

'எனக்கு மனதில் சங்கடமாகவிருக்குது; சுகந்தி அக்கா.' என்றாள் மாலதி. சுகந்தி அவளை இரக்கத்துடன் பார்த்தாள். கடல் காற்றின் வீச்சில் அவள் குரல் சரியாகக் கேட்கவில்லை. அதனால் இடம் மாறி மாலதியின் அருகில் இடம் பிடித்துக் கொண்டாள். பாய்விரித்ததும் வள்ளம் கம்பீரமாக வடக்கு நோக்கி நகர்ந்தது.

கடல் அலைகள் சோளகத்தின் பிடியில் பொங்கிபெழுந் தன. வள்ளம் சீராக நகர்ந்து கொண்டிருந்தது. அந்த வள்ளத்தில் இருபது பேர் வரையில் இருந்தனர். அவர்களில் பலர் வயோதிபர்கள். பெரும் சுமைகளுடன் வந்திருந்தனர். இவற்றினைத் தூக்கிக் கொண்டு எப்படி நீரில் நடக்கப் போகிறார்கள் எனச் சுகந்தி எண்ணிக்கொண்டாள். கிளாலியில் நடந்து பழகியவர்களாக இருப்பார்கள்.

பூநகரிக்கரை தூரத்தில் தெரிந்து கொண்டேயிருந்தது. ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திற்குத் தங்கள் பிறந்து வாழ்ந்த இடத்திற்குத் திரும்பிச்செல்கின்ற மகிழ்ச்சி அவர்களில் தெரிந்தது. ஊரில் அவர்களுக்கு என்ன காத்திருக்கின்றதோ? வீடு இருக்குமா? வளவு இருக்குமா?

யுத்தம் விட்டு வைத்திருந்தாலும் முன்னுக்கு வந்தவர்கள் அவற்றினை விட்டு வைத்திருப்பார்களா?

சுகந்தி தூரத்தில் தெரிகின்ற கரையை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள்.

அவளைக் கண்டதும் வீட்டார் எவ்வாறு தமது உணர்வுக ளைப் பிரதிபலிப்பார்கள் எனக் கற்பனை செய்து பார்த்தாள்.

'சுகந்தி... வாம்மா... அம்மா அன்போடும் பாசத்தோடும் ஓடிவந்து கட்டிக் கொள்வாள்.

'ஏன்ரி வந்தாய்? போனனி அப்படியே போய் இருக்க லாமே? இப்ப ஏன் வந்தாய்...எல்லாரையும் பலி கொடுக்கவா?' என்று அப்பா நிச்சயம் கத்துவார்.

'இங்க நீ இருக்கிறது கஷ்டம்: சுகந்தி காட்டிக் கொடுத்து விடுவினம்... நீ என்னத்துக்காகத் திரும்பி வந்திருக்கிறியோ தெரியாது. ஆனா ஒன்று மட்டும் நிச்சயம்... உன்னால எல்லாருக்கும் பெரும் பேரிடி காத்திருக்கிறது' என்று வசந்தன் அண்ணன் கூறுவானோ?

வீட்டில் தங்கக்கூடாது எனச் சுகந்தி எண்ணிக் கொண்டாள்.

மாலதியின் விழிகள் கடல் பரப்பில் வெறித்துப் பார்த்தன. சாவகச்சேரியிலிருந்து திடீரென எடுத்த முடிவு அதுவல்ல. நீண்ட காலமாக காத்திருந்து எடுத்த முடிவு. ஆனால் அவளால் வன்னியில் இருக்க முடியவில்லை. அவள்

உடல் ஆரோக்கியம் கடுமையான பயிற்சிக்கு இடம் கொடுக்க வில்லை. ஓடினால் இளைப்பு. மூச்சிரைப்பு. பரிசோதனையில் இருதயத்தில் ஒரு துவாரம் எனத் தெரியவந்தபோது அவளை வீட்டிற்குச் செல்ல அனுமதித்துவிட்டனர். அவள் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறாள்.

அப்பா எப்படியிருப்பார்? அம்மா பரிவோடு வரவேற் பாளோ? நகுலண்ணன் எப்படி இருப்பான்? தங்கச்சி சுகிர்தா? அவர்களைப் பிரிந்து ஒன்றரை வருடங்களாகின்றன. எப்படி அவளை அவள் குடும்பத்தினர் ஏற்றுக்கொள்வார்கள்?

'வீட்டைத் துறந்து இயக்கத்துக்குப் போனனியள் அப்படியே சென்று விடவேண்டியதுதானே? முந்தி மாதிரியா யாழ்ப்பாணம்? இராணுவச் சென்றிகளின் கம்பிவேலிச் சிறைக்குள் வாழ்கின்றோம். ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் கூண்டோடு கைலாசம்தான்...'

இயக்கத்திற்குப் போய்விட்ட பிள்ளைகளின் பெற்றோர் இராணுவத்திடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துவிட்டுத் தான் தங்கள் வீடுகளில் வாழ்ந்து வருகின்ற சங்கதி எல்லாருக்கும் தெரிந்தவைதாம். அப்படிச் சென்றுவிட்ட பிள்ளைகளின் படங்களைக்கூட இராணுவம் எடுத்துச் சென்றுவிட்டது.

'திரும்பி வந்தால் எங்களிடம் ஒப்படைச்சு விடவேணும்...' என்ற கட்டளை வேறு.

யாழ்ப்பாணத்து நிலைமை மாலதிக்குத் தெரிந்துதான் இருக்கிறது. வேறு வழியில்லை. ஒரு தடவையாவது பெற்றாரைப் பார்த்துவிட வேண்டும்.

மத்தியானப்பொழுது. உச்சியில் சூரியன் ஏறியிருந்தான். கடல் சற்று அமைதியாக இருந்தது. கடனீரேரிக்குள் வள்ளங்கள் புகுந்துவிட்டன.

வள்ளம் ஓரிடத்தில் தரித்து நின்றது. கடல் தரை தெளிவாகத் தெரிந்தது.

'எல்லாரும் இங்க இறங்குங்கோ... அதோ குருநகர்த்தரை தெரியுது. கடலில வழிதெரிந்தவர் இவர் ஒருத்தர்தான். இவருக்குப் பின்னால வரிசையாக நடந்து செல்லுங்கோ... கால்களைத் தூக்கிக் கண்டபாட்டிற்கு வைக்கக்கூடாது. கடற்பார்கள் காலை வெட்டிவிடும். மெதுவாக தடம் பார்த்துக் கால்களை நகர்த்தி நடக்க வேணும்...'

ஒவ்வொருவராக இறங்கிக் கொண்டனர். தாம் கொண்டு வந்த பொருட்களைத் தலைகளில் தூக்கி வைத்துக் கொண்டனர். தலையில் வைத்தவற்றைவிட கரங்களில் சிலர் காவியிருந்தனர்.

'எப்படி நடக்கப் போறியள்'

'இவ்வளவும் அங்க வந்து சேராது... கொஞ்சத் தூரம் நடப்பியள். பின்னர் ஒவ்வொரு பொருளாகக் கடலில் விடுவினம். சொல்லிப் புண்ணியமில்லை' என்றான் வள்ளக்காரன். எல்லார் முகத்திலும் ஏக்கம் படர்ந்தது.

சுகந்தியிடமும் மாலதியிடமும் அவர்களது உடுப்புகளைக் கொண்ட கிட்பாக்குகள்தாம் இருந்தன.

வழிகாட்டி தன் பையைத் தலையில் தூக்கி வைத்தபடி நடக்கத் தொடங்கினான். அவனைப் பின்பற்றிச் சிலர் நகர்ந்தனர். சுகந்தியும் மாலதியும் அவர்களோடு சென்றனர். ஒரு வயோதிபர் முதல் காலடி எடுத்து வைத்ததுமே கடலில் தவறி மூழ்கி எழுந்தார். இன்னொரு பெண் தலையில் வைத்த சுமையோடு இரு கைகளிலும் பொதிகளை வைத்திருந்தாள். நடக்க முடியவில்லை. கடலலை சேலையைக் கிளப்பியது. தலைச்சுமை அப்படியே நீரில் சரிந்தது.

'ஐயோ... ஐயோ... அதை எடுத்துத் தாங்கோ...அதிலதான் என்ர எல்லாம் இருக்குது... நகை... அடையாள அட்டை எல்லாம்...'

எவரும் உதவுவதாகவில்லை. கையிலிருந்த இரு பைகளையும் கடலில் விட்டுவிட்டு விழுந்த அந்த பாக்கினை எடுத்துக் கொண்டாள்.

கடனீரேரியின் கடல் தளத்தில் கூரிய முருகைக்கற்களின் விளிம்புகள் கத்தி போலக் கால்களை வெட்டின. உப்பு நீரின் எரிச்சலில் கால் வெட்டுப்பட்டு இரத்தம் கசிவதைப் பலர் உணரவில்லை.

பிற்பகல் இரண்டு மணியளவில் குருநகர்க்கரையில் ஏறினர். கரையில் இராணுவம் நின்றிருந்தது. எல்லாருக்கும் திக்கென்றது. என்ன செய்வார்களோ? உண்மையில் அவர்களில் பலர் இன்றுதான் இராணுவத்தினைப் பார்க்கிறார்கள். யாழ்ப்பாணத்திற்கு இராணுவம் வருகின்றது என்றதும்

அந்த முகந் தெரியாத எதிரி தந்த பயத்தால் சாவகச்சேரிக்கு ஓடிச் சென்றார்கள். சாவகச்சேரிக்கு இராணுவம் வரப்போகின்றது என்று பதற்றப்பட்டு அதனை எதிர்கொள்ளப்பயந்து வன்னிக்கு ஓடிச் சென்றார்கள். வன்னிக்கு இராணுவம் வந்துவிட்டதென்ற செய்தி அறிந்ததும் நாச்சிக்குடாவிற்கு ஓடிவந்தார்கள். எங்கும் அவர்களில் பலர் இராணுவத்தைக் காணவில்லை. சந்திக்கவில்லை. குருநகர்க்கரை யில் கரங்களில் துப்பாக்கிகளை ஏந்தியபடி வரிசையாக இராணுவவீரர்கள் நின்றிருப்பதைக் காண அவர்களுக்கு இயல்பாகவே பயம் முகத்தில் படர்ந்தது.

சுகந்தியின் முகத்தில் அவளையறியாமல் வன்மம் படர்ந்து அழுத்தம் காணப்பட்டது. இராணுவத்தினரை வெறிக்கப் பார்த்து விட்டு முகத்தை இயல்பாக்கி வேறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

இராணுவக் கெடுபடி குருநகர்க்கரையில் பெரிதாக வில்லை. அவர்கள் காவி வந்த பொருட்களைப் பரிசோதித் தார்கள். கரையில் அவர்களுக்குக் குருநகர் மக்கள் குளிர்பானம் வழங்கினர். இராணுவம் எல்லாருக்கும் உணவுப்பார்சல் வழங்கியது.

'எல்லாரும் சீநோர்க் காம்பிற்குப் போங்கோ. அங்க குளிச் சிட்டு சாப்பிடுங்கோ... உங்கட உங்கட பிரதேசக் கிராம உத்தி யோகத்தர்கள் வந்து உங்களை அடையாளம் காட்டி அழைத்துச் செல்வார்கள். அதுவரை நீங்கள் அங்கதான் இருக்க வேணும்...'

மூன்று நாட்கள் அவர்கள் அங்கிருந்தார்கள். கிராம உத்தி யோகத்தர்கள் வந்து எல்லாரையும் அழைத்துப் போனார்கள்.

'நீர் இராசரெத்தினம் மாஸ்ரரின்ர மகள் என்ன? நீது தானே கிளிநொச்சிக் கச்சேரியில கிளார்க்காக வேலை பார்க்கிறனீர்? என்று தாவடி விதானையார் கேட்டபோது அவள் ஆமெனத் தலையாட்டி வைத்தாள். அப்பா இப்படியொரு கதையைப் பரப்பியிருக்கிறாரா?'

மாலதிக்குப் பிரச்சினை இருக்கவில்லை. இருதயத்தில் துவாரம் இருக்கிற வருத்தக்காரியென்ற வைத்தியச்சான்றிதழ் அவளை சந்தேகப்பட வைக்கவில்லை.

'நான் மாமா வீட்டிலிருந்து வைத்தியம் பார்த்திட்டு

வாறன். வவுனியாவில வைத்தியம் பார்த்தனான்.' வவுனியா ஆஸ்பத்திரி டாக்டரின் பரிசோதனை அறிக்கையைக் காட்டியதும் சிவசாமியின் மகளை விதானையார் அடையாளம் கண்டு கொண்டார்.

குருநகரை விட்டு அவர்கள் யாழ்ப்பாண நகரத்திற்கு வந்தனர்.

விதானைமார் நகரத்தில் பஸ் நிலையத்தில் அவர்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

'நடந்து போவம். கலட்டிச் சந்தி சென்றியைக் கடந்ததும் உம்மட இடம்... அங்கால தாவடிக்கு நான் போயிடுவன்' என்றாள் சுகந்தி.

'தாவடிக்கோ பிள்ளையள் போறியள். நாங்க இரண்டு பேரும் கொக்குவில். அப்ப எல்லாரும் சேர்ந்து ஓட்டோ பிடிச்சுப்போவமே?' என்று ஒரு பெரியவர் கேட்டது அவர்களுக்கு வாய்ப்பாகிவிட்டது.

'சரி...' என்றனர்.

ஓட்டோ ஒன்றிற்கு தாவடி மட்டும் போக இருநூற்றைம்பது ரூபா கேட்டான் ஒரு சாரதி. 'சென்றிப் பொயின்ற் தாண்டிப் போறது... தற்செயலாக நேரம் சென்றுவிட்டால் தட்டாதெருப் பொயின்றில மறிச்சுவிடுவான்கள். இரவு அங்கால தங்க வேண்டி வந்திடும். சரியெண்டால் சொல்லுங்கோ...

சம்மதம் தெரிவிப்பதைவிட வேறு வழியில்லை.

கொக்குவிலை நோக்கி ஓட்டோ விரைந்தது.

'பிள்ளையள் எவ்விடமிருந்து வாறியள்?...'

'நாங்க கிளிநொச்சியில வேலை பார்க்கிறனாங்கள். வீட்டிற்குப் போறம்.' என்றாள் சுகந்தி.

'இதென்ன கே.கே.எஸ் றோட்டால போகாமல் வேற வழியால போகுது...'

'இப்ப அங்கால போக ஒரு வழிதான். அது கலட்டிச் சந்தி...அதாலதான் அங்கால போகலாம். தட்டாதெருச் சந்தியால இங்கால வாலாம்' என்றான் ஓட்டோ றைவர்.

கலட்டிச்சந்தியில் ஓட்டோ நின்றது. பரிசோதனை நடந்தது.

'மே கவுத... துவத...' என்று சுகந்தியையும் மாலதியையும் காட்டி இராணுவம் கேட்டது அவருக்குப் புரியவில்லை.

சுகந்தி முந்திக் கொண்டு: 'ஒவ் துவ அபி' என்றாள்.

ஓட்டோவில் மீண்டும் ஏறியதும்: 'என்ன கேட்டவன் பிள்ளை என்று அவர் வினவ: 'உங்கட பிள்ளைகளோ?' என்று கேட்டவன்.

'நீர் என்ன சொன்னனீர்?'

'இல்லையெண்டனான்...'

'ஓமெண்டெல்லோ சொன்னனீர். இங்க பார் பிள்ளை வீணாக அவங்களிட்ட பேசக்கூடாது. அவன் தன்ர பாசையில ஏதாவது கேட்டால் நாங்க எங்கட பாசையில ஏதாவது சொல்லவேணும். அவன் சிங்களத்தில கேட்கிறதுக்கு எங்களிட்ட எந்த ஒரு மறுமொழியையும் எதிர்பார்க்கிறதில்லை. கேட்டதுக்கு ஏதாவது சொன்னால் சரி. தமிழ் தெரிந்த மாதிரி அவனும் ஹரி என்பான்...நீ சிங்களத்தில பதில் சொல்லப் போனால் விடுத்து விடுத்து கேட்பான்கள். அதுவும் வடிவான பெட்டையளெண்டால் இன்னும் விசாரிப்பான்கள். வந்தமா போனமா எண்டு சும்மா தலையைக் குனிந்து கொண்டு திரியுங்கோ...'

சகந்திக்கு அவரின் அறிவுரை எரிச்சலைத் தந்தது. மௌனமானாள்.

தலையாளி நெருங்கியபோது மாலதி: 'சுகந்தி அக்கா நீங்களும் என்னோட வீட்டிற்கு வாருங்கோவன்... எனக்குப் பயமாக இருக்குது. என்னை விட்டிட்டு நீங்க தாவடிக்குப் போகலாம். ஆரோடாவது சயிக்கிலில் அனுப்பி வைக்கிறன்...' என்று இரந்தாள்.

சுகந்திக்கு அவளது கோரிக்கை சரியாகப்பட்டது. வழியில் இறங்கிக் கொண்டார்கள்.

தலையாளி ஒழுங்கையில் நடந்து வயிரவர் கோயிலைத் தாண்டி வீட்டு வாசலில் நின்றபோது மாலதியின் கால்கள் நடுங்கின. அவர்கள் இருவரும் வாசலில் தயங்கி நின்றதை முதலில் கண்டவன் நகுலன் தான்.

'சுகந்தி' என்று வீரிட்டான் தன்னையறியாமல்.

அவன் சத்தம் கேட்டு விரைந்து வந்த சிவசாமி இருவரையும் பயத்துடன் பார்த்தார்.

'ஏன் இங்க வந்தியள்?'

# 22

முற்றத்தில் கோழிகள் சிறகடித்துவிட்டு வேலியோரச் சாம்பலைக் கிளறிக்கொண்டிருந்தன. இடப் பெயர்வுடன் யாழ்ப்பாணத்தில் அற்றுப்போன கோழிகள் ஒரு வருடத்திற்குள் பழைய எண்ணிக்கைக்கு வந்துவிட்டன. பூனைகள் எண்ணிக்கையில் குறைந்துவிட்டன. ஆறுமாதமாக வீடுகளில் மக்கள் இல்லாததால் எல்லா வீடுகளிலும் எலிகள் பெருமளவில் பெருகிவிட்டன. பட்டப் பகலிலேயே அறைகளுக்குள் ஓடுகின்றன.

இரவில் தரையில் குறுக்கும் நெடுக்குமாக ஓடித்திரிகின்றன. சாப்பாடுகளைக் கொரித்து அசுத்தம் செய்கின்றன. துணிமணிகளை வெட்டிவிடுகின்றன. எலிக்குஞ்சுகளின் பதற்றச் சத்தம் இரவில் தூக்கத்தைக் கலைக்கின்றது. இவற்றின் கொடுமையை ஒழிக்க மாணிக்கத்தார் பலவிடங்களில் ஒரு பூனைக்குட்டிக்காக அலைந்தார். வெகு கஷ்டப்பட்டதன் பின்னர் ஒரு கறுப்புப் பூனைக்குட்டி கிடைத்தது. வீட்டிற்குள் அதனைக் கொண்டுவந்து விட்டார். அதன் சத்தத்தில் சில நாட்கள் எலிகள் பதுங்கிக்கொண்டன. பின்னர் தைரியமாகப் பூனைக்குட்டியைத் துரத்தத் தொடங்கிவிட்டன.

ஒருநாள் எங்கிருந்தோ திசைமாறிவந்த கடுவன் பூனையொன்றின் கண்களில் வீட்டிலிருந்த பூனைக்குட்டி பட்டுவிட்டது. அப்படி அந்தத் தாட்டான் பூனை செய்யுமென்று மாணிக்கத்தார் எதிர்பார்க்கவில்லை. கடுவன்பூனை ஒரே

பாய்ச்சலாகப் பாய்ந்து பூனைக்குட்டியைக் கழுத்தில் கௌவிக் குதறிவிட்டது.

'சூய்... சூய்...' என்று அவர் எவ்வளவு கத்தியும் அது சட்டை செய்யவில்லை. கொன்று போட்டுவிட்டுத்தான் ஓடிப்போனது.

மாணிக்கத்தாரின் வாழ்க்கையில் அந்தச் சம்பவம் முதல் அனுபவம். தன்னினத்தையே குதறிச் சாகடிக்கும் பூனையை அவர் அன்றுதான் கண்டார்.

மாலதி அடுக்களையில் தாயுடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவளுடைய வருகை அந்தக் குடும்பத்தில் ஒரு பிரளயத்தைத் தோற்றுவித்துவிட்டது. அவள் காணாமல் போனபோது துயரப்பட்ட குடும்பம் இப்பொழுது அவள் திரும்பி வந்தபோது கவலைப்பட்டது. யாழ்ப்பாணத்தில் சூழ்நிலை அப்படி மாறிவிட்டது.

'ஏன் இங்க வந்தியள்?' என்று சிவசாமி கேட்டபோது மாணிக்கத்தார் உள்ளே இருந்தார். வெளியில் சுகந்தியும் மாலதியும் தயங்கி நிற்பது தெரிந்தது. தகப்பனிடமிருந்து இப்படியான ஒரு வரவேற்பினை மாலதி எதிர்பார்த்திருக்க வில்லை. தன்னைக் கண்டதும் ஓடிவந்து அணைத்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பார்கள் என்று அவள் ஆசைப்படவில்லை. முகம் மலர்ந்து ஏற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்த்திருந் தாள். அவளால் அந்தக் குடும்பத்திற்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்ற பயம் எல்லாரிலும் தெரிந்தது.

மாணிக்கத்தார் வெளியில் வந்தார்.

'நீ உள்ள வா பிள்ளை...'

'நான் போயிட்டு வாறன்: மாலதி...' என்றபடி சுகந்தி திரும்பிப் படியிறங்கினாள்.

'அண்ணை: சுகந்தி அக்காவை ஒருக்கா தாவடியில விட்டுவிடன்...' என்றபோது சிவசாமி மகளையும்: அதற்குள் மகிழ்ச்சியுடன் படியிறங்கிய நகுலனையும் கோபத்தோடு விழிகளில் அனல் பறக்கப் பார்த்தார். நகுலன் அப்பார்வை யைச் சட்டை செய்யாமல் சயிக்கிலை உருட்டிக்கொண்டு கேற்றைத் தாண்டினான். சுகந்தி அவன் பின்னால் சென்றாள்.

மாணிக்கத்தாருக்கு நகுலனின் மனநிலை புரிந்திருந்தது. இந்தப் பெண்ணிற்காக அவன் ஏங்கித் தவிப்பதும் தெரியும்.

அவன் என்ன இன்னமும் சின்னப் பிள்ளையா? இருபத்தைந்து வயதாகிறது. கூவுகின்ற பருவம்.

அடுக்களைக்குள் மாலதி தாயுடன் தர்க்கிப்பது கேட்கின்றது.

'என்னை உங்கள் எவருக்கும் பிடிக்கவில்லை. அப்படியே செத்துப் போயிருந்தா சந்தோசப்பட்டிருப்பியள். நானும் அதைத்தான் விரும்பினன். அதுக்கும் கொடுத்து வைக்க வில்லை. வந்திட்டன். எத்தனை பிள்ளையளைத் தாய்மார் வழியனுப்பி வச்சிருக்கினம். அதுகள் வீரத்தாய்கள்...'

மாலதியைச் சரோசா ஆழமாகப் பார்த்தாள்.

'விசரி மாதிரிப் பேசாதை. இலக்கியங்களில படிச்ச வீரத்தாய் அது இதுவென்று பிசத்தாதை. எந்த ஒரு தாயும் அப்படிக் கதையிலதான் செய்வாள். வாழ்க்கையில செய்யாள். உங்களை நாங்கள் பெத்து வளர்த்தது சண்டைக்கு அனுப்பிச் சாகடிப்பதற்க ல்ல. இந்தப் போராட்டத்தால வந்த பயன் என்ன? எவ்வளவு உயிர்கள்... சொத்துக்கள்... இந்த நாடே சுடுகாடாகிவிட்டது. அரைவாசிச்சனம் இந்த நாட்டைவிட்டே ஓடிவிட்டுதுகள்... எல்லாம் உங்களாலதான் வந்தது.'

மாலதி தாயை எரிச்சலுடன் பார்த்தாள்.

'உங்களுக்கு ஒண்டும் விளங்காது. இங்க நடந்து போன எல்லாவற்றையும் மறந்து போனியள்? எங்களை ஆயுதம் ஏந்த வைத்தது சிங்கள அரசுகள்தான்.'

'கத்திப் பேசாதையடி'... என்று சரோசா கண்டித்தாள்.

'இப்ப நீங்கள் எல்லாரும் இங்க சந்தோசமாகவா இருக்கி றியள்? என்ன பாதுகாப்பு இங்க இருக்கிறது...? பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. கைதடியில் கிருஷாந்தி யைக் கற்பழித்துக் கொன்று ஆமி புதைத்தது. நியாயம் கேட்கப் போன தாயையும் தம்பியையும் அயலவரையும் கொன்று புதைத்தது. உரும்பிராயில மாமன் வீட்டை போன ரஜனியை ஆமி கற்பழித்துக் கொன்றது. அராலியில கிணற் றடியில் குளித்துக் கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணைக் கற்பழித்துவிட்டு ஒரு இலட்சம் சேர்த்து நஷ்டஈடு வழங்கிச்சு. தமிழ்ப் பெண்களின் கற்புக்கு விலை ஒரு லட்சமா? என்ன இப்ப இங்க இருக்கிறது. வெளியில தெரிந்தவை இவை... தெரியாமல் இப்படி எத்தனை நூறோ?'

மாலதி உணர்ச்சிவசப்பட்டாள். அவள் முகம் சிவந்து கனன்றது.

'கத்தாதையடி...'

'நான் கத்துவன்...நீங்க இப்ப சிறையிருக்கிறியள்... யாழ்ப்பாண மக்கள் எல்லாம் சிறைப்படுத்தப்பட்டிருக்கினம்...'

'முந்தியும் அப்படித்தான்... பேசமுடியாமல் நெஞ்சுக்க அமுக்கிக் கொண்டிருந்தம். எல்லாரையும் போல நகுலனை வெளிநாட்டிற்கு அனுப்பியிருக்கலாம். பாஸ் தர மறுத்திட்டினம்... இண்டைக்குக் கோழிக்குஞ்சுகளை இறகுக்கை வைச்சுப் பாதுகாப்பது போல ஒவ்வொரு தாய்மாரும் தம் பிள்ளைகளைப் பாதுகாக்கினம். பருந்து எப்ப வந்து கொத்தித் தூக்கிச் செல்லும் என்று நாளாந்தம் பயத்துடன் இருக்கினம். இப்ப நீயும் வந்திட்டாய்... என்ர சிறகு கொள்ளாது.' எனச் சரோசா விம்மி விம்மி அழுதாள்.

'இப்ப பருந்து வராதம்மா...பொம்பர்களும் ஹெலிகளும் பறக்காத வானமாக யாழ்ப்பாணம் வந்திட்டுது எண்டு எத்தனை பேருக்கு இப்ப சந்தோசம்.'

'உண்மைதான்... அதில்ல பிழையில்லை. நாளாந்தம் பலியெடுத்த பொம்பர்களின் குண்டுவீச்சில்லை. ஹெலிகளிலிருந்து கண்மூடித்தனமாகச் சுடப்படும் சன்னங்களில்லை... துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்திருக்கிறது...'

மாலதி சிரித்தாள்.

'அது ஓயாது அம்மா. இந்த மண்ணில் கடைசி ஒருபோதும் ஓயாது.'

'அப்ப எல்லாரையும் கூண்டோடு அழித்துவிட்டு அழிந்து தரைமட்டமாகிய மண்ணைப் பெறப்போறியளாக்கும்.'

வெளியே இராணுவ டிறக்கொன்று விரைந்து வருவது கேட்கின்றது. அதனைத் தொடர்ந்து மோட்டார் சயிக்கில்களின் சத்தம் அப்பிரதேசத்தின் அமைதியைக் கீறிக் குலைக்கின்றது.

'ஆமி வருகுது போல... பேசாமல் இரடி...'

அவர்கள் வீட்டு வாசலில் டிறக் நிற்பது தெரிகின்றது.

'ஐயோ'... என்றாள் சரோசா. 'ஆரோ தகவல்

கொடுத்திட்டினம் போல... எங்காவது ஓடிப்போயிடடி...'

மாலதி விருட்டென்று எழுந்து பின்பக்கமாக நகர்ந்தாள். மின்னல் வேகத்தில் பின்பக்க மதிலைத் தாண்டி மறுபக்கத்தில் குதித்தாள்.

டிறக்கிலிருந்து இறங்கிக் கேற்றைத் திறந்தபடி சிறிபால வருவதை மாணிக்கத்தார் கண்டார். அவரைத் தேடித்தான் அவன் வருகிறான்.

'வா தம்பி...'

'நான் தேவாலயத்துக்குப் போனன். அங்க நீங்க இல்லை. விசாரிச்சது. இங்க வந்தது' என்றபடி சிறிபால அவர் அருகில் வாங்கில் அமர்ந்து கொண்டான். தான் அமர்ந்திருந்த வாங்கைத் தடவிப் பார்த்துக் கொண்டான். இந்த வாங்கில்தான் அவன் உயிருக்காகப் போராடியபடி படுத்திருந்தான். இந்த வாங்கில் தான் உயிரிழந்த ஜெகனும் வளர்த்தப்பட்டிருந்தான்.

'நான் இன்னமும் ஐஞ்சு நாளில மட்டக்களப்பு போறது. உங்ககிட்ட சொல்லிட்டுப் போக வந்தது. தாத்தே: நீங்களை நான் என்றும் மறக்கமாட்டன்.'

மாணிக்கத்தார் அவனை இரக்கத்தோடு ஏறிட்டார்.

'இந்த யுத்தம் முடியாதா: தம்பி?'

அவன் அவரைக் கவலையோடு பார்த்தான்.

'யுத்தம் கூடாது: தாத்தே.'

'தமிழ்மக்களின் பிரச்சினைகளை நீங்க புரிந்து கொள்ளவில்லையா?'

'தமிழ்மக்களுக்கு மிச்சம் பிரச்சினை இருக்குது. தமிழ் மக்களுக்குச் சிறுபான்மை என்ற வகையில விசேஷ பிரச்சினை நிறைய உண்டு... சிங்கள மக்கள் மாதிரி அவர்களும் சரிசமனாக இங்க இல்லை.'

'அப்ப தீர்த்து வைக்கிறதுதானே...'

அவன் மௌனமாகவிருந்தான்.

'தாத்தே... எனக்குச் சரியாகச் சொல்லத்தெரியல்ல. ஆனா யுத்தத்தினால சண்டையால அதைத் தீர்க்கலாமென்பது பிழை. எங்களைப்போல எத்தனை இளம் பிள்ளைகள் சாகிறம்... அங்காலும் இங்காலும்...எல்லாரும் சகோதரங்கள். அடிச்சுக்

கொள்ளுறம்... வாயாலே பேசணும்... துவக்கால பேசக்கூடாது...

சரோசா அவர்களை விரைவில் அனுப்பிவிடும் நோக்குடன் கோப்பிக் கிளாஸ்களுடன் வந்தாள். அவர்களிடம் நீட்டினாள்.

'தாங்ஸ்: அன்ரி...'

அவர்கள் சற்று நேரம் இருந்துவிட்டு விடை பெற்றனர். சிறிபால மீண்டும் மீண்டும் அவருக்கு நன்றி தெரிவித்தான். விடை பெற எழுந்தபோது அவர் முன் மண்டியிட்டு வணங்கினான். மாணிக்கத்தாரின் விழிகள் நனைந்தன.

'எழுந்திரு: தம்பி...'

இராணுவ டிறக் முன்னால் விரைய மோட்டார் சயிக்கில்கள் பின்தொடர்ந்தன. சத்தம் வெகுதூரம் சென்று மறைந்ததும் சரோசா அடிவளவிற்கு ஓடிப்போனாள்.

'மாலதி... மாலதி...'

'நான் இங்க இருக்கிறன்...'

தாயும் மாலதியும் உள்ளே வந்ததும் மாணிக்கத்தார்: 'என்ன பிள்ளை வேலை... ஏன் அப்படி ஓடினனி. ஒருக்காலும் ஓடக்கூடாது' என்றார்.

'அவங்கள் ஏன் வந்தவங்கள்...' என்று மாலதி கேட்டாள்.

'அப்புவிட்டதான்...அதில ஒருத்தன் அப்புவுக்குப் பழக்கமாம்.'

'அப்புவிட்ட சொல்லுங்கோ... இவங்களோட அப்படிப் பேச்சு வார்த்தை வைச்சுக்கொள்ள வேண்டாமெண்டு. பின்னால பிரச்சினை வந்திடும். அவங்கள் துருவித் துருவி அப்புவிடமிருந்து எல்லாவற்றையும் கறந்துவிடுவான்கள். எனக்கு இது பிடிக்கவில்லை...' மாலதி இப்பொழுது பேசக் கற்றுக் கொண்டுள்ளாள். மாணிக்கத்தார் பேத்தியை வியப்புடன் பார்த்தபடி வாங்கிற்குச் சென்றார்.

உள்ளே தாயிடம் மாலதி கூறுவது கேட்கிறது: 'நானேன் இங்க வந்தன் என்றிருக்குது: அம்மா. வீட்டில ஒரு அன்பான பாசமான அரவணைப்பில்லை. அப்பா முகம் கொடுத்துப் பேசுவதேயில்லை. அண்ணனும் தங்கச்சியும் என்னைப் பயத்தோடு பார்க்கினம். நீயெண்டால் டிறக் சத்தம் கேட்டால் ஓடி ஒளி என்கிறாய்...நானென்ன அப்படி என்ன அகௌரவத்தை இந்தக் குடும்பத்திற்கு ஏற்படுத்திவிட்டன்.

இயக்கத்திற்குத்தானே போனன்.

'போராடாமலே எத்தனை ஆயிரக்கணக்கான உயிர்கள் அவமாக செத்திருக்கிது தெரியுமே? கதைக்க வந்திட்டாய்... இதோ பார் மாலதி: இந்தப் பெத்த வயிறு பதைபதைக்கிறது உனக்கெங்கே தெரியப் போகுது. உன்னை வைச்சுக்கொண்டு என்ன செய்யப் போறம் என்ற பயம் எல்லாருக்கும். அயலட்டைக்கெல்லாம் நீ இயக்கத்திற்குப் போனது தெரியும். இப்ப நீ திரும்பி வந்திருக்கிறதும் தெரியும். உன்னால எல்லாருக்கும் பிரச்சினை வந்திடுமோ என்று பயப்படுகினம். அப்பாவிட்ட சிலர் சாடைமாடையாகச் சொல்லியும் போட்டினம்...'

கண்களில் வழிந்த கண்ணீரைச் சரோசா துடைத்துக் கொண்டாள். மாலதிக்கு யதார்த்த நிலைமை புரிந்தது. இடம் பெயர்வதற்கு முன்பிருந்த ஊர் அல்ல. மௌனமாக இருந்தாள். சரோசா தொடர்ந்தாள்: 'அப்பா தன்ர ஊருக்குப் போயிடுவம் என்கிறார்.

'நவாலிக்கா?'

'ஓமோம்... அங்க எங்களைப்பத்தித் தெரியாது. வேறவழி இருப்பதாகவும் தெரியவில்லை.'

'நான் இப்ப இயக்கத்தில இல்லை அம்மா...'

'அதை யார் நம்புவினம். உன்னை ஒருத்தன் கையில பிடித்துக்கொடுத்துவிட வேணும்...'

'நான் வருத்தக்காரி: அம்மா. எதற்கும் இனி உதவன்... மாலதி சாதாரணப் பெண்ணாகி விம்மத் தொடங்கினாள். பெற்ற பாசம் பொங்க: சரோசா மகளைத் தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்டாள். உச்சிமோந்தாள். எல்லாரையும் போல சாதாரணப் பெண்ணாக நீ இருந்திருக்கலாமே?' என்று உள்ளம் அழுதது. தாயின் அரவணைப்பு மாலதிக்குச் சற்று ஆறுதல் தந்தது. வெகுநேரம் இருவரும் அழுது தீர்த்தனர். மாணிக்கத்தாருக்கு உள்ளே நடக்கும் நாடகம் புரிந்தது. நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

'மாலதி உன்னைப் பெத்த தாயடி நான். உன்னை இழந்திட்டு என்னால ஒருக்காலும் உசிரோட இருக்க முடியாது.'

மாணிக்கத்தார் நிமிர்ந்து அமர்ந்தார். கேற்றினைத் திறந்து கொண்டு நகுலன் சயிக்கிலுடன் உள்ளே வருகின்றான். இப்பொழுது சில நாட்களாக அவன் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டிருப்பதை அவர் அவதானித்தார். சுகந்தியின் வருகை அவனுக்குப் பூரிப்பினைக் கொடுத்திருக்கின்றது. இன்ப துன்பங்கள் வாழ்க்கையில் கலந்துதான் வருகின்றன. அவை மனிதனைவிட்டு என்றும் இணைபிரிவதில்லை. இன்பத்தின் இனிமையைப் புரிந்து கொள்ளத் துன்பத்தின் சுமைகள் அழுத்தத்தான் வேண்டும் என மாணிக்கத்தார் எண்ண மிட்டார். நகுலனின் துன்பங்கள் அனைத்தும் இயற்கையின் பாற்பட்டவை.

அவன் வயது அப்படி. சுகந்தியின் எந்த அழகு அவன் கண்களுக்குப் பட்டதோ? அந்தப் பெண்ணிடம் ஒரு கம்பீரம் இருக்கிறது. எத்துயரத்தையும் தாங்கிக் கொள்கின்ற மனப்பலம் இருக்கிறது. முகத்தில் நெகிழ்ச்சியற்ற இறுக்கம் இருப்பதை அவர் அவதானித்திருக்கிறார்.

கிளிநொச்சியிலிருந்து இங்கு வந்ததன் பின்னர் இரண் டொரு தடவை மாலதியைத் தேடி அவள் வந்திருக்கிறாள். அந்த வேளைகளில் நகுலனுடன் பேசிக் கொள்கிறாள். அவர்களின் பேச்சுக்களிலிருந்து இளம் பிள்ளைகள் தம் வயதில் பேசிக் கொள்கின்ற வார்த்தைகளாகத் தெரியவில்லை. அவர்கள் நாட்டைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். அரசியலைப்பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். நகுலன் எவ்வ ளவோ தன் மனக்கிடக்கை களை வெளியிட விரும்புவது தெரிகின்றது. அந்தப்பெண் அவன் வார்த்தைகளை வேறு விதத்தில் திசை மாற்றிவிடுகின்றாள். அவனோடு பேசுவதில் அவளுக்கும் ஒரு மகிழ்ச்சி இருப்பது தெரிகின்றது. இருவருக்கும் ஒரு கலியாணத்தைக் கட்டி வைத்துவிட்டால் என்ன?

சிவசாமி ஒத்துக்கொள்ள மாட்டான். இரண்டு பிரச்சி னைகள் அவன் முன் உள்ளன. ஒன்று யாழ்ப்பாணத்து மண்ணின் சாபக்கேடான சாதியப்பிரச்சினை. இராசரெத்தி னம் அவனுடன் ஒன்றாகப் படித்தவன்; நண்பன் என்றாலும் அதனை மீறிய சாதித்தடிப்பு சிவசாமியின் இரத்தத்துடன் கலந்திருக்கின்றது. மற்றையது அவள் இயக்கப்பெண். அவள் நிச்சயம் ஒத்துக்கொள்ள மாட்டாள். என்ன நோக்கத்திற்காக அவள் இங்கு வந்திருக்கிறாளோ? என்ன பணியை நிறைவேற்ற இங்கு வந்திருக்கிறாயோ?

மாணிக்கத்தாரின் மனம் சங்கடப்பட்டது. கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே வரும் நகுலனை இரக்கத்துடன் பார்த்தார். அவன் எவ்வளவு மாறிவிட்டான். ஒரு பெண்ணின் கடைக்கண் பார்வைக்காக எப்படி ஏங்கித்தவிக்கிறான். மாணிக்கத்தாரின் அனுபவத்தில் பெண் என்பவள் அழகும் கருணையும் தாய்மையும் கொண்டவளாகத்தான் இருந்தாள். ஆனால் இன்று அவற்றோடு வீரமும் வெறியும் கொண்டவளாக இருப்பதாகப்படுகின்றது.

குழந்தைகளை ஏந்தி மகிழவேண்டிய கரங்களில் இன்று கொடிய துப்பாக்கிகளை ஏந்தியிருக்கிறார்கள். இரக்கத்தையும் கருணையையும் பாசத்தையும் நிறைத்திருக்கவேண்டிய இதயத்தில் வைராக்கியத்தையும் துணிச்சலையும் ஏற்றியிருக் கிறார்கள். அன்பும் அருளும் பொங்கவேண்டிய விழிகளில் சுட்டெரித்துவிடும் கனல் கிளம்புகிறது.

எங்கோ தப்பு நடந்துவிட்டது. எம் மூதாதையர் இந்த மண்ணில் வாழ்ந்து காட்டிய வழிமுறையில் எங்கோ அடிப்ப டையில் தப்பு நடந்துவிட்டது. ஆம். அரசியல் அயோக்கியர் கள் ஆதிக்கக் கதிரைகளுக்காக தம் சந்ததியினரைப் பலிக் கடாக்களாக்கி விட்டனர். இனவாத எரிமலை குமுறத் தொடங்கிவிட்டது. இனி அதனைத் துணிகொண்டு மூடுவது சாத்தியமாகப்படவில்லை.

நகுலன் மாணிக்கத்தாரின் அருகில் வந்து அமர்ந்தான்.

மாணிக்கத்தார் பேரனை அர்த்தத்துடன் பார்த்துச் சிரித்தார்.

'என்ன அப்பு: சிரிக்கிறியள்...?'

'நீ என்ன ஆம்பிளையடா... உன்ர ஆச்சி என்னைக் கலியாணம் கட்ட மாட்டன் என்றிருந்தாள். ஒருநாள் கத்தக்கத்தத் தூக்கி வந்துவிட்டன்.'

நகுலன் மாணிக்கத்தாரை வியப்புடன் பார்த்தான்.

'நல்ல வழி சொல்லிக்கொடுங்கோ: ஐயா...' என்று உள்ளேயிருந்து சரோசா கத்துவது கேட்கிறது.

'கொம்மாவுக்குக் கேட்டிட்டுது...' என்று மாணிக்கத்தார் கண்களைச் சிமிட்டினார்: 'முடிவாக அந்தப் பெண் என்னதான் சொல்கிறாள்?'

நகுலன் வானத்தைப் பார்த்தான். நீலவான் பரப்பின் பகைப்புலத்தில் தனித்த பருந்தொன்று காற்றில் சரிந்து மிதந்து கொண்டிருந்தது.

'கோழையின் மனைவியாக வாழ்வதைவிட ஒரு வீரனின் விதவையாக இருப்பன் என்கிறாள் அப்பு.'

தீயை மிதித்தவர் போல மாணிக்கத்தார் துடித்துப் போனார்.

இந்தப் பிள்ளைகளுக்கு என்ன பிடித்துவிட்டது?

# 23

வன்னிச் செய்திகள் கவலையைத் தந்தன. யுத்த அரக்கனின் இரக்கமற்ற கரங்கள் வன்னிப் பிரதேசத்தைப் பற்றிப் பிடித்துவிட்டன. ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையால் வன்னி மக்களும் அங்கு இடம் பெயர்ந்து ஏதிலிகளாகத் தஞ்சமடைந்த மக்களும் வன்னியெங்கும் பயத்துடன் இடம்பெயர்ந்தனர். பொம்பர் விமானங்கள் நெடுங்கேணி முல்லைத்தீவுப் பக்கங்களில் ஓயாது குண்டுவீச்சினை நடத்தின. செய் அல்லது செத்துமடி என்ற விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் இரு தரப்பிலும் பலத்த அழிவுகளை ஏற்படுத்தின.

அகதி முகாம்கள் அக்கராயன்; துணுக்காய்; மல்லாவி பகுதிகளில் அமைக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தை நோக்கிப் பெரும் இடப்பெயர்வு ஏற்பட்டது. புதிய பல முகாம்கள் அமைக்கப் பட்டன. இயலாமையினால் மரங்களுக்குக் கீழேயும் வீதியோரங்க ளிலும் மக்கள் தஞ்சம் புகுந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கான கப்பல் சேவை தடைப்பட்டு விட்டது. மன்னாரிலும் திருகோணமலையிலும் ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்காகத் தவம் இயற்றினர்.

மரணங்களின் எண்ணிக்கையும் அதற்கான காரணங்களும் யாழ்ப்பாணத்திற்குத் தெரிய வந்தபோது உறவினர்கள் துடித்துப் போயினர். பெற்றார் யாழ்ப்பாணத்திலும்

பிள்ளைகள் வன்னியிலும் பிரிந்திருந்தனர். கணவன் யாழ்ப்பாணத்திலும் மனைவி மக்கள் மல்லாவியிலுமாகத் தவித்தனர். மனித உறவுகள் சிதிலப்பட்டு விட்டன.

வன்னியிலிருந்து வரும் மக்களை சிங்கள இராணுவம் சந்தேகக்கண் கொண்டு பார்த்தது.

நாச்சிக்குடாவிலிருந்து வள்ளங்களில் ஏறி கடலில் மண்பிட்டி ஒன்றில் இறக்கப்பட்டு குருநகருக்குக் கடலூடாக நடந்து வந்து கரைசேரும் மக்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வந்தது. வயோதிபர்கள்; பிள்ளைகள்; நோய்வாய்ப்பட்டோர் எனப் பல்திறத்தவர்களும் நாளாந்தம் வந்து கொண்டிருந்தனர். வன்னியில் பட்ட கஷ்டங்களுக்கு யாழ்ப்பாணத்தில் விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை சிலருக்கு இருந்தது. பட்ட கஷ்டமெல்லாம் பட்டாயிற்று. சொந்த வீட்டில் பிறந்து வளர்ந்த மண்ணில் கிணற்றுத் தண்ணீரைக் குடித்தாவது வாழ்ந்து சாவம் என்ற எண்ணத்துடன் வந்தவர்கள் பலர்.

யாழ்ப்பாணப்பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபர் என்ற வகையில் நித்தம் குருநகருக்கு வருகின்ற மக்களைப் பராமரிக்கும் பணியும் உரியவாறு அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பும் எனக்கிருந்தது.

குருநகர்த் துறையில் எல்லாவற்றையும் இழந்து உயிர்மட்டும் ஊசலாட வந்திறங்கிய மக்களைப் பார்க்க உள்ளம் வேதனைப்பட்டது. எப்படி வாழ்ந்தவர்கள்? எப்படி எப்படியெல்லாம் தத்தமது வீடுகளில் நிம்மதியாக இருந்தவர் கள். ஒட்டாண்டிகளாகச் சிறுசிறு பைகளுடன் வந்திறங்கி யிருந்தனர். யாழ்ப்பாணத்தி லிருந்து காவிச் சென்ற பெறுமதி யானவற்றையெல்லாம் வன்னியில் தொலைத்துவிட்டு அல்லது விற்றுத் தின்றுவிட்டு வெற்றுடம்பின ராக நின்றிருந்தனர். வந்திறங்கிய பல பெண்களின் காதுகளில் ஒரு சிறு குச்சிகூட இருக்கவில்லை.

எங்கள் பெண்கள் இப்படியா இருந்தார்கள்?

அன்று மாலை குருநகர் வந்திறங்கிய மக்களைக் கவனிப்பதற்காக அங்கு சென்றிருந்தேன். சீநோர் முகாமில் அவர்களை வைத்திருந்தனர்.

எழுபது குடும்பங்கள் வரையில் அங்கிருந்தனர். யாழ்ப்பா ணக் குடாநாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

எல்லாரும் சோர்ந்து கறுத்துக் களையிழந்து காணப்பட்டனர். இந்த இடப் பெயர்வு எல்லாரையும் ஒரு தாக்கிற்குக் கொண்டுவந்து விட்டது.

நான் நடந்து பார்த்து விசாரித்துக் கொண்டு வந்தேன்.

'சித்தப்பா' என்று ஒரு பெண் வீரிட்டுக் கத்தியபடி என்னிடம் ஓடிவந்தாள். அவளைப் பார்த்தேன். என் ஒன்று விட்ட அண்ணனின் மருமகள். தட்டாதெருவில் கடையொன்றினை நடாத்திக் கௌரவமாக வாழ்ந்த செல்வத்தின் மனைவி.

'நாங்க வன்னிக்கு ஓடினோம். அங்க அவர் செத்துப்போனார். நாங்க இப்ப அனாதையாகிவிட்டம்...'

நான் அந்தக் கணத்தில் உறைந்து நின்றேன். எங்கள் உறவு மட்டத்தில் துயரங்கள் தாக்கும்போது அதன் காயம் பெரிதாகப் படுகின்றது. ஆறு சிறு பிள்ளைகளைப் பரிதவிக்க விட்டுவிட்டுச் செல்வம் சென்றுவிட்டான். நான் அவளுக்கு ஆறுதல் கூறினேன். அவள் விழிகள் என் ஆறுதல் வார்த்தைகளால் கட்டுப்படவில்லை.

'வேலணண்ணற்ற குடும்பம் நெடுங்கேணிக் குண்டுவீச்சில் சிதறிப் போச்சுது சித்தப்பா. ஒருத்தரும் மிஞ்சவில்லை.'

அங்கு வந்திருந்த ஒவ்வொருவரும் தம்மளவில் யுத்த அனர்த்தத்தின் பாதிப்புக்களைக் கொண்டுதான் வந்திருந்தனர். மனம் கனத்தது. எங்கும் அமைதியில்லை. நிம்மதியில்லை. துப்பாக்கிகளும் குண்டுகளும் எங்கும் வெடித்துக் கொண்டிருக்கின்றன. என்றுதான் ஓயப்போகின்றனவோ?

செல்வம் அவமாகச் செத்துப் போனான். நான் அறியத் தக்கதாகப் பிறந்து வளர்ந்து வாலிபனாகித் திருமணமானவன். அவன் தந்தை இராசதுரையண்ணரின் நினைவு வருகின்றது. யாழ்ப்பாணத்தின் பழைய சொக்கட்டான் சந்தையின் முன் விளிம்பில் அவருடைய பாக்கு வெற்றிலை புகையிலைக் கடையிருந்தது. சந்தையின் முகப்பிலிருந்ததால் அந்தக் கடையில் பலருக்குக் கண். சனிக்கிழமைகளில் எப்போதாவது அவர் கடைக்கு நான் செல்வேன். எனது வருகையின் காரணம் அவருக்குத் தெரியும் முப்பத்தைந்து சதம் எடுத்துத் தருவார். அதனைக் கொண்டு தியேட்டரில் கலரியில் அமர்ந்து அட்டகாசமாகச் சினிமா பார்த்த அனுபவம் இருக்கின்றது.

செல்வம் அவரின் மூத்த மகன். அதற்குப் பின்னர் நான்கு பெண் பிள்ளைகள். இரு ஆண்கள் இருந்தனர். இரண்டு பிள்ளைகளைக் கரை சேர்த்த நிலையில் அவர் காலமாகிவிட்டார். செல்வம் தான் தங்கைகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு பின்னர் கலியாணம் கட்டிக் கொண்டான். இத்தனைக்கும் தட்டாதெருச் சந்தியில் வாழைப்பழக் கடையொன்றினை நடாத்தித் தன் குடும்பத்தைக் கௌரவமாகக் கொண்டிழுத்தான். இடப்பெயர்வுடன் சாவகச்சேரிக் குப் போன பின்னர் மிகவும் கஷ்டப்பட்டுவிட்டான். வன்னி இடப்பெயர்வு மிகுந்த துயரத்தையும் அலைச்சலையும் ஏற்படுத்திவிட்டது. அதற்குப் பலியாகிப்போன நூற்றுக்கணக்கானோரில் அவனும் ஒருவனாகிவிட்டான்.

அன்று முழுவதும் செல்வம் பற்றிய எண்ணமே மேலோங்கி யிருந்தது. அலுவலகத்திலிருந்து வீடு வந்ததும் அம்மன் கோயி லுக்குப் போய்வரலாம் போலப்பட்டது. கலட்டி சென்றியில் வழக்கம் போல விசாரணைகள். கோயிலுக்குப் போவதாக அறிந்ததும்: கையில் கட்டுவதற்கு நூல் வாங்கி வருமாறு இராணுவ வீரனொரு வன் கோரிக்கை விட்டான். அவன் தனது கரத்தைத் தூக்கிக் காட்டினான். ஏழெட்டு நூல்கள் கரத்தின் மணிக்கட்டில் ஏற்கனவே கட்டப்பட்டிருந்தன. இந்துக் கடவுள்கள் ஒவ்வொருவரினதும் ஆசியைத் தனக்குப் பாதுகாப்பாக வேண்டுகின்றானோ எனப்பட்டது.

கலட்டிச் சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாகத் திரும்பி வீதியில் சென்றபோது மனம் கனத்தது. யுத்தத்தின் அனர்த்தங்கள் தெரிந்தன. இராணுவ வேலிக்காக அழிக்கப்பட்ட வீடுகளும் அவற்றில் வாழ்ந்து மகிழ்ந்திருந்த எனக்குத் தெரிந்த அயலவர்க ளும் உறவினர்களும் நினைவில் வந்தனர். அம்மன் கோயிலின் ஒரு கால பஞ்சகர்த்தாக்களில் ஒருவராக விளங்கிய அப்புவும்: கும்பாபிஷேகத் தலைவராக இருந்த கண்ணனும் இந்த வீதியில் தான் அருகருகில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் இன்றில்லை. அழைத்துச் செல்லப்பட்டு அவமாகச் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார் கள். அவர்களது குடும்பங்கள் அவர்களது நினைவுகளுடன் தவிக்கின்றன.

கனத்த இதயத்துடன் கோயிலுக்கு வந்தேன். மாலை நேரப் பூசை பிற்பகலில் நடந்து கொண்டிருந்தது. கடவுளுக்கும் நேரக்கட்டுப்பாடு. இரவிரவாக இந்த மண்ணில் நிகழ்ந்த திருவிழா க்கள் மாலைக் கருக்கலுடன் அவசரமவசரமாக முடிவடைகின்றன. மக்கள் அவசரமவசரமாக வீடுகளை நோக்கி

ஓடுகின்றார்கள். இரவு படர்வதற்குள் வீடுகளுக்குள் புகுந்து விடவேண்டுமென்ற அவசரம். யாழ்ப்பாணம் ஆறுமணிக்குள் முடங்கிவிடுகின்றது. வாழ்க்கையின் இனிய இரவுப் பொழுதுகள் எங்களுக்கு இல்லாமற் போய்விட்டன. பகல் முழுவதும் உழைத்துவிட்டு இரவுப்பொழுதில் கேளிக்கைகளில் தேடிய சுவையான நாட்கள் எங்கள் பிள்ளைக ளுக்குத் தெரியாது. இரண்டாவது ஷோ படம் பார்த்துவிட்டுத் தன்னந் தனியனாகத் தெருநாய்கள் குரைக்க வீட்டிற்கு வந்த நாட்கள் மறக்க முடியாதவை. கும்மிருட்டு ஒழுங்கையில் நுழைந்த தும் பேய்களின் நினைவு மனதில் எழ தேவாரங்களைப் பெருங் குரலில் வாய்விட்டுப் பாடியபடி பனிக்குளிரில் நடந்துவந்த அனுபவம் எங்கள் பிள்ளைகளுக்கு இல்லை. கள்ளச் சுகத்திற் காக இரவுவேளைகளில்; சாமம் சாமமாக மேய்ச்சலிற்குப் போய் அகப்பட்ட நிலையில் கறையான் வேலியைப் பிய்த்துக் கொண்டு ஓடிவந்த அனுபவங்கள் எங்களது மூதாதையருக்கு மட்டும் என்றாகிவிட்டன.

நாடகங்கள்; பட்டி மண்டபங்கள்; நாட்டுக்கூத்துக்கள்; அரசியல் கூட்டங்கள் இரவிரவாக நடக்கும். நடத்துவதற்கு என்ன தடை இருந்தது? எவர் மறித்தனர்? இரவு வேளைகள் சுதந்திரக் காற்றில் சுகித்திருந்த காலம் அது. அடிவளவுகளில்; அன்னவன் னாப்பத்தை மறைவுகளில் காதலர்கள் கதைபேசி மகிழ்நத இனிய இரவுகள் இன்று யாழ்ப்பாணத்தில் சிறைப்பட்டுவிட்டன. இரவு வேளைகள் துப்பாக்கி ஏந்தியவர்களின் நடமாட்டத்திற் குரியனவாக மாறிவிட்டன.

மாணிக்கத்தார் கோயில் மண்டபத்தில் அமர்ந்திருந்தார். நான் கோயிலுக்குப் போய் வழிபட்டுவிட்டு வெளியில் வந்தேன். மாணிக்கத்தார் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

'எப்படி அண்ணை...' என்று கேட்டபடி அவர் அருகில் அமர்ந்தேன். 'நகுலன் இப்ப எப்படியுள்ளான்?'

'பார்க்கிறதுக்குச் சந்தோசமாக இருக்கிறான். சுகந்தி வந்ததிலிருந்து மாறிவிட்டான். முகத்தில் செந்தழிப்பு ஏறியிருக்கிறது. ஏதாவது தொழில் தேட வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறான். கலியாண எண்ணம் வந்திட்டுது... அவள் ஒத்துக்கொள்ள வேண்டுமே?'

அவர் என்னைப் பார்த்தார். அவர் மனதில் விரிந்து கொண்டிருக்கின்ற பேரனின் எண்ணவோட்டங்கள்

எப்படியிருக்கும்?

நகுலன் மிகுந்த காதலுடன் சுகந்தியைப் பார்த்தான். அவன் விழிகள் அவளிடம் யாசித்தன. சுகந்தி அவனை ஆழமாக ஏறிட்டுப் பார்க்கவில்லை. அவனுக்காக அவள் உள்ளம் பரிதாபப்பட்டது.

'நகுலன்: ஏன் இப்படி என்னைக் கஷ்டப்படுத்திறியள்? நான் எப்பவோ என் முடிவை உங்களுக்குச் சொல்லிப் போட்டன். நீங்கள் நினைக்கிற மாதிரி கலியாணம் கட்டி வாழ விரும்புகிற பெண்ணல்ல. இலட்சியத்துக்காக மரணத்தைக் கழுத்தில் கட்டிக் கொண்டு உலவுகிறவள் நான். உங்களை நான் பிழை சொல்ல வில்லை. தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாமல் நீங்கள் படித்துப் பட்டம் பெறுங்கள். உத்தியோகம் பாருங்கள். மனதுக்குப் பிடித்த இன்னொருத்தியைக் கட்டிக் கொள்ளுங்கள்.' அவள் அமைதியாக அவனிடம் சொன்னாள்.

'அவமாக இந்த வாழ்வை முடிக்கிறன் என்கிறீரே? இந்த உலகம் எவ்வளவு இனிமையானது?'

'இந்த உலகம் இனிமையானதா? இந்த நீலவானமும் தவழும் காற்றும் உங்களைச் சுற்றி மலர்ந்திருக்கின்ற பூக்களும் உங்களுக்குப் புன்முறுவல் பூப்பதாகத் தெரியலாம். எனக்கு அப்படித் தெரியவில்லை. இந்த மண்ணில் அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களுக்காக நீலவானம் கண்ணீர் வடிக்கின்றது. பூத்துக் குலுங்குகின்ற பூக்கள் மரணிக்கின்ற மக்களுக்காக அஞ்சலி செய்வதாக எனக்குப் படுகின்றது.'

'உம்மை மாற்றவே முடியாதா?'

அவன் ஆற்றாமையோடு கேட்டான்.

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்

'சுகந்தி: நீர் செல்கின்ற பாதை சரியானதாக எனக்குப் படவில்லை. அதற்காக உமது சுதந்திரத்தில் நான் தலையிட மாட்டேன். இந்த மண்ணில் இரத்த ஆற்றினை ஓடவிட்டு அவற்றில் விழுந்து கிடக்கின்ற சடலங்களின் பிணமேட்டில் நீங்கள் எதிர்பார்க்கின்ற சுதந்திரம் எங்களுக்குக் கிடைக்கு மென்றால் அதை நான் வெறுக்கிறேன். எத்தனை ஆயிரக் கணக்கில் பலியானார்கள்? இவை ஏன்?'

அவள் அவனை தீப்பிழம்புகள் கண்களில் தெறிக்கப் பார்த்தாள். அவள் விழிகளை அவனால் எதிர்கொள்ள முடியவில்லை.

'நீங்கள் கொஞ்சமேனும் இனப்பற்றில்லாதவர். அடிமைத் தனமாக வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டவர். உயிருக்குப் பயந்த கோழை... அவள் குரல் பலமாக ஒலித்தது.

அவன் அமைதியாகப் பதில் சொன்னான்: 'இந்த உலகத் தில் விலைமதிப்பில்லாததும் இழந்தால் திரும்பப் பெறமுடி யாததும் உயிர் தான்: சுகந்தி. இந்த உயிர் வாழ்தலிற்காகத் தான் இந்த இயற்கை இயங்குகின்றது.

'எமக்கு விலைமதிப்பில்லாதது சுதந்திரம்...'

'எனக்கு எங்கள் உயிர்தான்...'

'இரந்துண்டு வாழப்பழகிவிட்டியள்...கோழைகள்...'

'துப்பாக்கி எந்தி அவமே இறப்பது வீரமெண்டால் நான் கோழையாகவே இருந்துவிடுகிறன்: சுகந்தி.'

அப்போதுதான் அவள் அதைச்சொன்னாள்: 'ஒரு கோழையின் மனைவியாகவிருப்பதிலும் ஒரு வீரனின் விதவையாக வாழ்வன்.'

நகுலன் இப்படி ஒன்றை அவளிடம் எதிர்பபார்க்கவில்லை. தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். தன் எண்ணங்களையும் பொங்கிய காதலையும் விழுங்கிக் கொள்பவன் போல மூச்சினை உள்ளிழுத்துக் கொண்டான்.

'உம்மை என்னால் என் வழிக்குக் கொண்டுவர முடியாது. அதற்காக உம் வழிக்கு நான் வந்தாலும் நீர் என்னை ஏற்கப் போவதில்லை. நல்லது சுகந்தி: ஒன்றை மட்டும் திடமாகச் சொல்லுறன். என் உள்ளத்தில் உம்மைத்தவிர ஒருத்தியும் சலனத்தை ஏற்படுத்தியவளல்லள். உம் நினைவுதான் உள்ள மெங்கும் வியாபித்திருக்கின்றது. என்னிதயத்தில் பதிந்து விட்ட உம் வடிவை இனி உம்மாலும் தகர்த்துவிடமுடியாது. நான் உமக்காகக் காலமெல்லாம் காத்திருப்பன்.'

அவன் திடீரென எழுந்திருந்தான். சயிக்கிலை எடுத்து உருட்டியபடி நடக்கத் தொடங்கினான். சுகந்தியின் உள்ளம் ஒரு கணம் அதிர்ந்தது. மெல்லிய நீரோடையின் சலசலப்பு உள்ளத்தில் ஜலதரங்கமிட்டது. அவள் அப்படியே நீண்ட

நேரம் அமர்ந்திருந்தாள்.

மாணிக்கத்தார் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

'இங்க பார் தம்பி: எங்கட காலத்துக் காதலல்ல இது.'

'எந்தக் காலத்திலும் காதல் காதல்தான் அண்ணை. அணுகு முறை பழகுமுறை மாறும்... இந்தக் காலத்தில பொடிய ளுக்கும் பெட்டையளுக்கும் காதலிக்க எங்க நேரம்? அதைப் பற்றிச் சிந்திக்க எங்க நேரம்? படிப்பு... ரியுசன்... நெருக்கடி... நிம்மதியின்மை... பொழுது போக்கின்மை. ஆறுமணி யோட காகங்கள் மாதிரிக் கூடுகளுக்குள் புகுந்துவிடும் நிலை. கூகைகள்தான் இரவில் சஞ்சரிக்கின்றன. கூகைகள் காதல் பறவைகளல்ல.' என்றபடி மாணிக்கத்தார் சிரிக்கிறார். அவர் இன்று என்றுமில்லாத குசி நிலையிலிருப்பதாகப்பட்டது.

அவர் தொடர்ந்தார்: 'வெகு கெதியில இந்த மண்ணிற்கு ஒரு விடிவு வரும் போல எனக்குப் படுகிறது...'

நான் வியப்புடன் பார்த்தேன். பார்வையில் எப்படி என்ற வினா இருந்தது.

'எனக்கு அப்படிப் படுகிறது: தம்பி. நாங்கள் நீண்டகாலம் கஷ்டப்பட்டிட்டம். இருள் எப்பவும் தொடர்ந்திருக்க முடியாது. துன்பமும் அப்படித்தான். ஒரு அற்புதம் நடக்கும்... இருந்து பார்...'

'இப்ப இருந்து பார்க்க நேரமில்லை: அண்ணை. ஆறுமணியாகப் போகுது. தட்டாதெருச் சென்றிப் பாதைக்குக் குறுக்கே கட்டை போட்டிடுவான்கள். வாறன்.' என்று நான் விடைபெற்றேன்.

# 24

விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுதில் தாவடியைச் சுற்றி வளைத்துக் கொண்டது இராணுவம். சீறிக்கொண்டு விரைந்து வந்த மோட்டார் சயிக்கில்களில் ஆயுதம் ஏந்திய கமாண்டோக்கள் அமர்ந்திருந்தனர். மின்னல் வேகத்தில் இராசரெத்தினத்தின் வீட்டுச் சுற்றாடல் அவர்களால் அரண் செய்யப்பட்டது. உறக்கத்திலிருந்த இராசரத்தினம் துடித்துப் பதைத்து எழுந்திருந்தார். நிலமை அவருக்குப் பட்டெனப் புரிந்தது. மனைவியைத் தட்டியெழுப்பிவிட்டு சுகந்தி படுத்திருந்த அறைக்கு ஓடிப்போனார். அவள் அறை திறந்து கிடந்தது. அவளைக் காணவில்லை. இராணுவ டிறக்குகளின் இரைச்சலை அவள் காலநேரத்தோடு ஊகித்துக் கொண்டாள். இராணுவம் சுற்றி வளைப்பதற்கு முன் அவள் அப்பிரதேசத்தைவிட்டு நகர்ந்து விட்டாளென அவருக்குப் புரிந்தது. மனம் கனத்தது.

வசந்தன் எழுந்து வந்தான்.

'ஆமி சுற்றி வளைச்சிட்டுது. செக் பண்ணப்போகினம். அப்பா. இவளால எவ்வளவு கஷ்டம். ஆரோ சொல்லிக்கொடுத்திருக்கினம்'

அவர் வீட்டைச் சுற்றி இராணுவம் நிலைகொண்டிருந்தது. எங்கு திரும்பினும் இராணுவத் தலைகள் தெரிந்தன. வளவுகள்: வீடுகளூடாக அவர்கள் புகுந்து வந்து சூழ்ந்து கொண்டனர். அவர்களின் வீட்டை நோக்கித் துப்பாக்கிகள் நீட்டப்பட்டிருந்தன. படலையில் ஒரு ஜீப் வந்து நின்றது. படபடவென ஐந்தாறு இராணுவ வீரர்கள் குதித்தனர்.



'செங்கை ஆழியான்' (கலாநிதி கந்தையா குணராசா) நாடறிந்த நாவலாசிரியர். முப்பத்தைந்திற்கு மேற்பட்ட நாவல்களின் ஆசிரியர், மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்; ஆய்வாளர். இவர் கல்வி, நிர்வாகம், இலக்கியம் ஆகிய முத்துறைகளிலும் ஆழக்கால் பதித்தவர். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினை ஏழு தடவைகளுக்கு மேல் சுவீகரித்துச் கொண்டவர். சிங்களத்தில் இவரது சிறுகதைத் தொகுதி (இரவு நேரப் பயணிகள்), காட்டாறு நாவல் என்பன வெளிவந்துள்ளன. The Beast ஆங்கில மொழி பெயர்ப்பு நூல். 'வாடைக் காற்று' திரைப்படமாக வெளிவந்துள்ளது. சமகாலப் பிரச்சினைகளின் மானிட அவலங்களைத் தன் புனைகதைகளிற் பதிவு செய்யும் கலாபூர்வ எழுத்துக்கள், செங்கை ஆழியனுடையவை. இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரிகளில் ஒருவர்.

-ரஸிகன்

Printed by Unie Arts (Pvt) Ltd., Col-13. Tel : 330195

